திருக்குறளார் வீ.முனிசாமி

301

# சிந்தனைக் களஞ்சியம்

வானதி
பதிப்பகம்

முதற்பதிப்பு : டிசம்பர், 1988

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 14-00

அச்சிட்டோர் :
முவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை-600 014.

# சிந்தனைக் களஞ்சியத்திற்கு ஒரு சிறு முன்னுரை

நண்பர்கள் செய்த பேருதவியால் சிந்தனைக் களஞ்சியம் என்ற இந்த நூல் வெளிவருகிறது. புதிய எண்ணங்கள், சிறந்த கற்பனைகள் தோன்றுவதற்கு அடித்தளமாக 'சிந்திக்கும் பழக்கம்' அமைந்துள்ளது என்று கூறுவது மிகையாகாது.

ஒரு நூல் எழுதவேண்டும் என்ற ஆவலில் எழுதப்பட்ட நூல் இது அல்ல. திருக்குறள் சொற்பொழிவுகளைக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்த்தி வருகிறேன். ஆங்காங்கே நான் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலிருந்து என்னுடைய நண்பர்கள் 'நாடாக்களில்' ஒலிப்பதிவு செய்து என்னிடம் கொடுத்தார்கள். அவைகளை அப்படியே பதிப்பகத்தார் அச்சிட்டுப் பதிப்பித்தார்கள்.

ஆதலால்தான் இந்தக் கற்பனைக் களஞ்சிய நூலில் பழக்கத்திலிருக்கின்ற நடைமுறைப் பேச்சு அப்படியே காணப்படுகின்றது. எளிமையாக இருக்கட்டுமே என்று நானும் அப்படியே விட்டு விட்டேன்.

புகழ்பெற்ற 'ஆனந்த விகடன்' பத்திரிகை நண்பர்கள் என் கருத்துக்களை அவர்கள் பத்திரிகையில் வெளியிட விரும்பினார்கள். அப்படியே போடவும் செய்தார்கள். அவர்களுக்கு என்னால்

எழுதிக் கொடுக்க இயலவில்லை. ஆதலால், அவர்கள் என்னிடம், "நீங்கள் உங்கள் பாணியி லேயே பேசுங்கள். நாங்கள் பதிவு செய்து கொள் கிறோம்" என்று சொல்லி அவ்வாறே செய்தார் கள். எனக்கும் எளிதான வேலையாக முடிந்தது.

அந்தப் பத்திரிகையில் வந்த கட்டுரைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. எனவே சொற்களில் "நடைமுறைபாணி" என்கிற பழக்க மான முறை இருக்க வேண்டியதாயிற்று.

நான் மிகவும் பாராட்டுகின்ற அரிய பெருந்தகை நண்பர் வானதி திருநாவுக்கரசு ஆவார்கள். அவர்கள் ஒரு புதிய வரலாறு படைத்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். அவர் பதிப்பகம் ஸ்ரீவில்லிப்புத்தூர் கோபுரம் போல் சிறப்பாகக் காட்சியளிப்பது என்று சொல்வதில் பெருமையடைகிறேன். முத்து, முத்தாக அச்சிட்டு முத்தமிழுக்கும் தொண் டாற்றும் மூவேந்தர் அச்சகத்தின் உரிமையாளர் முத்துவுக்கு நன்றி.

அன்புள்ள

**திருக்குறளார்**

# பதிப்புரை

"சிந்தனைக் களஞ்சியம்" என்னும் இந்நூல், சிரித்து, சிந்தித்து மகிழ்வதற்கு ஏற்ற அருமையான நூல்.

திருக்குறளார் அவர்கள் பேசும்போது, நகைச்சுவை யோடு, நம்மைச் சிந்திக்கவும் வைத்து விடுவார். அவருடைய எழுத்துக்களைப் புத்தக வடிவில் படிக்கும்போது, என்றும் நமக்குக் கைவிளக்காக இருந்து நம்மை வழிநடத்திச் செல்லும்—கருத்துக்களை அளிக்கும்.

தமிழ்ப்பெருமக்கள் தரமான கருத்துக்களை வரவேற்பவர்கள். அதுவும் திருக்குறள் சிந்தனை என்றால்—அதுவும் திருக்குறளாரின் கைவண்ணம் என்றால்—எவ்வளவு ஆனந்தப்படுவார்கள். அவர்களுக்கு இந்நூல் ஒரு நல்விருந்து.

அற்புதமான சிந்தனைக் களஞ்சியத்தை வழங்கிய திருக்குறளார் அவர்களுக்கும், இதை வரவேற்கும் தமிழ்ப் பெருமக்களுக்கும் எங்கள் நன்றி.

அன்புடன்,

வானதி திருநாவுக்கரசு



புரட்சிக் கவிஞர்—பாவேந்தர்

# பாரதிதாசன்

## பாடுகிறார்

திராவிட நாட்டுளீர் உங்கள் செயற்கெலாம்
அறமே அடிப்படை ஆதல் வேண்டும்
அறம் எனல் வள்ளுவர் அருளிய திருக்குறள்

செல்லும் வழிக்குத் திருக்குறள் விளக்கு
மனமா சறுக்கும் இனிய மருந்து
கசடறக் கற்க! கற்றிலார் அறிஞர்பால்
கேட்க! கேட்க! திராவிடம் மீட்க

ஔவையார் அருளிய ஆத்திச் சூடியில்
ஒரு தொடர்தன்னை—ஒன்றுக்கான
உரையை—எப்படி ஒருவர் இலேசாய்
நினைவில் நிறுத்தி இனிதுரைப்பாரோ
அப்படித் **திருக்குறள் முனிசாமி** அறிஞர்
முப்பால் ஆயிரத்து முன்னூற்று முப்பது

குறளையும் அவற்றிற்குக் கொடுத்த பொருளையும்
நினைவில் நிறுத்தி இனிது விளக்கும் ஓர்
ஆற்றல் உடையவர்; அவர் திருக்குறள் மலர்
வழங்கும் நகைச்சுவை மறச்சுவை பிறசுவை
ஆர்ந்தசொல் அனைத்தும் பெரும்பயன் அளிப்பவை

அரிசிமா இட்டலி அளிப்பதாய்ச் சொல்லிப்
பாசிப்பயற்றுமி படைப்பார் அல்லர்;
அறிஞரின் பேச்சும் எழுத்தும் அருங்குறள்
தேன்ஆற்றி னின்று செம்பில் மொண் டளிப்பவை

**குறட்பயன் கொள்ள நம்திருக்**
**குறள்முனி சாமிசொல் கொள்வது போதுமே!**

# திருக்குறளாரின்
# சிந்தனைக் களஞ்சியம்

## தியானம்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்திற்கும் பொறிகள் என்று பெயர். இந்த ஐந்து பொறிகளும் செயல் படுகின்றபொழுது அவைகட்குப் புலன்கள் என்று சொல்லு வார்கள். கண்களால் காண்பதும், காதுகளால் கேட்பதும், வாயினால் உண்பதும், மூக்கினால் சுவாசிப்பதும், உடம்பி னால் உணர்ந்தும், நடைபெறுகின்ற செயல்கட்குப் புலன்கள் என்று கூறுவது உண்டு.

> **கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
> **ஒண்டொடி கண்ணே உள.** (1101)

இதனைத்தான் அனுபவிக்கப்படும் புலன்கள் என்று கூறுவார்கள்.

மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய ஐந்தின் வழி யாகத்தான் ஆசைகள் மனதிற்குள் வந்து சேர்கின்றன. இந்த ஐந்து ஆசைகளையும் அடக்கிக் காப்பது மிகவும் அரிதானபடியால் ஆசிரியர் வள்ளுவனார் கடவுளுக்கு இலக்கணம் கூறுகின்றபொழுது,

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடு வாழ்வார்** (6)

என்று அமைத்தார்.

இந்த ஐந்துபொறிகளும் உலகத்தில் உள்ள ஆசைகளை எல்லாம் கொண்டு வந்து நம்முடைய 'மனம்' என்கிற வீட்டில் வைத்து நம்மைப் படாதபாடு படுத்துகின்றன.

## இரண்டு பொறிகள்

இந்த ஐந்து பொறிகளில் இரண்டு பொறிகள் மிகவும் ஆபத்தானவை என்று அனுபவப் பெரியார்கள் கூறு கின்றார்கள்.

கண்ணும், வாயும், அந்த இரண்டு பொறிகளாகும். ஆதலால்தான் ஆண்டவன் இந்த இரண்டு பொறிகளுக்கு மட்டும் கதவுகள் போட்டிருக்கிறார் என்று பேசுவார்கள்.

கண்களுக்குக் கதவுகள்தான் இதழ்கள் என்றும், வாய்க்குக் கதவுகள் இரண்டு உதடுகள் என்றும் வழக்கத்தில் கூறுகிறார்கள். கண்கள் என்கின்ற பொறிகளை எல்லா இடத்திலேயும் எல்லா நேரங்களிலும், திறந்து வைத்திருக் கவே கூடாது. சில நேரங்களில் மூடிக் கொண்டிருப்பது போலவும், சிறிது திறந்திருப்பது போலவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

வீட்டுத் திண்ணையில் ஒருவர் உட்கார்ந்து கொண் டிருக்கிறார். தெருவில் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். அவரை, திண்ணையில் இருப்பவரின் கண்கள் கூர்மையாக உற்று நோக்கின. உடனே அந்தப் 'பேர்வழி' கோபமாக ''என்ன ஐயா, முறைத்துப் பார்க்கிறீர்?'' என்று சண்டைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிறிது நேரத்துக்குள் இந்தக் கண்கள் அவ்வளவு சங்கடத்தை உண்டாக்கி விடக் கூடும்.

ஒரு வார்த்தை இந்த வாயினால் சொல்லி விட்டால்—அந்த வார்த்தை—ஒரே வார்த்தை, கடுமையானதாக இருந்து விட்டால் பெரிய தீங்கினை உண்டாக்கிவிடக் கூடும். ஆதலால் எப்பொழுதும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. பல நேரங்களில் வாயினை மூடிக் கொண்டிருத்தல் நல்லது. உதடுகளாகிய கதவுகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

சிலர் பேசுகின்றபொழுது, மற்றவரைப் பார்த்து, ''வாயை மூடு'' என்று சொல்வார்கள். அதற்குக் குறிப்பு என்னவென்றால், உதடுகளாகிய கதவுகளால் வாயை மூடு என்பது பொருளாகும்.

## கடமை செய்தல்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் நல்லபடியாக தங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும். பொறிகள் தங்கள் செயல்களைச் செய்யவில்லையென்றால் இருந்தும் பயனில்லை அல்லவா?

தம்முடைய செயல்களைச் செய்யாத பொறிகளைப் பற்றி ஆசிரியர் திருவள்ளுவனார் குறித்துக் காட்டுகிற பொழுது,

**''கோள் இல் பொறியின் குணமிலவே''**

—என்று குறித்துக் காட்டுகிறார். உயர்ந்த அறிவுபெற்ற மனிதன் தன் அறிவின் துணையினால், இந்த ஐந்து பொறிகளையும் நல்லபடியாக அடக்கி நல்ல செயல்களையே செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அறிவு என்கின்ற அங்குசத்தினால் பொறிகள் என்கிற ஐந்து யானைகளையும் தவறு செய்யாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதனைத்தான் ஆசிரியர் வள்ளுவனார்,

**யானைகள்—ஆமை**

**"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்"** (24)

என்றும்

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்"** (126)

என்றும் சிறப்பித்துக் கூறினார். மனிதப் பிறவியின் தனிச் சிறப்பெல்லாம் அறிவு பெற்றிருப்பதால்தான் என்று தனிப் பெருமையாகப் பேச வந்த ஆசிரியர்,

**"நன்றின்பால் உய்ப்பது அறிவு"** (கு. 422)

என்று கூறினார்.

அதாவது அறிவுக்கு இலக்கணம் என்னவென்றால், நல்ல காரியங்களைத் தாமாகவே போய்ச் செய்யவேண்டும். மனிதப் பிறவிக்கு அடையாளம் அதுவே தான் என்பதாகும்.

மற்றவர் வந்து சொன்ன பிறகுதான் நற்செயல்களைச் செய்தல் வேண்டும் என்று இருப்பது மனிதப் பிறவிக்கு அழகானதல்ல.

**"கடன் என்ப நல்லவை எல்லாம்"** (கு. 981)

என்று ஆசிரியர் திருவள்ளுவனார் வற்புறுத்திக் கூறியதும் இந்த உண்மையினை உணர்த்துவதற்கே ஆகும்.

**விலங்கினம்**

விலங்கினங்கள் (மிருகங்கள்) நல்ல காரியங்கள் செய்கின்றன. ஆனால் அறிவு இல்லாததால் நல்ல காரியங்களை விலங்கினங்கள் தாமாகவே செய்யா. அவைகளை நாம் நல்ல காரியங்களைச் செய்ய வைக்க வேண்டும்.

ஒரு பசு நமக்குப் பால் கொடுக்கிறது. பசும்பால் எவ்வளவு உயர்வானது என்பது உலகறிந்த செய்தியாகும்.

இவ்வளவு உயர்ந்த பால் கொடுக்கின்ற பசு, விலங்கினம் ஆனபடியால், அதற்கு அறிவு கிடையாது. ஆகையினால் பால் கொடுக்கின்ற நல்ல காரியத்தை அது தானாகவே செய்யாது. நாம் பிடித்துக் கறக்கவேண்டும்.

நல்ல மனமும், நல்ல அறிவும் இல்லாத ஒருவன் தான தர்மம் செய்ய மாட்டான். அப்படிப்பட்டவனிடத்திலும் ஒருவர் நல்ல காரியத்துக்குப் பணம் வாங்கி வந்தால், உலக அனுபவத்தில் பலர் பேசுவார்கள். ''அவனிடம் பணம் கறந்து விட்டார்'' என்று சொல்வார்கள். அதாவது விலங்கினம் போன்ற அறிவில்லாதவனிடமும் பணம் பெற்று வந்தான் என்பது குறிப்பாகும்.

ஒரு பசு தானாகவே வீட்டிற்கு வந்து, சொம்பினைத் தேடி எடுத்துப் பாலினைக் கறந்து வைத்துவிட்டுப் போகாது. முன்பு சொன்னதுபோல் நாம்தான் பிடித்துக் கறக்க வேண்டும்.

ஒரு குதிரை, குதிரை-வண்டிக்காரருக்கு ஒருநாளைக்கு நூறு ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கும். அந்த வண்டிக் காரர் அந்தக் குதிரையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அந்தக் குதிரையே தன்னைப் பயன்படுத்திக் கொள்ளும்படி காலையில் சென்று, குதிரை வண்டிக்காரர் களை எழுப்பாது! நாம்தான் விலங்கினங்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

## கயவரும் கரும்பும்

அறிவு இல்லாத—தீமையான—தீய குணங்கள் உள்ள மக்களை—கீழ்மக்களை—கயவர்கள் என்று ஆசிரியர் கூறு கிறார். அத்தகைய கீழ்மக்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால், கரும்பில் சாறு எடுப்பதைப் போல, நசுக்கப் பிழிவதைப் போல—பிழிந்தால்தான் கயமையான மக்கள் பயன்படுவார்கள். இக் கருத்தினை ஆசிரியர் வள்ளுவனார்,

''கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்'' (கு.1078) என்று கூறுகிறார்.

கீழ்மையான குணம் படைத்த மக்கள் பயனுள்ள வாழ்வினை மேற்கொள்ளவே மாட்டார்கள்.

மனிதனுக்குச் சிறப்பாக இருப்பது அறிவுதான் என்றாலும் மக்கட் பிறவி எடுத்த அனைவருக்குமே அறிவு இருக்க வேண்டும் என்று சட்டம் கிடையாது. சிலருக்கு அறிவு இருக்கும். பலருக்கு இருக்காது. அறிவு இல்லாதவர்கள் வருத்தப்படக் கூடாது. நமக்கு எத்தனையோ இல்லை—அதுபோல் இதுவும் இல்லை என்று ஆறுதல் அடைந்து கொள்ள வேண்டும்!

## வருத்தம் கூடாது

சிலர் பேசுகிறபொழுது, மற்றவரைப் பார்த்து, ''உனக்கு அறிவு இருக்கிறதா?'' என்று கேட்பார்கள். அதைக் கேட்டவுடன் மற்றவர் வருத்தப்பட்டுக் கொள்வார். அப்படிச் சொல்பவர்களைப் பார்த்து வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது.

இருந்தால் இருக்கிறது என்று சொல்லலாம். இல்லை என்றால், எங்கட்கு எல்லாம் 'அது' கிடையாது என்று சொல்லலாம். அதனால் ஒன்றும் குடி முழுகிப் போகாது. உலகத்தில் வாழ்வதற்கு அறிவு தேவையா என்பது நன்கு ஆராய்ந்து புரிந்துகொள்ளவேண்டும்.

உலகில் வாழ்பவர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, அறிவு கொண்டு வாழ்வது; மற்றொன்று, பழக்கத்தினால் வாழ்வது.

அறிவினைக் கொண்டு வாழ்கிறவர்கள் வாழ்க்கையில் புதுமைகளைச் சொல்லுவார்கள். புதினங்கள் கண்டு பிடிப்பார்கள். எல்லோரும் இன்புற்று பயன்படுமாறு வாழ்ந்து காட்டுவார்கள்.

## பழக்கம்

பழக்கத்தினால் வாழ்பவர்கள் உண்டு—உறங்கி—இனத்தைப் பெருக்கி காலத்தைத் தள்ளிக்கொண்டு போவார்கள். விலங்கினங்களாகிய ஆடு, மாடு, முதலியன பிறக்கின்றன—உண்டு உறங்கி—வாழ்கின்றன. காலத்தினால் மறைகின்றன. அவைகள் பல செயல்கள் புரிந்தாலும், அறிவு கொண்டு செய்வதில்லை.

காலையில் வீட்டில் பசுமாட்டினை அவிழ்த்து விரட்டி விடுகின்றோம். ஒரு நாள் முழுவதும் பல இடங்களில் மேய்ந்துவிட்டு, மாலையில் தானே நம் வீட்டிற்குள் நுழைந்து, தம் இடத்திற்குப் போய்விடுகிறது. இப்படி அந்த மாடு செய்வது பழக்கத்தினாலேதான். மாலையில் அந்த வீட்டிற்கு வருகின்ற வழிகளை எல்லாம் சிந்தித்து தெரிந்துகொண்டு—தானா வருகிறது?

'மேய்ந்துவிட்டு, குளத்தங்கரை வழியாகப் போய் கோவில் வழியாகத் திரும்பி, கடைத்தெரு சந்து வழியாக வந்து, சின்ன திடலைத் தாண்டிக் கொண்டு, நம் வீட்டிற்குள் போய்ச் சேர வேண்டும் என்றெல்லாம் தெரிந்து கொண்டுதானா அந்த மாடு செல்கிறது? அந்த மாடு செய்வது அனைத்தும், பழக்கத்தினாலேயே ஆகும்.

அதுவே போல, உலகில் வாழ்கின்ற பலர், அவிழ்த்து விட்ட பசு போல, காலையில் புறப்பட்டுப் போய் பழக்க வழக்கமான பல வேலைகளை முடித்துவிட்டு மாலையில் வீடு வந்து சேர்கிறார்கள்! இப்படி வாழ்வதெல்லாம் பழக்கத்தினால் வாழ்கின்ற வாழ்க்கையாகும்.

## இரண்டு வகை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிய திருவள்ளுவனாரும் "அறிவு உடைமை" என்ற அதிகாரத்தில் அறிவுடையோர்—அறிவில்லாதவர்—என்று மக்களை இரண்டு வகையாகப் பிரித்துள்ளார்: அந்தக் காலத்

திலேயே அறிவில்லாதவர்களும் நிறைய இருந்திருக்கிறார்கள். அறிவில்லாதவர்களின் பரம்பரையும் இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

இறைவனுக்குச் சிறப்பான பெயரிட்டு அழைக்கின்ற திருவள்ளுவர் ''வாலறிவன்'' என்று கூறினார். அதாவது தூய்மையான அறிவு மயமானவன் என்று பொருளாகும். கடவுளுக்கு விளக்கம் சொல்லுகின்ற தாயுமான சுவாமிகள் ''சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'' என்று அழைத்தார்.

அறிவுள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், தவறுகள் எக்காலத்திலேயும் செய்யாமலேயே இருத்தல் வேண்டும் என்று நினைக்கக் கூடாது. சில சூழ்நிலைகளினால் தவறுகள் செய்வதும் உண்டு. அப்படியே செய்தாலும் மீண்டும் செய்யாமல் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதுதான் அறிவுடைமை. அறிவு இருக்கிறது என்பதற்கு அடையாளமுமாகும். செய்த தவறினையே மீண்டும் மீண்டும் செய்தால், அறிவு வேலை செய்யவில்லை என்பது பொருள் ஆகும்.

## மாடும் தவறும்

ஒரு வீட்டின் முன்புறத்தில் நெல் காய வைத்திருக்கிறார்கள். அந்தப் பக்கம் போன மாடு ஒன்று நெல்லைப் பார்த்து விட்டு, வந்து தின்னுகிறது. வீட்டுக்காரர் வீட்டிற்குள்ளிருந்து ஓடி வந்து, தடியால் அந்த மாட்டை ஓங்கி அடிக்கிறார். அந்த மாடு ஓடுகிறது. அவர் வீட்டுக்குள் வந்து விடுகிறார்.

மறுபடியும், மாடு வந்து தின்னுகிறது. ஓடிவந்து மீண்டும் அந்த மாட்டை விரட்டுகிறார். அந்த மிருகத்தைத் திட்டுகிறார். அடிக்க அடிக்க வருகிறாயே என்று கடிந்து பேசுகிறார். மிருகத்துக்கு என்ன குணம்? குற்றம் செய்தால் தன்னைத் திருத்திக் கொள்ளாது. அதற்குத் தானே திருந்தும் அறிவு இல்லை.

"ஏ! மனிதனே! எப்படியோ ஒரு முறை தவறு செய்தாலும், மறு முறையும் தவறு செய்யக் கூடாது. உன்னுடைய அறிவின் துணை கொண்டு, திருந்திக்கொள்ள வேண்டும்."

## அறிவு இல்லாமை

ஒரு மிருகம் கடைவீதியில் போய்க் கொண்டிருக்கிறது. பழங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்ற கடை ஒன்றை அதன் கண்கள் பார்க்கின்றன. பழங்களைத் தின்னுவதற்கு அந்த மாடு, செல்லுகிறது. அதனுடைய வாய் பழங்களைத் தின்னுகிறது. உடம்பு கடைக்காரர் கொடுப்பதை வாங்கிக் கொண்டு ஓடுகிறது. அறிவு இல்லாததினால் இந்தப் பெரிய குற்றத்தை அந்த மிருகம் செய்கிறது.

கடைவீதியில் நடந்து கொண்டிருந்த ஒருவனுடைய கண்கள் பழக் கடையில் தொங்கிக் கொண்டிருக்கும் பழங்களைப் பார்க்கின்றன. அவன் நாக்கில் தண்ணீர் ஊறுகிறது. அவன் மனம் பழங்களைச் சாப்பிடலாம் என்று நினைக்கிறது. ஆனால் அவனுடைய அறிவு "பணம் இல்லை போகாதே" என்று சொல்லுகிறது.

வாழ்க்கையில் பற்பல ஆழ்ந்த பொருட்களை நாம் கற்றுத் தெரிந்து கொள்ள வாய்ப்புகள் இல்லையென்றாலும், சிலவற்றையாவது தெரிந்து வைத்துக் கொள்வது நல்லதாகும்.

நம் உள்ளத்தின் உள்ளேயே செயல்படுகின்றவற்றை "அந்தக்கரணங்கள்" என்று கூறுவார்கள். அவைகள்தாம் முறையே, மனம்—புத்தி—சித்தம்—அகங்காரம்—என்பனவாகும்.

**மனம்** என்பது — ஒன்றினை நினைக்கும்.
**புத்தி** என்பது — அதற்கு உருவம் கற்பிக்கும்.
**சித்தம்** என்பது — அதனைப் பற்றிக் கொள்ளும்.
**அகங்காரம்** என்பது — அதனைச் செயல்படுத்தும்.

## செயல்படுத்துதல்

அதாவது ஒரு மாம்பழம் சாப்பிட்டால் நல்லது என்று மனம் நினைக்கும். உடனே புத்தி என்பது, உருவம் சொல்லிப் பக்கத்து வீட்டுத் தோட்டத்திலே, சிவப்பாக உருண்டையாக, ஒரு மாம்பழம் தொங்குகிறது என்பதைச் சொல்லிவிட்டுப் போய்விடும். சித்தம் என்பது எப்படியும் அந்த மாம்பழத்தை சாயங்காலம் பறித்துத் தின்ன வேண்டும் என்று உறுதி செய்யும். அகங்காரம் என்பது செயல்படுத்துவதற்காக மதில்மீது தாவிக் குதித்து, பழத்தைப் பறித்து, அந்த வீட்டுக்காரர் கொடுப்பதையும் வாங்கிக் கொள்ளும். இவைகளை எல்லாம் அறிவு என்பது பார்த்துக்கொண்டு—சம்பந்தம் இல்லாமல் இருக்கும்.

அறிவின் மேலான சிறப்பினைப் பற்பல முறைகளில் இணையற்ற வகையில் ஆசிரியர் வள்ளுவனார் விளக்கமாகத் தெளிவுபடுத்திக் கொண்டு வருகிறார்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்" —

என்ற ஒரு கருத்தினைச் சிந்தித்துப் பார்த்தாலே, அறிவின் இன்றியமையாத் தன்மை விளங்கும்.

## மனம் மயக்கி விடும்

மனத்தின் தன்மை அறிவினையும் மயக்கித் தன்னுடைய வசமாக்கி விடுவதும் உண்டு. மனம் தன்னுடைய போக்கிலேயே அறிவினை இழுத்துக் கொண்டே போகும். எல்லாவற்றையும் தெரிந்து செயல்படுத்தக் கூடிய அறிவு மனத்தின் வசப்பட்டு விடும். ஆசைகளுக்கெல்லாம் இருப்பிடமானது மனம். அந்த மனத்தின் காரணத்தினால் அறிவு திகைப்பில் மலைத்து விடுவதும் உண்டு.

மிகப் பெரும் முனிவராகிய தாயுமான சுவாமிகள் தெளிவாகக் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

"ஏ! நெஞ்சமே! மனமே! நாதனாகிய இறைவனைத் தியானித்து ஒன்றுபட்டு இன்பம் அடைவதற்கு 'வா' என்று அழைத்தால் என்னைத் துன்பப்படுத்தி வசம் செய்து கொண்டு துன்மார்க்கமான போதனை செய்வது சரியாகுமா?" மேற்கூறிய கருத்துக்கள் நிறைந்த பாடல் ஒன்று கற்போர்கள் எண்ணத்தினை எவ்வளவு அருமையாகக் கவர்ந்து விடுகிறது.

**"நாதனை நாதாதீத நண்பனை நடுவாய் நின்ற**
**நீதனை கலந்து நிற்க நெஞ்சமே நீவா என்றால்**
**வாதனை பெருக்கி என்னைவசம் செய்து மனம் துன்மார்க்க**
**போதனை செய்தல் நன்றோ பூரணானந்த வாழ்வே."**

ஆகையினால் மனத்தினைக் கட்டுப்படுத்தி ஆசைகளினால் அல்லல்படாமல் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

## ஐவர் யார்?

ஐந்து பொறிகளும் ஆசைகளைக் கொண்டு சென்று மனத்தினை அழுக்கு படியுமாறு செய்து, நல்லவற்றை மனம் சிந்திக்க விடுவதே இல்லை. ஐந்து பொறிகளும் மிகப் பெரிய தீமையினை உண்டாக்குகின்றனவே என்று அருணகிரிநாதர், துடிதுடித்துப் பாடுகின்றார்.

**"ஒரவொட்டார் ஒன்றை உன்ன ஒட்டார் மலரிட்டு உன்தாள்**
**சேரவொட்டார் ஐவர்"......**

இவ்வாறு பொறிகளாகிய ஐவரும் தீங்கு புரிகிறார்களே என்று வேதனையோடு குறிப்பிடுகின்றார்.

ஐந்து பொறிகளினால் அடைகின்ற பயன்கள்—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பதாக ஐந்து வகைகளாகக் கூறப்படும். இந்த ஐந்தின் நுட்பங்களை "தன்மாத்திரைகள்" என்று பேரறிஞர்கள் சொல்லுவார்கள்.

முனிவர்களைப்பற்றி விளக்கம் செய்கின்ற ''நீத்தார் பெருமை'' என்ற அதிகாரத்தில் இந்த ஐந்து வகையினை யும் ஆசிரியர் திருவள்ளுவனார் ஒரு குறட்பாவால் விளக்கி யுள்ளார்.

**''சுவையொளி ஊறு ஓசை நாற்ற மென்றைந்தின்**
**வகை தெரிவான் கட்டேவுலகு''** (கு. 27)

இந்த ஐந்து வகைகளின் நுட்பங்கள் மிகப் பலவாக அமைந்துள்ளனவாகும். அந்த நுணுக்கங்களையெல்லாம் அறிந்தவர்களே அறவோர்கள் என்னும் முனிவர்கள் ஆகும்.

இவைகளின் தொடர்பாக இருப்பனவற்றைத்தான் ஐம்புலன்கள் என்று சொல்வார்கள். இந்த உலகமே ஐந்து பிரிவுகளாகிய பூதங்களினால் செயல்பட்டு வருகின்றது.

## பூதங்கள்

நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐந்தினையும் ஐந்து பூதங்கள் என்று சொல்லுவது உலக வழக்கு.

தாயுமான சுவாமிகள் பாடுகின்றபோது,

**''ஐவகையெனும் பூதம் ஆதியை வகுத்து''**

என்று கூறுகின்றார்.

ஐம்பூதங்கள் அடங்கிய இந்த உலகத்திலிருந்து நாம் வந்திருக்கின்றோம். ஆனபடியால் இந்த ஐந்து பூதங்களும் நம் உடம்பின் உள்ளும் இருந்து வருகின்றன.

இந்த ஐந்து, இயற்கைப் பிரிவுகளும் இயல்பாக உள்ள உலகத்தினை 'அண்டம்' என்று சொல்லுகிறோம். மிகச் சிறிய அளவில் அமைந்துள்ள இந்த உடம்பினைப் பிண்டம் என்று சொல்லுவார்கள். 'அது அண்டம்'—'இது

பிண்டம்.' இப்படிச் சொல்லத் தெரியாமல் சிலர்—முண்டம் என்றும் சொல்லுவார்கள்.

நம்முடைய உடம்பில் இருக்கும் ஐந்து பூதங்களையும் ஆசிரியர் திருவள்ளுவனார் குறிப்பாக, ஒரு குறட்பாவின் உணர்த்துகின்றார்.

## போலிகள்

துறவிகள் போல் வேடம் போட்டுக் கொண்டு தங்களுடைய சிறிய இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்ற வஞ்சகர்களைப் பற்றி ''கூடாவொழுக்கம்'' என்ற அதிகாரத்தில் கூறுகின்றார். வஞ்சனையான மனமுள்ள ஒருவன் யாருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாகத் தீய ஒழுக்கத்தில் நடப்பதைப் பார்த்து, உடம்போடு கலந்து நிற்கின்ற ஐந்து பூதங்களும் தம்முள் சிரித்துக் கொள்ளுகின்றன என்று, குறட்பா ஒன்று கூறுகின்றது.

> ''வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும்'' (கு. 271)

இக்குறட்பாவில் ஒரே பொருளினைக் கொடுக்கக் கூடிய அகம், மனம் என்ற இரண்டு சொற்களும் சிந்திக்கத் தக்கனவாகும். அவனைப் பற்றிக் குறிப்பிடும்போது, மனத்தான் என்றும், பூதங்களைப் பற்றிச் சொல்லும்போது, 'அகத்தே' என்றும் சொல்லி வைத்தார்.

## தூய்மைக்காக

அனைத்துக்கும் மூல காரணமாய் அமைந்திருப்பது மனமே ஆகும். மனத்தினைத் தூய்மையாக வைத்துக் கொள்ள நடைபெறுகின்ற செயலைத்தான் 'தியானம்' என்று கூறுவார்கள்.

தூய மனத்தினில் இடைவிடாமல் இறைவனைத் தியானம் செய்து கொண்டே இருத்தல் வேண்டும்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்ற முதல் அதிகாரத்தில் காணப்படும் குறட்பாக்களில் சொல்லப்பட்டுள்ள ''சேர்ந்தார்''—''புரிந்தார்'' என்ற சொற்களுக்கெல்லாம் 'இறைவனையே நினைத்தல்' என்பது பொருள் ஆகும்.

மனத்தில் எண்ணிறந்த ஆசைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து குவிந்து கொண்டே இருக்கும். நம்முடைய முயற்சியால் மட்டும் இந்த ஆசைகளை மனத்திலிருந்து விலக்கி விடுதல் என்பது மிகவும் கடினமானதொரு செயலாகும். அந்த ஆசைகள் தாமாகவே, நம்மை விட்டுப் போகுமாறு செய்தல் வேண்டும். இறைவனைச் சிந்தித்தல் என்ற தியானப் பயிற்சியினால்தான் இதனை எய்துதல் முடியும்.

## இரும்புத்துண்டு

சிறந்த ஞானிகள் பற்பல உதாரணங்களினால் மிக ஆழ்ந்த கருத்துக்களை எல்லாம் எளிமையாக விளக்கம் செய்வார்கள். நீளமான இரும்புத் துண்டு ஒன்று, தரையில் கிடக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த இரும்புத்துண்டின்மீது புழு, பூச்சிகள் எல்லாம் போய் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

ஒருவர் அவைகளை எல்லாம் அந்த இரும்புத் துண்டிலிருந்து கீழே தள்ளிக் கொண்டிருக்கிறார். சிறிது நேரம் கழித்துக் கடுமையான, புழு பூச்சிகள் எல்லாம் மீண்டும் அந்த இரும்புத் துண்டில் ஒட்டிக் கொள்கின்றன. ஆதலால் தள்ளிக் கொண்டிருக்கிற வேலையை விட்டுவிட்டு அந்த இரும்புத் துண்டினை நெருப்பு இருக்கின்ற இடத்தில் கொண்டுபோய் நெருப்பினைச் சுடுமாறு சேர்த்து விடுதல் வேண்டும்.

சிறிது நேரத்திற்குள்ளாகவே, நெருப்பின் சூடு அந்த இரும்புத் துண்டில் ஏற ஏற, புழு, பூச்சிகள் எல்லாம் தாமாகவே ஓடிவிடும். அந்த இரும்புத் துண்டும் ஒளிமயமான காட்சியை அளிக்கும்.

அதே போன்று மனத்தில் இறை தியானத்தினை வளர்த்துக் கொண்டே இருந்தால், தீமை செய்கின்ற ஆசைகள் எல்லாம் தாமாகவே மறைந்து போகும். இறைவன் காட்சியளிப்பான்.

## குருவருதல்

தாயுமான சுவாமிகள் பாடுகின்றபோது, அழகாக ஒரு கருத்தினைச் சொல்லுகின்றார்:—

ஓய்வில்லாமல் இறைவன் தியானத்தில் நிலைத்து நின்று, உருகினால், பேரின்பம் பெருகி, இறைவன் காட்சி கிட்டும் என்று நமக்கெல்லாம் போதிக்கின்றார்.

**''வாயாதோ இன்பவெள்ளம் வந்துஉன் வழியாகப்
பாயாதோ, நானும் பயிராய் பிழையேனோ
ஓயாமல் உன்னிஉன்னி உருகுநெஞ்சே அந் நிலைக்கே
தாயான மௌனனருள் சந்திக்க வந்திடுமே.''**

மனத்தினை எப்பொழுதும் ஒருமைப்படுத்தும் பயிற்சி செய்து கொள்ளல் வேண்டும். இறைவன் குரு வடிவமாக வருவான் என்று தாயுமான சுவாமிகள் அறிவுறுத்துகின்றார்.

## அழுக்கு நீக்குக

மனத்தினைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாமல் செய்கின்ற செயல்கள் அனைத்தும் முற்றிலும் பயனற்றவை ஆகும். மனத்தில் அழுக்கு இல்லாமல் எப்போதும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிறரைக் கண்டு பொறாமைப் படுதலும், அந்தக் காரணத்தினால் பிறரை இழிவாகப் பேசுவதும், கடுங் கோபம் கொள்ளுதலும், மற்றும் இவை போன்ற தன்மைகள் எல்லாம் மனத்தின் அழுக்குகளை நிறைய உண்டாக்கி விடுவன ஆகும்.

ஜாதி, மதம், சமயம் என்பவைகளினால் மற்றவர்கட்குத் துன்பம் செய்தல் என்பதும்—மற்றவர்களை இழிவாகப் பேசுதலும், கடுங்கோபம் கொள்ளுதலும், மற்றும் இவைபோன்ற தன்மைகள் எல்லாம் மனத்தின் அழுக்குகளை நிறைய உண்டாக்கி விடுவன ஆகும்.

இவைபோல, எத்தனையோ கொடிய எண்ணங்கள் சிறிதளவும் மனதில் நேராமல் பார்த்துக்கொள்ளகிற தூய்மையான மனத்தினைத்தான் திருவள்ளுவர் "அறம்" என்று சொல்கின்றார். அறமேதான் இறைத்தன்மையும் ஆகும். அறம் இல்லாமல் மனத்தினை வைத்துக் கொண்டு செய்யப்படும் செயல்களும் பேசும் பேச்சுக்களும், ஆக அனைத்துமே ஆரவாரத்தன்மைகள் ஆகும்.

## அறம்

அறம் என்ற சொல்லினை இரண்டு குறட்பாக்களில் அமைத்து அறம் என்பதனை விளக்கிக் காட்ட, மனம் தூய்மையே எல்லாம் என்று எடுத்துக் கூறுகிறார். மனத்திலே அழுக்கு வைத்துக் கொண்டு செய்யப்படுவன எல்லாம் பயனற்றவை என்றும், வெளிப்பகட்டுக்காகச் செய்யப்படும் ஆரவாரங்கள் என்றும், இரண்டு குறட்பாக்கள் கூறுகின்றன. அந்தக் குறட்பாக்களைச் சிந்திப்போமாக!

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (கு. 34)

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (கு. 35)

இந்த இரண்டு குறட்பாக்களும் மனத்தினைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்ற பெரிய உண்மையினையும், மனம் தூய்மையில்லாமல் செய்யப்படும் செயல்கள் எல்லாம் போலியாகவும், வெளிப்பகட்டு—ஆரவாரங்கள் ஆகவும் முடியும் என்பதும் கூறப்பட்டது.

இறைவன் நற்குணங்கள் அனைத்தும் உருவானவன் ஆனபடியால் தீய குணங்களும் எண்ணங்களும் மனத்திலே வாராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த முயற்சியினைத்தான் தியானத்தின் முதற்படி என்று அறிதல் வேண்டும்.

## உள்ளத் துடிப்பு

இறைவனை அடைய வேண்டும் என்ற உள்ளத் துடிப்பு வளர்ந்து மிகுதிப்படுமேயானால், அத்தகையவர்களுக்கு இறைவன் குரு வடிவமாகக் காட்சியளிப்பான் என்பது திண்ணம். இறைவனை அடைய வேண்டும் என்ற உள்ளத் துடிப்புக்கு— வேகத்திற்கு—ஒரு உதாரணம் சொல்லலாம்.

தண்ணீருக்குள் ஒருவன் மூழ்கி மூழ்கி நீராடுகின்றான். தண்ணீருக்குள்ளேயே அதிக நேரம் இருக்கமுடியாது. மூச்சுவிடமுடியாமல் திணறல் ஏற்பட்டு விடும். ஒருவன் சில நிமிடங்கள் அதிகமாகவே இருந்துவிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இனியும் நீருக்குள் இருந்தால் மூச்சுவிடமுடியாமல் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உண்டாகிறபோது அதிவேகமாக வெளியே வர நீரின் மேல் தலையை உயர்த்துகிறான். அந்த நேரத்தில் அவன் தலையை இரண்டு பேர் நீருக்குள் அழுத்திவிட முயற்சிக்கிறார்கள் என்றால் அவனுக்குத் தலையினை வெளியே கொண்டுவர உண்டாகின்ற துடிப்புக்கு அளவு சொல்ல முடியுமா? மிக அதிகமான வேகத்தில் அல்லவா வெளிவர முயற்சிக்கின்றான்.

அதுபோன்ற உள்ளத் துடிப்பு இறைவனை அடைய இருத்தல் வேண்டும். இதனை 'முமூட்சுத்துவம்' என்று வழக்கமாகச் சொல்லுவார்கள். முறையாகச் செய்கின்ற தியானப் பயிற்சியினால், இந்த நிலை வந்துவிடுவதாகும். இத்தகைய கருத்துக்களை எல்லாம் ஞானநூல்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

## கைவல்யம்

கைவல்யம் என்ற நூலைப் பற்றிச் சிறிதளவாவது நாம் அறிந்துகொள்ளவேண்டும். இதனை கைவல்ய நவநீதம் என்று அழைப்பார்கள். ''வெண்ணெய்'' என்பது இதன் பொருளாகும். அதாவது பாலினைக் காய்ச்சிக் கடைந்து எடுப்பதால் உண்டாவதாகும்.

வேதாந்தம் என்கிற பாற் கடலில் இருந்து, நூல்கள் என்கிற குடங்களில் மொண்டு முன்னோர்கள் நிறைத்து வைத்தார்கள் என்றும், அதனைக் கடைந்து எடுத்த வெண்ணெய்தான் 'கைவல்யம்' என்று பெரியவர்கள் சொல்வார்கள். பாடல் பேசுகிறது.—

**படர்ந்த வேதாந்தம் என்னும்**
**பாற்கடல் மொண்டு முந்நூற்**
**குடங்களில் நிறைத்து வைத்தார்**
**குரவர்கள் எல்லாம்..............**
**காய்ச்சி கடைந்தெடுத்து அளித்தேன்**
**இந்த கைவல்ய நவநீதத்தை............**

ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும் என்றெல்லாம் பேசப்படுகின்ற அனுபூதிமான்கள் கூறுகின்ற நுட்பமான மறைபொருள்களை எல்லாம் 'கைவல்ய நவநீதம்' என்ற நூலில் தெளிவாகக் காணமுடிகிறது.

## மறைமொழிகள்

ஞானிகள் எனப்படுகின்ற முனிவர்கள் ஓதிய கருத்துக் களை எல்லாம் 'மறைமொழிகள்' என்றும் 'வேத வாக்குகள்' என்றும் சொல்லிக் கொள்கிறோம். 'கைவல்ய நவநீதம்' என்ற அரிய நூலில் சுருக்கமாக ஒன்று சொல்லப்படுகின்றது

**சாதனமின்றி ஒன்றைச்**
**சாதிப்பார் உலகிலில்லை**
**ஆதலால் இந்த நான்கும்**
**அறிந்தவர்க்கு அறிவுண்டாகும்**
**நூதன விவேகியுள்ளே நுழையாது**
**நுழையுமாகில் பூதஜன்மங்கள் கோடி**
**புனிதனாம் புருடனாமே.**

வாழ்க்கையில் நம்பிக்கை வைக்க வேண்டியவைகளை நம்பி ஆகவேண்டும்; எல்லாவற்றையுமே நம்பமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அறிவுகொண்டு சிந்தித்துப் பார்த்துச் செயல்படவேண்டும்.

## நூதன விவேகி

சிலர் நல்ல அறிவு படைத்தவர்களாகவே காட்சி யளிப்பார்கள். ஆனால் எந்தக் கருத்தையுமே மறுத்தும்— எதிர்த்தும் பேசுகின்ற வழக்கத்தையும் வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களைத்தான் நூதனவிவேகி கள் என்று கைவல்யம் சொல்கிறது.

விவேகிகளாக இருந்தாலும் இவர்கள் பேசுகின்ற பேச்சு எந்த உயர்ந்த தத்துவத்தையும் பின்பற்றாமல் நூதனமாகவே இருப்பதாகும். தியானம் செய்கின்ற இறை நெறி மார்க்கத்தினை — சரியை — கிரியை—யோகம்— ஞானம் — என்று நான்கு வகைகளாகக் கூறுவார்கள். முறையே 'சாதனம்' செய்கின்ற வழி நெறியாகும். தியான

பயிற்சியினால் பல பிறவிகளில் தொடர்ந்து வருகின்ற வினைப் பயன்கள் எல்லாம் மறைந்து போகும்படி செய்ய முடியும். முன்னர் நாம் குறிப்பிட்டவாறு, மனம் என்கின்ற இரும்பினை—தியானம் என்கின்ற நெருப்போடு சேர்த்து விட்டால், ஆசைகள் என்கிற பூச்சி புழுக்கள் தாமாகவே ஓடிவிடும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

## குருமார்கள்

குருமார்களை இறைவனாகவே கருதவேண்டும் என்பது மிகப் பெரிய உண்மையாகும். இறைவன் குரு வடிவில் காட்சி அளிக்கிறான் என்பது பேரறிஞர்களின் கருத்தாகும். முற்றும் துறந்த முனிவர்களான அறவோர்களே குருமார்கள் ஆவார்கள். அவர்களே ஞான நிலையில் முதிர்ச்சி பெற்றவர்கள் ஆவார்கள். குருமார்கள் பார்வையே நம்மைப் புனிதமாக்கும். குருமார்கள் உபதேசம் செய்தால்தான் ஆன்மீகத் துறையில் பயிற்சி செய்து முன்னேற்றம் அடைய முடியும் என்பது உலகியல் உண்மையாகும். இந்த உண்மையினைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுதல் இன்றைக்கு இன்றியமையாததாகும்.

குருமார்கள், எல்லோருக்குமே எளிதாக உபதேசம் செய்வார்கள் என்று சொல்வதற்கில்லை. பக்குவம் பெற்ற ஆன்மீக அன்பர்கட்கே அருளாளர்கள் உபதேசிப்பார்கள் என்று சொல்வது உண்டு. உலக வாழ்க்கையில் பலர் பற்பல வகையான துறைகளில் கல்வி, கேள்வி முறைகளினாலும், ஆர்வத்தினாலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளலாம். ஆனால், ஆன்மீகத் துறை, தொடர்பாக வருகின்ற பல பிறவிகளின் பயனாகத்தான் இருக்க முடியும் என்று சொல்வதுண்டு.

## தவம்

''தவமும் தவமுடையார்க்கு ஆகும்'' (கு.262) என்பது திருவள்ளுவர் வாக்காகும். முன்பு செய்த நல்வினையின் காரணமாகத்தான் இப்பிறவியில் தவத்தினை மேற்கொள்ள முடியும் என்பது அறிஞர்களின் கருத்து ஆகும்.

ஒருவர் ஒரு பிறவியில் செய்த நல்வினை தீவினைகள் செய்தவனைச் சார்ந்து வந்து கொண்டே இருக்கும் என்பது மெய்யுணர்வினைப் பெற்ற தத்துவ ஞானிகளின் கருத்து ஆகும். இயல்பாகவே வினைப் பயன்கள் தொடர்ந்து வருவதால் அதனை இயற்கையின் நியதி என்றும், ஊழ்வினை என்றும் சொல்வார்கள். 'ஊட்டும்' என்பதற்கு இயல்பாக உண்டாவது என்பது பொருளாகும். உலக வாழ்க்கையில் நம்முடைய முயற்சிகளின் பயனால் நடை பெறுகின்றவற்றை 'செயற்கை' என்றும், இயல்பாகவே நடைபெறுவதை 'இயற்கை' என்றும் கூறிக்கொள்கிறோம்.

உலகில் நிகழ்கின்ற பல நிகழ்ச்சிகள் இயற்கையின் விளைவாக நடைபெறுகின்றன. ''இயற்கை விதி'' என்றால் இயற்கையின் சட்டம் என்று பொருள். 'விதி' என்ற சொல்லுக்குச் சட்டம் என்பது பொருள் ஆகும்.

## ஊழ்வினை

'விதிமுறைகளை அனுசரிக்கவும்' என்று எழுதியிருந் தால் சட்ட முறைப்படி நடக்க வேண்டும் என்பதாகும்.

செயற்கையைவிட இயற்கை முதன்மை பெற்றதாகும். கடல் என்பது இயற்கை. கப்பல் விடுவது செயற்கை. பூமி என்பது இயற்கை, வீடு கட்டுவது செயற்கை..

இயற்கையாகிய பூமியை நாமே படைத்துச் செயர் படுத்துவது நம்மால் இயலாத காரியம். இயற்கையே

இறைவன் என்றும் சொல்லப்படும். இயற்கையே இறைவன் என்று சான்றோர்கள் சொல்லி வருகிறார்கள். இயற்கையின் சட்டமே முதன்மையான சட்டம் ஆன படியால் அதனைத் 'தலைவிதி' என்று சொல்லுகிறோம். 'தலை' என்பதற்கு முதன்மையானது என்று பொருள் ஆகும்.

பிறவிதோறும் தொடர்ந்து வருகின்ற வினைகளின் பயனாகப் பல செயல்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தொடர்ந்து வருகின்ற வினைப் பயன்களை மூன்று வகைகளாகப் பிரித்துப் பேசுவார்கள்.

## மூன்று வினைகள்

அந்த மூன்றினையும் வட மொழியில் ஆகாமியம்—சஞ்சிதம்—பிராரத்வம் என்று கூறுவர். தமிழ்மொழியில் இவைகளை எச்சவினை—வருவினை—நிகழ்வினை என்பர். இப்போது—இப்பிறவியில் அனுபவித்துக் கொண்டிருப்பதை பிராரப்தம் என்றும் எஞ்சி இருப்பதை 'ஆகாமியம்' என்றும், இனிமேல் வரப்போகும் வினைப் பயன்களைச் சஞ்சிதம் என்று கூறுவார்கள்.

வினைப் பயன்களின் நுட்பங்களை எல்லாம் முதிர்ந்த ஞான அனுபவம் பெற்ற பெரியவர்களின் வாயிலாகக் கேட்டறிதல் நல்லது. ஒவ்வொரு பிறவியிலும் செய்யப் படுகின்ற வினைப் பயன்கள் சேர்ந்து கொண்டே இருக்கும்.

செய்யப்படுகின்ற வினைகள் எல்லாம்—நல்வினை—தீவினை—என இருவகையினுள் அடங்கும். இந்த வினைகள் எல்லாம் அனுபவிப்பதற்குரிய பக்குவம் அடைந்த பிறகு தான் செய்தவனை வந்து சேரும். அதுவரையில் அவைகள் எஞ்சியவைகளாக இருந்து கொண்டிருக்கும். அவைகளைத் தான் எச்சவினை என்று கூறுவார்கள்.

இப்பிறவியில் செய்யப்படும் செயல்களாகிய வினைப் பயன்கள் வருகின்ற பிறவிகளில் அனுபவிக்க வேண்டியவை களாக இருககும். அவைகட்கு வருவினை என்று பெயர்.

இந்தப் பிறவியில் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வினைப்பயன்கட்கு 'நிகழ்வினை' என்று பெயர். இதனை வடமொழியில் 'பிராரத்வம்' என்று கூறுவர்.

இந்தப் பிறவியில் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வினைப் பயன்களை உலக வழக்கில், துன்பப்படுகின்ற ஒருவரைப் பார்த்து— 'அது அவனுடைய பிராப்தம்' என்று நடைமுறைப் பேச்சில் சொல்வார்கள். இந்த வினையின் நுட்பம் என்னவென்றால் யாராக இருந்தாலும் இந்த வினையினை அனுபவித்தே தீர வேண்டும். இது யாரையும் தப்பிக்க வைக்காது. தியான முயற்சிகளினால் பிராரத்வ வினையின் வேகத்தினைச் சிறிதளவு குறைப்பதற்கு முயற்சிக்கலாம். அவ்வளவுதான்.

## மற்ற இரு வினைகள்

எச்சவினை—வருவினை என்கிற இருவினைகளும் ஆன்மீக சக்திகளால் இல்லாமல் செய்ய முடியும். தியானப் பயிற்சியினாலும் குருமார்களின் பார்வையினாலும் ஆகாமியம்—சஞ்சிதம்என்று சொல்லப்படுகின்ற எச்சவினை —வருவினைகள் மறைந்து விடுவன ஆகும்.

குரு உபதேசம் பெற்ற ஒருவன் தன்னை நன்றாகப் பக்குவப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். குருநாதரிடம் உபதேசம் பெறுகின்ற முறையினைப் பெரியவர்கள் நல்ல உதாரணங்களினால் விளக்கம் செய்வார்கள்.

நெருப்பு உண்டாக்கப்படுகின்ற அடுப்பினைத் தேடி வைத்துக் கொள்ள வேண்டியது நம் கடமை. நெருப்பினை உண்டாக்க வேண்டுவதும் நம் கடமையாகும். பாத்திரத்தை

வைத்துப் பால் காய்ச்ச வேண்டுவதும் நம் கடமை இவ்வளவு நாம் செய்து முடித்த பிறகு காய்ச்சப்பட்ட பாலில் சிறிதளவு மோர் ஊற்றுவார்கள். இதனை 'உறை'க்கு ஊற்றுதல் என்று சொல்வார்கள். பால் உறைந்த பிறகு நன்றாக, கடைந்து எடுத்தால் வெண்ணை கிடைக்கும்.

ஒன்றுமே இல்லாமல் கொஞ்சம் உறைக்கு ஊற்றுங்கள் என்று சொல்வது வேடிக்கையாக முடியும். எங்கே 'உறைக்கு' ஊற்றுவது என்று கேட்பார்கள்.

## உபதேசம்

உறை ஊற்றுகின்ற மோரானது முன்னதாகவே காய்ச்சிய பாலில் கடைந்தெடுக்கப்பட்டதால் வந்தது என்பதைக் குறிப்பாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறாக கருத்தினைக் கொண்டுதான் குருமார்கள் 'உபதேசம்' செய்வதனையும், உறை ஊற்றுதல் போன்றது என்று அறிஞர் கூறுவார்கள். உறை ஊறிய பிறகு உறைந்திருக்கும் பாலினை மிகக் கடினமாகக் கடைந்து எடுத்தால்தான் வெண்ணை கிடைக்கும், என்பது போல. குருமார்களிடம் உபதேசம் பெற்ற பிறகு முறையான தியானப் பயிற்சியில் இருந்து வந்தால்தான் நற்பயன்களை அடைய முடியும். துன்பங்கள் எனப்படுகின்ற இடையூறுகள் எல்லாம் இறையருள் வழியில் செல்லுகின்ற தியானப் பயிற்சினால் மறைந்து ஓடிவிடுவன ஆகும். வினைப் பயன்கள் என்பவைகள் இறைவனால் கொடுக்கப்பட்டவை அல்ல. இவைகள் எல்லாம் பிறவியில் செய்யப்படுகின்ற செயல்களால் வருவன ஆகும்.

ஆன்மீகத் துறையில் தியான முறையில் இருப்பவர் களை குருமார்கள் தாமாகவே தேடி வந்தும் நல்வழி

புகட்டி, உபதேசம் செய்வார்கள் என்பது மெய்ந் நூல் களில் கூறப்பட்டிருப்பன ஆகும். இறைவனையும் குருமார் களையும் வேறு வேறாகப் பிரித்து சிந்திக்கக் கூடாது. அறநெறியில் நிற்கின்ற முனிவர்கள் இறைத் தன்மை பெற்றவர்கள் ஆவார்கள். நிறைந்து மிகுந்த ஆற்றல் பெற்றவர்களே குருமார்கள் எனப்படுவார்கள்.

## அவித்தான்

ஆசிரியர் திருவள்ளுவனார் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் இறைவனுக்கு விளக்கம் தருகின்ற போது ''ஐந்து அவித்தான்'' என்று குறிப்பிடுகின்றார். அது போலவே முனிவர்களைப் பற்றிப் பேசுகின்ற 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்திலும், 'ஐந்து அவித்தான்' என்ற பெயரிலேயே முனிவர்களைக் குறிக்கின்றார் என்ற கருத்து சிந்திக்கத் தக்கதாம்.

குருமார்கள் உபதேசம் செய்கின்ற முறைகளை மூன்று வகைகளாக முன்னோர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளத்தில் நினைத்து உபதேசம் செய்வது, கண்களைப் பார்த்து உபதேசம் செய்வது, உடம்பினைத் தொட்டு உபதேசம் செய்வது, என்பதாக மூன்று முறையில் அமைந் துள்ளன. இதனை வடமொழியில் சட்சு தீட்சை - நயன தீட்சை - பரிச தீட்சை என்று கூறப்படுவதாக குறிப்பிட்டுக் காட்டுகின்றார்கள்.

குரு உபதேசம் என்பது என்னவென்றால் ஒரு முனிவர் பல பிறவிகளில் தான் தேடி வைத்துள்ள ஞான சக்தியின் பயனை சீடனுக்கு கொடுக்கின்றார் என்பது பொருள் ஆகும். ஆதலால்தான் உபதேசம் என்ற பொருளினை எல்லோருக்கும் கொடுத்து விட மாட்டார்கள். பக்குவமும் தகுதியும் நிறைந்தவர்களுக்கே உபதேசம் செய்வார்கள்.

## இல்லறம்

இல்லறத்தில் வாழ்கின்ற கணவனும் மனைவியும் மகப்பேறு பெற்று மகிழ்வதே பெரும் பாக்கியமாகக் கருதுவார்கள். மகப்பேறு பெறுவதற்கு கரு தரித்தல் என்பது இயல்பான ஒன்றாகும். அங்ஙனம் கருத்தரிப்பதற்கு ஆடவன் தான் சேர்த்து வைத்திருக்கின்ற சக்தியினை மன மகிழ்ச்சியுடன் கொடுத்தால்தான் கரு தரிக்கும் என்பது உயரிய உண்மையாகும்.

ஞானவான்களாகிய குருமார்கள் சீடர்களுக்கு உபதேசம் அளிப்பது என்ற உண்மையினை சிறிதளவு சிந்தித்துப் பார்த்தாலும் தவப் பயனே ஆகும் என்பது வெள்ளிடை மலையாகும்.

## மூன்று தீமைகள்

மனிதர்கட்கு இருக்கின்ற தீமையான குணங்களை 'மலங்கள்' என்று கூறுவார்கள். இந்த மலங்களை ஆணவம்-கன்மம் - மாயை என்று மூன்று பெயர்களினால் அழைப்பார்கள். இந்த மூன்று மலங்களும் அற்றுவிட்டால் தூய்மையான உள்ளம் இறைவன் காட்சிக்கு உன்னதமாக பக்குவப்படுத்தப்பட்டுவிட்டது என்பது பொருளாகும்.

மலங்களைப் போக்குவது குருமார்களின் உபதேசமும் தியானப் பயிற்சியுமே என்று நம்முடைய மறைகள் பறை சாற்றுகின்றன.

பல பிறவிகளில் செய்து வருகின்ற தியானப் பயிற்சிகளால் மூன்று மலங்களும் ஒவ்வொன்றாக அற்றுப் போய் விடும். நினைத்து உபதேசிப்பது என்பது ஒரு மலம் உடையவர்கட்கு என்றும், கண்களால் பார்த்து உபதேசிப்பது என்பது இரண்டு மலங்கள் உடையவர்க்கு என்பதும், தொட்டு உபதேசிப்பது என்பது மூன்று மலங்கள் உடையவர்க்கு என்றும் ஒருவகையில் வேதாந்த நூல்கள் விளக்குகின்றன.

## மூன்று வகையினர்

பொதுப்படக் கூறப்படுகின்ற, கருத்துக்கள் எல்லாம் ஆழ்ந்து சிந்திக்கின்ற வகையில் வேதாந்த நூற்களைப் பார்த்து, தெரிந்து கொள்ளுதல் நல்லது. மானிடப் பிறப்பில் மும்மலங்கள் உள்ளவர்கள் - இரு மலங்கள் உள்ளவர்கள் - ஒரு மலம் உடையவர்கள் என்றெல்லாம் வகைப்படுத்திக் கூறியுள்ளார்கள். அவர்களுக்கு எல்லாம் ஆன்மீகத் துறையில் விளக்கம் செய்கின்ற நூல்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று அழைக்கிறார்கள்.

உபதேசம் செய்கின்ற முறைகள் உதாரணங்களினால் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

ஆமைகள் முட்டையிட்டு வைத்து நினைப்பினாலேயே குஞ்சு பொறிக்கின்றன என்றும் - தண்ணீரில் ஓடுகின்ற தாய் மீன்கள் பக்கத்தில் ஓடிவருகின்ற குஞ்சு மீன்களை கண்களால் பார்ப்பதினாலேயே அவைகள் காப்பாற்றப்படுகின்றன என்றும், கோழிகள் முட்டைகளின்மீது அமர்ந்து (அடைகாத்து) குஞ்சுகள் பொறிக்கின்றன என்றும் உலகியலில் கண்டு வருகின்றோம்.

இந்த நிகழ்ச்சிகளை உதாரணமாகக் கொண்டுதான் குருமார்கள் நினைத்தும் — பார்த்தும் — தொட்டும் செய்கின்ற உபதேசங்கள் விளக்கம் செய்யப்படுகின்றன.

## ஊழ்வலி

மனித வாழ்க்கையில் இயற்கையாக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை ஊழ்வினைப் பயன் என்று சொல்லுகிறார்கள். 'ஊழ்வினை' என்பது வலிமை மிக்கதாகும் என்று கூறப்படுகின்றது. வலிமை என்ற சொல் தடுக்க முடியாமல் வந்தே தீரும் என்ற கருத்தினையே வற்புறுத்திக் கூறுவது ஆகும்.

"ஊழிற் பெருவலி யாவுள" (கு. 380)

என்ற கருத்துரையும் சிந்தித்துப் பார்க்கத் தக்கதாம். இயற்கையின் வலிமை செயற்கை என்கிற முயற்சியினை விட மிகப் பெரியதாகும்.

செயற்கை என்கிற முயற்சியினால் பல நல்ல பயன் களை அடைய முடியும்.

"ஊழையு ் உப்பக்கம் காண்பர்" (கு. 620)

என்ற கருத்துரையும் பல சூழ்நிலைகளில் முயற்சி என்பது இயற்கை எனப்படுகின்ற ஊழ்வினையினையும் வெற்றி காண முடியும் என்கிறது. வாழ்க்கையில் உலக நடை முறையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை இயற்கை - செயற்கை என்று பிரித்துப் பேசுகின்றோம். உதாரணமாக இயற்கையில் 'பேய்மழை' பெய்து கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோமே. அப்பொழுது நாம் முயற்சி செய்தாலும், வெளியில் செல்ல முடியவில்லை. அதற்குக் காரணம் செயற்கையாகிய முயற்சியினைவிட இயற்கை நிகழ்ச்சி வலிமையுள்ளதாக நிகழ்கிறது.

## முயற்சியின் வெற்றி

ஒரு நேரத்தில் மழை சிறிய தூறலாக பெய்து கொண் டிருக்கிறது. இதுவும் இயற்கையின் நிகழ்ச்சிதான். அப்பொழுது, குடை பிடித்துக்கொண்டு நம்முடைய முயற்சியினால் வெளியில் செல்ல முடிகின்றது. இயற்கை யினால் இந்த இடத்தில் செயற்கை என்ற முயற்சியைத் தடுத்து நிறுத்த இயலாமற் போய்விடுகிறது. முயற்சி பலன் அளித்தது.

ஒரு ஆற்றில் கரைபுரண்டு வெள்ளம் ஓடுகின்றபோது, நம்மால் கடந்து செல்ல முடியவில்லை. நம்முடைய முயற்சி பயன் அளிக்காது. அதே ஆற்றில் ஒரு நேரத்தில்

இரண்டடி தண்ணீர் ஓடிக்கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம்; அப்பொழுது நம்முடைய முயற்சியினால் நடந்து ஆற்றைக் கடந்து செல்கிறோம்.

இயற்கையின் நிகழ்ச்சி வேகம் குறைந்திருக்கிறபோது, முயற்சி வெற்றி பெறுகிறது. இவ்வாறு இயற்கையின் நிகழ்ச்சிகளை காலங்களின் சூழ்நிலைகளினால் சிந்தித்து அறிதல் வேண்டும்.

மேலே சொன்ன உதாரணங்களை மனதில் கொண்டால் ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'', என்ற கருத்துரையும், ''ஊழிற் பெருவலி யாவுள'' என்ற கருத்துரையும், தெளிவாகப் புலப்படுவன ஆகும்.

## விளக்கம்

உலகியல் வாழ்க்கையில் கற்றும் கேட்டும் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் எண்ணிறந்தவையாக இருக்கின்றன என்பது உண்மையிலும் உண்மையாகும். 'ஐந்தவித்தான்' என்று நாம் படித்த சொற்களின் நுட்பத்தினை ஆராய்ந்து பார்க்கின்ற போது புதுமையான பல உண்மைகள் புலப்படுவதாகும். அவித்தான் என்ற சொல்லுக்கு அருமையான பொருள் அடங்கியிருப்பதைக் காணுகின்றோம். ஐந்து பொறிகளையும் (மெய்-வாய்-கண்-மூக்கு-செவி) அவித்தல் வேண்டும் என்றால், அவைகளைக் கெடுத்துவிடுதல் என்பது பொருள் ஆகாது. அவைகளைக் கெடுத்துவிட்டால், அவதிப்பட்டு உலகில் வாழ்க்கை நடத்தவே முடியாது.

அவித்தல் என்ற சொல்லினைப் பழக்கத்தில் நாம் கேட்டு வருகின்றோம். 'நெல் அவித்தல்'— என்று சொல்வார்கள். அதாவது அரிசியாக அறைப்பதற்கு நெல்லைப் பக்குவப்படுத்த வேண்டும். ஒரு பெரிய பாத்திரத்தில் நிறைய தண்ணீர் விட்டு நெல்லையும் போட்டு அடுப்பின் மேல் வைத்து அவிக்கின்றோம். நெல்லை குழைய குழைய

வேக வைத்து விடக்கூடாது. அப்படிச் செய்து விட்டால் அந்த நெல்லை பிறகு காயவைத்து அரிசியாக அறைக்க முடியாது.

## நெல் அவித்தல்

ஒரு ஆவி வந்தவுடன், நெல்லை எடுத்துக் காய வைப்பார்கள். காய்ந்த பிறகு அரிசி ஆக்கிவிடுவார்கள். அளவோடு ஆவி வந்தபின் எடுத்து விடுவதைத்தான் அவித்தல் என்று சொன்னார்கள். அவித்த நெல் பிறகு முளைக்காது. விதையாக விதைக்க முடியாது.

பொறிகளை அவித்தல் என்பது, அவைகள் குறும்பு செய்யாமல் பார்த்துக் கொள்வதாகும். அதனைத்தான் 'ஐந்தவித்தல்' என்று ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்பிட்டுக் காட்டினார்கள். சிறிது வேக்காடு காட்டி எடுத்துவிட வேண்டும் என்று பேசுவோரைக் கேட்கின்றோம்.

அதுவே போன்று, தியானப் பயிற்சிகளால் ஐந்து பொறிகளுக்கும் வேக்காடு காட்டி அடக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தியானம் செய்யச் செய்ய ஐந்து பொறிகளும் பக்குவத்திற்கு வந்து விடும் என்று அறிய வேண்டும்.

தியானப் பயிற்சியினால் ஐம்பொறிகளும் அடக்கப்பட்டு, உள்ளமாகிய மனம் தூய்மைப்படுத்தப்பட்டு இறைவன் காட்சி புலப்படும் என்ற உண்மையினை உணர்ந்து கொள்ள வேண்டும். குரு வடிவமாய் இறைவன் வந்து, அனைத்தையும் அருளிச் செய்வார்.

## வடலூரார் வாக்கு

'அருட்பெருஞ்சோதி — தனிப்பெருங்கருணை' என்ற மூல மந்திரத்தைத் தந்த திருவருட் பிரசாக வள்ளலார் நாம் அறிந்து உணரும் பொருட்டு இறைவன் தனக்கு

உணர்த்திய உண்மைகளை எல்லாம் அருமையாகப் பாடுகின்றார். 'குரு வடிவமாக இறைவன் வந்து உபதேசம் செய்வார்' என்பதற்கு 'திருவருட்பா' ஒன்றினைக் கண்டு தெளிவோமாக.

**அந்தோ ஈது அதிசயம் ஈது அதியம் என் புகல்வேன்**
**அறிவறியாச் சிறியேனை அறிவறியச் செய்தே**
**இந்தோங்கு சடைமுடி நின் அடிமுடியுங்காட்டி**
**இது காட்டி அது காட்டி எந்நிலையும் காட்டி**
**சந்தோட சித்தர்கள் தம் தனிச் சூதும் காட்டி**
**சாகாத நிலைகாட்டி சகஜ நிலை காட்டி......**

பல நூல்களை ஓதாமல் உணர்ந்த - உலகில் சிறந்த மகான் வடலூர் வள்ளலார், திருக்குறட்பாக்களை அருமையாக குறித்துக் காட்டி நமக்கு அறிவுறுத்துகின்றார்.

திருவருட்பாவில் 'நெஞ்சறிவுறுத்தல்' என்ற ஒரு பகுதி சொல்லப்படுகிறது. அப்பகுதியில் குறட்பாக்களை எல்லாம் வள்ளலார் எடுத்துச் சொல்லி, ''நெஞ்சமே குறட்பாக்களை எல்லாம் மறந்து விடலாமா'' என்று நெஞ்சு உருகப் பாடுகின்றார். ஒரு சின்ன எடுத்துக் காட்டினைப் பார்ப்போம்.

**''உறங்குவது போலும் என்ற ஒண் குறளின் வாய்மை**
**மறங்கருதி அந்தோ மறந்தாய்''—கரந்தும்**
**நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**
**மருவும் குறட்பா மறந்தாய்......**

இவ்வாறு குறட்பாக்களின் சிறப்பினை அருட்பாக்களைக் கொண்டு உயர்நீதி விளக்கம் செய்து அறிவுறுத்துகின்ற தன்மையினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## உறக்கம்

உறக்கம் என்பதனை இறந்து போவதற்கு எடுத்துக் காட்டாகப் பயன்படுத்துகின்ற கருத்தினை குறட்பாவில் தான் காண முடிகிறது. தூக்கத்திற்கு இருக்கின்ற தன்மைகளை பற்பலவாக விளக்கம் செய்து பார்க்கலாம் என்று இருந்தாலும், வெளிப்படையாக இரண்டு உண்மைகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஒன்று, தூக்கம் வருகின்ற நேரம் தெரியாது. முன் கூட்டியே வந்து சொல்லி விட்டுப் போகாது. இரண்டாவது, தூக்கம் மரியாதை வைத்துப் பார்க்காது.

''இவர் பெரிய மனிதர் ஆயிற்றே. நான்கு பேருடன் பஞ்சாயத்துப் பேசுகின்றாரே. இவர் தலையினை அசைத்து ஆட வைக்கலாமா'' என்று தூக்கம் நினைத்துப் பார்க்காது. எப்படிப்பட்டவராக இருந்தாலும் தூக்கம் வருகின்ற நேரம் வந்துவிட்டால், தலை ஆட ஆரம்பித்து விடும். தூக்கத்தைப் பார்த்து, ''சிறிது நேரம் கழித்து வரலாமே'' என்று சொல்ல முடியாது. அதுபோல ''காலன்'' வந்து விட்டால், ''கொஞ்சம் பொறுத்து வா'' என்று சொல்ல முடியாது.

## சட்டம்

'காலன்' என்று பழக்கத்தில் சொல்லப்படும் வார்த்தை உடலிலிருந்து உயிரைப் பிரித்துச் செல்கின்ற கூற்றுவனைக் குறிப்பதாகும். கூற்றுவன் வருகின்ற நேரத்தைச் சொல்லி விட முடியாது. இயற்கையின் சட்டப்படி 'இந்த நேரத்தில் வரவேண்டும்' என்று இருந்தால் தடுக்கவே முடியாது.

பெரிய மனிதர்—சின்ன மனிதர்—அறிவு நிறைந்தவர்—செல்வம் மிகுந்தவர்—பதவியில் உயர்ந்தவர் என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது கூற்றுவனுக்கு வேலை அல்ல. காலம் வந்தவுடனே கூற்றுவன் உயிரினைக் கொண்டு

போவது போல்; தூக்கம் வந்தவுடன் உறங்கியே ஆக வேண்டும். ஆதலால்தான் குறிப்பாக,

**"உறங்குவது போலும் சாக்காடு"** 339—என்று சொல்லி வைத்தார்.

உலகத்தில் எத்தனை நாள் வாழ முடியும் என்ற கருத்தினை அறுதியிட்டு உறுதியாக எவராலும் சொல்ல முடியாது. ஒருவரைப் பார்த்து எல்லா வகையான கேள்விகளையும் கேட்கலாம். அவர் அமைதியாக எல்லாவற்றுக்கும் பதில் சொல்வார்.

தங்களுக்கு எத்தனை குழந்தைகள்? தங்கள் வீடு எங்கே இருக்கிறது? எப்போது ஊரிலிருந்து வந்தீர்கள்? இத்தகைய வினாக்களை எல்லாம் கேட்கலாம். அந்த நண்பனையே பார்த்து, நீங்கள் எத்தனை நாள் இருக்கலாம் என்று இருக்கிறீர்கள்? என்று கேட்டால், அவர் மிகவும் வருத்தப்படுவார். நான் வாழ்ந்து கொண்டிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கேட்பார். நாம் வஞ்சனை இல்லாமல் கேட்கலாம். இக்கருத்தினையுடைய உண்மை என்னவென்றால் ஒவ்வொருவரும் இவ்வுலகில் பல்லாண்டு வாழ நினைக்கிறார்கள் என்பதும், வாழும் நாட்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது என்பதும் ஆகும்.

**நன்மைகள்**

சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் சொன்னார். "ஆண்டவன் நமக்கு ஆயிரம் நன்மைகள் செய்து கொண்டிருக்கின்றார். அந்த இறைவனுக்கு நாம் எப்பொழுதும் நன்றி செலுத்திக்கொண்டிருக்க வேண்டும்."

இவ்வாறு சொன்னதைக் கேட்ட ஒருவர், "ஆண்டவன் ஆயிரம் நன்மைகள் செய்திருக்கிறார்" என்று சொன்னீர்

களே, ''அவைகளில் ஒரு நன்மையினைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார்.

சொற்பொழிவாளர் சொன்னார், ''இவ்வுலகில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் எந்நாளில் (தேதியில்) மறைவார் (இறந்து விடுவார்) என்று தெரியுமாறு செய்திருக்கலாம். ஆனால், ஆண்டவன், அவ்வாறு தெரியாமல் செய்ததே பெரிய நன்மையாகும்.''

''தேதி தெரியாமல் செய்தது எவ்வாறு பெரிய நன்மையாகும்?''

சொற்பொழிவாளர் சொன்னார், ''தேதி தெரிந்திருந்தால் யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள். நீங்கள் தான் இருபதாம் தேதி போகிறவர் ஆயிற்றே? எப்படித் திருப்பிக் கொடுப்பீர்கள் என்று கேட்பார்கள். கடனாகக் கொடுக்கிற கடைக்காரருக்குத் தெரியாவிட்டாலும், பக்கத்து வீட்டுக்காரர் போய், ''அவர் பத்தாம் தேதி போகிறவர். கடன் கொடுக்காதீர்கள்'' என்று சொல்லி விட்டு வந்தாலும் வருவார். நம்முடைய பிள்ளைகள் எல்லாம் கடன் வாங்கித்தான் காலம் கழிக்கிறார்கள் என்று கடவுளுக்குத் தெரியும்!

இந்த நகைச்சுவையான பகுதியில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பகுதி ஒன்று உண்டு.

## இரண்டு செய்திகள்

செய்ய வேண்டிய செயல்களை அவ்வப்பொழுது செய்து முடித்துவிட வேண்டும். 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லுற பழக்கம் மிகவும்கொடுமை யான பழக்கம் ஆகும். நம்முடைய நாவினால் இரண்டு வகையான கருத்துக்களை அடிக்கடி சொல்லக்கூடாது, என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

ஒன்று, அடிக்கடி பேசும்போது ''மறந்துவிட்டேன்'' என்று சொல்லுவது, மற்றொன்று, ''இப்பொழுது என்ன அவசரம், அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்''—என்பது. இவ்விரண்டு வார்த்தைகளும் யாருடைய நாவில் அடிக்கடி வருகின்றதோ, அவர்கள் முன்னேற மாட்டார்கள் என்பது உறுதி.

பிறிதொரு காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று பேசாமல், இப்பொழுதே நல்ல செயல்களைச் செய்யுங்கள் என்று ஆசிரியர் திருவள்ளுவனார் வற்புறுத்திக் கூறுகின்றார்.

**''அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க.''** (கு. 36)

மிக உயர்ந்த சிந்தனை அடங்கிய இந்தக் குறட்பாவின் கருத்தினை ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்தல் வேண்டும்.

என்னுடைய நண்பர் ஒருவர், அவருக்கு முதிர்ந்த காலம் ஆகிவிட்டது. மனைவியும் மக்கள் பலரும் இருந்தார்கள். ஒரு நாள் மருத்துவர் அவரைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டுக் குடும்பத்தாரிடம், அவர் 'அதிக நாள் வாழ்வதற்கு இயலாது' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அப்போது அந்தப் பெரியவர் அறையும் குறையுமாகப் பேசிக் கொண்டிருந்தார். மருத்துவர் சொன்னதைக் கேட்டு, எல்லோரும் 'ஓ' என்று அழுதார்கள். ''ஐயா! போகிறீர்களே, எங்களுக்கு என்ன புத்தி சொல்லிவிட்டுப் போகிறீர்கள்?'' என்று மனைவியும் மக்களும் முதியவரைப் பார்த்து, அடிக்கடி கேட்டார்கள், அழுதார்கள்.

அதற்கு அந்த முதியவர் அவர்களைப் பார்த்துச் சொன்னார். ''இது வரைக்கும் சொன்ன புத்திமதிகளை எதைக் கேட்டீர்கள்? இப்பொழுது நான் அவசரத்தில் இருக்கிறேன். முன்னே சொன்னதையே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போனாராம்.

இந்தக் குறிப்பு எந்த உண்மையினை உணர்த்தி நிற்கின்றது என்பதை உய்த்து அறிதல் வேண்டும். செய்ய வேண்டிய செயல்கள் எல்லாம் அந்தந்த நேரத்திலேயே செய்தல் வேண்டும் என்பதே மிக உயர்ந்த உண்மையாகும்.

## காலத்தின் சிறப்பு

காலம் என்பது மிகப் பெரிய சாதனைகளைச் செய்து முடிக்க வல்லது ஆகும். காலம் போய்விட்டால் அநேக நன்மைகளை அடைய முடியாமல் போய்விடும். காலத்தின் அருமையினைப் பற்றி எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். ''பருவத்தே பயிர் செய்' என்பதெல்லாம் பொன்னான அறிவுரைகளாகும்.

நடைமுறைப் பழக்கத்தில் மிகச் சிறிய கருத்துக்களைச் சிந்தித்துப் பார்க்கின்ற போதும் காலத்தினைக் கருதித் தான் மிக எளிமையான வினாக்களையும் கேட்டு வைக்கிறோம்.

காலையில் ஒரு நண்பரைச் சந்தித்தால், 'சிற்றுண்டி சாப்பிட்டீர்களா?' என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே காலத்தின் குறிப்பினைத்தான் உணர்த்தி நிற்கின்றது. மதிய நேரத்தில் ஒருவரைச் சந்தித்தால், 'உணவு முடிந்ததா?' என்று கேட்கிறோம். மாலையில் நம் வீட்டிற்கு நெருங்கிய நண்பர்கள் வந்தால் 'சிற்றுண்டி சாப்பிடுங்கள்' என்று சொல்கிறோம். இப்படிப் பட்டவைகள் எல்லாம் எளிமையான செய்திகள் என்றாலும் காலத்தின் இன்றியமையாத தன்மையினை நமக்கு உணர்த்துவன ஆகும்.

நள்ளிரவில் தூங்கிக் கொண்டிருப்பவரை எழுப்பி, 'காப்பி சாப்பிடுகிறீர்களா?' என்று யாராவது கேட்பார்களா?

ஒரு வாலிபனைப் பார்த்தால், "தம்பி திருமணம் ஆகிவிட்டதா?" என்றுதான் கேட்பார்கள். வயது முதிர்ந்தவர்களைப் பார்த்தால் "உடம்பு எப்படி இருக்கிறது" என்று கேட்பார்கள்.

காலம் பொன்போன்றது என்பதைப் பிறருக்குக் காட்ட எத்தனையோ நுட்பமான கருத்துக்களை எடுத்துக் காட்டாக விளக்கம் செய்யலாம்.

## பருவப்பயிர்

காலத்தின் அருமையினை வடலூர் வள்ளலார், ஓரிடத்தில் எளிமையான முறையில் விளக்கித் தருகிறார்—

"இறைவனே, தங்கள் அருளினைப் பெற்று உய்ய இதுதானே தக்க தருணம். இந்தத் தருணத்தில் நான் பெறாவிட்டால், பின்னர் யாது பயன்?"

பருவப் பயிர் விளைவதற்கு முன்னதாகவே மழை பெய்தல் வேண்டும். மழையில்லாமல் பருவப்பயிர் காய்ந்து போன பிறகு, மீண்டும் மழை பெய்து என்ன ஆகப்போகிறது. வள்ளலாரின் அமுத மொழிகளைத் திருஅருட்பா கூறுகிறது.

**"முன்மழைவேண் டும் பருவப் பயிர் வெயில் மூடிக்கெட்ட**
**பின்மழை பேய்ந்தென்ன பேறு கண்டாய்**
**அப் பெற்றியைப் போல்......**

திருவருட்பிரகாச வள்ளலாரின் தெய்வ மொழிகள் நம்முடைய செவியில் என்றென்றும் ஒலித்துக் கொண்டிருப்பதாகுக.

## ஆழ, அகல

அமுதமொழிகளை ஆழ்ந்து கற்பதோடு பன்முறையும் சிந்தித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத் தொடர்ந்து வருகின்ற ஊற்று நீர் போல்

மகான்களின் சொற்களில் புதிய உணர்ச்சிகள் வந்து கொண்டே இருக்கும். பழக்கத்தில் பேசுகின்ற போது, பெரியவர்கள் ஒரு பழமொழி சொல்வார்கள். ‘‘அகல உழுவதைவிட ஆழ உழு’’ என்பதாகும்.

ஆழமாக உழுது விதைகள் போட்டால் வளர்கின்ற பொழுது அவைகள் சடைசடையாக காய்த்துக் காட்சி தரும். பூமியை ஆழமாக உழுது பயிரிடுவதால் மிக நல்ல பயன் கிட்டுவதாகும். அகலமாக உழுது விட்டேன் என்று சொல்லி 10 ஏக்கர் நிலத்தில் மேலெழுந்தவாரியாக மண்ணைக் கிளறி விதைகளைப் போட்டு விட்டால் விளைச்சலே இல்லாமலும் போகலாம்.

அதிகமான நிலத்தில் பயிரிட்டேன் என்று சொல்லிக் கொள்ளலாம். விளைச்சல் இருக்காது. பறவைகளும் விதைகளைக் கொத்தித் தின்றுவிட்டுப் போகலாம். ஆதலால்தான் நன்றாகப் பயன் அடைய வேண்டும் என்றால் ஆழமாக உழுது விதை விதைத்தல் வேண்டும்.

திருவள்ளுவர், திருவருட்பிரகாச வள்ளலார், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களைப் படிக்கின்ற பொழுது, ஒவ்வொரு கருத்துக்களையும் பலமணி நேரம் சிந்தித்து அறிதல் வேண்டும். விரைந்து விரைந்து படிக்கக் கூடாது. இப்படிப்பட்ட நூல்களைப் படிப்பதுதான் ‘‘ஆழ உழுதல்’’ என்பதைக் குறிப்பதாகும்.

நாள்தோறும் காலையில் செய்தித் தாள்களைப் படிப்பதை அகல உழுதல் என்று சொல்லிக்கொள்ளலாம். பத்திரிகைகளை அகலமாக விரித்துப் படிக்கின்றோம். ஒரு முறை படித்தாலே நாம் செய்திகளைப் புரிந்துகொள்ள முடியும்.

ஞானவான்கள் அருளிய நூல்களைப் படிக்கவும், சிந்திக்கவும், செய்தல் வேண்டும். நிலைத்து நிற்கின்ற நூல்களுக்கு ‘‘ஞான நூல்கள்’’ என்பது பொருளாகும்.

ஆழ்ந்த பொருள் கொண்ட ''ஞான நூல்கள்'' எப்பொழுதும் நிலைத்து நிற்பனவாகும். அந்தநூல்களைப் படிக்கின்ற பொழுது மிகுந்த பலனைப் பெற முடியும். ''ஆழ உழுதல்'' என்று சொல்வதற்கு ''ஞான நூல் களை''ப் படிப்பதை உவமையாகக் கொள்ளலாம்.

## ஆசை மனம்

''மனம் விரிந்தால் பிரபஞ்சம்; குவிந்தால் முக்தி'' என்பது பழமொழிகளில் சிறந்த ஒரு பழமொழியாகும். மனத்தினை அடக்க முடியாமல், ஆசைகளில் எல்லாம் திரிந்து அலைந்துகொண்டிருக்கிற பொழுது இந்த உலகமே அவனுக்குக் கிடைத்தாலும் அவன் ஆசை அடங்காது என்று கூறுவர். இத்தகைய சிந்தனைகளை மெய்ப்பிப்பதுதான் இந்தப் பழமொழியின் அடிப்படையான கருத்தாகும்.

மனத்தினை மகான்களால்தான் அடக்க முடியும் என்ற தவறான எண்ணம் மக்களிடையே பேசப்படுவதைக் கேட்டு வருகிறோம். அதாவது உலக ஆசைகளை அனைத்தையும் முற்றிலும் விட்டுவிட்டவர்கள்தான் மகான்கள் என்று நூல்கள் கூறுகின்றன. மனத்தினை அதன் போக்கிலே போக விடாமல் அறிவின் துணை கொண்டு மனத்தைக் கட்டுப்படுத்தி முறையாக வாழ்க்கை நடத்துபவர்களே இவ்வுலக வாழ்க்கையில் மேலானவர்களாக இருந்து சிறப்படைய முடியும்.

அறிவே தெய்வம் என்ற உயர்ந்த கருத்தினைச் சொல்ல வந்த மகான் தாயுமான சுவாமிகள், ''சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'' என்று கூறிவைத்தார். இறைவனுக்கு விளக்கம் சொல்லுகின்ற திருவள்ளுவர் ''வாலறிவன்'' என்று சிறப்பாகக் கூறுகின்றார். அறிவின் துணைகொண்டு அனைத்தையும் செப்பனிட்டு வாழ முடியும் என்ற உண்மையினை மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் உணர்ந்து அறிதல் வேண்டும்.

## அறிவின் துணை

மனிதனுக்கு இருக்கும் அறிவின் சிறப்பினைப் பலவகைகளில் சொல்லி வருகின்ற ஆசிரியர் திருவள்ளுவனார்; குறிப்பாக ஒன்றினைச் சொல்லுகின்ற பொழுது "நன்றின்பால் உய்ப்பது அறிவு" (422) என்று கூறி வைத்தார்.

அறிவின் துணைகொண்டு மனத்தினை தீய எண்ணங்கள் என்கின்ற அழுக்குகள் சேராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். மனம் தூய்மையாக இருந்தால் தான் இறைவனைச் சிந்திக்க முடியும். "மனமே நீ ஈசன் நாமத்தை வாழ்த்துவாய்" என்று மகாவித்துவானாகவும் மகா நீதிபதியாகவும் இருந்த மாயவரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் பாடினார்.

## மூவர்

மகாவித்துவான் வேதநாயகம் பிள்ளை அவர்களும், வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், சமமான காலத்தவர்கள் என்று சொல்லப்படுகின்றது. இராமலிங்க அடிகளார் தாம் பாடிய பாடல்களில் "கொளத்தூர் வேதநாயகம்" என்று பாராட்டிப் பாடி இருக்கின்றார். "இறைவன் நாமத்தை வாழ்த்துவாய்" என்று பாடியவர் மகாவித்துவான் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

மனம் தூய்மையாக இருந்தால்தான், அமைதியாகவும் இன்பமாகவும்; துன்பம் இன்றியும் வாழ்க்கை நடத்த முடியும். உலகப் பொதுமறையாகிய திருக்குறளினை அருளித் தந்த திருவள்ளுவர் முதல் அதிகாரத்திலேயே கடவுளைப்பற்றி விளக்கங்கள் சொல்லுகின்ற பொழுது 'மனக்கவலை" என்று குறிப்பிட்டு இருக்கின்றார். கவலை தோன்றுகின்ற இடம் மனமேதான் என்பது

இதனால் தெளிவுபடுத்தப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மனமே தான் காரணமாக இருகின்றபடியால் நல்ல செய்திகளையும் கெட்ட செய்திகளையும் பேசுகின்ற பொழுது அனைவரும் மனத்தினையே குறிப்பிட்டுப் பேசுவதை கேட்டு வருகின்றோம்.

## மனமே அனைத்தும்

ஏதேனும் ஒரு நல்ல காரியத்தைச் செய்யும் பொருட்டு செல்வாக்கு படைத்த ஒருவரிடம் பலர் சென்று பேசுகின்ற பொழுது, ''நீங்கள் கொஞ்சம் மனசு வைக்கணும்... நீங்கள் கொஞ்சம் மனசு வைக்கணும்'' என்று சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். அந்தப் பெரிய மனிதரும் ''மனசு வைக்கணும்'' என்று சொல்பவர்களைப் பார்த்து உள்ளுக்குள்ளாகவே ''இருந்தால் தானே வைப்பேன்'' என்று நினைத்துக் கொண்டு வந்தவர்களைப் பார்த்து ''ஒன்றும் செய்வதற்கு இல்லை; போய் வாருங்கள்'' என்று சொல்லி அனுப்புகின்றார்.

''உன் மனம் என்ன கல்லா?'' என்று இப்பொழுதுகூட பேசுவதைக் கேட்கின்றோம். வடலூர் வள்ளலார் மனதினைப் பற்றிப் பேசுகின்ற பொழுதும் ''மனம் கருங்கல் பாறை'' என்று பாடியிருக்கிறார். அந்த உயர்ந்த உண்மையான கருத்து மக்களிடையே இன்றைய தினமும் பேசப்படுவதைக் காண்கின்றோம். மனத்தினை ''பதுங்கிப் பாய்கின்ற புலி'' என்று மகான்கள் சொல்லுவார்கள்.

எவ்வளவோ ஆற்றலுடன் கட்டிப் பிடித்து வைத்திருந்தாலும் இந்த மனம் நம்மை அறியாமலேயே ஆசைகளைத் தாவிப் பிடித்துக் குதித்து ஓடி வரும். இதனால்தான் மனத்தினை ''பேய்க் குரங்கு'' என்று சொல்லி வைத்தார்கள். எப்பொழுதும் மனத்தினைத் தூய்மையா வைத்திருப்பவர்களுக்குத் துன்பம், கவலை, மயக்க என்பன போன்றவை வரமாட்டாது. ''மனத்தானாம்

மாந்தர்க்கு உணர்ச்சி' (453) என்று ஆசிரியர் திருவள்ளுவனார் தெளிவாகக் கூறி வைத்தார்.

## கவலை

கவலை என்பது மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் வந்து போவதாகும் என்று தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். புத்திசாலித்தனத்தினால் கவலையினைப் போக்கிக் கொள்ள வேண்டும். கவலைக்கு அடிமையாகி விட்டால் மனம் கெட்டு விடுவதாகும். அறிவின் துணைகொண்டு மனத்தினை நன்றாகவைத்திருக்க வேண்டும். கவலை என்கின்ற ஒன்று தனிப்பட்டதொரு நிலையல்ல என்று அறிதல் வேண்டும். மனத்தினைத் துன்பத்திற்கு அடிமையாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அடிமையாகி விட்டால் கவலை என்ற நிலைமை வந்துவிடும். அறிவின் துணைகொண்டு அதனைப் போக்க வேண்டும்.

## கம்பி

நேராக இருக்கும் ஒரு இரும்புக் கம்பியினை வட்டமாக வளைத்தால் ''வளையம்'' என்ற பெயர் வந்துவிடுகிறது. ''வளையம்'' என்பது எங்கேயோ வெளியிலிருந்து வந்து விடவில்லை. வளைத்ததால் அந்தப் பெயர் வந்தது. வளைந்த அந்தக் கம்பியை நேராக ஆக்கிக் கொண்டால் வளையம் என்ற பெயர் மறைந்து விடுகிறது.

அதுவேபோல மனத்தினை துன்பத்திற்கு அடிமையாக்கியபொழுது 'கவலை' என்கிற பெயர் வருகிறது. அறிவின் துணைகொண்டு மனத்தினை உறுதியாக வைத்துக்கொண்டால் ''கவலை'' என்கிற பெயரே வராமல் பார்த்துக் கொள்ளலாம். இந்த உடம்பில் ஒரு வருடத்திற்கு எவ்வளவு அழுக்கு சேருமோ அத்தனை அழுக்கும் ஒரே வினாடியில் இந்த மனதிற்குள் சேர்ந்துவிடும் என்று கூறுவது மிகையாகி விடாது.

உடம்பினைத் தூய்மைப் படுத்துவதற்கு நாம் நன்றாக கற்றுக்கொண்டிருக்கிறோம். உடம்பினை தண்ணீராலும் வெந்நீராலும் தூய்மைப்படுத்துகிறோம். மற்றும் பல பொருட்களின் துணைகொண்டு உடம்பினைத் தேய்த்துத் தூய்மைப் படுத்திக் கொள்கிறோம்.

அப்படியானால், மனத்தினைத் தேய்த்துத் தூய்மைப் படுத்துவதற்கு எங்கேயாவது ஏதேனும் பொருள்கள் இருக்கின்றனவா? இல்லையே! "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்கள்" என்று இராமலிங்க அடிகள் பாடினார். மனத்தினை உறுதிப்படுத்துவதற்கும், தூய்மையாக வைத்துக் கொள்வதற்கும் இறையருள் சிந்தனை பெரிதும் துணையாக இருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

மனத்தில் கொடுமையான—தீமையான அழுக்குகள் எனப்படுகின்ற தீமைகளை வைத்துக்கொண்டு உயர்ந்த மக்களைப் போல காட்சி அளித்துக்கொண்டு நீரில் மூழ்கி அத்தகைய வெளித் தோற்றத்தினைக் காட்டிக்கொண்டு தீய ஒழுக்கத்திலேயே இருந்து கொண்டிருப்பவர்கள் இவ்வுலகில் பலர் இருக்கின்றார்கள் என்று ஆசிரியர் திருவள்ளுவனார் எளிமையான சொற்களில் சொல்லி வைத்தார்.

**மனத்தது மாசாக மாண்டார் நீராடி**
**மறைந்தொழுகும் மாந்தர் பலர்.** (கு.278)

இந்தக் குறட்பாவினைப் பன்முறையும் சிந்தித்துப் பார்த்தால், மனத்தினைத் தூய்மையாக வைக்காமல் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் பயனற்றவைகளே ஆகும் என்று நன்கு புரிவதாகின்றது.

பாரத தேசத்தில் எண்ணிறந்த மகான்கள் தோன்றி பொன்மொழிகளை அளித்துச் சென்றிருக்கிறார்கள். மகான் 'கபீர்தாஸ்' என்பவர் வெளிப்படையாகச் சொல்லியுள்ள கருத்தினைச் சிந்திக்க வேண்டும்.

"நீ ஜபமாலை உருட்டலாம், நெற்றியில் நீறணியலாம், நீண்ட ஜடை தரிக்கலாம். ஆனால் உன் உள்ளத்தில் கொடிய விஷமிருக்கையில் நீ எங்ஙனம் கடவுளைக் காண்பாய்?"

"மனமது செம்மையானால் மந்திரம் ஜபிக்க வேண்டாம்" என்று நாம் செவியாரக் கேட்கின்ற நல்லவர்களின் கருத்து எல்லாம் மனத்தினைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதையே வற்புறுத்துவனவாகும்.

மகான்கள், ஞானிகள், முனிவர்கள், சித்தர்கள், அந்தணர்கள் என்றெல்லாம் பல பெயர்களில் பெருமையாகப்பேசப்படுகின்ற அறவோர்களின் அருள்மொழிகளைக் கேட்பதாலும், நினைப்பதாலும், நாவார சொல்லிக் கொண்டிருப்பதாலும், மனம் தூய்மையாக்கப்படும் என்று சொல்லப்படுகின்றது.

## ஞான மொழிகள்

மறைமொழி என்றும், மந்திரம் என்றும் சொல்லப் படுகின்ற சொற்கள் எல்லாம் ஞானிகளின் நாவினால் சொல்லப்பட்டவை ஆகும். மந்திரம் என்ற சொல்லுக்குப் பொருள் "நினைப்பவனைக் காப்பது" என்பதாகும். மனத்தின் தன்மையினை எல்லாம் நன்கு ஆழ்ந்து சிந்தித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனம் தூய்மையினைப் பற்றி அகத்திய பெருமான் குறித்துள்ளதைக் கருதுதல் வேண்டும்.

**"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாகும்."**

இத்தகைய கருத்துக்களைக் காணுகின்றபொழுது, அனைத்திற்கும் காரணமாக அமைந்திருப்பது மனத்தின் தூய்மையான நிலையே ஆகும் என்பதும், மனத்திலே தீய குணங்கள் எல்லாம் குவித்துக்கொண்டு அவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் பேசப்படுகின்ற பேச்சுக்கள், செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் பயனற்றவை களே ஆகும் என்பதோடு, அறியாமையும் ஆகும் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. சித்தர்கள் பாடல்களில் மிக அருமையாகச் சொல்லிச் சென்றார்கள்.

**''கோயிலாவ தேதடா? குளங்களாவ தேதடா?**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**
**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே.''**

## சித்தர் வாக்கு

சித்தர்களுடைய அரிய உண்மைகளை நல்லமுறையில் மக்களிடையே பரவச் செய்யாத குற்றம் நம்முடையதே என்று அறிஞர்கள் வெட்கமில்லாமல் ஒத்துக்கொள்ள வேண்டும். சித்தர் பெருமக்கள் அனைவரும் மனத்தினைத் தூய்மைப் படுத்துவதையே முதன்மையாக வைத்துப் பாடியிருக்கிறார்கள்.

மனம் தூய்மைதான், இறைவனுக்கு வழிபாடாகும், என்பதனையே மக்களிடையே சொல்லாததால் மக்களில் பலர் அழுக்கு மூட்டைகளை மனத்திலே சுமந்து கொண்டு வெளிப்பகட்டான வீணான செயல்களைச் செய்துகொண்டு இறை நெறியினையே மறைத்துவிட்டார்கள்.

மனத்தின் சிறப்பினை மகான் இராமகிருஷ்ணர் அழகாகச் சொல்லுகின்றார்.

''வாழ்க்கையாகிய கப்பலின் திசையறி கருவியாகிய மனம் கடவுளையே எப்போதும் நோக்கி நிற்குமாகில் ஆபத்து வாராமல் காக்கும்.''

## குறட்பா

"அகரமுதல எழுத்தெல்லாம்" என்று திருவள்ளுவப் பெருமான் 2000 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லி வைத்தார். இன்றுவரை அவைகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் ஞானிகளின் சொற்கள் எப்போதும் நிலைத்து நிற்கும். அவைகளையே மறைமொழிகள் என்று சொல்கிறோம். "நமச்சிவாய வாழ்க! நாதன்தாள்வாழ்க" என்று மாணிக்கவாசகப் பெருமான் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே சொன்னார். இன்றைய தினமும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

நக்கீரர் பெருமான் "திருமுருகாற்றுப்படை" என்ற நூலில் "உலகம் உவப்ப வல நேர்பு திரிதரு" என்று சொன்னார். இதனைச் சொல்லி 1800 ஆண்டுகள் ஆகின்றன என்று படிக்கிறோம். இன்றைய தினமும் சொல்லிக் கொண்டிருக்கிறோமே! மகான்களின் சொற்கள் மறைமொழிகள் ஆனபடியால் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பது மாத்திரம் அல்ல—நாவினால் சொல்லுபவர்களை நல்வழிப்படுத்தும் என்பதாகும்.

"நாமார்க்கும் குடியல்லோம்", "அரியானை அந்தணர் தம் சிந்தையானை", "மனத்தகத்தான்", "தலைமேலான், வாக்கின் உள்ளான்" என்பன போன்ற பொன்மொழிகள் எல்லாம் 1000ஆண்டுகளுக்கு மேலாகவே நிலைத்து நிற்கின்றன. தவம் செய்த முனிவர்களின் அருள் மொழிகள் ஆனபடியால் என்றென்றும் நிலைத்து நிற்கின்றன.

## நிலைத்து நிற்காது

நாம் சொல்லுகின்ற சொற்கள் அப்படியெல்லாம் ஆண்டுக் கணக்கில் நிற்குமா? உடனே அல்லவா மறந்து மறைந்து போகின்றன. ஒரு நண்பன் மற்றொரு நண்பனிடம் ஒரு மணி நேரமாக என்னென்னமோ சொல்லிக்

கொண்டிருந்தான். மற்ற நண்பனும் அதைக் கேட்டுக் கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் கழித்து சொல்லிக் கொண்டிருந்தவனே கேட்டுக் கொண்டிருந்தவனைப் பார்த்து, ''உன்னிடம் என்ன சொன்னேன்?'' என்று கேட்டான். அதற்கு மற்றவன் ''என்னென்னமோ சொன்னாயே, எனக்கு நினைவில்லை, எழுந்து போ'' என்றான்.

சொன்னவன் கதியே இப்படி என்றால், கேட்டவன் கதி என்ன ஆகும்? நாம் சொன்ன வார்த்தைகள் மற்றவன் மனதில் ஒரு மணி நேரம் கூட தங்கவில்லை என்றால், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்கின்ற சொற்களைச் சொன்னவர்களை ''தவம் செய்த முனிவர்கள்'' என்று குறிப்பிடுகின்றோம்.

''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்று சொன்ன முனிவர் எண்ணத்தில் எவ்வளவு உயர்ந்த சிந்தனைகள் தோன்றியிருந்திருக்க வேண்டும்? தன்னுடைய மனத்தில் மறதி ஏற்பட்டிருந்தாலும், நாவினால் மட்டும் மறைமொழிகள் சொல்லப்பட்டால், எவ்வளவு பயன் உள்ளவையாக இருக்கும் என்று அந்த மகான் கூறினார்.

## கொடியவை

கொடிய தீய குணங்களிலே ஒன்று 'மறதி' என்பதாகும். எப்பொழுதும் மறதி குணம் இருப்பவர்களுக்குப் பெருமையோ அல்லது சிறப்போ எந்த நேரத்திலும் உண்டாகாது. ஏதேனும் ஒருவரைக் கேட்டால் மறந்து விட்டேன் என்று சொல்வதும், அந்தச் செயலை செய்து முடித்து விட்டீர்களா என்று கேட்டால், ''இப்பொழுது என்ன அவசரம்?'' என்று சொல்லுவதும் இரண்டு தீமையான பழக்கங்கள் ஆகும்.

'மறந்து விட்டேன்' என்று சொல்லுவதும், மிகக் கொடுமையான பழக்கமாகும். அதுவே போல 'ஒத்திப் போடுதல்' என்பதும் மிகக் கடுமையான பழக்கமாகும். ''பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' ''இப்பொழுது என்ன அவசரம்?'' என்று சொல்லிக் கொண்டு அவ்வப்பொழுது செய்ய வேண்டிய செயல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போகின்ற பழக்கம் மிகவும் தீமையானதாகும். நல்ல அறிவுள்ளவர்கள், அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டிய செயல்களைச் செய்து முடிப்பார்கள்.

## இருக்கும் இடம்

எல்லாம் வல்ல இறைவன் மனத்தினையே வீடாகக் கொண்டு இருப்பவன் என்ற உயர்ந்த கருத்தினை, ''மனத்து அகத்தான்'' என்று மகான்கள் சொல்லிச் சென்றார்கள். ''மனத்தில் இருக்கின்ற இறைவனை எங்கே போய் வெளியில் தேடுகிறார்?'' என்று சித்தர்கள் முழக்கம் இட்டார்கள். எவ்வளவுக்கெவ்வளவு தூய்மையாக மனத்தினை வைத்துக் கொண்டிருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதனால் இறைவன் காட்சியினைக் காண முடியும்.

**''நெஞ்சமே கோயில்**
**நினைவே சுகந்தம்; அன்பே**
**மஞ்ச நீர் பூசை**
**கொள்ள வாராய் பராபரமே!''**

மனமாகிய நெஞ்சினில் அன்பு நிறைந்திருந்தால் அதுவே இறை வழிபாடாகும்.

ஊரில் உள்ள பெரிய மனிதர் — பிரமுகர் ஒருவர் மாலை நேரத்தில் நம் வீட்டிற்கு வருவதாகச் சொன்னார். அந்தப்பெரியவர் நம் வீட்டிற்கு வருவதே பெரிய பாக்கியம் என்று நண்பர் கருதினார். அப்படிப்பட்ட பெரிய மனிதர்

தம் வீட்டிற்கு வருகின்ற செய்தியை மனைவியிடம் சொன்னார். உடனே மனைவி மகிழ்ச்சி பொங்க வீட்டைக் கழுவி தூய்மைப்படுத்தி, இருக்கின்ற பொருள்களை எல்லாம் அழகாக வைத்து வருகின்ற பெரியவர் மகிழ்ச்சியுடன் வந்து உட்கார வேண்டுமே என்று அழகுபடுத்தி வைக்கின்றார்.

அந்தப் பிரமுகரும் மனமகிழ்ச்சியுடன் வந்து இருந்து விட்டுச் செல்லுவார். அப்படிச் செய்யாமல், 'தோட்டத்திலிருக்கும் குப்பைக் கூளங்களை வாரிக் கொண்டு வந்து உட்காருகின்ற கூடத்தில் போட்டுப் பரப்பி வைத்தால் அந்தப் பெரியவர் இவைகளைப் பார்த்து வீட்டிற்குள் நுழைவதற்கு விரும்புவாரா? நம் போன்ற ஒரு மனிதர் நம் வீட்டிற்குள் வந்து தங்குவதற்கே வீட்டினை அவ்வளவு தூய்மையாக வைக்கிறோம் என்றால், எல்லாம் வல்ல இறைவன் வந்து தங்குகின்ற மனமாகிய வீட்டினை நாம் எவ்வளவு தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்? அப்படிப்பட்ட எண்ணங்களை நன்கு சொல்லித்தர வேண்டும்.

பாதையில் நடந்து செல்லுகின்ற ஒருவன் கையில் வைத்திருந்த பணம் இருட்டில் கீழே விழுந்து விட்டது தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை. தேடிக் கொண்டிருக்கிற அவனைப் பார்த்துப் பெரியவர், "விளக்கு வெளிச்சத்தில் 'தேடப்பா'" என்று சொன்னார். அதைக் கேட்ட அந்த ஆள் அந்தப் பாதையிலேயும் வேறு இடங்களிலேயும் விளக்கு வெளிச்சம் இருக்கின்ற இடத்திலே எல்லாம் தேடிக்கொண்டிருந்தான்.

இது என்ன பைத்தியக்காரத்தனம்; 'விளக்கு வெளிச்சத்தில் தேடப்பா என்றால், எந்த இடத்தில் பணம் விழுந்ததோ, அந்த இடத்தில் விளக்கினை வைத்துக் கொண்டு தேட வேண்டும் என்பது தானே பொருளாகும்?

எங்கேயோ தெரிகின்ற விளக்கு வெளிச்சத்தில் எல்லாம் தேடுவானேயானால், எவ்வளவு அறியாமையாகும்? அதுவே போல இறைவனைக் கண்டு களிப்பதற்கு உள்ளம் எனப்படுகின்ற மனத்தில் அல்லவா தேட வேண்டும். அருமையான இக்கருத்தினை சித்தர் பாடல்களில் காண்கின்றோம்.

**உள்ளத்தில் உள்ளான் அடி — அது நீ**
**உணர வேண்டுமடி**
**உள்ளத்தில் காண்பாய் எனில் — கோயில்**
**உள்ளேயும் காண்பாய் அடி.**

மனத்தினால் அல்லவா இறைவனை வழிபாடு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். தாயுமான சுவாமிகள் சுருக்கமாக ஓரிடத்தில் சொல்லுகிறார் —

**''உள்ளத்தின் உள்ளே ஒளித்து என்னை**
**ஆட்டுகின்ற கள்ளக்**
**கருணையை யான் காணும் திறமாமோ.''**

அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் இறைவன் இருக்கும் இடத்தினை எளிமையாகச் சொல்லுகிறார்.

**நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடை புண்ணியன்**
**பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு**
**நக்கு நிற்பர் அவர் தமை நாணியே.**

இந்த அருமையான பாடலில் எளிமையான கருத்தின் ஆழத்தினைத் தெளிவாகக் கொண்டால் பல உயர்ந்த நூல்களின் தத்துவங்கள் எல்லாம் நமக்குப் புலப்பட்டதாகி விடும்.

மனிதப் பிறவிக்கென்றே அளிக்கப்பட்டுள்ள நெஞ்சத்தில் எப்பொழுதும் அன்பு சுரந்து கொண்டே இருக்க வேண்டும். எந்தவிதமான பேதா பேதங்களும் வேறுபாடுகளும்

இல்லாமல் இருக்கின்றதோ, அந்த நெஞ்சங்களில் அன்பு தவழ்ந்து கொண்டிருக்கும்.

இறைவன் அந்த நெஞ்சங்களில் உறைகின்றான் என்று உணர்தல் வேண்டும். மேற் கூறிய பாடலில் நெக்குருகி நினைப்பவர் நெஞ்சத்தில் இறைவன் தானே சென்று, காட்சியளிக்கின்றான் என்று விளக்கம் சொன்னார்.

## தூய்மையே வேண்டும்

நெஞ்சத்தினைத் தூய்மையாக வைத்துக் கொள்ளாமல், கொடிய தீமையான குணங்களை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு கையில் பூவும் நீரும் எடுத்துக்கொண்டு இறைவனிடம் செல்பவர்களைப் பார்த்து இறைவன் நகைக்கின்றார் என்று, இந்தப் பாடல் நயமாக மொழிகின்றது.

வடலூர் வள்ளற் பெருமான், இறைவனுடைய கருணை நிறைந்த அளவிலாச் சிறப்பினைக் கூறிக்கொண்டு வருகிறபோது ஒரு பாடலில்,

**நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து**
**நெகிழ்ந்து நெகிழ்ந்து**
**அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர்**
**அதனால்**
**உடம்பு நனைந்து நனைந்து......**

என்ற அருட்பாவின் உயர்ந்த கருத்தினை அறிந்து கொள்ளுதல் வேண்டும். மனம் தூய்மையே மந்திரம் என்ற உயர்ந்த நெறியினைக் 'கடவுள் வழிபாடு' என்று உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மகான் வேதநாயகம் பிள்ளை மனத்தினைக் குறித்துக் காட்டிப் பேசுகிறபொழுது,

''ஏ! மனமே! (அகமே) நீ இறைவனைத் துதிக்காமல் இருக்கலாமா?'' என்று அருமையாகக் கேட்டிருக்கின்றார்.

கற்போர்க்கு கற்கண்டு போல் இனிக்கின்ற மகான் வேத நாயகம் பிள்ளை அவர்களின் பாடலை ஒவ்வொருவரும் படிக்கின்ற பாக்கியத்தினைப் பெற்றே ஆகவேண்டும்.

## விளக்கம் தருகிறார்

''உலகத்துக்கெல்லாம் ஒளியினைத் தரக்கூடிய கதிரவன் என்று அழைக்கப்படும் சூரியன், கிரணங்களாகிய தன்னுடைய கைகளினால் கடவுளை வணங்குகின்றான். பறக்கின்ற பறவைகள் எல்லாம் பாடிப்பாடி இறைவனை வழிபடுகின்றன—மரங்கள் எல்லாம் பல வண்ணங்களையுடைய பூக்களைக் காட்டி இறைவனைப் போற்றுகின்றன. ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, விண் எல்லாம் தங்களுக்குரிய தொழில்களை முறையாகச் செய்து இறைவனை வணங்குகின்றன—அளவு கடந்த பெரிய சமுத்திரம் தன்னுடைய ஓசையினால் இறைவனை வாழ்த்தி வணங்குகிறது—இவ்வாறிருக்க ஏ! மனமே! நீ இறைவனை வணங்காமல் இருக்கலாமா?'' மேற்கூறிய உண்மைகளை எல்லாம் மகான் வேதநாயகம் பிள்ளை நயமான ஒரு பாடலில் அமைத்து வைத்திருப்பதை நாம் பாடிப் படித்து மகிழ்தல் வேண்டும்.

**''கதிரவன் கிரணக் கையால்**
**கடவுளைத் தொழுவான் புட்கள்**
**சுதியொடும் ஆடிப் பாடி**
**துதிசெய்யும், தருக்கள் எல்லாம்**
**பொதி அவர் தூவிப் போற்றும்**
**பூதம்தம் தொழில் செய்து ஏத்தும்**
**அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்**
**அகமே! நீ வாழ்த்தாது என்னே!''**

## பழமொழிகள்

மக்களிடையே பழகி வருகின்ற பழமொழிகள் எண்ணிறந்தவையாக இருந்து வருகின்றன. வாழ்க்கைக்கு இன்றியமையாத செய்திகள் எல்லாம் அந்தப் பழமொழிக்ளோடு இருப்பதால் நல்லபடியாக வாழ்வதற்கு அவைகள் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளன என்று கூறுவது மிகையாகாது.

மிகப் பழைய காலந்தொட்டு, பேச்சு வழக்கில் இருக்கின்ற சில கருத்துக்களைச் சிந்திக்கின்றபோது பல உண்மைகள் நமக்குப் புலனாகின்றன. ஒரு செய்தியினை மனதில் நாம் கருதிப் பார்ப்பது நம்முடைய சிந்தனையைத் தூண்டுவதாகும்.

உலகப் பொதுமறையான திருக்குறளினை அருளிய திருவள்ளுவர் தமது நூலினை 133 அதிகாரங்களில் அமைத்து வைத்திருக்கின்றார். ஒவ்வொரு அதிகாரமும் உயர்ந்த நெறியினை விளக்கம் செய்கிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறட்பாக்களை அமைத்து தாம் சொல்ல வந்த கருத்தினை 10 முறைகளில்—வகைகளில் எடுத்துக் கூறுகின்ற வழக்கம் திருவள்ளுவரின் கருத்தாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு அதிகாரத்தின் கருத்துக்களை பத்து தடவை சொல்லி வைக்கின்றார். ஒரு கருத்தினை 10 தடவை சொன்னால் முழுமையும் விளக்கம் செய்துவிட்டதாகும் என்பதும் புலப்படுத்தப்பட்டு விட்டது என்றும் சொல்லலாம்.

## பத்து தடவை

இன்றைய நடைமுறைப் பேச்சுக்களில் 10 தடவை சொல்வது என்பது அடிக்கடி குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். ஒரு பெரியவர், ஒரு வாலிபனிடத்தில், நல்ல

தொரு காரியத்தினை நல்லபடியாக முடிக்கவேண்டும் என்று விளக்கமாகச் சொல்லி வைத்திருந்தார். அந்தக் காரியம் முடிந்த பிறகு அந்தப் பெரியவர், சொன்ன மாதிரி எளிதில் முடிக்கப் படவில்லை என்று கண்டார். உடனே அந்த வாலிபரைப் பார்த்து, ''ஏனப்பா! ஒரு தடவைக்குப் பத்து தடவை சொன்னேன். சொல்லியும் இப்படித் தவறாகச் செய்யலாமா?'' என்று கேட்கிறார். இவ்வாறு பேசப்படுவதைப் பல இடங்களில் பலமுறை கேட்டு வருகின்றோம். இந்தப் பழக்கம், பேச்சின் மூலத்தினைக் கண்டறிய சிந்தனையைத் தூண்டுவதாகும்.

திருவள்ளுவர் ஒரு கருத்தினைச் சொல்லுவதற்கு ஒரு அதிகாரத்தில் 10 குறட்பாக்கள் அமைத்துள்ளார்கள். 10 முறைகளில் ஒரு கருத்தினை விளக்கிக் கூறுவதால் மக்கள் உள்ளததில் ஆழப் பதிந்து நிற்கும் என்பது திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கையாக இருந்திருக்க வேண்டும். மிகப் பழங் காலந் தொட்டு சமுதாயத்தில் வழங்கி வருகின்ற பழமொழிகள் நம்முடைய வாழ்க்கையினைச் செப்பனிடு பவைகளாகும். அந்தக் கருத்தினைப் பின்பற்றி நாம் வாழ்ந்து பழக வேண்டும்.

## கோபம்

குறிப்பாக,சிற்றூர்களில் அதிகமாகக் கேட்கப்படுகின்ற பழமொழி வாசகம் ஒன்று உண்டு. ''கோபத்தில் கோபுர வாசலில் தலை நுழையாது'', ''குண்டு சட்டியில் கை நுழையாது'' என்பதாகும். இந்த முதுமொழியினை நன்கு புரிந்துகொண்டு வாழ கற்றுக்கொள்ளவேண்டும். ஒருவனை மிகுந்த துன்பத்தில் தள்ளிவிடுவது அளவுக்கு மீறிய கோபமே ஆகும். கோபம் வந்துவிட்டால், ஒருவனுடைய அறிவு மங்கிப் போகும். இன்னதுதான் செய்கின்றோம் என்று தெரியாது. நல்லது கெட்டது என்பதைப் பகுத்துப் பார்க்கின்ற சிந்தனை மறைந்து போகும்.

''கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய்—தந்தை'' என்று சொல்லி வைத்தார்கள். கொடுமையான பாவத்தினைப் பெற்று எடுக்கின்ற தாய்—தகப்பனுக்கு 'கோபம்' என்று பெயர். ஆதலால்தான் கோபம் வந்தவனுக்கு ஒன்றுமே தெரியாது என்பதைச் சுட்டிக்காட்ட 'கோபுர வாசலில் தலை நுழையாது' என்று சொன்னார்கள். கோபுர வாயில் என்பது எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். மக்கள் கூட்டம் கூட்டமாகப் போகின்ற வழியாகும். பெரிய வாகனங்கள் செல்லுகின்ற தளமாகும். கோபம் வந்தவனுக்கு அந்தப் பெரிய வழியே தெரியாமல், ஓரத்தில் சென்று சுவற்றில் முட்டிக் கொள்ளுவான் என்று சொல்லப்பட்டது.

அதுவே போல குண்டுசட்டி என்பது மிகவும் அகலமான வாயினைக் கொண்டதாகும். மிக எளிமையாக ஒரு பொருளை வைப்பதற்கும் எடுப்பதற்கும் முடியும். அப்படி இருக்க கோபம் வந்தவனுக்குக் கண் தெரியாததினால் தன் கையினை முன் பாகத்தில் செலுத்தாமல் அடிப்புறத்தில் கொண்டுபோய் விட்டுவிடுவான் என்று சொன்னார்கள்.

ஆதலால், மிகக் கொடுமையான கோபத்தினை குறித்துக் காட்டுகின்ற பழமொழி பலருக்குக் கண் திறந்து விடுவதாக அமைந்திருக்கிறது. சினம் வாராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எல்லோருடைய நற்குணமாக அமைந்திருத்தல் வேண்டும்.

## பிச்சைக்காரன்

வறுமையினால் உண்ண உணவின்றி, இரந்து வயிறு பிழைப்பவனைப் பார்த்து ஆசிரியர் வள்ளுவனார் மிக அருமையான நீதியினை சொல்லிக் காட்டுகிறார். வழக்கத்தில் இரந்து வாழ்க்கை நடத்துபவர்களை 'பிச்சை எடுப்பவர்கள்' என்று சொல்லுகிறோம். பிச்சை எடுப்பவர்களுக்குக் கடுகளவேனும் எக்காலத்திலும் 'கோபம்'என்பதே

வரக்கூடாது. பொதுவாக எல்லோருக்குமே கோபம் என்பது தீமையினை விளைவிக்கும் ஒன்றாகும். இருந்தாலும், சில நேரங்களில் கோபம் வந்தாலும் தாங்கிக் கொள்வதாக அமையலாம். ஆனால், யாசிப்பவர்க்கு (இரப்பவர்க்கு) கோபம் என்பது அறவே வருதல் கூடாது. பிச்சை எடுப்பவனைப் பார்த்து திருவள்ளுவர் சொல்லுகிறார், "யாசகம் செய்பவனே, மற்றவர்களுக்கு சில நேரங்களில் கோபம் வந்தாலும் கவலை இல்லை. பிச்சை எடுக்கிற உனக்குக் கோபமே வரக் கூடாது."

இவ்வாறு திருவள்ளுவர் சொன்னவுடன் அந்தப் பிச்சைக்காரன் (இரப்பவன்) திருவள்ளுவரைப் பார்த்துக் கேட்கிறான், "எனக்கு மட்டும் கோபமே வரக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லுகின்றீர்களே, ஏன்?" இவ்வாறு கேட்ட அவனுக்கு திருவள்ளுவர் சொல்லுகிறார், "அடே! பிச்சை எடுப்பவனே, கோபம் வந்துவந்துதான் நீ இந்த நிலைக்கு வந்துவிட்டாய்."

கோபத்தினை ஒருவன் கொள்கையாகவே வைத்திருந்தால் அந்தக் கோபம் அவனை வறுமைக்கு ஆளாக்கி (நித்திய தரித்திரனாய்) பிச்சை எடுக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டுவிடும். கோபம் என்ன செய்யும் என்பதற்கு இந்த வறுமையே போதிய கரியாகும் (சாட்சியாகும்). ஆகையினால் இனியும் யாசிப்பவன் கோபத்தைக் கொண்டால் வேறு எந்த நிலைக்குப் போக முடியும்? வாழ்க்கையில் பிச்சை எடுப்பது என்பது கடைசிக் கட்டமாகும். அவனை அந்த நிலைக்குக் கொண்டு சேர்த்ததற்கு முதல் காரணம் கோபம் என்பதே ஆகும்.

அவ்வாறு கடைசி கட்டத்திற்கு வந்தவன், மேலும் கோபத்தினைக் கொள்வானேயானால் எந்த துன்பத்திற்கு ஆளாவானோ என்று ஆசிரியர் சிந்திக்க வைக்கின்றார். நாள்தோறும் வறுமையால் துன்பப்படுகிறவனுக்கு அந்த நிலையை போதுமான சான்றாக - சாட்சியாக - காரண

மாக, அமைந்திருக்க இரத்தலை செய்பவன் கோபம் (வெகுளாமை) கொள்ளாதிருக்க வேண்டும் என்று குறட்பா ஒன்று நன்கு தெளிவுபடுத்துகிறது.

**இரப்பான் வெகுளாமை வேண்டும்நிரப்பு இடும்பை**
**தானேயும் சாலும் கரி.**

## குறிக்கோள்

மனித வாழ்க்கையில் அமைதியாக இருந்து நற்பணிகள் புரிந்து மற்றவர்களுக்கும் பயன்பட்டு வாழ்வதே உயர்ந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும். உயர்ந்த வாழ்க்கையினை மேற்கொண்டு வாழ்வதற்கு உயர்ந்த குணங்கள் தான் அடிப்படையாக இருத்தல் வேண்டும். ''குணம் என்னும் குன்றேறி நின்றார்'' என்பது திருவள்ளுவர் வாக்கு. மனிதப் பிறவி எடுத்தும் உயர்ந்த மனிதத் தன்மைகள் இல்லாமல் தீய குணங்களைப் பழகிக் கொண்டிருப்பவர்கள் தாங்களும் துன்பகரமான வாழ்க்கையினை வாழ்வதோடு அல்லாமல் மற்றவர்களுக்கும் தீமை செய்பவர்கள் ஆவார்கள்.

நல்ல பண்பு உள்ளவர்களாக வாழ்வதையே மனிதக் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு வாழ்க்கையினை நல்ல முறையில் நடத்த சிந்தனையைத் தூண்டுவதாக பேச்சு வழக்கில் இருக்கின்ற பல பழமொழிகள் வழிகாட்டிகளாக அமைந்திருக்கின்றன.

## புத்தி

''பிச்சைக்கார புத்தி'' என்பதாகப் பேசப்படுகின்ற பேச்சினை நாம் கேட்டு வருகின்றோம். இந்தப் பேச்சினை பழமொழி போன்றதொரு கருத்தாகக் கொண்டாலும் தவறில்லை. பலபேருக்கு 'பிச்சைக்காரப் புத்தி' என்பதற்கு அர்த்தம் தெரியாமல் இருக்கிறது. எத்தனையோ நமக்குத்

தெரியவில்லை, அவைகளில் இதுவும் ஒன்று என்று அமைதி கொள்ளலாம். 'பிச்சைக்கார புத்தி' என்பதற்கு பிச்சை எடுக்கும் பழக்கம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். அப்படி நினைப்பது சரியான பொருளாகாது.

'பிச்சைக்காரப் புத்தி' என்றால் 'பழைய புத்தி' என்பதுதான் பொருளாகும். ஒரு சிலர் ஒரு காலத்தில் தாழ்ந்த நிலையில் இருந்திருப்பார்கள். பொருளாதாரத்தில் குறைந்தவர்களாக இருந்திருப்பார்கள். அப்பொழுது எல்லாம் ஒரு சிறிய உதவிக்குக்கூட பிறரை நாடிச் செல்லு கின்ற நிலையில் இருந்திருப்பார்கள்.

அப்படிப் பட்டவர்களுக்கு ஒரு நல்ல காலத்தினால் பொருளாதார நிலை நல்லபடியாக உயர்ந்திருக்கக் கூடும். அவ்வாறு பொருளாதாரத்தில் உயர்ந்த நிலை வந்த பிறகு தான் பிறருக்கு உதவி செய்கின்ற புத்திவர வேண்டும். அல்லது பிறரிடத்தில் சிறிய உதவியினை நாடிச் செல்லு கின்ற பழக்கமாவது இல்லாதிருக்க வேண்டும். ஏனென்றால் இவருடைய நிலை இப்பொழுது பொருளாதாரத்தில் உயர்ந்து இருப்பதேயாகும்.

## பழைய பழக்கம்

தாழ்ந்த நிலையில் இருந்தபொழுது மற்ற நண்பன் தனக்கு சிற்றுண்டி வாங்கிக் கொடுப்பான் என்று பழக்கப் பட்ட அவன், தன் நிலை உயர்ந்த பொழுது, தான் பிறருக்குச் செய்தல் வேண்டும்; செய்யாவிட்டாலும் மற்றவன் தனக்கு உதவி செய்வான் என்று எதிர் பார்க்காம லாவது இருக்க வேண்டும். இந்த எண்ணமே சிலருக்கு வரவே வராது. தான் பொருளாதாரத்தில் உயர்ந்த பிறகும் பழைய புத்தியை நினைத்துக் கொண்டு மற்றவர்கள் உதவுவார்கள் என்று பார்த்திருக்கின்ற பழக்கத்திற்குத் தான் 'பிச்சைக்கார புத்தி' என்று பெயர்.

## திருவோடு

ஒரு வீட்டின் திண்ணையில் ஒரு பெரிய மனிதர் உட்கார்ந்து இருந்தார். அது ஒரு செல்வந்தர் வீடு. அப்பொழுது தெருவில் ஒருவன் பிச்சை எடுத்துக்கொண்டு போனான். இந்தப் பெரிய மனிதர் உட்கார்ந்து இருந்த வீட்டிற்கும் வந்தான். அவன் கையில் 'திருவோடு' வைத்திருந்தான். பிச்சைக்காரர்கள் பெரும்பாலும் மரத்தினால் செய்த ஒரு பாத்திரம் போன்ற ஒன்றினைக் கையில் வைத்துக்கொண்டு பிச்சைக் கேட்பது பழக்கம். ஏதாவது 'பிச்சை' போட்டால் அந்தத் திருவோட்டில் வாங்கிக் கொள்வார்கள்.

திருவோடு கையில் வைத்திருந்த அந்தப் பிச்சைக் காரனைப் பார்த்து திண்ணையில் உட்கார்ந்திருந்த பெரிய மனிதர் கேட்டார், "ஏனப்பா! எத்தனை காலமாக நீ பிச்சை எடுக்கின்றாய்?" பிச்சைக்காரன் சொன்னான், "நான் ரொம்ப காலமாக பிச்சை எடுத்துத்தான் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறேன். இந்தத் திருவோடுதான் என்னைக் காப்பாற்றுகிறது." இதனைக் கேட்டவுடனே அந்தப் பெரியவருக்கு புதிய சிந்தனை ஒன்று தோன்றிற்று. இவனுக்கு ஏதாவது பொருளுதவி செய்தால் பிச்சை எடுக்கிற தொழிலை விட்டுவிட்டு ஏதேனும் தொழில் செய்து பிழைத்துக் கொள்ளுவான் என்று கருதினார். இழிவான பிச்சை எடுக்கும் பழக்கத்தை விட்டுவிடுவான் என்று எண்ணினார்.

உடனே அவனைப் பார்த்துச் சொன்னார். "ஏனப்பா, உனக்கு ஆயிரம் ரூபாய் ஒரு உதவி செய்யலாம் என்று இருக்கிறேன். நீ என்ன செய்வாய்?" உடனே அந்தப் பிச்சைக் காரன் சொன்னான், "தங்கத்தாலே திருவோடு செய்து கொள்ளுவேன்." இதைக் கேட்டவுடனே அந்தப் பெரிய வருக்கு திடுக்கென்று அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. ஏதேனும் தொழில் செய்து பிழைப்பான் என்று கருதியவர், அவன்

சொன்ன பதிலைக் கேட்டு பழையபடி பிச்சை எடுக்கத் தானே போகின்றான் என்று வியப்படைந்தார். இந்தப் பழைய புத்தியைத்தான் 'பிச்சைக்கார புத்தி' என்று சொல்வது.

## ஊறிப்போனது

பழையபடி பிச்சை எடுப்பதற்காகவே அவன் எண்ணு கின்றான். ஆனபடியால் பணம் வந்த பிறகும் அவனுடைய தாழ்ந்த புத்தி போகவில்லை. அதுவேபோல, சிலர் மேலான நிலைக்கு வந்தபிறகும், ஒரு காலத்தில் கீழான நிலையில் இருந்த புத்திதான் இப்பொழுதும் வருகிறதே என்று நினைத்து — பழைய புத்தியைக் குறிப்பதற்காக— பிச்சைக்கார புத்தி' என்று சொல்லுவது உண்டு. பிச்சை எடுக்கிற பழக்கம் என்பது இந்தப் பேச்சுக்கு அர்த்த மாகிவிடாது. பிச்சைக்காரனிடத்தில் இருந்து இந்தக் கருத்து வந்ததினால் இந்தப் பெயர் சொல்லப்படுவ தாயிற்று.

## கண்கள்

''காமத்திற்குக் கண்ணில்லை'' என்றொரு பேச்சு பழமொழி போல பேசப்படுவது உண்டு. இதற்கு சரியான பொருள், பலருக்குத் தெரியாமல் இருப்பது வியப்பானது, அல்ல. பொதுவாக ஒரு எண்ணத்தினை இந்தப் பழ மொழிக்கு விளக்கமாகச் சொல்லுபவர்கள் உண்டு. காமம் என்பது பொதுவாக சிற்றின்ப உணர்ச்சியினையே குறிப் பதற்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. விருப்பம், விழைவு என்ற பொருளில் காமம் என்ற சொல் சொல்லப்படுகிறது. என்றாலும், ஆண் பெண் இருபாலரிடையே நிகழ்கின்ற உணர்ச்சிப் போக்கினை சொல்லுகின்ற சொல்லாகவே காமம் என்பது பேசப்பட்டு வருகின்றது. காம உணர்ச்சிப் பட்டவர்கள் எதனையும் சிந்தித்துப் பார்க்காமல் மனம்

போன போக்கில் தங்கள் எண்ணத்தினை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள் என்பதனைக் குறித்துப் பேசுகின்ற இடத்தில் ''காமத்திற்குக் கண்ணில்லை'' என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.

ஆசிரியர் திருவள்ளுவனார், இந்தச் சிறப்பான மொழியின் பொருளினைத் தெளிவாக விளக்கம் செய்து காட்டுகின்றார். காமத்தின் வசப்பட்ட காதலர்கள் இருவர் தங்கள் அன்பினை வளர்த்துக் கொண்டு வருகின்றனர். காதல் வளர்ச்சி முதிர்ந்த நிலை அடைகின்றது. காலம் நேர்ந்த பொழுதெல்லாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டிருந்த காதலர்கள் இடைவெளி இல்லாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

## அவன் ஆசை

காதலன் காதலியை தன்னுடைய கண்களிலேயே கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றான். காதலர்களின் கற்பனை உலகம் பற்பல நேரங்களில் எல்லையற்று செல்லுவது வழக்கம். தான் விரும்புகின்ற காதலியைத் தன்னுடைய கண்களிலே கொண்டு வந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துவிட்டான்.

நம்முடைய கண்களில் இரண்டு கண்மணிகள் இருக்கின்றன. அந்தக் கண்மணிகளைப் பார்க்கின்றபொழுது இரண்டு பாவைகள் தெரியும். அந்தப் பாவைகள் தெரிந்தால்தான் கண்களுடைய பார்வை நன்றாக இருக்கிறது என்பது பொருளாகும். கண்களிலே பாவைகள் தெரியவில்லை என்றால் அவன் பார்வையை இழந்துவிட்டான் என்பது பொருளாகும். அதாவது பாவைகள் இல்லாதவன் குருடன் என்பதே குறிப்பாகும்.

இந்தக் காதலன், காதல் மிகுதியினால் அந்தப் பாவைகளைப் பார்த்துப் பேசுகின்றான். ''கண்களில் இருக்கின்ற

கருமணிகளில் வசிக்கின்ற பாவைகளே! நீங்கள் இருக்கின்ற இடத்தைவிட்டுப் போய்விடுங்கள். ஏனென்றால், நான் காதலிக்கின்ற அந்தப் பெண்ணைக் கண்களில் கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும். பாவைகளாகிய நீங்களும் அங்கே இருந்து கொண்டிருந்தால், என்னுடைய காதலி வந்து இருப்பதற்கு இடம் இல்லாமல் போகும். ஆதலால் நீங்கள் (பாவைகள்) போய்விடுங்கள்.''

## அவன் பேச்சு

இவ்வாறு கண்ணின் கருமணிகளில் இருக்கின்ற பாவைகளைப் பார்த்து காதல் மிகுதியினால் அந்தக் காதலன் பேசுகின்றான். கருமணிகளில் இருக்கின்ற பாவைகள் போய் விட்டால், குருடனாகி விடுவோம் என்பதை அவன் மறந்தான். அவனுடைய காமத்தின் அடிப்படையான காதலி தான் அவனுக்குப் பெரிதாகத் தோன்றினாளே அல்லாமல், பாவைகள் போய்விட்டால், பார்வை போய்விடும் என்பதை மறந்தான். கண்கள் போனாலும் காதலியே வேண்டும் என்ற உயர்ந்த கருத்தினை வெளிப்படுத்துவதுதான் ''காமத்திற்குக் கண்ணில்லை'' என்ற உயர்ந்த பழமொழி யாகும். இந்த அரிய உண்மையினை ஆசிரியர் திருவள்ளுவனார் குறட்பாவில் அமைத்துக் காட்டுகின்றார்.

**''கருமணியிற் பாவாய்நீ போதாய் யாம்வீழும்**
**திருநுதற்கு இல்லை இடம்.''**

பாவைகளைப் பார்த்துச் சொல்லுகின்றான் : ''நீங்களும் இருந்து கொண்டிருந்தால் என்னுடைய காதலி இருப்பதற்கு இடம் இல்லாமல் போய்விடும் ஆனபடியால், பாவைகளே போய் விடுங்கள்.''

## அன்றும் இன்றும்

2000 ஆண்டுகட்கு முன்னதாக திருக்குறள் தாங்கிக் கொண்டிருக்கிற உயர்ந்த கருத்து இன்றைய தினமும் நடைமுறைகளில் பேசப்பட்டு வருவதைச் சிந்திக்கின்றபொழுது

அன்றும்இன்றும் என்றும் நிலைத்து நிற்கின்ற உயர்ந்த உண்மைகளை ஆசிரியர் கூறியிருப்பதை உலகத்தில் பல்வேறு நாடுகளில் அறிந்துணர்ந்த அறிஞர்கள் மிகச் சிறப்பாக திருவள்ளுவனாரைப் பாராட்டுவதில் வியப் பொன்றும் இல்லை என்று கூறுவது மிகையாகாது.

மனித சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதர்கள், மனிதர்களாகவே வாழ்ந்துவிட்டால், யாருக்கும் எந்தக் காலத்திலும் துன்பம் வராது. மனிதனாகவே வாழ வேண்டும் என்பதற்கு என்ன பொருள் என்றால், மனித தன்மைகளுடன் — மனித குணங்களுடன் — எப்பொழுதும் வாழவேண்டும் என்பதே ஆகும். கல்வி கற்பதும், அறிவை வளர்ப்பதும், இல்லறம் நடத்துவதும் — ஆக இன்னபிற செயல்களுக்கெல்லாம், காரணம் என்னவென்றால், மனித குணங்களையும், ஒழுக்கத்தினையும் வளர்த்துக் கொள்ளு வதே ஆகும் என்று உணர வேண்டும்.

## குணமே அடையாளம்

ஒரு மனிதனை மனிதன் என்று கூறுவதற்கு இந்தக் காலத்தில் என்ன அடையாளம் வைத்திருக்கிறோம் என்றால் அவனுடைய உறுப்புகளைப் பார்த்து முடிவு செய்வதே ஆகும். மனித தோற்றத்திற்கேற்றவாறு இருந்துவிட்டால் அவன் மனிதன் என்ற பெயருக்கு உரியவன் ஆகமாட்டான். மனித குணங்களே மனிதன் என்று சொல்லுவதற்குக் காரணங்களாக இருத்தல் வேண்டும்.

மனிதப் பிறவி எடுத்தும், மனித குணங்களே இல்லா மல் இருப்பவனைக் கயவன் என்ற பெயரினால் திருவள்ளு வனார் சுட்டிக் காட்டுகின்றார். தோற்றத்தில் மக்களைப் போலவே இருந்துகொண்டு பழக்கவழக்க குணங்களில்-

இழிவான தன்மைகள் கொண்டவர்களே 'கயவர்கள்' என்பதனை குறட்பா ஒன்று கூறுகிறது.

**"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல்."**

தோற்றத்தால் முழுக்க முழுக்க மக்களைப் போலவே கயவர்கள் இருப்பார்கள். ஆனால் அவர்கள் கீழான தன்மைகளை எல்லாம் கொண்டு வாழ்வார்கள். அவர்களுக்கு ஒப்பாக — சமமாக — கூறுவதற்கு இந்த உலகில் வேறு எவருமே இல்லை என்று சொல்ல வேண்டும்.

## மக்கள் ஒப்பு

ஒருவருக்கு பெருமை தேடித் தருவதெல்லாம்அவருடைய குணங்களேயாகும் என்பதனை நன்கு அறிந்து உணர்தல் வேண்டும். நல்ல குணங்களும் உயர்ந்த பழக்க வழக்கங்களும் கொண்டவர்களால்தான் ஒரு சமுதாயம் மேலோங்கி உயர்ந்த நிலை அடைய முடியும். இயல்பாகவே மக்களைப் பார்த்து கணிக்கின்றபொழுது உறுப்புகள் எல்லாம் மக்களுக்கு இருக்கின்ற மாதிரி இருந்தால் மக்கள் கூட்டத்தில் சேர்த்து வைத்துக் கணக்கிடுகின்றோம். அவ்வாறு செய்யக் கூடாது என்பது உயர்ந்த மறையின் அறிவுரையாகும்.

உறுப்புகளைக் கணக்கிட்டு ஒத்துப் பார்த்து மக்கள் கூட்டத்தில் சேர்த்து வைத்துப் பேசுதல் பொருந்தாது என்றும், பண்பினை அடிப்படையாக வைத்துக் கணக்கிட்டுப் பார்ப்பதுதான் முறை என்பதனைக் குறட்பா ஒன்று சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. பொருத்தமாக ஒப்பு என்பதனை "வெறுத்தக்க" என்ற சொல் அழகாக சுட்டிக் காட்டுகிறது.

**"உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு."**

## பண்பும் ஒழுக்கமும்

பண்பு நிறைந்தவர்களும், ஒழுக்கம் நிறைந்தவர்களும் இன்னபிற சொற்களினால் — அழைக்கப்படும் மக்கள் நிறைந்திருந்தால்தான், ஒரு நாடு முன்னேற்றம் அடையும். பசி, பட்டினி, வறுமை என்றெல்லாம் பேசக் கூடிய கொடுமை நீங்க வேண்டும் என்றால் பண்பாளர்கள் நிறைந்திருக்க வேண்டும்.

கல்வி கற்றிருந்தும் அறிவு இல்லாதவர்களாகப் பலர் இருப்பது உண்டு. அத்தகைய மக்களை 'பலகற்றும் — அறிவில்லாதார்' என்று ஆசிரியர் குறிப்பிடத் தயங்கவில்லை. நல்ல நூல்களை ஓதி அறிந்தும் கெட்டிக்காரர்களாக இருந்தும், சமுதாயத்திற்குத் தீமை விளைவிப்பவர்களாக இருக்கின்ற கூட்டத்தினரைப் பார்த்து,

"ஓதி உணர்ந்து, பிறர்க்கு உரைத்து தான் அடங்காப் பேதை" என்று ஆசிரியர் சொல்லுகிறார்.

இத்தகையவர் ஓதுவதிலும் உணர்வதிலும் என்ன பயன்? என்று கேட்கிறார்.

## அறிவுக்கு வினா

ஒரு சிலர், சிறந்த அறிஞர்கள் என்று சொல்லக் கூடிய அளவில் இருந்துகொண்டு இருப்பார்கள். நுட்பமான மதி படைத்தவர்கள் என்று காட்டிக் கொள்வார்கள். நுணுக்கமான ஆராய்ச்சி செய்வார்கள். ஆனால் மனிதப் பண்பாடு இல்லாமல் பிறருக்குப் பயன்படாமல் வாழ்வார்கள். அப்படிப்பட்டவர்கள் அறிவு பெற்றிருந்தும் யாது பயன் என்று ஆசிரியர் கேட்டு வைக்கிறார்.

**"அறிவினால் ஆகுவது உண்டோ?"**

**"அஃகி அகன்ற அறிவு என்னாம்?"**

திருவள்ளுவருடைய எண்ணங்களை எல்லாம் நன்றாக சிந்தித்துப் பார்க்கும்பொழுது, மனித சமுதாயம் துன்பம் இன்றி இன்பமாக வாழ்வதற்கு முதன்மையான-அடிப்படையான காரணமாக இருப்பது பண்பேஆகும் என்பது தெளிவு. நல்லவர்கள் பிறந்த குடும்பத்தில் பிறந்து வந்திருப்பவர்கள் இயல்பாகவே நற்குணங்கள் பெற்றிருப்பார்கள் என்பது குறிப்பிட வேண்டிய இலக்கணம் ஆகும்.

மேலான சிந்தனைகளும் மற்றும் ஈகைத் தன்மைகளும் அற வாழ்க்கையும் இன்ன பிற தன்மைகள் எல்லாம் ஒன்றுபட்டு இருக்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே நல்ல குணத்தவர் என்று சொல்லப்படும். அன்பு நிறைந்த மக்களை எல்லாம் மேலான குலத்தவர்கள் என்று கூறப்படும். நல்ல பேச்சுக்கள் பேசுவதும், தூய்மையான உள்ளம் பெற்றிருப்பதும், மற்றவர்களுக்கு உதவுகின்ற தன்மையினைக் கொண்டிருப்பவர்களைத்தான் மேலான குலத்தவர்கள் என்று ஆசிரியர் குறிக்கின்றார்.

நல்ல மக்கள் நிறைந்திருக்கின்ற குலத்தில் பிறந்தவர்களின் சொற்கள் எல்லாம் மற்றவர்களை மகிழ்விப்பதாகவே இருக்கும். தீயவர்களிடத்தில் பேசுகின்ற பொழுது சிறிது நேரத்திற்குள்ளாகவே இழிவான சொற்களும், கடுமையான சொற்களும் அவர்கள் பேச்சில் அடிக்கடி வருவதைப் பார்க்கலாம்.

## நிலமும் சொல்லும்

திருவள்ளுவர் நிலத்தினை உதாரணமாகக் கொண்டு நல்லதொரு சீரிய கருத்தினைத் தெளிவாக விளங்குமாறு குறிப்பிட்டுக் காட்டுகின்றார். ஓரிடத்தில் இருக்கின்ற மண்ணின் குணம் என்னவென்று எவ்வாறு தெரிந்து கொள்வது? அதாவது, குறிப்பிட்ட ஒரு நிலத்தில் காணப்படுகின்ற மண் வகை — மண்ணின் இயல்பு — எத்தகையது

என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றால் மண்ணின் வகைகளை ஆராய்ச்சி செய்பவர்களைக் கூப்பிட்டுத்தான், கண்டு அறிந்து கொள்ள முடியும்.

மண் வகைகளின் ஆராய்ச்சி செய்பவர்கள் இருக்கும் இடத்திற்கு, இங்கே இருக்கின்ற நிலத்தின் மண்ணை எடுத்து அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. அந்த மண்ணில் முளைத்திருக்கின்ற செடியினைப் பிடுங்கி எடுத்து அந்த முளையினை — அந்த வேரின் பகுதியினை ஆராய்ச்சி செய்கின்ற — அதாவது மண்வகை ஆராய்ச்சியாளர்களுக்கு அனுப்பினாலே போதுமானதாகும். மண்ணின் குணத்தினை — இயல்பினை — தெரிந்து கொள்வதற்கு மண்ணை எடுத்து அவர்களுக்கு அனுப்புவதைவிட அந்த மண்ணில் முளைத்திருக்கின்ற செடியின் முளையினை அனுப்பினாலே போதுமானதாகும்.

அதனைக் கொண்டே அந்த மண்ணை, ஆராய்ச்சி யாளர்கள் — இந்த முளை இவ்வாறு இருக்க வேண்டும் என்றால், அது முளைத்திருக்கிற மண் எப்படிப்பட்டது என்பதை எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். அதாவது ஒரு நிலத்தில் (பூமியில்) மண்ணை இன்னதென்று தெரிந்து கொள்வதற்கு அங்கே முளைத்திருக்கிற வேர் பெரிதும் துணையாக இருக்கும்.

## வேர்கள்

செடியின் வேர் பலப்பலவாகப் போயிருக்கவும் கூடும். குறிப்பிட்ட அளவுக்கு ஆழமாகவும் சென்றிருக்கும். அதனால்தான் மண்ணின் தன்மையைப் புரிந்து கொள்ள எளிமையாக இருக்கும். வேர்கள் ஆழமாகவும், பலவகையிலும் சென்றிருப்பதால் செடியினைப் பிடுங்குதல் வேண்டும்.

வேரைப் பிடுங்கினார் என்று சொல்லுவது உலகில் வழக்கமாகும். அதுவே போல, ஒருவன் பிறந்த குலத்தின் தன்மையினையும், அவன் பழகுகின்ற பழக்கத்தினையும், அவன் பிறந்திருப்பது நல்ல குலமா, அல்லது தீயவர்கள் குலமா என்று அறிந்து கொள்வதற்கு அவனுடைய சொற்களே சான்றாக அமையும் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

சிலர் பேசுகின்ற பொழுது பிறர் மனம் புண்படாமல் பேசுவார்கள். அது ஒரு நல்ல குணம். இனிமையான சொற்களைச் சொல்லுகின்றவர்களை நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் என்று சொல்லுதல் வேண்டும்.

## பரம்பரை

சிலர் பேசுகின்றபொழுது இயல்பாகவே கடுமையான சொற்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கும். பேசுகின்ற பொழுது இழிவான சொற்களை அடிக்கடி ஒரு சிலர் சொல்லுவார்கள். தீய பரம்பரையில் அவர்கள் வந்தவர்கள் என்று பொருளாகும். தீயவர்கள் குலத்தில் பிறந்தவர்கள், குலத்தின் தன்மையினால், சூழ்நிலைகளினால் நல்ல சொற்களையே பேச மாட்டார்கள். அவர்கள் வாயிலிருந்து வருகின்ற சொற்கள் எல்லாம் கடுமையானவைகளாகவே இருக்கும்.

ஆதலால், ஒருவன் பேசுகின்ற பொழுது, அவன் வாயிலிருந்து வருகின்ற சொற்களைக் கொண்டே அவன் எப்படிப்பட்ட குலத்திலிருந்து வருகின்றான் என்று நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். பலரைத் தேடிப் போய் இவன் எப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. அவன் பேசுகின்ற சொற்களே அவன் இன்ன தன்மையான குலத்தினைச் சார்ந்தவன் என்று காட்டி விடுவதாகும்.

நிலத்தின் தன்மையினை, அந்த நிலத்தில் கிடந்த வேர்கள் காட்டி விடுவது போல, ஒருவரின் சொற்களும், அவன் தன்மையினைக் காட்டிவிடுவதாகும். மண்ணில் கிடக்கும் வேரினைப் பார்ப்பதற்குச் செடியைப் பிடுங்கிப் பார்த்தல் வேண்டும் என்று சொல்லுவார்கள். இப்பொழுதுகூட ஒரு சிலர் பேசுகின்றபொழுது கோபமாக மற்றவனிடம் சொல்லுவார்கள் 'என் வாயைப்பிடுங்காதே' இப்படிச் சொல்லுவதை நாம் கேட்பதுண்டு. அப்படி என்றால், ஆழமான உள்ளத்தில் இருந்து சொற்கள் வருகின்றன என்பது குறிப்பிட்டுக் காட்டப்பட்டது.

நடைமுறையில் பேசுகின்ற இந்த வழக்கத்தினைக் குறட்பா ஒன்று குறிக்கின்றது.

**"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்."**

பேசுகின்ற சொற்கள் எவ்வளவு பயனை அளிப்பவையாக இருத்தல் வேண்டும் என்கின்ற குறிப்பு இந்தக் குறட்பாவினால் நன்கு உணர்த்தப்பட்டது.

## சொற்கள்

அதிகமான சொற்களைப் பேசவேண்டும் என்கிற எண்ணம் எல்லா நேரத்திலேயும் எல்லோருக்கும் இருந்துவிடுதல் கூடாது. பேசுகின்ற சொற்களுக்கு வேகம் அதிகம் என்று அறிஞர்கள் சொல்லுவார்கள். நல்லபடியாக சொல்லப்படுகின்ற சொற்கள் உள்ளத்தைத் தொட்டுவிடும் என்று பேசுவார்கள். அருமையான சொற்களைக் கேட்கின்றபொழுது உள்ளத்தைத் தைத்துவிட்டது என்று சொல்லுவதைக் காண்கின்றோம். ஆகையினால் சொற்களுக்கு நல்ல முறையிலும் அல்லது தீய முறையிலும் வன்மை அதிகம் என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

## நல்ல விளைச்சல்

பல உயர்ந்த கருத்துக்களைச் சொல்லி வருகின்ற திருவள்ளுவர் நிலத்தில் நல்லபடியாக விளைச்சல் உண்டாவதற்கு அருமையான காரணத்தினைக் குறிப்பாக உணர்த்துகின்றார். நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்து பெரும் புகழ் அடைந்தவர்களைப் பெருந்தலைவர்கள் என்று பொதுவாகக் கூறுகின்றோம். அத்தகைய பெரியவர்கள் வாழ்ந்த இடத்தினைப் பாதுகாத்துப் பலரும் தெரிந்து பெருமையடையக் கூடிய முறையில் வைத்திருப்பதைக் காண்கிறோம்.

மனித வாழ்க்கையில் நல்ல உயர்ந்த நோக்கத்துடன் வாழ்கின்றவர்கள்—வாழ்ந்தவர்கள்—இருந்த இடத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு என்று பல நூல்கள் செப்புகின்றன. மகான்கள் எனப்படுகின்ற அறவோர்கள்—முனிவர்கள் வாழ்ந்து மறைந்த இடத்தில் பெரிய மடாலயங்கள் தோன்றி உள்ளன. மிகப் பெரிய திருக்கோயில்கள் அமைந்திருக்கின்றன. உயர்ந்த கோபுரங்கள் காட்சி அளிக்கின்றன. பல இலட்சம் மக்கள் அந்த இடத்திற்குச் சென்று வருவதைக் காண்கின்றோம். மகான்கள் எனப்படுகின்ற முனிவர்களை, சித்தர்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற நிலம் அவ்வளவு பெருமையாக இருக்கும்.

## கோயில்கள்

இப்பொழுதும் குறிப்பாக தமிழகத்தில் மகான்கள் அடக்கமான இடங்களில் எல்லாம் பெரும் கோயில்கள் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். அத்தகைய மகான்கள் அடக்கமான இடங்களில் எல்லாம் அந்த மகான்களின் பெயர்கள் பொறித்து வைக்கப்பட்டிருப்பதை இன்றும் நாம் காண முடிகின்றது.

தமிழ்நாட்டில் சிறந்த திருக்கோயில்களில் ஒன்றான பழநியில் 'போகர்' என்ற முனிவர் அடக்கமாகி இருக்கிறார். இன்றைய தினமும் பழநிக்குச் செல்லுபவர்கள் அதனை அறிந்து வருகிறார்கள். 'திருமூலர்' என்னும் முனிவர் சிதம்பரத்தில் அடக்கமாகி இருக்கிறார். சீர்காழி என்னும் திருக்கோயிலில் 'சட்டமுனி' என்னும் சித்தர் அடக்கமாகி இருக்கிறார்.

## அடங்கிய சித்தர்கள்

இவ்வாறே 'புலத்தியர்' என்னும் முனிவர் அடக்கமான பாபநாசம் என்னும் நகரமும், 'தன்வந்திரி' என்ற மகான் அடக்கம் செய்யப்பட்டுள்ள வைத்தீஸ்வரன் கோயிலும், 'கொங்கணவர்' என்னும் முனிவர் அடக்கமாகி உள்ள திருப்பதியும், 'அகப்பை சித்தர்' அடக்கமாகியுள்ள எட்டுக்குடியும், 'கோரக்கர்' என்ற முனிவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள திருக்கழுக்குன்றமும், 'கரூரார்' அடங்கியுள்ள தஞ்சாவூரும், 'குதம்பைச் சித்தர்' அடக்கமாகியுள்ள மைலாப்பூரும், சிறப்புடன் திகழ்ந்து வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

இவ்வாறே சுந்தரானந்தர் மதுரையிலும், பாம்பாட்டிச் சித்தர் திருக்கடையூரிலும், பாஞ்சாலி ராமேஸ்வரத்திலும், மச்சமுனி திருப்பரங்குன்றத்திலும், கமலமுனி திருவாரூரிலும், இடைக்காடர் திருவண்ணாமலையிலும், ராமதேவர் அழகர் மலையிலும், கும்பமுனி குடந்தையிலும், அகத்தியர் அனந்தசயனத்திலும், நந்தீசர் திருவாவடுதுறையிலும் அடங்கி இருக்கிறார்கள் என்று சித்தர் நூல்களில் இருந்து நாம் காண முடிகிறது.

## நல்லவர் தீயவர்

மிகப் பெரிய உலகம் போற்றும் ஞானவான்களாக வாழ்கின்ற வாழ்க்கை நடத்தாவிட்டாலும், நல்ல குணத்துடன் பலருக்கும் பயன்பட்டு வாழ்கின்றவர்களைப் புதைத்த நிலத்தில் நல்ல விளைச்சல் உண்டாகும் என்று உலகியல் உண்மையினை ஆசிரியர் கூறுகின்றார். பிறருக்கு இயன்றவரை உதவி செய்து வாழ்வதுதான் மனிதனின் கடமை என்று அறிந்து வாழ்ந்து அதனால் புகழையும் சேர்த்துப் பெருமை அடைய வேண்டும்.

மோசமாகவும், பழிபாவங்களுக்கு ஆளாகியும், கெட்ட பெயர் வாங்கியும், வாழ்ந்த ஒருவன் இறந்த பிறகு அவன் உடலைப் புதைத்த இடத்தில் ஏற்கனவே நல்ல விளைச்சல் இருந்தாலும், இவனைப் புதைத்த பிறகு விளைச்சலே இல்லாமல் போகும் என்கிறார் திருவள்ளுவர்.

உலக மக்களில் பலர் தீய பழக்கங்களைக் கொண்டு மதுபானம் அருந்திக் கெட்டுவிடுவதைப் பார்க்கின்றோம். குடிக்கின்ற பழக்கம் உள்ள அவர்கள் சென்று மதுபானம் அருந்துகின்ற மதுக்கடைகள் எந்த இடத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன என்றால், பாவிகளாக வாழ்ந்த தீயவர்கள் இறந்த பிறகு அவர்கள் உடம்பினைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற இடங்கள்தான் என்று கூறுவது மிகையாகாது.

## பயன் குன்றும்

''ஏ! மனிதனே! உன் வாழ்க்கை முடிந்த பிறகு உன்னுடைய உடம்பினைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற நிலத்தில் நல்ல விளைச்சல் விளையுமாறு நீ வாழக் கூடாதா"' என்பதே இங்கு சுட்டிக் காட்டப்படும் பெரிய உண்மையாகும் — நல்ல தொண்டு செய்து புகழ் சேர்க்காமல் தீயவனாக வாழ்ந்தவர்கள் உடம்பைச் சுமந்து கொண்டிருக்கின்ற நிலம் விளைச்சல் இல்லாமல் குன்றி

விடும் என்ற கருத்தினைக் குறிப்பாகஆசிரியர் வள்ளுவனார் ஒரு குறட்பாவில் உணர்த்துகின்றார்—

**வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா**
**யாக்கை பொறுத்த நிலம்.**

பழிபாவங்களோடு வாழ்ந்து இறந்த பிறகு அவன் உடம்பினைப் புதைத்த இடத்தில் ஒன்றும் விளையாது என்ற குறிப்பினை உணர்த்துவதோடு, அவன் உயிரோடு இருக்கின்றபோதும் அந்த வட்டாரத்திலேயே நிலம் பாழ்பட்டு விடும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத் தான் ''யாக்கை பொறுத்த நிலம்'' என்று ஆசிரியர் வள்ளுவனார் சிறப்பித்துக் கூறினார்.

மனிதன் நல்லபடியாக வாழ்வதற்குத் திரிகரணங்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என்று பெரியவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வருகின்றார்கள். மனம், வாக்கு, காயம் இந்த மூன்றிற்கும் 'திரிகரணங்கள்' என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

## அலைய விடக்கூடாது

இந்த மூன்றிற்கும் முதன்மையாக இருப்பது மனமே ஆகும். தூய்மையாகவும், சுகாதாரத்துடனும், வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற வீட்டில் பெரும்பாலும் நோய் நொடிகள் வருவதற்குக் காரணம் இல்லாததுபோல, மனம் என்கின்ற வீட்டில் தீய எண்ணங்கள் என்கிற நச்சுக் கிருமிகள் வராமல் பார்த்துக் கொள்வோமேயானால் வாழ்க்கையில் துன்பங்கள் அணுகாது என்று அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

**கண்ணுக்கு இனிய கண்டு மனத்தை—**
**காட்டில் அலையவிட்டு**
**பண்ணிடும் பூசையாலே—தோழி**
**பயன்ஒன்றும் இல்லையடி.**

**உள்ளத்தில் உள்ளான் அடி—அதுநீ**
**உணர வேண்டுமடி**
**உள்ளத்தில் காண்பாய் எனில்—கோயில்**
**உள்ளேயும் காண்பாய் அடி.**

ஆதலால் மனத்தினை நல்ல சிந்தனைகள் இருக்குமாறு வைத்துக்கொள்ள வேண்டும். எண்ணம், சிந்தனை, உணர்ச்சி என்பனவெல்லாம் மனத்தில்தான் தோன்று கின்றன. ''மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி'' என்றார் ஆசிரியர் திருவள்ளுவனார்.

இறைவன் இருக்கின்ற இடத்தினைச் சொல்லுகின்ற பொழுது 'மனத்து அகத்தான்' என்றுதான் பாடி வைத் தார்கள். அதாவது மனம் என்கிற வீட்டினை இருப்பிட மாகக்கொண்டு இருப்பவன் இறைவன் என்பது பொருளாகும்.

ஒரு ஊரில் பெருமையுடனும், நிறைந்த செல்வாக் குடனும் இருந்த உயர்ந்த பெரிய மனிதர் ஒருவர் நண்பர் வீட்டிற்கு வருவதாகச் சொல்லியிருந்தார். அப்படிப்பட்ட பெரிய மனிதர் தம்முடைய வீட்டிற்கு வருவதாகச் சொல்லி விட்டாரே என்பதை அறிந்து நண்பர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவருடைய வருகை தன்னுடைய வீட்டிற்கு மிகுந்த பெருமையினைக் கொடுக்கும் என்று அவர் உறுதியாக நினைத்தார். அத்தகைய பெரிய மனிதர் தம்முடைய வீட்டிற்கு வருவது அருமையிலும் அருமை யான நிகழ்ச்சி என்று கருதினார்.

உடனே அவருடைய மனைவியிடம் சென்று அந்தப் பெரிய மனிதர் வருகின்ற செய்தியினை எடுத்துச் சொன்னார். அந்த அம்மையாருக்கு அளவில்லாத மகிழ்ச்சி. அவ்வளவு பெரிய மனிதர் திருவடிகள் நம் வீட்டில் படப்போகிறதே என்று அவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வீட்டினை மிகமிகச் சுத்த

மாக வைத்துக்கொள்ள ஆயத்தம் செய்தார். காட்சிக்கு அழகாக இருக்குமாறு செய்தார். தூய்மையான இருப்பினை உட்காருகின்ற இடத்தில் விரித்து வைத்தார்.

வீட்டிற்குள் நுழைகின்ற வாயிற்படியினைச் சுத்தம் செய்து அழகாகக் கோலம்இட்டு கவர்ச்சியாக அமைத்தார். இன்னும் எவ்வளவு தூய்மையும் அழகும் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து வைத்தார். தன்னுடைய நகரத்தில் இருக்கின்ற பெரிய மனிதர் தம் வீட்டிற்கு வருவதற்கே இவ்வளவு தூய்மைப்படுத்துகிறோம் என்றால், எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவன் நம்முடைய மனமாகிய வீட்டில் வந்து உறைய வேண்டும் என்றால், இந்த மனத்தினை எவ்வளவு தூய்மையாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும். தீய எண்ணங்கள் கடுகளவேனும் உள்ளத்தில் இல்லாதபடி இருத்தல் வேண்டும் அல்லவா?

பெரிய மனிதர் வருவதாகச் சொன்ன அந்த வீட்டின் முன் பக்கத்திலேயே குப்பைகளையும், கூளங்களையும் பரப்பிவைத்து வீட்டையும் வெறுக்கத்தக்க மாதிரி வைத்திருந்தால் வீட்டிற்குள் நுழைவதற்குத்தான் அந்தப் பெரியவருக்கு எண்ணம் வருமா? அதுவே போல் உள்ளத்தினை தீய எண்ணங்கள் இல்லாதபடி பார்த்துக் கொண்டால்தான் இறைவன் வழிபாடு என்பது உண்மையாக இருக்க முடியும்.

## தேடிவரும்

சித்தர்களில் ஒருவர் பாடுகின்ற பாடல் எளிமையாக பல உண்மைகளை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**"பூவும் வேண்டாமே! பழமும் பொறியும் வேண்டாமே,**
**மேவின் உள்ளன்பே தேவி விரும்பும் நல்லமுதாம்**
**குருடர் கூடிநின்று கற்பூரம் கொளுத்திக் காட்டுவதால்**
**சிறிதும் நன்மையுண்டோ? இதனைச் சிந்தனை**
**செய்வாயே**

**ஆலயங்கள் ஏனையா? அபிஷேகங்கள் ஏனையா?**
**கோலக் கொடிகள் ஏனையா? கொட்டுமுழக்கமேனையா?**
**பாலும் பழமும் வைத்து நிதம் பணிந்து நிற்பதேனையா?**
**சீலம் பேணும் உள்ளத்தைத் தெய்வம் தேடிவாராதோ?''**

இத்தகைய பாடல்கள் நுணுக்கமான உண்மைகளைப் புலப்படுத்துவனவாகும். மனத்தினைத் தூய்மையாக—அதாவது மாசில்லாமல்—வைத்துக்கொள்வது என்ன என்பதனைப் பல நூல்கள் தெள்ளத்தெளியக் கூறுகின்றன. மக்களிடையே எந்தவிதமான பேதாபேதங்கள் இல்லா திருத்தலும், தீண்டாமை என்கிற தீய பழக்கம் அண்டா திருத்தலும், ஜாதி, மதம், சமயம் வேறுபாடுகள் கொள்ளா திருத்தலும், பிறருக்கு உதவி செய்து வாழ்தலும், ஈகை புரிந்து வாழ்க்கை நடத்துதலும், தீய எண்ணங்களை அறவே நீக்குதலும்—ஆகிய இன்னபிற—செயல்கள்தான் மனத்தினைத் தூய்மைப்படுத்துகின்ற நல்ல நெறிகள் என்று மகான்கள் கூறுகின்றார்கள். மேலே கண்ட பாடல் நல்ல உண்மையினை நமக்கு உணர்த்திவிட்டது.

## மனமே துணை

மனத்தின் துணை கொண்டுதான் அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதனை விளக்கிச் சொல்வதற்குத் தான் அப்பர் பெருமான், 'மனம் என்னும் தோணி பற்றி' என்ற அருமையான பாடல்களினைப் பாடிச் சென்றார்கள். கடலைக் கடப்பதற்கு—ஆற்றினைக் கடப்பதற்கு—படகு வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் மனத்தினை தோணி என்று கூறினார்.

'மனம்' என்கின்ற தோணியினைத் துணையாகக் கொண்டு 'மதி' என்கிற அறிவாகிய கோலை—துடுப்பினை—ஊன்றிக் கொண்டு 'கோபம்' (சினம்) என்கிற சரக்கினை ஏற்றிக்கொண்டு அதனைத் தள்ளுவதற்குப் போகும்போது மதன் என்கின்ற பாறை தாக்கி மூழ்க

அடிக்கிறதே என்று அந்த மகான் துடிதுடித்துப் பாடுகின்றார்—

**''மனம் எனும் தோணிபற்றி**
**மதி எனும் கோலை ஊன்றி**
**சினம் எனும் சரக்கை ஏற்றி**
**செறி கடல் ஓடும்போது**
**மதன் எனும் பாறைத் தாக்கி**
**மரியும்போது அறியவொண்ணா**
**உனை உனும் உணர்வை நல்காய்**
**ஒற்றியூர் உடைய கோவே.''**

இந்த அரிய பாடலினால் மனத்தின் மிகப் பெரிய செயல் குறிக்கப்பட்டது. மனத்தில் தோன்றக்கூடிய அழுக்குகளைக் கண்டுகொண்டு நீக்குவதற்காகவே 'தியானம்' என்கின்ற ஒளிவிளக்கினைத் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆதலால்தான் தியானத்தின் அடிப்படை இருப்பிடமாக இருப்பது மனமே என்று கூறப்பட்டது.

ஒருவன் ஒரு பெரியவரிடம் சென்று, இருட்டிலே பணத்தினைக் காணாமல் போட்டுவிட்டேன் என்று கூறினான். அதற்கு அந்தப் பெரியவர் விளக்கு வெளிச்சத்தில் தேடிப் பாரப்பா என்று சொன்னார். உடனே அந்த ஆள் வெளிச்சத்தில் எல்லாம் போய்த் தேடிக் கொண்டிருந்தானாம். பெரியவர் சொன்ன வார்த்தைகளுக்கு அதுவா அர்த்தம்? வெளிச்சத்தில் தேடு என்றால் விளக்கினைப் கையில் வைத்துக்கொண்டு அந்த வெளிச்சத்தில் எந்த இடத்தில் பொருளைக் காணாமல் போட்டு விட்டோம் என்று நினைத்தானோ அந்த இடத்தில் அல்லவா போய் தேட வேண்டும். அதுவேபோல, இறைவன் தங்குகின்ற இடமான மனத்தில் அழுக்குகள் சேராதபடி தியானம் என்ற விளக்கினைக் கொண்டு

அழுக்கினைத் தேடிப் பார்க்க வேண்டும். அந்த அழுக்கினை—தீய எண்ணங்களை—நீக்க வேண்டும்.

அஞ்ஞானம் என்ற இருளினைப் போக்கிட வேண்டும்.

## உள்ளமே கோயில்

மனத்தின் நல்ல எண்ணங்கள் குவிந்துகொண்டே இருக்குமாறு செய்துவிட்டால் அந்த உள்ளம்தான் இறைவன் இருக்கும் கோயிலாகவே சொல்லப்படும். அதனால்தான் அடியார்கள் ''உள்ளமே கோயில்'' என்று சிறப்பாகக் கூறிச் சென்றார்கள்.

உலகம் போற்றும் பெரிய ஞானியாகிய பட்டினத்தடிகள் 'என்னை அறியாமல் எனக்குள்ளே நீ இருக்க, உன்னை அறியாமல் உடல் இழந்தேன் பூரணமே' என்று வெளிப்படையாகச் சொல்லி வைத்தார்.

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய இறைவனை வெளியிலே செய்யும் சடங்குகளால் காண முடியாது என்றும், உள்ளத்தின் உள்ளே தேடினால்தான் காண முடியும் என்றும் அந்த முறைதான் 'இறைவன் வழிபாடு' ஆகும் என்றும் சொல்லி வைத்தார்.

**''மனத்தகத்து அழுக்கறாத**
**மவுன ஞான யோகிகள்**
**வனத்தகத்து இருக்கினும்**
**மனத்தகத்து அழுக்கறார்**
**மனத்தகத்து அழுக்கறுத்த**
**மவுனஞான யோகிகள்**
**முலைத்தடத்து இருக்கினும்**
**பிறப்பு அறுத்து இருப்பதே!''**

''மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி'' என்பது திருவள்ளுவர் வாக்காகும். எண்ணம், சிந்தனை, உணர்ச்சி என்பவைகள் எல்லாம் மனத்தில்தானே தோன்றுகின்றன.

## எச்சம் நன்றாகும்

'மனம் தூய்மை, செய்வினை தூய்மை' என்பதும் திருவள்ளுவர் வாக்கேயாகும். 'மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்' என்றும், 'மன நலம் மன் உயிர்க்கு ஆக்கம்' என்றும், 'மன நலத்தின் ஆகும் மறுமை' என்றெல்லாம் மனத்தின் உயர்ந்த சிறப்பினைப் பற்பல இடங்களில் ஆசிரியர் திருவள்ளுவனார் கூறிச் செல்லத் தவறியதே இல்லை.

மனத்தினை நல்லபடியாக வைத்திருப்பதற்கு என்ன வழிகள் என்பதனைச் சான்றோர்கள் வாயிலாகக் கேட்டும், மூதறிஞர்கள் நூல்களிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும்.

## நண்பர் தவசி

நல்லபடியாக குடும்பம் நடத்திக்கொண்டு வந்த ஒருவருக்குக் குடும்பத்தில் குழப்பமும், கலக்கமும், திகைப்பும் ஏற்பட்டுவிட்டன. என்ன செய்வது என்று புரியாமல் வேதனைப்பட்டுக்கொண்டு இருந்தார். துன்பத்தில் துடித்துக் கொண்டிருந்த அவருக்கு அவருடைய நண்பர் ஒருவரின் நினைவு வந்துவிட்டது. பல ஆண்டுகளுக்கு முன்பதாக இவரோடு பழகிக் கொண்டிருந்த அந்த நண்பர் துறவறம் பூண்டு பேரின்பத் துறையில் வாழ்க்கை நடத்திக் கானகத்திற்குச் சென்று விட்டார். இல்லறத்தார் வாழும் நகர் பகுதிகளுக்கே அவர் வருவதில்லை.

துன்பப் பட்டுக்கொண்டு இருந்த இந்த நபருக்கு அந்தத் துறவற நண்பரின் நினைப்புத்தான் வந்தது. இவரும் துறவறத்தை மேற்கொள்ளுவோம் என்று நினைத்துவிடவில்லை. அவரிடம் சென்றால் அவர் நல்ல பல வழிகளைச் சொல்லி மன அமைதிக்கு வழிகாட்டு வார் என்று எண்ணியே அவரைப் பார்க்கச் சென்றார். காட்டிற்குள் தொலைதூரம் சென்று பல இடங்களிலும்

அலைந்து திரிந்து எப்படியோ அந்த நண்பரைக் கண்டு பிடித்து விட்டார்.

அவர் தற்பொழுது பெரிய மகானாகக் காட்சி அளித்தார். அந்த மகான் இளம் வயது முதற் கொண்டே தெய்வ பக்தியிலும், ஆன்மீகத் துறையிலும் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்தபடியால் இல்லறத்தை மேற்கொள்ளாமல் பல நாட்கள் தவம் செய்து முதிர்ந்த நிலை அடைந்து இருந்தார். எல்லோரிடத்திலும் எளிமையாகப் பேசிப் பழகுகின்ற தன்மை அவரிடம் மிகுதியாக இருந்தது.

## நண்பர் வரவேற்பு

எல்லா நண்பர்களையும்விட தற்பொழுது அவரைத் தேடிக்கொண்டு வந்த நண்பர் இளமை முதற்கொண்டே மிகமிக நெருக்கமானவர் ஆனபடியால் இவரை எதிர்பாரா மல் கண்டவுடனே அவருக்கே மகிழ்ச்சி பொங்கிவிட்டது. பழைய நண்பனை, புன்முறுவலோடு வரவேற்றார். கனிவோடு பேசினார். அன்புடன் அழைத்து அருகில் உட்கார வைத்து, ''எல்லோரும் நலம்தானே?'' என்று விசாரித்தார்.

அதற்கு நண்பர் உடனடியாக ஒன்றும் பதில் சொல்ல வில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்த நண்பரை அந்தத் துறவி, கை சாடையினால் என்னவென்று கேட்டார்.

உடனே நண்பர், ''சுவாமிகளே! அடியேனுக்குப் பெரிய துன்பங்கள் எல்லாம் வந்துவிட்டன. இல்லற வாழ்க்கை யில் தாங்க முடியாத வேதனைப் பட்டுவிட்டேன். மன அமைதி கிடைக்கும் என்றே தங்களிடம் வந்தேன்'' என்று சொன்னார்.

உடனே சாமியார் நண்பரைப் பார்த்து, ''முதலில் ஏதேனும் உணவு சாப்பிடுங்கள், பிறகு பேசலாம்'' என்று

சொன்னார். அவ்வாறு சொல்லிக்கொண்டேச் அந்தச் சாமியார் தன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த குரங்கினை உற்றுப் பார்த்தார். அந்தக் குரங்கு பல காலமாக அவரிடம் சேவை செய்து வருவதால் பரிவோடு சாமியாரிடம் வந்தது.

## குரங்கின் தொண்டு

சாமியாருக்குப் பணிவிடை செய்கின்ற ஆள்போல அந்தக் குரங்கு சாமியார் பேசுகின்ற வார்த்தைகளை எல்லாம் பழக்கத்தினால் எப்படியோ புரிந்துகொண்டு அவருக்குத் தொண்டு செய்து வந்தது. குரங்கினைப் பார்த்த சாமியார், ''என்னுடைய நண்பர் சாப்பிடுவதற்கு இலையைக் கொண்டு வந்து போடு'' என்று சாடைக் காட்டி குரங்கிற்கு உணர்த்தினார். அந்தக் குரங்கு சாமியார் கட்டளையினை நன்றாகப் புரிந்துகொண்டது.

உடனே அந்தப்புறம் சென்று அந்தக் குரங்கு ஒரு இலையினைக் கொண்டு வந்து அந்தச் சாமியாரின் நண்பர் உட்கார்ந்திருந்த இடத்தில் அவருக்கு முன்னே போட்டது. நண்பர் வியப்புடன் மகிழ்ச்சி அடைந்தார். இலையைப் போட்ட உடனே, சாமியார் தன் கையில் வைத்திருந்த பலமான தடிக் குச்சியினால் அக்குரங்கின் தலையில் இரு அடிகள் கொடுத்தார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர் நண்பருக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குப் பிறகு அந்தச் சாமியார் குரங்கினைப் பார்த்து, ''இலையில் சாதம் போடு'' என்று சாடையால் உணர்த்தினார். உடனே அந்தக் குரங்கு சாதம் கொண்டு வந்து இலையில் வைத்துக் குருநாதரைப் பார்த்துக் கொண்டே இருந்தது. மீண்டும் சாமியார் தன் கைத்தடியினால் இரண்டு அடிகள் குரங்கின் தலையில் கொடுத்தார்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த நண்பருக்கு வியப்பும், வேதனையும் கலந்து வந்து கொண்

டிருந்தது. பிறகு குழம்பு பரிமாறும்போதும், தண்ணீர் கொண்டு வந்து வைத்தபோதும் அந்தச் சாமியார் குரங்கின் தலையில் போட்டவண்ணம் இருந்தார்.

## சாமியார் அடித்தல்

அந்தக் குரங்கோ, அடியையும் வாங்கிக்கொண்டு பணிவோடு சாமியார் சொன்ன வேலைகளை எல்லாம் செய்துகொண்டு இருந்தது. சிறிது நேரம் கழித்து சாமியாரின் நண்பருக்குக் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. சாமியாரைப் பார்த்து, "சுவாமி, இந்தக் குரங்குதான் நீங்கள் சொல்லுகின்ற எல்லா வேலைகளையும் உடனுக்குடன் செய்கின்றதே, அப்படி இருக்க ஏன் அதை அடித்துத் துன்புறுத்துகிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சாமியார், "என்ன செய்வேன்? இது எனக்குப் பழக்கமாகிவிட்டது. இதை என்னால் நிறுத்த முடியாது" என்று சொன்னார். நண்பருக்கு மேலும் மேலும் கோபம் அதிகரித்து விட்டது. சாமியாரைப் பார்த்து நண்பர் சொன்னார், "இது என்ன அநியாயமாக இருக்கிறதே! நீங்கள் சொல்லுகின்ற வேலைகளை எல்லாம் அந்தக் குரங்கு செய்கின்றதே! அப்படி இருந்தும் நீங்கள் அடிக்கின்றீர்கள். இந்தக் கொடுமையை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆதலால் நான் தங்களிடமிருந்து விடை பெற்றுச் செல்லும் வரையிலாவது இப்படி அடிக்காமல் இருங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

சாமியார் நண்பரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து சம்மதம் தெரிவித்தார். அப்படியே செய்கிறேன் என்று சொன்னார். குரங்கினை அடிக்கின்ற குச்சியினைத் தூக்கிப் போட்டுவிட்டார். வேறு பக்கமாக சாமியார் திரும்பி உட்கார்ந்து கொண்டுவிட்டார். நண்பருக்கு மனத்திருப்தி

உண்டாகிவிட்டது. நண்பர் சாப்பிட்டுக் கொண்டே இருந்தார். சில விநாடிகள் கழிந்தன.

அந்தக் குரங்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துவிட்டு, தாவிக்கொண்டு நண்பர் தோள்மேல் போய் உட்கார்ந்து கொண்டது. அந்த நண்பர் குரங்கு விளையாடுகிறது என்று நினைத்தார். குரங்கு அன்போடு தன்னிடம் பழகிக் கொள்ளுகிறது என்று எண்ணினார். கொஞ்ச நேரம் கழித்த பின் அந்தக் குரங்கு தன்னுடைய ஒரு விரலை அவருடைய காதிற்குள் விட்டது.

## விளையாட்டு

அப்பொழுது கூட இதுவும் விளையாட்டுத்தான் என்று நினைத்துச் சிறிது சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். மறுபடியும், அந்தக் குரங்கு நண்பரின் தலை முடியை கொஞ்சமாகப் பிடித்து இழுக்க ஆரம்பித்தது. நண்பருக்கு வலித்துவிட்டது. இதுவும் விளையாட்டு என்று நண்பரால் நினைக்க முடியவில்லை. குரங்கு சேட்டை செய்கிறது என்று தெளிவாகப் புரிந்து கொண்டார்.

தன்னுடைய சாமியார் நண்பரைப் பார்த்து சொன்னார், "தாங்கள் பழையபடி தங்கள் வேலையைத் தொடங்கினால் நல்லது." அதைக் கேட்டு சாமியார் சிரித்தார். நண்பர் சொன்னார், "சாமிகளே! நான் தெரியாமல் சொல்லிவிட்டேன், மன்னித்து விடுங்கள்," என்றார்.

சாமியார் சொல்லுகிறார், "அப்பா, சாதாரணமான இந்தக் குரங்கே சிறிது நேரம் கவனிக்காமல் விட்டு விட்டால் எவ்வளவு சேட்டை செய்கிறது என்பது புரிந்து கொண்டாய் அல்லவா? இதைவிட பேய்க் குரங்கு என்று ஒன்று இருக்கிறது. அது உனக்குத் தெரியுமா?" 'தெரியாது' என்று அந்த நண்பர் சொன்னார். கேட்டவுடன் சாமியார் திருவாய் மலர்ந்தருளினார்.

## பேய்க் குரங்கு

''மனம் எனும் ஓர் பேய்க் குரங்கு'' — மனத்திற்குத் தான் பேய்க் குரங்கு என்று பெயர். பலமான கைத்தடியினால் அந்தக் குரங்கின் தலையில் அடித்துக் கொண்டிருந்தேனே, அதுவே போல் மனம் என்கிற பேய்க் குரங்கினை அடக்குவதற்கு மகான்கள் சொல்லியுள்ள மறைமொழிகள் எனப்படும் மந்திரங்களை நாவினால் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். இதைத்தான் மனத் தூய்மைக்கு மார்க்கம் என்று ஞானிகள் சொல்லி வைத்தார்கள்.

மந்த்ர ஜபம், தியான முறை என்பவைகள் கரைந்து பிரணவ வடிவத்தில் கொண்டு நிறுத்தி, (ஓசை) ஒலி எனப்படும் நாதத்தினைக் கேட்குமாறு செய்யும் என்று சொன்னார்கள். நாதமாகிய அந்த ஓசை ஒளிமயமான அந்தக் காட்சியைக் காணுமாறு செய்யும் என்று சாமியார் விளக்கம் அளித்தார். அதாவது மணம் மலரிடம் கொண்டு செல்லுவதுபோல், ஓசை ஒளிமயமான காட்சியினைக் கொண்டு காட்டும் என்ற உண்மை பெறப்பட்டது.

## ஓசையும் ஒளியும்

''ஓசையின் உள்ளே உதிக்கின்றது ஒன்று உண்டு, வாச மலர் நாற்றம் போல் வந்து'' என்று மூதாட்டியார் பூலோக கலைமகள் என்று அழைக்கப்படுகின்ற அவ்வை பிராட்டியார் ''ஞானக் குறள்'' என்ற நூலில் மிகச் சிறப்பாகச் சொல்லி வைத்திருக்கிறார். இந்த ஞானக் குறட்பாவில் பல நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய தத்துவம் அடங்கி இருக்கின்றது.

மக்களாகப் பிறந்தவர்களுக்கு இருக்க வேண்டிய நல்ல குணங்களிலே ஒன்று மற்றவர்கள் சொல்லுகிற புத்திமதிகளைக் கேட்க வேண்டும் என்கின்ற பழக்கமாகும். நமக்கு

எல்லாம் தெரியும் என்கிற எண்ணம், யாருக்கும் எந்தக் காலத்திலும் உண்டாகக் கூடாது.

அநுபவம் என்கின்ற பள்ளியில் படித்த பெரியவர்களின் புத்திமதிகள் மிகப் பெரிய பயன்களைத் தரும். தாய் தந்தையர் சொல்லுகின்ற புத்திமதிகளைப் பிள்ளைகள் கேட்கவேண்டும். ஆசிரியர் சொல்லுகின்ற புத்திமதிகளை மாணவர்கள் கேட்கவேண்டும். மூத்தவர்கள் சொல்லு கின்ற புத்திமதிகளை எல்லோரும் கேட்கவேண்டும்.

சிலருக்குப் புத்திமதிகளைக் கேட்கின்ற பழக்கம் அறவே கிடையாது. சிலர் பேசும்போது அறியாமை மிகுதியினால் புத்திமதிகள் சொல்ல வருகிற பெரியவர்களைப் பார்த்துச் சொல்லுவார்கள். ''நீங்கள் எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டாம், எனக்குத் தெரியும் எப்படிக் கெட்டுப் போவது என்று!'' அவ்வையார் கூறிய இந்த இரண்டு அடிகளில் எத்தனை உண்மைகள் பொதிந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

## மணமும் மலரும்

ஒருவர் பூந்தோட்டத்திற்குள் சென்றார். சிறிய பாதையின் வழியாகச் செல்லுகின்றபொழுது 'கமகம' என்று மணம் (வாசனை அவர் மூக்கிற்குள் நுழைந்தது.) அங்கேயே நின்றார். மேலும் மேலும் மலரின் மணம் வந்து கொண்டே இருந்தது. அவருக்கு ஒரு தனிச் சிறப்பு இன்பம் உண்டாயிற்று. உடனே மலரை உற்று நோக்கினார். மலரைக் காணோம்! மலர் இருக்குமிடம் தெரியவில்லை மலர் இல்லாமலா, மணம் வரும்? மணம் வந்து கொண்டே இருந்தது. உடனே மணம் வந்த திசையை நோக்கிச் சென்றார்.

செடிகளை மெதுவாக விலக்கியும், மணத்தைக் கொடுக்கிற மலரை பார்த்துக்கொண்டும் சென்றார்.

மணம் தந்த மலரைக் கண்டுகொண்டார். அவருடைய ஆனந்தத்திற்கு எல்லை உண்டோ!

அதுவேபோல், மணமானது மலர்க் காட்சியை காண்பித்ததுபோல, தியானத்தில் நிலைத்து நிற்கின்ற பொழுது, மென்மையான ஓசை—ஒலி—காதில் கேட்கும் என்பதாகும். அந்த ஒலியினைக் கேட்டுக்கொண்டே போனால், ஒளிமயமான பேரின்ப காட்சியைக் கண்டு களிக்கச் செய்யும்.

அதனால்தான், இறைவனுக்கு ''நாதன்'' என்றும் பெயரிட்டு அழைக்கின்றோம். ''ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே!'' என்று அருளாளர்கள் பாடிச் சென்றார்கள்.

## மணியும் ஒளியும்

திருக்கோயில்களிலே இப்பொழுதுகூட ஒலி, ஒளி நிகழ்ச்சியினைக் கண்டு வருகிறோம். பூசை செய்கின்றவர்கள் மணி அடித்து ஓசை உண்டாக்கிப் பிறகு கற்பூரத்தைக் கொளுத்தி ஒளியைக் காட்டுகிறார்கள். இந்த ஒலியைத்தான் உள்ளத்தின் உள்ளே கேட்கவேண்டும் என்றும், இந்த ஒளியை, உள்ளத்தின் உள்ளே பார்க்க வேண்டும் என்றும் மகான்கள் சொல்லி வைத்தார்கள்.

புகைவண்டி நிலையத்திலும், மணி அடித்த பிறகு கொடியைக் காட்டுவதும், இந்தக் கருத்தில்தான் இருக்குமோ என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது!!!

எல்லாவிதமான ஆன்மீக வெற்றிகளுக்கும், அடிப்படையாக இருப்பது, மனத்தினை அடக்குகின்ற வலிமையான பழக்கமே என்பதை இதுகாறும் படித்து வருகிறோம்.

ஒரு மகான் கடைவீதியில் சென்றுகொண்டிருந்தார். அப்போது, ஒரு குரங்காட்டி, ஒரு குரங்கினை வைத்துக்

கொண்டு ஒரு குச்சியினால், அந்தக் குரங்கினை ஆட்டுவித்துக்கொண்டு இருந்தார். அந்தக் குரங்கும் அவர் சொல்லுகிறபடியே ஆடிக்கொண்டிருந்தது. குரங்காட்டி சொல்லுகின்றபடியெல்லாம், அந்தக் குரங்கின் ஆட்டம் நடைபெற்றது. இதை அந்த மகான் உற்று நோக்கினார்.

## குரங்கு ஆட வைக்கிறது

பிறகு அந்த வழியே நடந்து சென்றார். அங்கு கண்ட காட்சி, அவரை அதிர்ச்சி அடையுமாறு செய்துவிட்டது. அங்கே ஒரு வயதான கிழக் குரங்கு ஒன்று உட்கார்ந்து கொண்டிருந்தது. எதிரிலே, ஒரு ஆள் அந்தக் குரங்கு சொல்லுவதுபோல் ஆடிக் கொண்டிருந்தான். என்ன வியப்பு? கிழக்குரங்கு இப்படி எல்லாம் ஆட்டிவைக்கிறதே என்று அந்த மகான் வேதனைப்பட்டார்.

இக்கருத்தில் கற்பனை என்பது நிழலாட்டம் செய்து காட்டினாலும், மனித வாழ்க்கையில், மனம் என்கின்ற ஒன்று எவ்வளவு துன்பத்தினை உண்டாக்குகின்றது என்ற உண்மை வெளிப்படையாக விளங்குகின்றது. இந்த அரிய கருத்தினை, வள்ளலார் அருளிய அருட்பாவில் ஒரு பாடலில் காணுகின்றோம்—

**"தேட்டக் கண்டேர் மொழிப் பாகா உலகில்**
**சிலர் குரங்கை ஆட்டக் கண்டேன்**
**அக்குரங்கால் அவர் சற்றும் ஆடக்கேட்டுக் கண்டேன்**
**அல்லேன்**
**நானோ ஓர் ஏழை வஞ்ச நெஞ்சக் கிழக்குரங்கால்**
**வேட்டுக் கொண்டு ஆடுகின்றேன். இது சால வியப்பு."**

இப்பாடலில் நெஞ்சத்தினை எவ்வளவு தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பேருண்மை உணர்த்தப்பட்டது. மனத்திற்கு அவர் வைத்த பெயர் 'வஞ்ச நெஞ்சக் கிழக் குரங்கு' என்பதாகும்.

## கூடா ஒழுக்கத்தினர்

நெஞ்சத்திலே வஞ்சனை வைத்து வாழ்கின்ற மக்கள் நிறைந்து இருக்கின்ற சமுதாயம் எக்காலத்திலும் முன்னேற்றம் அடையாது. தீய ஒழுக்கம் உள்ளவர்களை, சுட்டிக் காட்டுகிறபொழுது 'வஞ்ச மனத்தார்' என்று திருவள்ளுவர் அழைக்கின்றார்.

திருக்குறளில் 'கூடா ஒழுக்கம்' என்ற பெயரில் ஒரு அதிகாரம் இருக்கின்றது. மனம் தூய்மை இல்லாமல் வெளித் தோற்றத்தினால், பொலிவாகக் காட்டிக் கொண்டு பார்ப்பவர்களுக்கு மிகமிக நல்லவர்கள் போல் காட்சி அளிப்பவர்கள் பலபேர் உண்டு. தெய்வ நெறியில் பற்றுக் கொண்டவர்கள் போல உடை உடுத்திக் கொண்டு, தீய எண்ணத்தை மனத்தில் வைத்து ஏமாற்றித் திரிகின்ற தீய ஒழுக்கத்தினரைப் பார்த்து 'கூடா ஒழுக்கம்' என்ற அதிகாரம் விளக்கம் செய்து காட்டுகிறது.

## வஞ்சமனம்

"ஏ! மனிதனே! கொடிய வஞ்சனை நிறைந்த மனத்தை உடையவனாக இருக்கின்றாய். நீ, தீய ஒழுக்கம் உள்ளவன். அதனை மறைத்து வெளித் தோற்றத்தில், காட்டி வஞ்சனை செய்கிறாய். உன் தீய செயல்களை உன்னுடனே உடம்போடு கலந்திருக்கின்ற ஐந்து பூதங் களும் தமக்குள்ளே சிரிக்கின்றன." இந்தக் கருத்தினை எளிமையான குறட்பா ஒன்று தெளிவு படுத்துகிறது—

**"வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்."**

இவ்வாறு தீய ஒழுக்கத்தினரைப் 'புலித் தோல் போர்த்திய பசு' என்பதாக குறட்பா ஒன்று சொல்லுகிறது.

## பசுவும் புலித்தோலும்

ஒரு பசு மேய வேண்டும் என்று ஒரு தோட்டத்திற்குச் சென்றது. அப்படி மேய்ந்தால் அந்தத் தோட்டக்காரன் அடித்து விரட்டுவான் என்று அந்தப் பசுவுக்கு அச்சம் இருந்தது. அதற்காக அந்தப் பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு அந்தத் தோட்டத்திலே மேய்ந்தது. அதற்கு என்ன எண்ணம் என்றால், புலி என்று நினைத்துக் கொண்டு அந்தத் தோட்டக்காரன் ஓடிவிடுவான் என்பதே யாகும். புலி புல்லைத் தின்னாது என்கிற உண்மையைத் தெரிந்து, ஏதோ கள்ளத்தனம் நடக்கிறது என்று அறிந்து அந்தத் தோட்டக்காரன் தன்னைத் தடியால் அடித்து விரட்டுவான் என்பதை அந்தப் பசு மறந்துவிட்டது. மற்ற ஒரு உண்மையையும் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களை ஏமாற்றுவதற்காகவே புலித்தோல் போர்த்திக் கொண்டதே அல்லாமல், புலிக்கு இருக்கிற பலமும், அச்சமின்மையும் இந்தப் பசுவுக்குக் கிடையாது. தோட்டக்காரன் தடியால் அடிக்க வந்தால், இந்தப் பசு ஓடுமே அல்லாமல், புலித்தோல் போர்த்திய காரணத்தி னால், அவனைக் கடித்து துன்புறுத்த முடியாது.

## போலிகள்

உலகில் பல வஞ்சகர்கள் சாமியார் வேடம் போட்டுக் கொண்டு வஞ்சனையாக சிந்தித்து சிற்றின்ப வேட்கை யினை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பார்கள். இதைத் தெரிந்து கொண்ட மற்றவர்கள் அவனை அடித்துத் துன்புறுத்தத் தொடங்கினால், சாமியார் வேடம் போட்ட காரணத்தினாலே மற்றவர்களைப் பார்த்து 'பிடி சாபம்" என்று அவனால் சொல்ல முடியாது. கொடுக்கின்ற அடி தாங்காமல் சத்தம் போட்டுக் கொண்டு ஓடி விடுவான். அதனால்தான் கடுகளவேனும் ப ல மி ல் லா த வ ன் பலமுள்ளவனைப் போல் காட்டுகின்ற காட்சி பசுவினைக்

காட்டி உணர்த்தப்பட்டது. இந்தக் கருத்தினை நாளா வட்டத்தில் மக்கள் 'பசுத்தோல் போர்த்திய புலி' என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். புலித்தோல் போர்த்தி மேய்ந்த பசுவினை ஒப்பிட்டுக் காட்டி தீய ஒழுக்கத்தினரைக் குறட்பா ஒன்று பேசுகின்றது—

**"வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று."**

வஞ்சனையான மனத்தினைப் பெற்றிருப்பவர்களுக்கு எக்காலத்திலும் தெய்வ பக்தி என்பது கடுகளவும் உண்டாகும் என்று சொல்லவே முடியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவர்களுக்கு இறை வழிபாடு என்பது உண்டு என்று நம்பிவிடக் கூடாது.

## பட்டினத்தார்

தமிழகத்திலே மிகச் சிறந்த முனிவர்களுள் ஒருவர் தவம் செய்வது எப்படி என்பதனை மிக எளிமையாக விளக்குகின்றார். நல்ல மனிதத் தன்மைகள் எல்லாம் பெற்று அதன்படி வாழ்ந்து வந்தால் அதுவே தவமாகும். தவம் என்று வேறு ஒன்று இருக்கின்றதோ என்று கேட்கின்றார்—

**"அனைத்து உயிர் ஒன்று என்று எண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம், பொய், களவு, சூது
சினத்தையும் தவிர்த்தா யாகில்
செல்தவம் வேறு ஒன்று உண்டோ,
உனக்கு இது உண்மையான உபதேசம் ஆகும் தானே!"**

இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள கருத்துரைகள் எல்லாம் ஆறறிவு படைத்த மனிதனுக்கே கூறப்பட்ட குணங்களாகும். இக்குணங்கள் எல்லாம் அமைந்துவிட்டால்

அதுவே பெரிய தவம் என்று கூறுகிறார். மீண்டும் மீண்டும் இந்தச் செய்யுளைப் படித்துப் பார்த்தல் வேண்டும்.

வஞ்சனை, பொய், களவு, சூது, சினம் என்கின்ற கொடிய குணங்கள் எல்லாம் ஏனைய தீய குணங்கள் உண்டாவதற்குக் காரணமாக இருப்பவை ஆனபடியால், குறிப்பாக இந்தக் குணங்களை மட்டும் சுட்டிக் காட்டினார். இந்தத் தீய குணங்கள் இல்லாத மனம், ஆண்டவன் வந்து குடிகொண்டிருக்கின்ற இடமாகும்.

## நட்டகல்

மிகக் கடுமையாக பாடல் ஒன்று பாடிய சித்தர் "ஏ! மனிதனே! நாதனாகிய இறைவன் மனத்திற்குள் இருக்கின்ற பொழுது, வெளியில் இறைவன் என்று வழிபாடு செய்கிறீர்களே, இந்தப் பழக்கம் எவ்வளவு அறியாமை யைக் காட்டுகின்றது" என்பது போன்ற பொருளில் பாடல் ஒன்று இயற்றி இருப்பதைக் காணல் வேண்டும்—

**"நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே**
**சுத்திவந்து மொணமொணவென்று சொல்லும் மந்திரம் ஏதடா?**
**நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்,**
**சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?"**

இந்தப் பாடலினை மிகப் பெரிய சித்தராகிய 'சிவவாக்கியர்' பாடியிருக்கின்றார்.

## திருமூலர்

எல்லாம் வல்ல இறைவன் உள்ளத்திலே குடிகொண் டிருக்கிறான் என்ற உண்மையினை இந்த நேரத்திலாவது மக்களிடையே தெளிவுபடுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையாகும். இல்லை என்றால், மக்களுடைய அறியாமை எல்லையில்லாமல் போய்விடும்

என்பதில் ஐயமில்லை. மிகப் பெரிய மகானாகிய 'திருமூலர்,' 'திருமந்திரத்தில்' உணர்த்தியிருக்கின்ற உண்மையினை உணர்ந்து அறிதல் வேண்டும்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காண மணிவிளக்கே!"**

இறைவன் உள்ளத்திலேயே உறைகின்றான் என்கின்ற வாக்கு உயர்ந்து நிற்கின்ற உண்மை நெறியாகும்.

## நாயகன் நாயகி

சிவனை வழிபடுபவர்களும், திருமாலினை வழிபடுபவர்களும் என்பதாக இரு மிகப் பெரிய சமயத்து அன்பர்களைச் சொல்லுவது உண்டு. இச் சமயங்களில் மிகப் பெரிய நூல்கள் பழங்காலம் முதற்கொண்டு எழுந்துள்ளன. இறைவன் வழிபாட்டினை 'நாயகன்-நாயகி' பாவமாக வழிபடுவது உண்டு. இறைவன் நாயகனாகவும், அடியார்களை நாயகிமார்களாகவும், அமைத்துக்கொண்டு எழுந்த நூல்கள் பலவுண்டு.

மாணிக்கவாசக பெருமான் அருளிய 'திருவெம்பாவை'யும், அருள்மிகு ஆண்டாளம்மையார் அருளிய 'திருப்பாவையும்' இந்த முறையினைக் குறிப்பிடுகின்ற நூல்கள் என்று பெரியவர்கள் கூறுகின்றனர்.

## குறட்பா

நாயகி ஒருத்தி தன்னைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கின்ற நாயகனை நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருக்கிறாள். தன்னுடைய நெஞ்சம், நாயகன் எங்கே சென்றிருக்கிறான் என்று அறிந்து அவனிடம் செல்லுவதற்குத் துடித்துக் கொண்டிருக்கின்றது. அந்த நேரத்தில்

நாயகியானவள் அந்த நெஞ்சத்தினைப் பார்த்துப் பேசு-கின்றாள்.

''ஏ! நெஞ்சமே! நம் காதலர் எப்பொழுதும் உள்ளத்-திலேயே இருந்து கொண்டிருக்கிறார். அப்படியிருக்க வெளியில் எங்கேயோ தேடிக்கொண்டு செல்லுவது யாரிடமோ'' என்று ஆழ்ந்த பொருட்பட பேசுகின்றாள். 'நாயகர்—நாயகி' பாவம் என்கின்ற கருத்து இன்ப வேகத்-திலும் குறிப்பாக உணர்த்தப்படுவதைக் காண்கின்றோம்.

**''உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ**
**யாருழைச் சேறிஎன் நெஞ்சு.''**

எல்லாம் வல்ல பரம்பொருள் நெஞ்சத்திலே இருக்கும் பொழுது இறைவனை வெளியில் போய் தேடுகிறீர்களே என்று சித்தர்கள் பாடுகின்ற முறை இங்கே ஒப்பிட்டு சிந்திக்கத் தக்கதாகும்!

## சூடான உணவு

எல்லோரும் - எல்லாப் பெண்களும் - கும்பலாக உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு பெண் உணவு அருந்தாமல் இருந்தாள். மற்ற பெண்கள் அவள் சாப்பிடாமல் இருப்பதற்குக் காரணம் கேட்டனர். அதற்கு அந்தக் காதலி, ''உணவு மிகவும் சூடாக இருக்கின்றது. அந்த சூட்டுடனே நான் சாப்பிட்டால், அந்த உணவு உள்ளே போய் எப்பொழுதும் என் நெஞ்சிலேயே இருந்துகொண்டிருக்கின்ற காதலரைச் சுட்டுவிடும்.'' இத்தகைய கருத்துரைகள் மிகுதியும் சிந்தித்துப் பயன்பெறத்தக்கனவாகும்.

**''நெஞ்சத்தார் காத லவராக வெய்துஉண்டல்**
**அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.''**

ஆதலால்தான் மனம் விட்டுப் பேசுகின்ற பழக்கம் பெரிதும் துணையாக இருக்கும் என்பது வெள்ளிடை

மலையாகும். கற்பனை என்பது சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தாலும், அந்தக் கற்பனைக் கருத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் மிகப் பலவாக உள்ளன.

நம் அனுபவத்தில் கேட்டவுடனேயே வெளிப்படையாகத் தோன்றுகின்ற அர்த்தம் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது மிக ஆழ்ந்த கருத்துக்கு நம்மைக் கொண்டு செல்வதாக இருக்கின்றது. மிக எளிமையாக நாம் கேட்டு வருகின்ற பழமொழி போன்ற கருத்து ஒன்று உண்டு. அதுதான் 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்', என்ற முதுமொழியாகும். இந்த முதுமொழியில் வாழ்க்கையில் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டிய, அடிப்படை கருத்து ஒன்று பொதிந்து இருப்பதைக் காண்கின்றோம்.

## குழந்தையும் தெய்வமும்

குழந்தைகளிடத்தில் பெற்றோர்கள் காட்டுகின்ற அன்பிற்கு அளவில்லை, என்று கூறுவது மிகையாகாது. குழந்தையைப் பார்த்த உடனேயே, மன மகிழ்ச்சிப் பெருகி பேரன்பு நிறைந்த உள்ளம் படைத்தவர்கள் ஆகிவிடுகிறோம். குழந்தை அர்த்தமில்லாத மழலைச் சொற்களைச் சொன்னாலும் மகிழ்ச்சியோடு கேட்கின்றோம். பெற்றோர்கள் தன் குழந்தைக்குப் பேசத் தெரியாது என்று தெரிந்திருந்தும் அக்குழந்தையுடன் பேசுகிறார்கள்.

அலுவலகத்திற்குச் செல்லுகின்றபோது தன் குழந்தையைப் பார்த்து, ''என்ன! நான் போய் வரட்டுமா?'' என்று கேட்டுவிட்டுப் போகின்றார். தகப்பன் பேசுவது அந்தக் குழந்தைக்குப் புரியாது. அதைப்பற்றித் தகப்பன் கவலைப்படுவதில்லை. பச்சைக் குழந்தையாகிய அதனிடம் தந்தை பாசத்தைக் காட்டுகின்றார். என்ன என்னமோ பேசுகின்றார்.

அப்படியெல்லாம் பேசுகின்ற பொழுது குழந்தைக்கு என்ன வயது - நாம் சொல்லுவது குழந்தைக்கு விளங்காதே —என்றெல்லாம் தகப்பன் நினைப்பதில்லை. அன்பு மிகுதியினால், குழந்தையைப் பார்த்துப் பலப்பல பேசுகின்றனர். அப்படிப் பேசுவது தந்தையின் தலைசிறந்த அன்பு பாசத்திற்கு அடையாளமாகும். குழந்தைக்குத் தகப்பனுடன் உரையாடுகின்ற ஆற்றல் இல்லை என்று தகப்பனுக்குத் தெரிந்தாலும் பெருகி வருகின்ற அன்பு, பேசவைக்கிறது. அப்படியே தாயாரும்.

## தெய்வ சந்நதி

தெய்வ சந்நிதானத்தில் நிற்கின்றபொழுது அவ்வாறு மனம் திறந்து பேசவேண்டும். அங்கே இருப்பது ஒரு கற்சிலை என்று நினைக்கக்கூடாது. தெய்வமே நம்மிடத்தில் பேசுவதற்கு வந்துள்ளதாகக் கருதி நாம் பேச வேண்டும். குழந்தைகளிடத்தில் எதனையும் சிந்தித்துப் பார்க்காமல் பேசுகின்ற தகப்பனுக்கு அன்பு பெருகி வருவதுபோல், தெய்வ சந்நிதானத்திலும், நேருக்கு நேரே உரையாடுகின்ற பக்குவம் இறை அருளினை விரைந்து பெருகுவதற்கு வழி செய்வதாகும். ஆதலால்தான் குழந்தையினையும், தெய்வத்தினையும் ஒன்றுபடுத்தி ‘‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்’’ என்ற சிறந்த பழமொழி மக்களிடையே வழங்கி வரலாயிற்று. சுருக்கமான விளக்கம்;

மனத்தினை அடக்கி வைத்து, அதற்கு அடிமையாகாமல் வளர்ந்து வருபவர்களே தவமுனிவர்கள் ஆவார்கள்.

மனம் எனப்படுகின்ற நெஞ்சம் உண்டாக்குகின்ற துன்பத்தினை எடுத்துரைத்து அதனைக் கட்டுப்படுத்துகின்ற ஆற்றல் படைத்த அறிவு எப்படிப் பேசுகின்றது என்பதனை மகான் தாயுமான சுவாமிகள் எளிமையாக ஒரு பாடலில் அமைத்துக் காட்டுகின்றார் - அறிவு என்பது

மனத்தினைப் பார்த்துக் கேட்பதாக அந்தப் பாடல் அமைந்துள்ளது.

## தாயுமானவர்

"ஏ! நெஞ்சமே! நாத வடிவமாக இருக்கின்ற இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்ப சுகத்தினை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின்றபொழுது என்னை, மனமாகிய நீ, வசப்படுத்தி, வேதனைக்கு உள்ளாக்கி, துன்ப மார்க்கத்திற்கு இழுத்துக்கொண்டு போகிறாயே, இது நல்லதுதானா?" — நெஞ்சத்தைப் பார்த்து அறிவு வேண்டிக் கொள்வதாகப் பாடல் அமைந்துள்ளது—

**"நாதனை நாதாதீத**
**நண்பனை, நடுவாய் நின்ற**
**நீதனைக் கலந்து நிற்க**
**நெஞ்சமே, நீவா என்றால்**
**வாதனை பெருக்கி, என்னை**
**வசம் செய்து, மனம் துன்மார்க்க**
**போதனை செய்தல் நன்றோ?**
**பூரணாநந்த வாழ்வே!"**

இந்தப் பாடலில் ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த சிந்தனையினைத் தாங்கி நிற்கிறது என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இறைவனை நண்பன் என்று அழைக்கின்ற முறை ஆன்மீகத் துறையில் தொன்றுதொட்டு இருந்து வருவதாகும்.

வழிபாடு செய்கின்ற அன்பர்கள் இறைவன் சந்நிதானத்தில் நின்றுகொண்டு மனதில் உள்ள அத்தனை எண்ணங்களையும் திறந்து பேச வேண்டும்.

## நட்பு

உலக நடைமுறையில் நட்பு என்ற சொல்லுக்குப் பன்முறையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய பொருள் ஒன்று உண்டு. பலருக்கு நட்பு என்ற சொல்லின் பொருள் தெளிவாகத் தெரியாமல் இருப்பது வியப்பில்லை;

நாம் பழகுகின்ற எல்லோரையுமே நண்பர்கள் என்ற கணக்கில் வைத்துக்கொள்ளக் கூடாது. ஒருவருடன் பல்லாண்டு நெருங்கிப் பழகிய பின்புதான் அவரை நண்பர் என்ற சிறப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும். ''நட்பு ஆராய்தல்'' என்ற பெயரில் தனியாக ஒரு அதிகாரம் வைத்து ஆசிரியர் திருவள்ளுவனார் தெளிவு படுத்துகிறார். நண்பர்கள் என்ற பெயருக்கு உரியவர்கள் யாவர் என்பதனை மிகமிக விளக்கமாகச் சொல்லுகிறார்.

''நேற்று மாலையில்தான் ஒருவரைச் சந்தித்தேன். உடனே அருமையான நண்பராகிவிட்டார். இன்று காலையில் என்னைச் சந்தித்த பொழுது என்மீது உயிரையே விடுகிறார். அவ்வளவு நெருக்கமாகி விட்டார்,'' என்று ஒருவர் சொன்னால், அது நட்புக்கு இலக்கணமாகிவிடாது. ஒருநாள் கூட முழுமையாகப் பழகாதவர் மறுநாளே இவர் மீது உயிரை விடுகிறார் என்றால், அடுத்த நாளைக்குள் இவருடைய உயிரை, எடுத்துவிடுவார் என்பதாகும்!

ஆதலால்தான், நண்பர்கள் என்று ஒருவருக்கொருவர் சந்திக்கும் பொழுதெல்லாம், அன்பாகப் பேசி, பழகிக் கொள்ளுதல் என்பது மட்டுமல்ல, நீண்ட நாட்கள் பழகி ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேவையான காலத்தில் எல்லாம், நண்பனுடன் நின்று தோளோடு தோள் கொடுத்து அவருடைய துன்பத்தையும் தன் துன்பம் போல் கருதி, அதனை நீக்கி இணைந்து வாழ்வதுதான், நட்புக்குரிய இலக்கணங்களில் முதன்மையானதாகும்.

## நட்பின் சிறப்பு

ஒருவன் தன் மனத்தில் உள்ளதை எல்லாம் அப்படியே மற்றவரிடத்தில் சொல்லிவிட முடியாது. அண்ணன் தம்பி களிடத்தில் சிலவற்றைத்தான் சொல்லலாம். அது போலவே, தாயாரிடத்திலும் சில கருத்துக்களைத்தான் சொல்லலாம். சிலவற்றைச் சொல்ல முடியாது. மனைவி யிடத்திலும் சில செய்திகளைத்தான் பேசலாம்; எல்லா வற்றையும் சொல்ல முடியாது; சிலவற்றைச் சொல்லவும் கூடாது. பயந்து விடுவாள்!

தகப்பனாரிடத்திலும் மனத்திலுள்ள எல்லா எண்ணங் களையும் சொல்லிவிட முடியாது. உதாரணமாக, ஒன்றை நினைத்துப் பார்க்கலாம்...

ஒரு பையனுக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டால், தன்னுடைய தகப்பனாரிடம் நேரிடையாகவா சொல்லுவான்?

‘‘அப்பா, எனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. சீக்கிரம் செய்து வைத்தால் நல்லது. என் குணம்தான் உங்களுக்குத் தெரி யுமே...’’ என்ற தோரணையில் எந்தப் பையனாவது தகப்பனாரிடத்தில் பேசுவானா? அப்படி அவன் மனத்தில் வந்துவிட்ட வேகத்தினையும் வெளியிட்டுச் சொல்வதற்கு அவனுடைய நண்பனைத்தான் தேடுவான்.

நண்பர் ஒருவரோடொருவர் கலந்து பேசுகின்ற பொழுது எத்தனையோ வகையான—எத்தனையோ விதமான செய்திகளையெல்லாம் பேசிக் கொள்வதைப் பார்க்கிறோம். நட்பு என்ற சொல்லுக்குள் அவ்வளவு அடங்கியிருக்கிறது!

## முதிர்ந்தவர்

வயது முதிர்ந்த ஒருவருக்கு ஓர் ஆசை வரக்கூடாது. எப்படியோ வந்துவிட்டது. அதாவது, இன்னொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. இதைப் பற்றித் தன்னுடைய மனைவி மக்களிடம் பேச முடியுமா? அப்படிக் கலந்து பேச வேண்டுமென்றால் நண்பரிடத்தில்தான் அவர் அதைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவருக்குச் சமமான வயதுள்ள அடுத்த தெரு விலுள்ள நண்பரிடம் சென்றுதான் தன் கருத்தைத் தெரிவிப்பார்.

இந்தக் குறிப்பினை வைத்துச் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது நட்பு என்பதற்கு உள்ள தனிப் பெருமையை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆதலால்தான் தாயுமானவ சுவாமிகள் இறைவனுக்கு விளக்கம் சொல்லுகின்றபொழுது, ''நாதனை நாதாதீத நண்பனை...'' என்று பேசினார்.

## தேவாலயம்

வழிபாடு செய்கின்ற பொழுது மனதில் உள்ளதை யெல்லாம் அப்படியே திறந்து பேசுகின்ற இடமே 'தேவாலயம்' என்று சொல்லுவார்கள். எப்படிப்பட்ட வழிபாடும் நற்பயனைத் தந்தே தீரும். வழிபாடு செய்தால் பயனில்லாமல் போகாது. திருவள்ளுவர் சொல்லுவது போல் மனத்தினை மாசு இல்லாமல் வைத்துக் கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற இந்த நான்குமே மனத்தில் தோன்று கின்ற பல்வேறுபட்ட தீய எண்ணங்களுக்கு மூலகாரண மாக இருப்பவையாகும்.

'சாக்கடையில் ஊற்றிய அமிர்தம்' என்று சொல்வது போல, அழுக்குள்ள மனதை வைத்துக்கொண்டு வழிபாடு செய்தல் பயனற்றுப் போகும்.

## மனிதப் பண்பு

இந்த நாட்டுக்கு ஏன் கஷ்டம் வருகிறது, மக்கள் துன்பப் படுகிறார்கள், வறுமையிலே வாடுகிறார்கள், குழப்பத்திலே மூழ்குகிறார்கள், இவையெல்லாம் ஆகாயத்திலேயிருந்தா குதித்தன? மனித சமுதாயத்திலே மனித குணங்களே இல்லாதவர்கள் எல்லாம் வாழ்கிறார்கள்;

அப்படிப்பட்டவர்களாலே தான் இத்தகைய குழப்பங்களும் பிரச்னைகளும் ஏற்படுகின்றன. இவற்றைச் செப்பனிட வேண்டும் என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் நிறைய நூல்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள்.

இந்த உலகத்திலே எல்லாமே சட்டப்படிதான் நடக்கின்றன. இயற்கைச் சட்டம், செயற்கைச் சட்டம் என்ற இரு சட்டங்கள்தான் அவை. செயற்கைச் சட்டமெல்லாம் நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வது.

பத்து மணிக்கு அலுவலகம் செல்லுவது; வேலை பார்ப்பது; மாலையில் வீடு திரும்புவது இவை போன்று பிற அனைத்தும் செயற்கைச் சட்டங்களாகும்.

சூரியன் வருவது, சந்திரன் வருவது, மழை பெய்வது, புயல்வீசுவது, வெள்ளம் வருவது மற்றும் இவை போன்றவையெல்லாம் இயற்கைச் சட்டம்.

இவை இரண்டுக்கும் சட்டம் இருக்கும்போது ஒன்றுக்கு மட்டும் சட்டம் செய்யவில்லை. அது என்ன? ''இந்த உலகத்திலே யார் யார் பிறக்கலாம்? யார் யார் பிறக்கக் கூடாது?'' என்று சட்டம் செய்யவில்லை. அதனால்தான் 'கண்டவன்' எல்லாம் பிறந்து விட்டு ஊரைப் பாழாக்குகிறான். அவனை நாம் கேட்க முடியவில்லை. ''நீ ஏண்டா பிறந்தாய் என்று ஒருவர் கேட்டால்...'' ''நீ யார் அதைக் கேட்கறதுக்கு? நான் இன்னொரு தடவைக் கூடப் பிறப்பேன்...'' என்று சண்டைக்கு வருவான்.

## நூல்களின் சிறப்பு

நமது முன்னோர்கள் நூல்களை எதற்காக எழுதினார்கள் என்றே நமது மக்களில் பலர் புரிந்து கொள்ளவில்லை. இராமாயணத்திலே ஒரு பத்து பன்னிரெண்டு செய்திகள், பாரதத்திலே ஒரு பத்து செய்திகள், பெரிய புராணத்திலே, திருவிளையாடற் புராணத்திலே ஒரு பத்து பன்னிரெண்டு செய்திகள்... திருவள்ளுவர் போன்று, ஔவையார் போன்று, இராமலிங்க சுவாமிகள் போன்று, நேருக்கு நேரே சொன்ன செய்திகள்...அவற்றைக் காட்டிக்காட்டி இந்த மக்களைத் திருத்துங்கள் என்பதற்காகத் தானே!

''துரியோதனன் செத்து விட்டான்...பார். ராமனைப் பார்...கர்ணன் கொடையாளியாய் இருந்தான்...பார்'' என்று அவர்களையெல்லாம் ஏன் சொல்லி வைக்கிறோம்? நாமே சொன்னால் கேட்க மாட்டார்கள் என்று தான் 'அவனைப் பார்', 'இவனைப் பார்' என்றோம்.

மனிதன் உயர்ந்த பிறவியைப் பெற்றிருக்கிறான். உண்பதால் மட்டும் மனிதன் உயர்ந்தவனாகி விட மாட்டான். பசுமாடும்தான் புல்லைத் தின்கிறது. தின்பதால் மட்டும் அது உயர்ந்த பிறவியாகி விடுமா?

## ஆசைக்கு அளவு

மனிதன் ஆசை வைக்கக் கூடாதவை இரண்டு. ஒன்று, தூக்கம்; இன்னொன்று சோறு; இவை இரண்டிலும் எப்போதும் ஆசை வைக்கக் கூடாது. இவையிரண்டையும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இதே வேலையாய் இருக்கக் கூடாது. சில பேர் இதே வேலையாகவே இருப்பார்கள். தூங்குவது, சாப்பிடுவது; சாப்பிடுவது, தூங்குவது...அவர்கள் தேரவே மாட்டார்கள்.

தூக்கத்தைச் சுகமென்று சொல்லக் கூடாது. தூக்கம் நம்மை மீறி வந்தால்தான் படுக்க வேண்டும்,

சில பேர் நன்றாக இருக்கும் போதே படுத்துப் புரண்டு கொண்டு, ''தூக்கம் வரலேங்க...'' என்று சொல்வார்கள். அவர்கள் எமனைக் கூப்பிடுகிறார்கள் என்று தான் அர்த்தமாம்!

## உறக்கம்

'உறங்குவது போலும் சாக்காடு' என்று திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். இதை அப்படியே சொன்னால் விளங்காதே என்பதற்காகத்தான் ராமாயணத்திலே கும்பகர்ணன் என்ற ஒருவனைச் சொல்லி, 'அவன் ஆறு மாதம் தூங்குவான்' என்று சொல்வார் கம்பர். கும்பகர்ணன் ஆறு மாதமா தூங்கினான்? நேருக்கு நேரே சொன்னால் கேட்க மாட்டார்கள் என்பதற்காகத்தான் கும்பகர்ணனைக் கொண்டு வந்து நிறுத்தி சொன்னார்கள். திருமணம் செய்து கொள்வதே எதற்கென்று பல பேருக்குத் தெரியவில்லையே; ஆண் தனியாக இருக்க முடியாது, பெண் தனியாக இருக்க முடியாது என்றுதான் அந்த இணைப்பு ஏற்பட்டது. நற்செயல்கள் எனப்படும் அறம் செய்வதற்கே இல்லறம்.

ஏதோ ஒரு துணையில்லாததால் கொஞ்சமாக சாதனை செய்தவர்கள் தனக்கென்று ஒரு துணையைக் கொண்டு வந்து இணைத்துக் கொண்டால் பல அற்புதங்களைச் செய்யலாம். அதற்குத் தான் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது. அதுதான் வாழ்க்கைத் துணை. அதையெல்லாம் மறந்துவிட்டு பிள்ளைப் பெறுவதற்காகத்தான் கல்யாணம் செய்து கொள்வது என்று நினைத்துக்கொண்டு, [அவனவன் மானாவாரியாகப் பெத்துப் போட்டு ஒரு அரசாங்கத்தையே பயமுறுத்திக் கொண்டிருக்கிறான். ''சமாளிக்க முடியாது. நிறுத்திக்கடா...'' என்று அரசாங்கம் சொன்னால் இவன் கிராக்கி பண்ணுவான். ''திடுதிப்புனு சொன்னா...நான் என்னாங்க பண்றது?'' என்பான்.]

மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் கல்யாணம் செய்து கொண்ட பிற்பாடு மாதம் நாலாயிரம் ரூபாய் சம்பாதிக்க வேண்டும். அவன் மனதுக்கு சாந்தி தருபவள், மகிழ்ச்சி தருபவள், உற்சாகத்தை, ஊக்கத்தை, வலிமையைத் தருபவள் அவனுக்குத் துணையாக வந்த காரணத்தினாலே தான்.

இதற்காகத்தான் வள்ளுவர், 'வாழ்க்கைத் துணை' என்று பெயர் வைத்தார்...

# 'சான்றோன் எனக் கேட்ட தாய்!'

**மா**ணவர்களுக்கு நிறைய ஞாபக சக்தி இருக்க வேண்டும். ஞாபக சக்தியை வளர்ப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று, அடிக்கடி கட்டுரை எழுத வேண்டும். படித்ததை ஒரு தடவை எழுதி விட்டால், அது பத்து தடவை படித்ததற்குச் சமம். படித்ததை ஒரு தடவை பேசிவிட்டால், அது பத்து முறை எழுதியதற்குச் சமம். நூறு முறை படிப்பதற்குச் சமம்!

மாணவர்கள் அடிக்கடி பேசிப் பழக வேண்டும். பேசிப் பழகுவதால் பெரிய பிரசங்கியாக ஆகிவிடலாம் என்பதே அல்ல! நினைவாற்றல் அப்போதுதான் வரும். மாணவர் களிடம் இரண்டு வார்த்தைகள் வரக்கூடாது. ஒன்று 'மறந்து விட்டேன்', இன்னொன்று, 'அப்புறம் பார்த்துக் கொள்ள லாம்...' இந்த இரண்டு வார்த்தைகளும் எவனுடைய வாழ்க்கையில் அடிக்கடி வருகிறதோ அவன் முன்னேற்றம் அடையவே மாட்டான்.

கெட்டிக்காரப் பிள்ளைகளாக இருந்தாலும் மறதி வந்துவிட்டால், தேர்வுகளில் மதிப்பெண் குறைந்து போய்

விடும். ஆசிரியர், ''நீ கெட்டிக்காரப் பையனாச்சே! ஏண்டா மார்க் குறைஞ்சுது?'' என்று கேட்டால், ''அந்த நேரத்தில் எல்லாமே மறந்து போயிடுச்சு சார்!'' என்று சொல்லி விடுகிறான்.

மறதியே வரக்கூடாது என்பதற்காகத்தான் இலக்கிய மன்றங்கள் அமைத்திருக்கிறோம். அடிக்கடி இதில் பேசிப் பழக வேண்டும்.

திருவள்ளுவர், ''நீ அறிவாளியாய் இருந்தால் உனது அப்பா அம்மாவுக்கு மட்டும் பெருமை இல்லை. உலகத் துக்கே நீ சொந்தம்...'' என்று சொல்வார். ''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது'' என்றார்.

## ஆறு அறிவு

ஆடு, மாடு, பூனை, நாய் எல்லாம் ஐந்து அறிவுதான். மனிதனுக்குத்தான் ஆறறிவு; சில பேர் நாய்க்குட்டிகளைத் தூக்கி, அப்படியே கட்டிக்கொண்டு கொஞ்சுவார்கள். ஏன்...? ஒன்றுதானே வித்தியாசம்! 'நீ ஐந்து...நான் ஆறு...' என்பதுதான்! சில பேர் அந்த வித்தியாசமே இல்லாமல் 'நீயும் ஐந்து, நானும் ஐந்து...' என்று சொல்லும் அளவுக்கு இருப்பார்கள். அதனால்தான் சில நாய்க்குட்டிகள் சிலரது வீடுகளில் எஜமானனுக்குச் சமமாக நாற்காலியில் உட்கார்ந்திருக்கும்.

### மகான் பாடல்

மனிதனுக்கு ஆறறிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆறாவது அறிவினால் உலகமெல்லாம் போற்றக்கூடிய பேராற்றலை அவன் பெற வேண்டும். ஆற்றல் பெற வேண்டும், உலகமெல்லாம் அவனைப் பின்பற்ற வேண்டும்,

**''எண்ணரிய பிறவிதனில்**
**மானிடப் பிறவிதான்**
**யாதிலும் அரிதரிதுகாண்...**
**இப்பிறவி தப்பினால்**
**எப்பிறவி வாய்க்குமோ**
**ஏது வருமோ?...''**

என்று தாயுமான சுவாமிகள் பாடினார்.

ஏனென்றால் இந்தப் பிறவிக்குத்தான் எதிர்காலம் சொல்ல முடியாது.

ஒரு வாழைக்கன்று வைத்தால் அது எதிர்காலத்திலே வாழை மரமாகி, வாழையிலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப் பழம், வாழைத் தண்டு தரும் என்று வைக்கும் போதே சொல்லலாம்.

ஒரு பசு மாடு கன்று ஈன்றால் அது எதிர்காலத்திலே பால் தரும் என்று சொல்லிவிடலாம். எதிர்காலத்திலே மனிதன் என்ன ஆவான் என்று சொல்லவே முடியாது. அதனால்தான் இது அருமையான பிறவி.

## எதிர்காலம்

ஒரு வீட்டிலே ஆண் குழந்தை பிறந்து, அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், ''என்ன குழந்தை பிறந்திருக்கு?'' என்று கேட்டால், ''ஓர் ஆண் குழந்தை!" என்றுதான் பெற்றவள் சொல்லுவாள். அப்படியில்லாமல், ''ஒரு ஸ்டேஷன் மாஸ்டர் பொறந்திருக்காரு!'' என்று சொல்ல முடியுமா? அந்தக் குழந்தை வரும்போதே பச்சைக் கொடியைப் பிடித்துக்கொண்டா பிறந்தது?

மகாத்மா காந்தியடிகள் பிறந்தவுடனே அவரது தாயார் புட்லிபாயிடம் போய் அக்கம்பக்கத்திலிருந்

தவர்கள், ''என்ன குழந்தை?'' என்றுதான் கேட்டார்கள். ''ஆண் குழந்தை'' என்றுதானே அந்த அம்மா சொன்னாள். அப்படியில்லாமல், ''இப்பதான் மகாத்மா காந்தியடிகள் பிறந்திருக்கிறார்; உங்களுக்கெல்லாம் சுதந்திரம் வாங்கிக் கொடுப்பார்!'' என்றா சொன்னாள்?

## சான்றோன்

**''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்...!''**

என்ன அருமையான குறள். தாய் பத்து மாதம் சுமந்து பெற்றாள். அவளுக்குவேறொன்றும் நீ கொடுக்க உள்ளவர்கள் எல்லாம் தன் மகனை நல்லவன் என்று வேண்டாம். இந்த ஊரிலே அவளிடம் சொல்ல வேண்டும். அதுவே போதும் அவளுக்கு. அதுதான் 'கேட்ட தாய்!'

'கேட்ட தாய்' என்பதற்கு என்ன அர்த்தம்? இவள் பெற்ற பிள்ளையை ஊரிலே இருப்பவர்கள் எல்லாம், 'நல்லவன் நல்லவன்' என்று பேச வேண்டும். அது இவளது காதிலே வந்து விழ வேண்டும். அதுதான் 'கேட்ட தாய்'. இந்த அம்மாவே ஒவ்வொருவரிடமும் போய், ''என் மகனைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?'' என்று கேட்கக் கூடாது.

இப்படிப்பட்ட நற்பெயரை தாய் தந்தையர்களுக்கு உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்றால் அதற்குத் துணையான கல்வியையும் அறிவையும் பெறக்கூடிய பருவம் இளமைப் பருவம்.

காலத்தை வீணாக்காமல், இளமைப் பருவத்திலேயே கல்வி கற்று சான்றோனாக, அறிவுடையவர்களாக உயர வேண்டும் என்பதற்காகத்தான், 'காலம் அறிதல்', 'கல்வி' என்ற இரண்டு அதிகாரங்களையும் திருவள்ளுவர் சொன்னார்.

# திரும்பி வராத காலம்!

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னேயே திருவள்ளுவர் சொல்லி விட்டார். என்ன சொன்னார்?

"ஏ மனிதனே...நீ நல்ல நல்ல காரியங்களைத் தானாகவே செய்ய வேண்டும். நீ கல்வி கற்றுவிட்டால் பிறருக்குத் தானாகச் சொல்லித் தரவேண்டும். அவன் வந்தாலும் வராவிட்டாலும் 'இந்தாப்பா! இந்தக் கல்வியை நீ கற்றுக் கொள்' என்று அவனைக் கூப்பிட்டு சொல்லித் தர வேண்டும். அதுதான் அறிவுடையவனுக்கு இலக்கணம்."

ஒரு பசுமாடு இருக்கிறது. ஒரு பொருளை உருட்ட வேண்டும் என்றால் அது தானாகவே போய் உருட்டும். உருட்டி உடைக்கும். ஒரு வேலியை உடைக்க வேண்டும். தானாகவே போய் உடைக்கும். ஒரு ஆளைப் போய் முட்ட வேண்டும். தானாகவே போய் முட்டும். இவ்வளவும் கெட்ட காரியங்கள்.

இவ்வளவும் செய்த அந்தப் பசுமாடு பால் கொடுப்பது நல்ல காரியம். ஆனால் அதைத் தானாகக் கொடுக்காது. தானாகவே நம் வீட்டிற்குள் வந்து, "எங்கே சொம்பைக் காணோமே" என்று அதுவே எடுத்து வந்து கறந்து கொடுத்துவிட்டுப் போகாது!

## தாமாகவே செய்தல் வேண்டும்

"ஏ மனிதனே! நல்ல காரியத்தை மனிதன் தானாகச் செய்ய வேண்டும்" என்றார் வள்ளுவர். இன்னொருவர் வந்து சொல்ல வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கக் கூடாது. 'நன்றின்பால் உய்ப்பது அறிவு' என்று வள்ளுவர் இதற்காகத்தான் சொன்னார். அதனால்தான் 1330 திருக்குறளிலே மாணவர்களுக்குச் சொன்னது சிறப்பாக 'கல்வியும் காலமும்' என்று கொள்ளுதல் வேண்டும்.

காலம் போனால் திரும்பி வராது. இன்றைய தினம் என்ன தேதி? 15-3-1984. இந்த உலகம் இருக்கும் வரையில் இனிமேல் 15-3-1984 என்ற தேதிவரவே வராது. இன்றோடு சரி... நாளைய தினம் 16-3-1984. அடுத்த மாதம் 15-4-1984 அடுத்த வருஷம் 15-4-1985. ஆகவே காலம் அவ்வளவு முக்கியமானது.

ஒரு பையன் ஆசிரியரை மூன்று மாதம் கழித்து, ''சார்! 15-3-1984ஐ பார்க்க ஆசையாயிருக்கு, எங்கே போனால் பார்க்கலாம்?'' என்று கேட்டால், ''பழைய காலண்டரைப் பாருடா...'' என்றுதான் அவர் பதில் சொல்வார். காலம் போனால்வராது திருவள்ளுவர் அதைத்தான் சொன்னார்: உலகத்திலே, எல்லாம் போனால் வரும். காலம் மட்டும் போனால் வராது.

பகல் போனால் ராத்திரி வருகிறது. பகலும் ராத்திரியும் சேர்ந்தால் ஒரு நாள் என்கிறோம். இந்த ஒரு நாள் எதற்கு வருகிறது?

ஒரு பையனிடம் நாள் எதற்கு வருகிறது என்று கேட்டேன். அதற்கு அவன், ''அது ரொம்ப நாளா வருதுங்க... உங்க ஊரிலே வரலையா?'' என்று திருப்பிக் கேட்டான். குழந்தைகளுக்கு அவ்வளவுதான் தெரியும்.

## நாளும் வாளும்

திருவள்ளுவர் இதற்குக் காரணம் சொன்னார். ஒரு நாள் எதற்கு வருகிறது என்றால், விளையாட்டுக்கு வருவதில்லை. உன் ஆயுளில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு போக வருகிறது. ஒருநாள் வந்து போய் விட்டால் வாழ்கிற நாட்களில் கொஞ்சம் குறைந்து போனது என்று அர்த்தம்.

தூங்கி எழுந்தவுடன் நாம் அழவேண்டும். ''ஐயோ! என் ஆயுளில் ஒரு நாள் போய்விட்டதே! நான் என்ன நல்ல காரியம் செய்தேன்? என்ன பயனுள்ள காரியம் செய்தேன்?

என்ன அறிவை வளர்த்தேன்? என்ன கல்வி கற்றேன்?'' என்று விசனப்பட வேண்டும்.

'என் ஆயுளில் கொஞ்சம் போய்விட்டதே!' அப்படியா வருத்தப்படுகிறார்கள்? தூங்கி எழுந்தவுடனே ஒரு 'பெட் காபி' குடிப்பார்கள். ஏனென்றால் ஆயுளிலே கொஞ்சம் போய்விட்டது என்று ஒரு மகிழ்ச்சி!!

**''நாளென ஒன்று போல்காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்''** [334]

என்றார் திருவள்ளுவர்.

நாள் என்பதனை திருவள்ளுவர் வாள், 'ரம்பம்' என்று சொன்னார். ''மரத்தை அறுக்கின்ற 'ரம்பம்' ரம்பத்தின் இரு புறங்களிலும் ராத்திரியும் பகலும் பிடித்துக்கொண்டு உன் வாழ் நாளாகிய மரத்தை அறுக்கின்றன" என்றார்.

அருமை மாணவர்கள் ஒவ்வொரு நாளையும் பொன்னே போல் போற்ற வேண்டும். ஏன்? கல்வி கற்கின்ற பருவத்திலே ஒரு நாள் நமக்குக் கிடைக்காது போனால் போனது தான்.

## கற்பவைதான் கற்க வேண்டும்

அதனால்தான் திருவள்ளுவர் 'கற்க-கசடறக்-கற்பவை, என்று சொன்னார். எதைப் படிக்க வேண்டுமோ அதைத் தான் படிக்க வேண்டும். அதுதான் 'கற்பவை' என்பதன் அர்த்தம். எல்லாவற்றையும் படிக்கக் கூடாது. ''நான் இந்தப் புத்தகத்தைப் படிக்கலாமா?'' என்று நம் பெற்றோரிடம் கேட்க வேண்டும். ஆசிரியர்களிடம் கேட்கவேண்டும். ''இதனைப் படிக்கக் கூடாது தம்பி... உன் மனமும் அறிவும் கெட்டுப் போய்விடும்!'' என்று அவர்கள் சொன்னால் அதனைத் தொடக்கூடாது.

இதுவரைக்கும் யாருமே பார்க்காத ஒரு பழத்தைக் கொண்டு வந்து ஒரு பையனிடம் கொடுத்து, ''இதனைச் சாப்பிடு... நன்றாக இருக்கும்'' என்றால், உடனே வாங்கி வாயில் போட்டுக் கொள்வானா? பயப்படுவான். ''நான் இதுவரைக்கும் இதுமாதிரி பார்த்ததே கிடையாது!'' என்று சொல்லி கொஞ்சமாக நாக்கிலே வைத்துப் பார்ப்பான்; அப்புறம் கொடுத்தவனிடமே அதனைத் திருப்பிக் கொடுத்து, ''இதனை நீயே சாப்பிடு... உன் கதி என்ன ஆகிறது பார்ப்போம்'' என்று சொல்லி விடுவான்.

இதுவரைக்கும் சாப்பிடாத ஒரு பழத்தைச் சாப்பிடத் தயங்குவது போல் தீய எண்ணங்களைத் தரும் நூல்களைப் படித்தல் கூடாது.

# மனிதனும் மிருகமும்

'உலகமெல்லாம் சுற்றி வரக்கூடிய கல்வியையும் அறிவையும் தனது தேச மக்கள் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டவன் பாரதி. அப்படிச் சுற்றி வருவதற்கான அறிவையும் கல்வியையும் பெறக்கூடிய பருவமே மாணவப் பருவம்.

**''காசிநகர்ப் புலவர் பேசும்**
**உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர்**
**கருவி செய்வோம்''**

என்று பாரதி பாடினான். காசியிலே ஒருவர் பேசினால் அதைக் காஞ்சிபுரத்திலே இருப்பவர் கேட்க வேண்டும்.

அப்போதெல்லாம் வானொலி கிடையாது. ஆனால், பாரதி தீர்க்கதரிசி, அதனால் அப்படிப் பாடினான்.

## செய்வோம் செய்வோம்

'ஆயுதம் செய்வோம், காகிதம் செய்வோம்' என்றான் பாரதி. வாங்கினால் நம்மை எவனும் மதிக்க மாட்டான். வாங்கினால் பிறர் நம்மை மதிப்பார்கள் என்றால், பாரதி கூட 'வாங்குவோம்' என்றே பாடியிருப்பான். ''ஆயுதம் வாங்குவோம். காகிதம் வாங்குவோம். காசில்லை யென்றால் கடனுக்கும் வாங்குவோம்'' என்றே பாடியிருப் பான்.

இந்த மண்ணிலே பிறந்த பாரதி எவ்வளவு பாடி வைத்திருக்கிறான். யாருக்காகப் பாரதி பாடினான்? சைனாக்காரனுக்கும் ஜப்பான் காரனுக்குமா பாரதி பாடினான்? நமக்காகப் பாடினான்; நாளைய தினம் நம் முடைய பாரதியே மறுபடியும் வந்துகேட்கிறான். ''பாடல் களையெல்லாம் எழுதிக் கொடுத்தேனே... அவற்றையெல் லாம் யாம் எழுதிய பாடல்களையெல்லாம் படித்து, அதன் படி நடக்கிறீர்களா?'' என்று கேட்டால், ''எங்களுக் கெல்லாம் அந்தக் கெட்ட பழக்கம் இல்லை...'' என்று நாம் சொன்னால் இந்த நாடு முன்னேறுமா? நமக்கு உணர்ச்சி யையும் உற்சாகத்தையும் ஊட்டியவன் பாரதி!

## பெண்மணிகள்

பெண்களுக்காக எத்தனைப் பாடல்கள் பாடினான் பாரதி! ஒரு காலத்திலே நம்முடைய உடன் பிறந்தசகோதரி களை எவ்வளவோ கேவலமாய் எண்ணிய பைத்தியக் காரர்கள் இந்த நாட்டிலேயே இருந்தார்கள். பெண்கள் புத்தகங்களைக் கையால் தொடக்கூடாது என்று கூட

சொன்னார்களாம். எங்கள் பாரதி, 'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்...' என்று பாடினான்.

## கல்வியறிவு வேண்டும்

கல்வியறிவில்லாதவர்களைக் குறைவாகப் பேசியவர் திருவள்ளுவர் மாதிரி வேறு யாருமில்லை. ''விலங்கொடு மக்கள் அனையர்...!" எவ்வளவு குறைவாகப் பேசுகின்றார். ''இலங்கு நூல்கற்றாரோடு ஏனையர்...!'' கல்வியறிவில்லாதவனைப் பற்றிச் சொல்லும் போது, அவனை விலங்கு என்றார் வள்ளுவர். விலங்கு என்றால் மிருகம் என்று அர்த்தம். மாடு என்றும் அர்த்தம். ஏன்? அது சொன்னால் கேட்காது. மிருகங்களின் குணம் அது.

நமது மாடு ஒன்று தெருவில் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த மாட்டைப் பார்த்து, ''நான் வீட்டுக்குப் போகிறேன். என் பின்னாலேயேவா...'' என்றால் வருமா? என்கூட அது வருவதற்குக் கையில் பச்சைப் புல் வைத்துக் கொண்டு காட்ட வேண்டும்.

நம்ம ஜனநாயக நாட்டிலே அவ்வப்போது தேர்தல் வந்தே தீரும். யாருக்கு வோட்டுப் போட்டாலும் சரி, நாம் மறக்காமல் தானே சென்று வோட்டு போட்டுவிட்டு வந்து விட வேண்டும். ஆனால், இந்த நாட்டிலே இன்னும் இந்த எண்ணம் வரவில்லையே! ''வோட்டுப் போடறதுக்கு வாங்க'' என்றாலும் வரமாட்டார்கள்.

**''விலங்கொடு மக்கள் அணையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்''**

என்று எத்தனை அருமையாகச் சொல்லியிருக்கிறார் வள்ளுவர்.

'ஏ...மனிதனே! கல்வியறிவு இல்லாவிட்டால் நீ மிருகம் தான்! கல்வி கற்க கற்கத்தான் அறிவு வளரும்' என்றார்.

## மணற்கேணி

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு...'' [396]

இந்தக் குறட்பாவிலே என்ன உதாரணம் சொன்னார்? கற்கக் கற்க அறிவு வளரும் என்று சொல்வதற்கு உதாரணம், ''ஒரு கடையிலே போய்ச் சாமான்களை வாங்க நிறைய சேரும். அதுபோல கற்க கற்க அறிவு வளரும்'' என்றா சொன்னார். ''தோண்டத் தோண்ட கிணற்றில் தண்ணீர் வருவது போல் கற்க கற்க அறிவு வளரும்" என்றார். இதன் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கிணற்றை எப்படித் தோண்டுவது? ஒரு கவிராயரைக் கூப்பிட்டு, ''ஒரு பாட்டு எழுதி வையுங்க...ஒரு கிணறு தோண்டணும்...'' என்றால், அவர் பாட்டு எழுதி வைத்தால் கிணறு தோண்டிவிட முடியுமா? ஒரு பேச்சாளரைக் கூப்பிட்டு, ''கொஞ்ச நேரம், பேசுங்க. ஒரு கிணறு தோண்டணும்!'' என்றால் முடியுமா? நடக்காது. நாம் உழைக்கவேண்டும். உடம்பால் உழைத்துப் பள்ளம் தோண்டினால்தான் கிணறு உருவாகும்! தண்ணீரும் வரும். உடலுழைப்பினால்தான் சிறப்பு மிகுதியும் உண்டாகும் என்று கருதி, தொழிற் கல்வியைப் பேணுவதோடு, உடலுழைப்பு செய்ய தயங்கக் கூடாது என்பதற்காக, இந்த அரிய உதாரணத்தைக் கூறினார்.

# வாழ்க்கை இரு விதம்!

## தெய்வம் எது?

எந்தத் தொழிலைச் செய்தாலும், எந்த அலுவலகத்தில் வேலை செய்தாலும் அதற்குத் துரோகம் செய்தால் அது நம்மை அழித்துவிடும். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்றால் இதுதான் பொருள்.

செய்யும் தொழிலை நன்றாகச் செய்ய வேண்டும். ஒருத்தரைக் கூப்பிட்டு, 'இந்த அறைக்குச் சுண்ணாம்பு அடிப்பா' என்று சொல்லுகிறோம். அந்தப் பணியாள், ஒரு நாளைக்குப் பதினைந்து ரூபாய் கூலி கேட்கிறார். பதினைந்து ரூபாய் நாம் கொடுத்துவிட்டால், எவ்வளவு நன்றாக அடிக்க வேண்டுமோ எவ்வளவு அழகாக அடிக்க வேண்டுமோ அத்தனை நேர்த்தியாக அவர் அந்த வேலையைச் செய்ய வேண்டும். அப்படி அவர் செய்தால் அந்தத் தொழில் அவரைக் காப்பாற்றும். தொழிலுக்குத் துரோகம் செய்தால் அதுவே தண்டிக்கும்.

பழைய காலத்திலே ராஜா ஒருத்தர் இருந்தார். அவர் தன் மந்திரியிடம், 'இன்றைய தினம் எல்லா அலுவலகங்களையும் சுற்றிப் பார்க்கணும்...' என்று சொன்னாராம். உடனே மந்திரி சரி என்று சொல்லி ராஜாவை அழைத்துக் கொண்டு போனார். கணக்குப் புத்தகங்களையெல்லாம் ராஜா பார்த்தார். அப்போது ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தவுடனே ராஜாவுக்குத் திகைப்பும் கோபமும் ஆச்சரியமும் ஏற்பட்டன. அந்தப் புத்தகத்திலே 'முட்டாள்கள் பட்டியல்'னு போட்டிருந்தது. 'என்னய்யா? நம்ம ராஜ்யத்திலே இப்படி வச்சிருக்கியே?'ன்னு ராஜா கேட்க, மந்திரி, 'பின்னே என்னங்க ராஜா? இதுபோல் ஒரு

பட்டியல் இருக்க வேண்டாமா? எல்லோருமா அறிவாளியா இருக்காக? முட்டாள்களும் இருப்பாங்களே'ன்னு சொன்னார். ராஜா அந்தப்புத்தகத்தைப் புரட்டிப் பார்த்த போது முதல் முதல்லே ராஜா பெயர்தான் எழுதப் பட்டிருந்தது! ராஜாவுக்குக் கோபம். "முட்டாள்கள் பட்டியல்'னு வைத்திருக்கிறதே ரொம்ப தப்பு...அதுலே என் பேரை முதலில் எழுதியிருக்கியே...இது என்ன அநியாயம்?" என்று கடிந்து கொண்டார். "இல்லே மகா ராஜா! காரணமாகத்தான் எழுதியிருக்கேன்" என்றார் மந்திரி.

"என்ன காரணம்?"

"இல்லே போனமாதம் வெளிநாட்டிலேயிருந்து ஒருத்தன் வந்தான். உங்களுக்குக் குதிரைமேல் ரொம்ப ஆசை 'ஒரு குதிரை வாங்கிட்டு வா'ன்னு அவன்கிட்ட சொன்னீங்க... உங்க ஆசையை அவன் புரிஞ்சுக்கிட்டு 'பத்தாயிரம் பொன் கொடுங்க. நான் வாங்கிட்டு வரேன்'னான். உடனே உங்களுக்கிருந்த வேகத்திலே பத்தாயிரம் பொன்னை எடுத்து அவன் கையில் கொடுத்துட்டீங்க...அவன் எந்த ஊர்க்காரன்னு தெரியாது. அவனோட பேர் என்னன்னும் தெரியாது. வாங்கிட்டு வர்ற சக்தி அவனுக்கு இருக்கான் னும் உங்களுக்குத் தெரியாது. உங்க ஆசையிலே எதையுமே விசாரிக்காமல் இப்படிச் செய்துட்டீங்க. இப்படிச் செய்ய லாமா? ராஜா செய்தால் நாமெல்லாம் என்ன செய்யற துன்னு பேசாம இருந்துட்டோம். அதனால்தான் உங்க பேரை முட்டாள் பட்டியல்லே முதல்லே சேர்த்துட் டோம்..." என்றார்.

ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "அப்படியா! நீ நினைக்கறே? அவன் குதிரையை வாங்கி வந்து தந்துவிட் டான் என்றால்...நீ என்ன பண்ணுவே?" என்று கேட்டார்.

உடனே மந்திரி சொன்னார், ''முட்டாள் பட்டியலில் உங்க பேரை அடிச்சுட்டு அவன் பேரை எழுதிக் கொள்வேன்! அந்த இடம் காலியாக இருக்காது...!''

## இல்வாழ்க்கை

மனிதனுடைய வாழ்க்கையே திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்துதான் தொடங்குகிறது என்று அறிதல் வேண்டும். அந்தத் தினத்திலிருந்துதான் அவன் உலகத்தில் வாழத் தொடங்குகிறான். அது வரையில் வாழ்வதற்குத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தான் என்றுதான் பொருள்.

''உடல் பலமும் ஆற்றலும் நிறைந்திருந்த ஒரு வாலிபன் அநேக சாதனைகளைச் செய்வதற்குத் துணையில்லாமலிருந்தான்; இப்போது துணையாக ஒரு பெண் வந்து விட்டாள்; இனி அருமையாகச் சாதனையெல்லாம் சாதித்துவிடுவான்!'' என்ற மகிழ்ச்சியைக் காட்டுவதற்குத் தான் திருமண நாளில் வேடிக்கைகளும், கேளிக்கைகளும் நடத்துகிறார்கள். ஐந்து ஆண்டுகள் கழித்து, ''என்னப்பா சாதித்தாய்?'' என்றால், ''ஆணிலே இரண்டு, பெண்ணிலே ஒன்று'' என்று கூறுவதை சாதனை என்று சொல்லிவிட முடியாது.

பொருளாதாரத்தில் முன்னேற்றமடைதல், பொதுக் காரியங்களில் பலருக்குப் பயன்பட்டு வந்து நல்ல பெயர் வாங்குதல்—இத்தகைய உயர்ந்த செயல்களைத்தான் சாதனைகள் என்று சொல்ல வேண்டும்.

## அறிவும் பழக்கமும்

நாம் காணுகிற மக்களில் பலர் அறிவோடு வாழ்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. உலகில் வாழ்க்கை நடத்துவதற்கு அறிவு தேவை என்று சட்டம் கிடையாது. உலக வாழ்க்கையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று, அறிவோடு வாழ்கிற வாழ்க்கை; மற்றொன்று பழக்கத்தினாலே வாழ்கிற வாழ்க்கை. புதியவற்றைக் கண்டுபிடிப்பதும், பற்பல சாதனைகளைச் செய்வதும் பலருக்குப் பயன்பட்டு வாழ்வதும், புகழ்பெற்று வாழ்வதும் தான் அறிவோடு வாழ்கிற வாழ்க்கையாகும். மற்றவை எல்லாம் பழக்கத்தினால் வாழ்கிற வாழ்க்கையாகும்.

பிறப்பதும் வளர்வதும், உண்டு உறங்குவதும், உடுத்திக் கொள்வதும் படிப்பதும் மணப்பதும், குழந்தை குட்டிகள் பெறுவதும் வயதாகி மறைவதும் பழக்கத்தினாலேயே வாழ்கின்ற வாழ்க்கைகளாகும்.

## பழக்கமேயாகும்

நம் வீட்டினில் உள்ள பசுமாடு ஒன்றினைக் காலையில் அவிழ்த்துவிடுகிறோம். அது எங்கெங்கோ போய் மேய்ந்து விட்டு சாயந்திரம் ஆறு மணிக்கு நம் வீட்டிற்குள் வந்து நுழைகின்றது. அவிழ்த்துவிட்ட உடனே வெளியில் போவதும், இந்த இந்தத் தெருக்களின் வழியாகப் போய், இந்த இந்த இடத்தில் மேய்ந்துவிட்டு, இந்த இடத்தில் தண்ணீர் குடித்துவிட்டு, மீண்டும் அந்தந்தத் தெருக்களின் வழியாக வீட்டிற்குப் போய்ச் சேரவேண்டும் என்று அறிவோடு தெரிந்துகொண்டுதானா அந்த மாடு வாழ்க்கை நடத்துகிறது? இல்லையே! அது நடத்துகிற வாழ்க்கை பழக்கத்தினால் நடைபெறுகிற வாழ்க்கையாகும்.

இம்மாதிரியான வாழ்க்கை நடத்துவதற்குச் சிந்தனை யோ, அறிவோ தேவையில்லை. பலர் இதுமாதிரி அவிழ்த்து விட்ட பசுவைப் போலவே பழக்கத்தினாலேயே பல வேலை களைச் செய்துவிட்டு வாழ்க்கை நடத்துவதைப் பார்க் கிறோம். அப்படிப்பட்ட மக்கள் நிறைந்திருக்கிற நாட்டில் முன்னேற்றத்தைக் காணவே முடியாது.

# வாழ்க்கை இரு விதம்!

## தெய்வம் எது?

**எ**ந்தத் தொழிலைச் செய்தாலும், எந்த அலுவலகத்தில் வேலை செய்தாலும் அதற்குத் துரோகம் செய்தால் அது நம்மை அழித்துவிடும். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்றால் இதுதான் பொருள்.

செய்யும் தொழிலை நன்றாகச் செய்ய வேண்டும். ஒருத்தரைக் கூப்பிட்டு, 'இந்த அறைக்குச் சுண்ணாம்பு அடிப்பா' என்று சொல்லுகிறோம். அந்தப் பணியாள், ஒரு நாளைக்குப் பதினைந்து ரூபாய் கூலி கேட்கிறார். பதினைந்து ரூபாய் நாம் கொடுத்துவிட்டால், எவ்வளவு நன்றாக அடிக்க வேண்டுமோ எவ்வளவு அழகாக அடிக்க வேண்டுமோ அத்தனை நேர்த்தியாக அவர் அந்த வேலையைச் செய்ய வேண்டும். அப்படி அவர் செய்தால் அந்தத் தொழில் அவரைக் காப்பாற்றும். தொழிலுக்குத் துரோகம் செய்தால் அதுவே தண்டிக்கும்.

பழைய காலத்திலே ராஜா ஒருத்தர் இருந்தார். அவர் தன் மந்திரியிடம், 'இன்றைய தினம் எல்லா அலுவலகங்களையும் சுற்றிப் பார்க்கணும்...' என்று சொன்னாராம். உடனே மந்திரி சரி என்று சொல்லி ராஜாவை அழைத்துக் கொண்டு போனார். கணக்குப் புத்தகங்களையெல்லாம் ராஜா பார்த்தார். அப்போது ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தவுடனே ராஜாவுக்குத் திகைப்பும் கோபமும் ஆச்சரியமும் ஏற்பட்டன. அந்தப் புத்தகத்திலே 'முட்டாள்கள் பட்டியல்'னு போட்டிருந்தது. 'என்னய்யா? நம்ம ராஜ்யத்திலே இப்படி வச்சிருக்கியே?'ன்னு ராஜா கேட்க, மந்திரி, 'பின்னே என்னங்க ராஜா? இதுபோல் ஒரு

**''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''**

என்றார் திருவள்ளுவர்.

அதாவது, தாய் தகப்பன் வைத்த பெயரோடு போகாமல், ஊரில் இருப்பவர்கள் நமக்குப் பெயர் வைக்க வேண்டும். அதுதான் ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்...''

## மேலுலகம்

இங்கேயிருந்து குடும்பத்தோடு வாழ்ந்துவிட்டு ஒருவர், 'தேவலோகம்' போனார்.

அந்த வானுலகத் தெய்வம், ''நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டது.

''நான் பூலோகத்திலிருந்து வருகிறேன்!''

''உங்க அப்பா உங்களுக்கு என்ன பெயர் வைத்தார்!''

''எங்க அப்பா எனக்கு காந்தி என்று பெயர் வைத்தார்!''

''மக்கள் என்ன பெயர் வைத்தார்கள்?''

''மக்கள் என்னை 'மகாத்மா' என்றார்கள்...!''

''சரி, நீங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்... பக்கத்தில் உட்காருங்கள்...''

இன்னொருத்தர் வந்தார்... அவரைப் பார்த்து தெய்வம் கேட்டது.

''எங்க அப்பா சிதம்பரம் என்று பெயர் வைத்தார்!''

''மக்கள் என்ன பெயர் வைத்தார்கள்?''

''மக்கள் 'கப்பலோட்டிய தமிழன்' என்றார்கள்!''

''சரி, நீங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர், உட்காருங்கள்...''

இன்னொருவர் போனார்...

''உங்க அப்பா என்ன பெயர் வைத்தார்கள்?''

''ஏதோ குப்பனோ சுப்பனோ!'' என்றான்.

''மக்கள் என்ன பெயர் வைத்தார்கள்?''

''மக்கள் ஒரு பெயரும் வைக்கலே...''

''பின்னே யார் வைத்தது?''

''காவல் நிலையத்தில் பெயர் வைத்தார்கள்.''

அவனைப் பார்த்து, ''அடே, கேடிப்பயலே...இறங்கிப் போடா... தேவலோகத்தையும் கெடுத்து விடாதே...'' என்றதாம் தெய்வம்!

அதனாலேதான் இந்த உலகத்திலே பிறந்து வளர்ந்து வாழ்ந்து மறைவதற்குள் நீ செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து விட்டுப் போக வேண்டும். அந்த நல்ல எண்ணங்களையெல்லாம் தோன்ற வேண்டுமே என்பதற்காகத்தான் நமது முன்னோர்கள் எல்லாம் நூல்களில் எழுதி வைத்தார்கள். அவற்றைக் கொஞ்சமாவது படிக்க வேண்டும்.

## மறை நூல்கள்

மந்த்ர நூல்களுக்கெல்லாம் அர்த்தம் தெரியா விட்டாலும் பயனளிக்கும். இராமாயணம், பாரதம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் இவற்றைப் படிக்கிறபோது என்ன என்று அர்த்தம் கேட்க வேண்டும். தேவாரம், திருவாசகம், திருவருட்பா,

திருக்குறள், நாலடியார், திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய நூல்களையெல்லாம் படிக்கும்போது அந்த வார்த்தைகளை இந்த நாவினால் உச்சரித்தாலே போதும். பயனடைவோம். அதற்கு அர்த்தம் தெரிந்தாலும் நல்லது... தெரியாவிட்டாலும் பரவாயில்லை. ஏனென்றால், அந்தச் சொற்களையெல்லாம் மந்திரச் சொற்கள்... சொன்னால் பலிக்கும். இதனை ஒரு பொதுக் கருத்தாகக் கொள்ள வேண்டும்.

பத்துப் பவுனை ஒருவர் சங்கிலியாகச் செய்து போட்டுக் கொண்டார். இன்னொருவர் பத்து பவுனையும் பொட்டலமாகக் கட்டி மடியிலே வைத்திருந்தார். இரண்டையும் கொண்டுபோய் வங்கியிலே கொடுத்தால் பணம் கொடுப்பார்கள். பத்து பவுன் கொடுப்பவரைப் பார்த்து, "நீ சங்கிலியாகச் செய்து போட்டு வா... அப்ப தான் பணம் தருவோம்!" என்றா பாங்கியில் சொல் வார்கள்?

## மூச்சு விடுதல்

"எப்போது இந்தப் பாடல்களைச் சொல்வது? எப்பொழுது இறைவன் திருநாமத்தைச் சொல்வது? என்றெல்லாம் கேட்கக் கூடாது." "எப்ப எப்ப நீங்க மூச்சு விடுவீங்க?" என்று ஒருத்தரைக் கேட்க முடியுமா? "காலையிலே கொஞ்ச நேரம் விடுவேன்... அப்புறம் நிறுத்திட்டு வேலைக்குப் போயிடுவேன். சாயந்தரம் வந்து தான் மூச்சு விடுவேன்... இல்லாட்டி சும்மா இருந்துடு வேன்..." என்றா பதில் சொல்வீர்கள்?

உன்னை அறியாமலேயே மூக்கிலே மூச்சு வருவது போல, எந்நேரத்திலும் நாவினால் இறைவனது திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். ஏன் அப்படிச் சொன்னார்கள்? உன்னைக் கெடுக்கக் கூடிய

அவயவங்கள் உன்னிடமே இருக்கின்றன. கண், மூக்கு, காதெல்லாம் இருக்கின்றன... எப்படிப்பட்டவை இவை?

'ஓர ஒட்டார் ஒன்றை உன்ன ஒட்டார் மலரிட்டு உன் தாள் சேர ஒட்டார் ஐவர்...''

''கண், காது, மூக்கு, வாய், மெய் என்ற இந்த ஐந்து பொறிகளும் என் உயிரை வாங்குகின்றனவே...'' என்று பாடினார் அருணகிரிநாதர்.

# நாம் வாழ்வது எதற்கு?

மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த பண்பாடு நன்றிதான். ஏ... மனிதனே...! மண்ணும், நிலமும், நீரும், காற்றும், வானும் ஆகிய பஞ்ச பூதங்களும் இந்த உலகத்திலே உன்னைப் பெற்றெடுத்துக் காத்து வளர்த்து வருகின்றன. இந்தச் சமுதாயத்துக்கும், இந்த உலகத்துக்கும் நீ நன்றியுள்ளவனாக கடமைகளை ஆற்ற வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் பெரிய பெரிய மேதைகளெல்லாம் நமக்குப் பல அரிய பெரிய செய்திகளை எழுதி வைத்திருக்கிறார்கள்.

அவற்றை இலக்கியம் என்று அழைக்கிறோம். காவியங்கள் என்று அழைக்கிறோம்.. பலவிதமான பெயர்களைச் சொல்லி அந்த நூல்களையெல்லாம் தாம் அழைக்கிறோம். அவற்றின் அடிப்படை நோக்கமெல்லாம், ''ஏ மனிதனே!.... இந்தப் பூமியிலே நீ இனாமாக வாழ்ந்துவிட்டுப் போகக் கூடாது'' என்பதுதான்.

இந்த மண்ணுக்கும் இந்தச் சமுதாயத்துக்கும் நீ செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும். நீ நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும். ஏனென்றால், இந்தத் தேசமும்,

இந்தச் சமுதாயமும், இந்த மக்கள் கூட்டமும்தான் நம்மை வளர்க்கின்றன. இதற்கு நாம் என்ன செய்கிறோம் என்பதை நினைத்துப் பார்ப்பதற்காகத்தான் திருவள்ளுவர் முதற்கொண்டு இராமலிங்க சுவாமிகள் வரையிலும் நமக்கு எழுதி வைத்துவிட்டுப் போனார்கள். மனிதனுக்குக் கட்டாயமாக நன்றியும் விசுவாசமும் இருக்க வேண்டும்.

## பொங்கல் விழா

பொங்கல் விழா நடக்கிறது. முதல் நாள் பொங்கல். இரண்டாவது நாள் மாட்டுப் பொங்கல். மாட்டுப் பொங்கலன்று மாட்டைக் குளிப்பாட்டி அதன் மேல் சந்தனத்தைப் பூசி, அதன் கொம்புகளில் வர்ணம் எல்லாம் தீட்டி, கழுத்தில் மாலைகளைக் கட்டி, அந்த மாட்டுக்குச் சொந்தக்காரர்களின் பிள்ளைகள் எல்லாம் தெருத் தெருவாக அதை இழுத்துக் கொண்டு போவார்கள். நான்கு சுற்று சுற்றி விட்டு, கடைசியில் அந்த மாட்டைக் கொட்டிலில் வந்து கட்டிப் போட்டவுடனேயே அந்த மாடு அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, ''ரொம்ப நன்றி!'' என்றா சொல்லும்? சொல்லாது... சமயத்திலே அந்தப் பிள்ளைகளையே முட்டும்...! ஏன்?... அதற்கு நன்றி காட்டுகிற அறிவு கிடையாது.

## ஞானவான்கள் வாக்கு

''இந்த நாட்டிலே பிறரது உதவியையும் ஆதரவையும் பெற்று வாழும் மனிதனே! உனக்கு நல்லது செய்தவனுக்கே தீமை செய்ய நினைக்கிறாயே, உனக்கும் அந்த மாட்டுக்கும் என்ன வித்தியாசம்? பின்னர் எதற்காகப் பெரியவர்கள் எல்லோரும் எழுதி வைத்திருக்கிறார்கள்? இராமாயணம் எழுதினார், திருக்குறள் எழுதினார், பாரதம் எழுதினார், பெரிய புராணம் எழுதினார், திருவாசகம் எழுதினார் என்று பெயர்களை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா?''

இராமலிங்க சுவாமிகள் ஆறாயிரம் பாடல்கள் பாடினார், எதற்கு? ''ஏ! மனிதனே! பசியாயிருப்பவனுக்கு ஒருவேளை சோறு போடு. உனக்கு அறிவு இருக்கிறது. நீ பிறருக்கு உதவ வேண்டும். ஏன் உதவ வேண்டும் என்றால் அதுதான் மனிதத் தன்மை, மனிதப் பண்பாடு...'' இதைச் சொல்வதற்கு ஆறாயிரம் பாடல்கள் பாடினார்.

## மனிதத் தன்மை

''மனிதனாகப் பிறந்தவர்கள் எல்லோரும் மனிதத் தன்மையோடு வாழவேண்டும் என்பதைத்தான் அறிஞர் கள் அனைவரும் இரண்டாயிரம், மூவாயிரம் வருடங்களாக நமக்குச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நமக்குக் கதை சொல்வதற்காக அவர்கள் வரவில்லை. திருவள்ளுவர் எதற்குத் தோன்றினார்? நக்கீரர் எதற்கு வந்தார்? இராமலிங்க சுவாமிகள் ஏன் அவதரித்தார்? பட்டினத்தார் எதற்குப் பிறந்தார்? தாயுமான சுவாமிகள் ஏன் வந்தார்? பெரிய பெரிய ஞானிகளும் மகான்களும் ஏன் எதற்காக இங்கே பிறந்து, எதற்காகப் பாடினார்கள்? நமக்கு என்ன வேலைக்குப் போகத் தெரியாதா? தாயுமான சுவாமியைக் கேட்டுக் கொண்டா வேலையில் சேர்ந்தோம்!

## முதன்மையான கருத்தென்ன?

வீடு கட்டத் தெரியாதா நமக்கு? பட்டினத்தாரைக் கேட்டுக் கொண்டா வீடு கட்டுகிறோம்? நமக்கென்ன கல்யாணம் பண்ணிக் கொண்டு, பிள்ளைகள் பெற்று வாழத் தெரியாதா? திருவள்ளுவரைக் கேட்டுக் கொண்டா பிள்ளைகள் பெற்றுக் கொள்கிறோம்? பின்னர் எதற்காகத் தான் இவர்கள் வந்தார்கள்? நமக்குத் தெரியாத எதை யாவது சொல்லத்தானே இவர்கள் வரவேண்டும்! நாம் தான் எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறோமே... இவர்கள் எதற்கு வந்தார்கள் என்றால், நமக்குப் பிறந்து, வளர்ந்து, படிக்கத் தெரியும்... உத்தியோகத்துக்குப்

போகத் தெரியும். வீடு, நிலம் வாங்கத் தெரியும். திருமணம் செய்து பிள்ளைகள் பெற்றுக் கொள்ளத் தெரியும். ஆனால் மனிதனாக வாழத் தெரியாது. இந்தக் கலையைக் கற்றுத் தருவதற்காகத்தான் அவ்வப்போது மகான்கள் தோன்றுகிறார்கள்.

# இல்லறமாம் நல்லறம்

**ந**ம்மைப் பத்து மாதம் சுமந்து பெறுகிறவள் தாய். அச்சமயம் ஆசைப்பட்டதை எல்லாம் உண்ணாமல் நமக்காக நாக்கைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள்.

தாயார் இறந்தவுடனேயே பட்டினத்தடிகள் அழுதார். ''பட்டினத்தாரே, நீங்கள் துறவியாயிற்றே... தாயார் இறந்ததற்காகத் தாங்கள் அழலாமா? நாங்கள் எல்லாம் இன்ப துன்பங்களிலே கலந்திருப்பவர்கள்... சிரிப்போம்... அழுவோம். நீங்கள் இப்படிச் செய்யலாமா?'' என்று சிலர் அவரைப் பார்த்துக் கேட்டார்கள்... அதற்குப் பட்டினத்தார், ''அவர் தாயார் இல்லை... எனது தெய்வம்!...'' என்றார்.

## தாயான தெய்வம்

யார் தூங்கி எழுந்தவுடனே 'அம்மா' என்ற தெய்வ சிந்தனையோடு எழுந்திருக்கிறானோ அவன் வாழ்க்கையில் உயர்ந்து சிறந்து விளங்குவான்...

**'வட்டிலிலும் தொட்டிலிலும்**
**மார்மேலும் தோள் மேலும்**
**கட்டிலிலும் வைத்து**
**என்னைக் காப்பாற்றி...'**

என்றார் பட்டினத்தடிகள்.

தகப்பனாரா இவ்வாறெல்லாம் காப்பாற்றினார்?

தாய் அல்லவா காப்பாற்றினாள்! தாய்மை என்றால் அன்பு என்று பொருள். அன்பு பெண்களுக்கு இயற்கையாகவே உண்டு.

'வீற்றிருந்தாள் அன்னை
வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்று
வெந்து நீறானாள்...'

'முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திப் பகலாய் சிவனை யாதரித்து...'

என்று கூறுகிறார் பட்டினத்தார்.

மனிதனுக்குப் பெருமையெல்லாம் அவனுக்குப் பண்பு வருவதால்தான்... பண்பில்லாத மனிதர் வீதியில் போனால் 'அதோ போறாரே... அவர் எம். ஏ., படித்தவர்... எரிஞ்சு எரிஞ்சு விழுவார்' என்று அறிமுகப் படுத்தினார்...அத்தனைக் காலம் அவன் படித்த படிப்புக்கு என்ன பொருள்?

## மனிதப் பிறவிக்கு அடையாளம்

மனிதன் நல்ல பண்புகளை அடைய வேண்டும்... பிறருக்கு உதவவேண்டும். இந்த உலகத்துக்கு நன்றி காட்டுகிறாய் என்று அப்போதுதான் பொருள்.

இவற்றையெல்லாம் பெறுவதற்கு உனக்கு அளிக்கப் பட்ட துணைவிக்குத்தான் மனைவி என்று பெயர். அவள் அன்பு நிறைந்தவள். பண்பு நிறைந்தவள். ஒழுக்கம் நிறைந்தவள்.

''ஆண்களுக்கு உடம்பைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாது. இன்று முதல் என் உடம்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன்...'' என்று திருமணமானவுடன் ஆண்

பெண்ணிடமும், ''எனது உயிரைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு'' என்று பெண் ஆணிடமும் தங்களைத் தாங்களே திருமண நாளில் ஒப்படைத்துக் கொள்கிறார் கள். இதுவே 'உடம்பொடு உயிரிடை என்ன... நட்பு' என்று வள்ளுவர் சொன்னார். இது மறை பொருளான தத்துவம்.

## அரிய உண்மைகள்

மருவுண்ணச் செல்லுதல் என்று ஒரு வழக்கம் உண்டு. திருமணமானவுடன் மாப்பிள்ளையை அழைத்து மாமனார் வீட்டில் ஐந்தாறு நாட்கள் வைத்திருந்து விருந்தளித்து மகிழ்வார்கள். ஏன்? அதுவரை அவன் பட்டினியாகவா கிடந்தான்? 'தற்காத்துத் தற்கொண்டான் பேணி...' என்றாரே வள்ளுவர். கணவன் எது எது பிரியமாகச் சாப்பிடுவார், எது எது அவருக்குப் பிடிக்காது என்று ஒரு அய்ந்தாறு நாட்கள் தனது வீட்டில் அவருக்குச் சோறு போடுவதன் மூலம் அவள் அறிந்து கொள்வாள். ஏன்? அவர் உடம்பை வாழ்நாள் முழுவதும் அவள் காப்பாற்ற வேண்டுமல்லவா?

> 'உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு' (1122)

என்றார் திருவள்ளுவர். அவளும் நீயும் உயிரும் உடம்பும் போல் வாழவேண்டும். உனக்கு அதிகம் கோபம் வந்தால் அந்தக் கோபத்தை அவள் தணிக்கவேண்டும். ஆண்கள் உடம்பில் சூடு இருக்க வேண்டும். அதனால்தான் கோபம் வரும்போது, 'உன் உடம்பிலே சூடு—சொரணை இருக் கிறதா' என்று கேட்பார்கள்.

## இல்வாழ்க்கை

இல்லறம் என்று சொன்னார் வள்ளுவர்: குடும்பத்தில் இருந்து அறம் செய்தல்... அறம் என்பதைத் தனியாகச் செய்ய முடியாது. அதற்குத் துணையாக ஒரு பெண் வேண்டும். அவளோடு சேர்ந்து ஆற்றும் அறம்தான் இல்லறம்...

சீதை பத்து மாதம் இலங்கையிலிருந்தாள். ''நான் தனியாக இருக்கிறேன்... எனக்கிருக்கும் கவலையெல்லாம் நாலு பெரியவர்கள், நல்லவர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களுக்கு ஒரு விருந்து அளிக்கும் வாய்ப்பில்லாமல் போனேன்... என் கணவர் தனியாக இருந்து என்ன செய்வார்?'' என்று எண்ணித்தான் சீதை வருத்தப்பட்டாளாம். இதுதான் இல்லறம்.

## கண்ணகி

கண்ணகியைப் பிரிந்து கோவலன் மாதவியிடம் பன்னிரண்டு ஆண்டுகள் மயங்கிக் கிடந்தான். திரும்பி திருந்தி வந்து கண்ணகியிடம், 'தெரியாமல் செய்து விட்டேன்' என்று மன்னிப்புக் கேட்டான். அப்போது கண்ணகி என்ன சொன்னாள்?

''அறவோர்க்களித்தலும், அந்தணரோம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை...'' என்றுதான் கண்ணகி அழுதாளே தவிர, ''என்னை விட்டு விட்டுப் போய்விட்டீர்களே''ன்னு அவள் துன்பப்படவில்லை!

இராமலிங்க சுவாமிகளுக்குக் குடும்பம் கிடையாது. ஆனால் இல்லறத்தைப் பாராட்டிப் பேசுகிறார் அவர். ''இறைவா எனக்கு உபதேசம் செய்தாய்... என்னை நீ அழைத்துக் கொண்டு போகவில்லை... இது எப்படியிருக்கிறதென்றால் திருமணம் செய்து கொண்ட ஒருவன் அந்தப்

பெண்ணை அழைத்துக்கொண்டு செல்லாமல் அவளுடைய தாயார் வீட்டிலேயே விட்டுவிட்டுப் போனால் என்ன கொடுமையோ அந்த மாதிரி நீ செய்கிறாயே!'' என்றார், இராமலிங்க சுவாமிகள்.

இத்தகைய சிறப்புப் பெற்றதுதான் இல்லறம்.

# கல்வியும் காலமும்

உலகில் மிகவும் அருமையானது என்னவென்றால் அது காலம்தான். எல்லாம் போனால் வரும். காலமும் நேரமும் போனால் வராது, மேசை, நாற்காலி போனாலும் வரும். இந்த மலர்மாலை போனாலும் வரும். 'நோட்'டுகள், புத்தகமோ தொலைந்து போய்விட்டாலும் திரும்ப வாங்கலாம்; ஆனால், தேர்வு நேரத்தில் ஒரு பையன் நான்கு நாட்களை வீணடித்துவிட்டால் போனது போனது தான்.

இன்னொரு மாணவனிடத்திலே கடன் கேட்க முடியாது. ''ஒரு நாலு நாள் இருந்தால் கொடடா...மனப் பாடம் பண்ணிட்டுத் திரும்பத் தந்து விடுகிறேன்...'' என்றெல்லாம் கேட்க முடியாது. ஆகையினாலேதான் வள்ளுவர் படிக்கின்ற மாணவர்களுக்குக் குறிப்பாக கல்வியும் காலமும் என்ற இரண்டு அதிகாரங்களைச் சொன்னார்...

## வீணாக்கக் கூடாது

ஒரு விநாடியைக்கூட மாணவர்கள் வீணாக்கக் கூடாது. ஏன்? கல்வி மாத்திரம், படிப்பு மாத்திரம் இந்த வயதிலே தான் வரும். எல்லா வயதிலேயும் வராது. அதனால்தான்

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தலைமையாசிரியர் என்ன செய்கிறார்? பள்ளிக்கூடத்தில் சேரவரும்போது ''உன் வயது சான்றிதழ் கொண்டு வந்தாயா?'' என்று கேட்கிறார். ஏன்? அதிலே நீ பிறந்த தேதி இருக்கும். இவனுக்குப் படிப்பு வருகிற வயசுதானா? என்று பார்த்துத் தான் சேர்ப்பார். எல்லா வயசிலேயும் சேர்க்கமாட்டார்.

ஒரு தலைமையாசிரியரிடத்திலே...நாற்பது வயது நாலு ஆட்கள் வந்து, ''எங்களை ஏழாவது வகுப்பில் சேர்த்துக்குங்க...சார்...'' என்றால் சேர்த்துக் கொள்வது தானே! தலைமையாசிரியர் பயப்படுவார். ''படிக்க வருகிறீர்களா?'' மேசை நாற்காலியைத் தூக்கிக்கொண்டு போக வந்தீர்களா...'' என்றுதான் கேட்பார்.

## அழியாச் செல்வம்

இந்த உலகத்திலே எல்லாச் செல்வமும் மறைந்துவிடும், அழிந்துவிடும். நான் வெளியூர் சென்றபோது என் நண்பரைக் கேட்டேன், ''இருபது, இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னே இங்கே ஒரு பெரிய ஆலமரம் இருந்ததே. அது எங்கே?'' என்று. ''அது புயற்காற்றிலே விழுந்துவிட்டது'' என்று சொன்னார். இது அழிகிற செல்வம். ''அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்ததே, அது எங்கே சார்?'' ''அது மழை பெய்து இடிந்துவிட்டது'' என்று பதில் வந்தது. இதுவும் அழிகிற செல்வம். சில பேர் பார்ப்பதற்கு அழகாய் இருப்பார்கள். அதுவும் அழகும் அழிகிற செல்வம்தான். அழகு கொஞ்ச நாளைக்கு இருக்கும். அப்புறம் போய்விடும். அதனால்தான் சில பேர் சீக்கிரம் 'போட்டோ' எடுத்துக் கொள்வார்கள், இருக்கிறதும் போய்விடுமே என்று!

### பணம்

நாம் பேசும்போது, ''அதோ போகிறாரே அவர், பத்து வருஷத்திற்கு முன்னே இரண்டு லட்ச ரூபாய் வைத்திருந் தார். இப்போ எல்லாம் செலவாகிப் போய் ரெண்டு ரூபாய் கடன் கேட்கிறார்'' என்று சொல்வோம். இது அழிகிற செல்வம். ஆனால், கல்வி அப்படிப்பட்டதல்ல. ''அதோ போகிறாரே...அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னே எம்.ஏ. பாஸ் பண்ணியிருந்தார். இப்போ எல்லாம் செலவாகிப் போய் எஸ்.எஸ்.எல்.சி யாக வந்துவிட்டார்...'' என்று சொல்ல மாட்டோம்.

**'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை.''** [400]

### பருவ காலம்

அந்தக் கல்வியைப் பெறக்கூடிய பருவம் மாணவப் பருவம். அவ்வளவு பொன்னான பருவம்! ஒரு விநாடியைக் கூட வீணாக்காதீர்கள். மகாகவி பாரதி உங்களைப் பார்த்துத்தான் கூப்பிட்டான். ''இளைஞர்களே...மாணவர் களே! கல்வி கற்று அறிவை வளர்க்கின்ற பருவத்தில் வயதில் இருப்பவர்களே...வாருங்கள்...

**''வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்—அடி மேலைக்**
**கடல் முழுதும் கப்பல் விடுவோம்...''**

வெள்ளிப் பனிமலை என்றால் இமயமலை. ''வாருங் கள்! அங்கே உலாவலாம்'' என்றான். எப்படி உலாவ முடியும்? அங்கே இமயமலை உச்சியிலே 'தார் ரோடா' போட்டு வைத்திருக்கிறார்கள்? உலாவலாம் என்றால் விமானம் செய்து பறக்க வேண்டும். அந்தக் கல்வியையும் அந்த அறிவையும் பெறக்கூடிய பருவம் மாணவப் பருவம்! ''வாருங்கள்! கடலிலே கப்பல் செய்து விடுவோம்...அந்தக் கப்பலைச் செய்யக் கூடிய கல்வியையும் அறிவையும் பெறக்

கூடிய பருவம் இந்த மாணவப் பருவம்'' என்று பாரதி அக்கறையோடு ஆர்வமுடன் கூப்பிட்டான்.

'வாருங்கள்! உலகமெல்லாம் சுற்றி வருவோம்!' என்று அழைக்கிறான் பாரதி.

**வெட்டுக்கனிகள் செய்து தங்க முதலாம்—**
**வேறு கனிகள்பல குடைந்தெடுப்போம்.**
**எட்டுத் திசைகளிலும் சென்று இவை விற்றே**
**எண்ணும் பல பொருளும் கொண்டு வருவோம்!**

தன்னுடைய தேசத்தில் உள்ள எல்லா மக்களும் உலகமெல்லாம் சுற்றி வரக்கூடிய கல்வியையும் அறிவையும் பெற வேண்டும் என்று பாரதிக்குத்தான் எத்தனை ஆசை!

# கல்விக்கூடம் ஒரு கோயில்...!

**நா**ன் திரிச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் மாணவனாக இருந்த காலத்தில் எனது பள்ளிக்கு வந்து பேசிய பெரியோர்களது வார்த்தைகளை நான் இன்னும்மறக்கவில்லை. நான் பள்ளிக்கூடங்களுக்குப் பேசப் போகிறபொழுதெல்லாம் அந்த வார்த்தைகளை மாணவர்களுக்குச் சொல்வது வழக்கம். அப்போது எனது பள்ளிக்கு வந்த பெரியோர்கள் அனைவரும், ''மாணவர்களே! எதிர்காலம் உங்கள் கையிலே இருக்கிறது'' என்று சொன்னார்கள். அது எவ்வளவு முக்கியமான வார்த்தை!

## எதிர்காலம்

எதிர்காலம் என்பதற்கு என்ன அர்த்தம் என்றால், சின்ன வயது உள்ளவர்களின் வயது வளர்கிறது. கல்வி வளர்கிறது. அறிவு வளர்கிறது. புத்திசாலித்தனம் வளர்கிறது. தெம்பு, உருவம், உற்சாகம் எல்லாம் வளரக் கூடிய

பருவம். இப்படிப்பட்ட பருவம் திரும்பவும் நமக்குக் கிடைக்காது. அதனால்தான் வளரக்கூடிய பருவத்திலே இருப்பவர்களைப் பார்த்துதான் 'எதிர்காலம் உங்கள் கையிலே இருக்கிறது' என்று சொல்லுவார்கள்.

வயது முதிர்ந்தவர்களைப் பார்த்து, 'எதிர்காலம் உங்கள் கையிலே இருக்கிறது' என்றா சொல்லுவார்கள்? வயது முதிர்ந்தவர்களைப் பார்த்துச் சொல்லமாட்டார்கள். எழுபது வயது, எண்பது வயது ஆன கிழவர்களாக—ஒரு ஐம்பது பேரை உட்கார வைத்துக்கொண்டு ''பெரியவர்களே...எதிர்காலம் உங்கள் கையிலேதான் இருக்கிறது'' என்று யாரும் சொல்லமாட்டார்கள். சொன்னால் என்ன பதில் சொல்லுவார்கள்? ''எங்கள் கையில் தடிதான் இருக்கிறது'' என்று சொல்லுவார்கள். காரணம் வயது ஆகிவிட்டால் எல்லாம் போக வேண்டியதுதான்.

### கல்விமான்கள்

நான் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் போகும்போதெல்லாம் சின்னப் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்வது இதுதான். ''எதிர்காலத்திலே நீங்கள் சிறந்து விளங்குவதற்கு ஒரே வழி, கல்விமான்களாகவும் அறிஞர்களாகவும் ஆவது ஒன்றுதான். உலகத்திலே இருக்கிற எல்லா தேசங்களிலும் ஆண்களும் பெண்களும் நூற்றுக்கு நூறு கல்வி கற்று அறிஞர்களாக ஆகிவிட்டார்கள்.. அந்த நிலை நம்முடைய தேசத்திற்கு இன்னும் வரவில்லை.''

### நாடு வீடு

''கல்வி இல்லாத நாடு, விளக்கில்லாத வீடு.'' விளக்கில்லாத வீட்டிலே யார் குடியிருப்பார்கள்? இருட்டாயிருக்கும். ஒரு நாலுபேர் விளக்கில்லாத வீட்டிலே குடியிருப்பதாக வைத்துக் கொள்வோம். நாலு பேரும் இரவில் படுத்

துத் தூங்குகிறார்கள். இரவு ஒரு மணிக்கு ஒருவன் எழுந்திருக்கிறான். வெளியிலே வரவேண்டும். எப்படி வருவது? பக்கத்திலே படுத்திருப்பவன் படுத்திருக்கிறவன் கழுத்திலே காலை வைத்து மிதிப்பான்.

மிதித்துவிட்டு அவனையே கேட்பான்: "எங்கடா படுத்திருக்கே?" என்று. அவன், "நான் எமலோகத்துக்குப் போகிற வழியிலே இருக்கேன்' என்பான். காலை வைத்தவனே மறுபடியும் "ஏண்டா எமலோகம் போகிறே?" என்று கேட்பான். "நீதான் அனுப்புகிறாயே... அதனால் தான் போறேன்" என்பான் பதிலுக்கு. அவன் வேண்டுமென்றா கழுத்தை மிதித்தான்? இருட்டிலே கண் தெரியாமல் மிதித்துவிட்டான். அதுபோல கல்வி அறிவு இல்லாதவன் வீட்டிலே ஒன்றுமில்லாததற்குக் கூட வெட்டிக் கொள்ளுவான்—குத்திக் கொள்ளுவான்!!

## கல்வி ஒளி

நமது நாடு மீண்டும் கல்வி ஒளி பெற்று விளங்க வேண்டும். இதற்காகத்தான் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறோம். பள்ளிக்கூடத்திலே தலைமையாசிரியர், கணித ஆசிரியர், விஞ்ஞான ஆசிரியர் தமிழாசிரியர், சரித்திர ஆசிரியர் என்று எத்தனையோ ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களால்தான் இளம் பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்க முடியும். மாணவர்களில் எத்தனையோ டாக்டர்கள் இப்போது இருப்பார்கள். எத்தனையோ இன்ஜினீயர்கள் இருப்பார்கள். எத்தனையோ விஞ்ஞானிகள் இருப்பார்கள்.

அதைக் கண்டுபிடித்து சொல்லுபவர்களே ஆசிரியர்கள். அதை நோக்கிச் செலுத்துவதற்காகத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தாய் தகப்பனுக்கு அது தெரியாது. அவர்கள் சாப்பாடு போடுவார்கள். துணிமணி எடுத்துக் கொடுப்பார்கள். புத்தகம் வாங்கிக் கொடுப்பார்கள். புதான்.

### தகப்பனார் விடை

ஒரு தகப்பனாரிடம் ''உங்கள் பையன் எதிர் காலத்தில் என்ன ஆவான்?'' என்று கேட்டேன், ''உயரமா வளருவான்!'' என்றார், அந்தத் தகப்பனார். நான் அவரிடம், ''இதை எப்படிக் கண்டுபிடிச்சீங்க?'' என்று சிரிக்காமல் கேட்டேன். ''இவன் அண்ணன் வளர்ந்திருக்கிறான். அதனால் இவனும் வளருவான்...'' என்று அவர் சொன்னார்.

நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தான் பாரதி. 'பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்...! எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்!'' என்றான். ஏன் அப்படிச் சொன்னான் பாரதி? ஏனெனில் கல்விக் கூடங்களில்தான் நம் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது.

மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆக வேண்டும். விஞ்ஞானிகளாக ஆக வேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆக வேண்டும். அதற்காகத்தான் உங்களைப் பாரதி சொன்ன இந்தக் கோயில்களில் கொண்டு வந்து விடுகிறோம்.

## ''சனியன் பிடித்து விட்டான்''

கலைகள் என்று பேசுகிறோம். 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்' என்றெல்லாம் படித்திருக்கிறோம். கலை என்ற சொல்லுக்கு 'அளவு' என்று பெயர். இது பொது அர்த்தம்.

சமையல் செய்கிறார்கள். அதற்குச் சமையற்கலை என்று எப்போது பெயர் வருமென்றால்—அடுப்பிலே பாத்திரத்தை வைத்துத் தண்ணீரைவிட்டு அரிசியைப் போட்டுக் கொதிக்க வைத்து அரிசியெல்லாம் சாதமாக வருமே...

அதை அப்படியே அரிசியாகவே இருக்கிற காலத்திலே வடிக்காமலும், அது குழையக் குழைய வெந்து போய்க் கூழாகாமலும் அந்தப் பக்குவத்திலே வடித்து எடுக்கிற போது, அது சாப்பிடக்கூடிய உணவாக ஆகிறதே அப்போது தான்.

## கலையின் விளக்கம்

சித்திரக்காரர் சுவரிலே அழகான சித்திரத்தைத் தீட்டு கிறார். 'ஐயோ...! கையிலே இன்னும் வர்ணமெல்லாம் பாக்கி இருக்கிறதே... வீணாப் போயிடுமே!'' என்று அவர் அந்தச் சித்திரத்தின் மேலே அளவு கடந்து பூசினால் அது கலையாக இருக்காது. அவருக்குச் சித்திரக்காரர் என்று பெயரும் வராது. சித்திரக் கலை என்று எப்போது குறிப் பிடப்படும் என்றால், அதிகமாக அதில் வண்ணத்தைத் தீட்டாமலும், அதிகமாக நிறங்களைச் சேர்க்காமலும், குறைக்காமலும், அளவோடு அதைத் தீட்டினால் அது கவர்ச்சியாக இருக்கும்! அப்போதுதான் அது சித்திரக் கலை என்று பெயர் பெறும். கலை என்றால் பொருத்த மாக அதற்குரிய அளவோடு இருக்க வேண்டும். ஆதலால் தான் எந்தத் துறையிலும் எந்த வித்தையும் அளவோடு நிற் கிற பொழுதுதான் அது கலையாகிறது...

ஓர் இசைக் கலைஞர் இருக்கிறார். சபையிலே எதை எதைக் கேட்டுச் சுவைக்கிறார்கள், எந்த அளவுக்குப் பாடினால் அது சுவையோடு நன்றாக இருக்கும் என்று உணர்ந்து அவர் பாடவேண்டும். எந்த அளவுக்கு இங்கு வந்திருக்கிற மக்கள் தனது இசையை ரசிப்பார்கள் என்று அவருக்கும் தெரியவேண்டும்.

அது இல்லாமல் தன் மனம்போன போக்கிலே தனக்குத் தெரிந்த ராகத்திலேயெல்லாம் அளவுக்கு மீறி இழுத்துக் கொண்டு பாடுவாரேயானால் அவர் சங்கீதக் கலையை

மறந்துவிட்டுப் பாடுகிறார் என்றுதான் ஆகிவிடும். எதுவுமே அளவோடு இருக்க வேண்டும்.

தன் கலை எந்த அளவுக்கு மக்களுக்குக் கவர்ச்சி உண்டாக்கும் என்று புரிந்துகொண்டு அதை நிறுத்துகிற போது அவன் கலைஞனாகிறான்.

## சனி விளக்கம்

துன்பத்தில் சிக்கியிருக்கும் மனிதரைப் பார்த்து, ''அவரைச் சனியன் பிடித்திருக்கிறான்'' என்று சொல்லு வார்கள். சில பேரைக் குறித்துப் பேசும்போது, ''அவன் பெரிய சனியண்டா'' என்பார்கள். இதற்கு ரொம்ப பேருக்கு அர்த்தமே தெரிவதில்லை. 'சனியன் என்றால் ரொம்ப கெடுதி செய்கிறவன்... பெரிய துன்பத்தை உண்டாக்குகிறவன்' என்றெல்லாம் பலபேர் பேசுவார்கள். அப்படிச் சொல்லவே கூடாது... அது சரியான அர்த்தமே இல்லை.

## ஜோதிட சக்கரம்

ஜோசியம் தெரிந்தவர்கள் சொல்ல நான் கேட்டிருக் கிறேன். மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம் என்ப தெல்லாம் பனிரெண்டு ராசிகள். பிறகு சூரியன், சந்திரன், ராகு, கேது இவை எல்லாம் கிரகங்கள். இதிலே சனியன் ஒரு கிரகம். இதில் ஒவ்வொரு கிரகமும் ஒரு வீட்டிலே யிருந்து இன்னொரு வீட்டிற்கு வருவதற்கு இத்தனை ஆண்டு ஆகும் என்று சொல்லுவார்கள். ஜோசியக் கணக் கிலே குரு பகவான் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்கு வருவதற்கு ஒரு ஆண்டு ஆகும். அப்புறம் ராகு, கேது என்னும் கிரகங்கள் ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்கு வருவதற்கு ஒன்றரை ஆண்டுகள் ஆகும். மற்ற கிரகங்கள் எல்லாம் ஆறு மாதத்திலோ, சில நாட்களிலோ மாறிவிடும்.

## இரண்டரை

இந்தச் சனி கிரகம் இருக்கிறதே, அதற்குத்தான் அதிக கனம். கனம்; அது ஒரு வீட்டிலிருந்து மெதுவாக நகர்ந்து இன்னொரு வீட்டிற்கு வருவதற்கு இரண்டரை ஆண்டுகள் ஆகும். அதனால்தான் 'சனிப் பெயர்ச்சி' என்றுகூட திருநள்ளாற்றிலே கொண்டாடுகிறார்கள். "சனியன் பிடித்தான்," "அதோ சனியன் வருகிறான்?" என்றால் கெடுதி செய்கிறவன் என்று அர்த்தமில்லை. ஜோசியர்களைக் கேட்டால் எல்லா கிரகங்களும் நல்லதும் செய்யும், கெட்டதும் செய்யும் என்பார்கள். அது அந்தந்த நேரத்தைப் பொறுத்தது.

ஆகையினால் எந்தக் கிரகத்தையும், நல்லதையே செய்யும் என்றோ, இது கெட்டதையே செய்யும் என்றோ சொல்லிவிடக்கூடாது. "சனியன் பிடித்தான் என்றால் சீக்கிரம் விடமாட்டான் என்றுதான்அர்த்தம். ஏனென்றால் ஒவ்வொரு வீட்டிலேயிருந்து இன்னொரு வீட்டுக்கு வருவதற்கு இரண்டரை ஆண்டுகள் ஆகிறது இல்லையா...! அதனால்தான் அந்தப் பேச்சு"சனியன் பிடித்துவிட்டான்" என்றால் துன்பம் கொடுக்கிறது என்று அர்த்தமில்லை. சீக்கிரம் விடமாட்டான் என்றே அர்த்தம்.

## உதாரணம்

நாம் எங்கேயாவது வெளியூருக்குப் போய்விட்டு வருகிறோம். அலுப்பாக இருக்கிறது. அப்போது நம்மை ஒரு நண்பர் பார்க்க வருகிறார். உட்கார்ந்து கொண்டு ரொம்ப நேரம் பேசிக் கொண்டே யிருக்கிறார். விடமாட்டேன் என்கிறார். கடைசியில் நாம், "எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது. உங்களுக்கும் வேலை இருக்குமே. வீட்டுக்குப் போகலையா?" என்று கேட்கிறோம். உடனே அவர், "நான் அங்கே போய் என்ன பண்ணப் போறேன்.... இங்கேயே கிடக்கிறேன் சார்" என்று சொன்னால்,

''சனியன் உங்களைப் பிடித்துள்ளான். சீக்கிரம் விடமாட்டான்...'' என்றுதான் அர்த்தம். இந்த சாதாரண கருத்து கூட நண்பர்களுக்கு அவ்வளவு சுலபமாகத் தெரிவதில்லை.

## தவத்திரு வாரியார் சுவாமிகள்

நல்ல கருத்துக்களைக்கூட நகைச்சுவையாக, அழகாகச் சொல்வதிலே நம்முடைய வாரியார் சுவாமிகள் வல்லவர். சில நேரங்களிலே அவர் ஆங்கிலச் சொற்களை அழகாகக் கையாளுகிற வல்லமை படைத்தவர்.

ஒரு தடவை நாங்கள் ஒரு விழாவுக்குப்போயிருந்தோம். நல்ல அறிஞர்கள் எல்லாரும் பேசினார்கள். வாரியார் சுவாமிகள்தான் தலைமை. எல்லாரும் பேசி முடித்து விட்டுப் புறப்படத் தயாரானோம். கார் கொண்டு வந்தார்கள். உடனே வாரியார் சுவாமிகள் எங்களையெல்லாம் பார்த்து, ''உங்களை எல்லாம் 'கவர்' பண்ணியாச்சா...?'' என்று கேட்டார்கள். எனக்கு எதுவும் புரியவில்லை... 'கவர் பண்ணியாச்சா' என்றால் என்ன? சாதாரணமாக 'கவர்' பண்ணினாங்களா?'' என்றால், ''உங்களையெல்லாம் கவர்ந்து கொண்டார்களா?'' என்றுதான் பொருள்.

இவர் என்ன கேட்டார் என்றால், 'உங்களையெல்லாம் கவர் பண்ணியாச்சா?' என்று... அதாவது, சன்மானத்தை ஒரு கவருக்குள்ளேதான் போட்டுக் கொடுப்பார்கள். அதாவது ''நீங்க பணம் வாங்கிவிட்டீர்களா?'' என்று கேட்பதற்குப் பதிலாக, வாரியார் சுவாமிகள் இப்படி, ''உங்களை எல்லாம் கவர் பண்ணியாச்சா?'' என்று மறைமுகமாகக் கேட்டார்.

எனக்கு முதலிலே புரியாமல்; பக்கத்திலிருந்த பேராசிரியரைக் கேட்க, அவர் எனக்குப் புரியும்படி சொன்னார். அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது, வாரியார்

சுவாமிகள் ஆங்கிலச் சொற்களை ரொம்ப அழகாகக் கையாள்கிறவர் என்று. காரில் வரும்போது நான், ''எல்லாரையும் கவர் பண்ணிட்டாங்க சாமி... முதல் முதல்லே சாமியைத்தானே கவர் பண்ணியிருப்பாங்க!'' என்றேன். வாரியார் சிரித்துவிட்டார்.

# செய்யும் தொழிலே தெய்வம்

## கல்வி ஒளி

கல்வி, ஒளிவிளக்கு—அதாவது இருண்ட இடத்தைப் பிரகாசம் ஆக்குவது. அதனுடைய குறிப்பு என்ன வென்றால், ஒருவன் கற்று விட்டால் அப்படிக் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்கவேண்டும். அப்படிப் பலருக்கும் ஒளி தருவதுதான் கல்வி.

ஒரு விளக்கின் வெளிச்சத்தினாலேதானே எல்லா வற்றையும் பார்க்கிறோம்! மேசை, நாற்காலி எல்லா வற்றையும் பார்க்கிறோம். அப்பா முகத்தைப் பார்க் கிறோம். அம்மா முகத்தைப் பார்க்கிறோம். எல்லோ ருடைய முகத்தையும் ஒரு விளக்கால்தான் பார்க்கிறோம். ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி விளக்கா எரியும்? ''இது எங்க அப்பா விளக்கு...அவர் முகத்தை மட்டும்தான் காட்டும்...இது என் மாமன் விளக்கு...இது என் மாமியார் விளக்கு...'' என்றா சொல்லுவார்கள். ஒவ்வொருத்தர் முகத்தையும் ஒவ்வொரு விளக்கா காட்டும்?

## அனைத்தும் பார்க்கிறோம்

ஒரு விளக்கு எரிந்தால் எல்லோர் முகத்தையும் பார்ப்பதுபோல், ஒருவன் கற்றுவிட்டால் அவன் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். அதனால்

தான் திருவள்ளுவர், 'நீ ஒருவன் கற்றுவிட்டால் அதனால் இந்த உலகமே பயனடைய வேண்டும்' என்று சொல்லு கிறார். 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்...'

கும்பலாக உட்கார்ந்த பொழுது ஒருவனுக்குச் சாப்பிடும் நினைப்பு வந்தவுடனே, 'இருங்கள்...இதோ வரு கிறேன்' என்று தனியாக ஓடினான். ஓடிச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்தான். ஆனால், சொற்பொழிவு செய்யும்போது அப்படியல்ல. பிரசங்கம் பண்ணுகிறவர் எல்லோரையும் கூப்பிடுவார்...''ஏன்...அவ்வளவு தூரத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள்...? அருகாமையில் வாருங்கள்...'' என்று அழைப்பார். அவரைத்தான் 'கற்றறிந்தார்'' என்று சொல்லுகிறார் வள்ளுவர். அப்படிப்பட்ட இன்பத்தை இந்த மனித வாழ்க்கையில் நாம் அனுபவிக்க வேண்டும்.

இது ஒரு பெரிய ஆற்றல் என்பது திருவள்ளுவர் கருத்து. மனத்திலே இருக்கிறதையெல்லாம் வெளியிலே எடுத்துச் சொல்வதென்பதே பெரிய கலை. பல பேருக்கு வராது. மனசிலே இருக்கும், வெளியிலே சொல்ல வராது. சில பேர் பேசும்போது நெஞ்சைக் காட்டி, ''எல்லாம் இங்கேயே இருக்கு...வெளியிலே வர்றதில்லை...'' என்று சொல்லு வார்கள். ஏன் வருவதுதானே?

மனதிலே இருக்கிறதையெல்லாம் வெளியிலே எடுத்துச் சொல்வதற்கே ஒரு ஆற்றலும் பழக்கமும் வேண்டும். அதனால்தான், நாம் எடுத்துச் சொல்லுகிறபோழுது மற்றவர்கள் இன்பத்தை அனுபவிக்கிறார்கள். ''தாமின்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்...''

இந்த முறையிலே கல்வியைக் கற்றவர்கள் உலகம் எல்லாம் இன்புறுவதைக் கண்டும் கேட்டும் தாமும் இன்புறுவார்கள் என்று சொல்லுகிறார். அதுதான் இந்தக்

குறட்பாவினுடைய ஆழ்ந்த கருத்து. இன்பம் என்ற சொல்லுக்காகத்தான் இவ்வளவும் விளக்க வேண்டியிருக்கிறது.

## நிலைத்த இன்பம்

ஏன்? அந்த இன்பம் நிலைத்து நிற்கிற இன்பம். உலகம் உள்ளளவும் புகழைக் கொடுக்கிற இன்பம். ஏனென்றால், படிக்கப் படிக்க, சிந்திக்கச் சிந்திக்கத்தானே நமக்கு அநேக உண்மைகள் தெரியவருகின்றன!

''செய்யும் தொழிலே தெய்வம்!'' என்ற பழமொழிக்குப் பலருக்கு அர்த்தமே தெரியாது. சிலபேர் ஆயுத பூசை வந்தவுடனே அவன் என்னென்ன சாமான்களை வைத்துத் தொழில் செய்கிறானோ அதையெல்லாம், சுத்தமாக வைத்து அவைகளுக்குப் பொட்டு வைத்து, பூ வைத்து கும்பிட்டு விட்டு மறுநாள் வேலைக்குப் போவதுதான், 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று நினைக்கிறார்கள். அதன் உண்மையான கருத்தை மேல் நாடுகளில் உள்ள தொழிலாளர்கள்தான் பின்பற்றுகிறார்கள் என்றால் யாரும் வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது.

## ஐம்பூத சக்தி

ஒரு தொழிலாளி வாழ்க்கையிலே முன்னுக்கு வர வேண்டுமென்றால், அவன் இந்தப் பழமொழியின் அர்த்தத்தை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், உலகத்திலே நிலம், நீர், தீ, காற்று, விண் என்று ஐந்து பூதங்கள் இருக்கின்றன. உலகத்தையே இந்த ஐந்து பிரிவுகள்தான் நடத்துகின்றன.

தாயுமான சுவாமிகள் 'ஐவகை எனும் பூதம் ஆதியை வகுத்து அதனுள் அசர சரபேதமான யாவையும்' என்று பேசுவார். நிலம், நீர், தீ, காற்று, விண் என்று ஐந்தும்தான்

உலகத்தை ஆட்சி செலுத்துகின்றன. இந்த ஐந்தும் உலகத்தையே அழிக்கவும் கூடியவை. யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. புயல் அடிக்கிறது. யாரிட மாவது கேட்டுக்கொண்டா அடிக்கிறது? அதுவாகவே அடிக்கிறது. பெரிய சேதங்களை உண்டாக்குகிறது. அதே காற்று தென்றலாக வருகிறது. மகிழ்ச்சியை அளிக்கிறது. இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ள வேண்டு மென்றால் இயற்கைக்கென்றே ஒரு சக்தி இருக்கின்றது.

அந்த இயற்கைச் சக்தியை எவராலும் மீற முடியாது. யாராலும் தடுக்க முடியாது. அந்த இயற்கை நம்மோடு ஒத்துழைக்கவேண்டும். ஒத்துழைக்காமல் இயற்கையின் சக்தி மீறி விட்டால் நமக்கு ஏற்படக்கூடிய அழிவு, துன்பத் திற்கு அளவேயில்லை. அதனால்தான் திருவள்ளுவர்கூட மழையைப்பற்றிப் பேசும்பொழுது 'மக்களுக்கு நன்மை செய் வதும் மழைதான், கடைசியில் கெடுதி செய்வதும் மழை தான்...' என்றார்.

## மழையும் இயற்கையும்

> 'கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
> எடுப்பதூஉம் எல்லாம மழை' [15]

என்றார். இந்த இடத்திலே மழை ஒன்றை மட்டுமே நாம் நினைக்கக் கூடாது. பொதுவாக இயற்கைச் சக்தியை நாம் போற்றி, பாராட்டி வணங்கி வாழ வேண்டும். இயற்கை யைப் புறக்கணித்தால் மனிதன் வாழமுடியாது.

செய்யும் தொழிலில் ஓர் இயற்கைச் சக்தி இருக்கிறது. அதற்கு நீ பயப்பட வேண்டாம். ஆனால் நீ அந்தத் தொழிலுக்குத் துரோகம் செய்தால் நீ வாழ முடியாது. மற்றவன் உன்னை வாழவைக்க முயற்சித்தாலும் அந்தத் தொழில் உன்னை அழித்துவிடும்.

## தொழிலின் ஆற்றல்

நான் வெளிநாட்டிற்குச் சென்றிருந்தபோது அங்கே ஒருவரைப் பார்த்து, ஒரு மேசை செய்துதர வேண்டும் என்று கேட்டேன். அதற்கு 'இவ்வளவு சாமான் வாங்கிக் கொடுக்கவேண்டும்' என்று சொன்னார் அவர். "நூறு வெள்ளி கொடுத்தேன்; எவ்வளவு கூலி" என்று கேட்டேன். முப்பது வெள்ளி கொடுங்கள் என்றார். 'என்னைக்கு வரணும்?' என்று கேட்டேன். '10-ம் தேதி மத்தியானம் வாங்க' என்றார். சரி என்று சொல்லி அவர் கேட்டதைக் கொடுத்துவிட்டுப் பத்தாம் தேதி மத்தியானம் போனேன்.

அந்தப் பொருளை அவர் எடுத்துக் கொடுத்தார். அது எவ்வளவு நன்றாக இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேனோ அதைவிட நூறு மடங்கு நன்றாக இருந்தது. "என்னப்பா இவ்வளவு அற்புதமாகச் செஞ்சிருக்கிறாயே"ன்னு என்று நான் கேட்டேன்.

## வேலையாளின் கருத்து

அதற்கு அவர், "என்னைக் காப்பாற்றுவது இந்தத் தொழில். இந்தத் தொழிலுக்கு நான் துரோகம் செய்தால் நான் வாழ முடியாது. நீங்கள் ஆண்டு முன்னூத்தறுபத்தைந்து நாளும் வேலை தர மாட்டீங்க. கூலி தர மாட்டீங்க. என்னிக்கோ ஒரு நாள் வருவீங்க... வேலை தருவீங்க. உங்களைத் திருப்திப்படுத்தவேண்டிய அவசியம் கூட எனக்குக் கிடையாது. இந்தத் தொழிலையே நான் திருப்தி செய்யணும்.

இந்தத் தொழிலுக்கு நான் விசுவாசமாக இருக்கணும். இந்தத் தொழிலுக்கு நான் வஞ்சனை செய்தால் வாழ முடியாது" என்றார். இதுதான் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பது. எந்த நாட்டில் இந்த எண்ணமிருக்கிறதோ... அந்த நாட்டிலேதான் தொழிலாளர் முன்னேற்றம் அடைவார்கள், தொழில் வளர்ச்சி அடையும்.

# ஈத்து உவக்கும் இன்பம்

ஒரு நண்பர் என்னிடம் கேட்டார் : "திருவள்ளுவர் குழல், யாழ் என்ற இரண்டைத்தானே சொன்னார்! குழலினால் வரக்கூடிய இனிமையும் யாழினால் வரக்கூடிய இனிமையும்—ஆக இந்த இரண்டு இனிமைகள் இருக்கின்றனவே, இந்த இரண்டு கருவிகளினால் வரக்கூடிய நாதங்கள், குழந்தைகளது மழலைச் சொற்களை மிஞ்சுவனாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த உலகத்திலே எத்தனையோ இசைக் கருவிகள் இருக்கின்றனவே, அவற்றிலே மழலைச் சொற்களையும் மீறி இனிமையைக் கொடுக்கின்ற இசைக்கருவிகள் இருக்கலா மல்லவா?"

## குழலும் யாழும்

இது நியாயமான கேள்விதான். குழலையும் யாழையும் விட மற்ற கருவிகள் மழலைச் சொல்லைவிட அதிகமான இனிமையைக் கொடுக்குமே என்று நினைப்பவர்களும் உண்டு. அதனால்தான் திருவள்ளுவர் குழலையும் யாழையும் எடுத்துக் கொண்டார். உலகத்திற்குப் பொதுமறை கூறிய திருவள்ளுவர், உலகத்திலேயே வாசிக்கக்கூடிய இசைக் கருவிகளை இரண்டு வகையாகப் பிரித்துக் காட்டினார் என்று கொள்ளவேண்டும். ஒன்று, வாயினால் வாசிப்பது. மற்றொன்று கையினால் வாசிப்பது. வாயினாலும் கையினாலும் வாசிக்காத இசைக் கருவிகளே உலகத்திலே கிடையாது.

குழல் என்பது வாயினால் வாசிக்கும் இசைக்கருவிகள் அனைத்தையும் குறிக்கிறது. யாழ் என்பது கையினால்

வாசிக்கின்ற இசைக் கருவிகள் அனைத்தையும் குறித்து நின்றது. இசைக் கருவிகளையெல்லாம் இரண்டாகப் பிரித்தால், ஒன்று குழல் என்பதிலே அடங்கும். மற்றொன்று, யாழ் என்பதிலே அடங்கும் என்பதால், 'குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று சொன்னார்.

ஆதலாலேதான் மழலைச் சொற்களின் இனிமையை எவ்வளவு அழகாக வேறு ஆசிரியர்கள் எடுத்துச் சொன்னாலும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. உலகத்திலே மனிதன் அடையக் கூடிய இன்பங்களிலே ஒரு வகைதான் மழலைச் சொற்களினால் அனுபவிக்கிற இன்பம். குழந்தைகளால் ஏற்படும் இத்தகைய இன்பத்தை நுகர்வதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

## நுகரத் தெரியாதவர்கள்

இன்பம் அனுபவிப்பதற்கு எல்லா வசதிகளும் இருந்தாலும் அந்த இன்பத்தை நுகர்வதற்குத் தெரியாத மனிதர்களும் இருப்பார்கள். திருவள்ளுவர் சொல்கிறார்: 'ஈத்து உவக்கும் இன்பம்'. ஈத்து உவக்கும் இன்பம் என்றால் 'பிறருக்குக் கொடுத்து அதனால் இன்பத்தை அனுபவிப்பதற்கு நீ கற்றுக் கொள்ள வேண்டும்' என்று சொல்கிறார்.

ஒரு பிச்சைக்காரன் வருகிறான். அவன், 'பசியெடுக்குது...சாப்பிட்டு நாலு நாளாகுது' என்று சொல்கிறான். அவனுக்குக் கொஞ்சம் பழையது போடுகிறோம். நீ கொடுக்கிற அந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டு அவன் முகமானது கொஞ்சம்மலர்ச்சியடையும்...அப்பாடா என்று, அப்பொழுது அதைப் பார்த்து நீ மகிழ்ச்சியடையணும்' என்பார். அதுதான் ஈத்து உவக்கும் இன்பம் என்கிறார். ''சனியன் தொலையடா...'' என்று திட்டிக் கொண்டு போடக்கூடாது.

நமது ஈகைத் தன்மையால் இவன் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறான். அதைக் கண்டு நாம் இன்பம் அனுபவிக்க வேண்டும். அதுதான் ஈத்து உவக்கும் இன்பம். பலருக்கு அப்படி இன்பம் அனுபவிக்கத் தெரியாது. திருவள்ளுவர் ஓர் இடத்திலே மனிதன் அனுபவிக்கிற இன்பங்களை இரண்டு வகையாகப் பிரித்தார். 'தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்...!' 'இந்தக் 'குறட்பாவிலே இன்பம் என்ற சொல்லினை இரண்டு முறை வைத்தார். தாம் இன்புறுவது, உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்...!

## இன்பம் இன்பம்

இந்தக் குறட்பாவிலே இன்பம் என்ற சொல்லினை இரண்டு முறை வைத்தார். தாம் இன்புறுவது, பிறகு உலகு இன்புறுவது. இன்பம் என்ற சொல்லை இரண்டு முறை பயன்படுத்துகிறார். அதாவது இன்பம் நுகர்வதை இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, நாம் தனிமையாகத் தனித்துஅனுபவிக்கிற இன்பம். அது பிறருக்குத் தெரியாது. உதாரணமாக நாம் சாப்பிடுவது...சாப்பிட்டு நாம்மகிழ்ச்சி அடைவது. நாம் தனியாகத்தான் உட்கார்ந்து சாப்பிடு கிறோம். நாம் மாத்திரம்தான் அனுபவிக்கிறோம்.

நாலைந்து நண்பர்களுடன் பேசிக்கொண்டேயிருப்பார் கள். சாப்பாட்டுக்குநேரம் வந்துவிடும் 'இருங்க...ஒருசின்ன வேலையிருக்கு...முடிச்சிட்டு வந்திடறேன்' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்து உட்காருவார்கள், இது தனியாக அனுபவிக்கிற இன்பம்.

இன்னொன்று, கூட்டமாகச் சேர்ந்து அனுபவிக்கிற இன்பம். தான் கற்ற கருத்துக்களைப் பலருக்கும் எடுத்துச் சொல்வது அது. எடுத்துச் சொல்லும்போது கும்பலாக

எல்லோரும் சேர்ந்து உட்கார வேண்டும். இவர் எடுத்துச் சொல்லுவார், அதை மற்றவர்கள் கேட்டு அனுபவிப்பார் கள். அதை இவரும் கேட்டு, பார்த்து மகிழ்ச்சியடைவார். அதுதான் 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு' என்றார். நாம் எதைக் கற்று அனுபவித்தோமோ அதைப் பிறரும் அனுபவிக்கிறார்களே என்ற இன்பம்... எல்லோரும் சேர்ந்து அனுபவிக்கிற இந்த இன்பம்தான் கல்வி.

## கல்வியின் பெருஞ்சிறப்பு

அதனால்தான் கல்வி கற்றவர்களை எல்லோரும் கூப்பிடுகிறார்கள். கற்றவர்கள் எந்த வெளிநாட்டிலிருந்தா லும், கூப்பிடுகிறார்கள். சென்னையிலிருப்பவரை, பம்பாயிலிருப்பவர்கள் கூப்பிடுகிறார்கள். கல்கத்தாவிலிருப் பவர்கள் கூப்பிடுவார்கள். 'ஐயா...நீங்கள் நிறையக் கற்றவர்கள் என்று கேள்விப்பட்டோம். நீங்கள் கற்று அனுபவிக்கிற இன்பத்தை எல்லாம் எங்களுக்கும் கொடுங் கள்' என்று கற்றவர்களைத்தான் கூப்பிடுகிறார்கள். நன்றாகச் சாப்பிட்டவனைக் கூப்பிட மாட்டார்கள்.

ஒருவன் தனியாகச் சாப்பிட்டுவிட்டு மற்றொருவனிடம் வந்து வகை, வகையாகச் சாப்பிட்டதையெல்லாம் சொன்னால் கேட்கிறவனுக்குக் கோபம் வரும். இவன் தனியாக முழுங்கினதுமில்லாமல் நம்மிடம் வேறு சொல்ல வந்துட்டார்ன்னு கோபித்துக் கொள்வார்கள்.

அதனால்தான் திருவள்ளுவர், 'நீ தனியாக அனுபவிக்கிற இன்பம் வேறு, எல்லாருடனும் சேர்ந்து கலந்து மகிழும் இன்பம் வேறு' என்றார். கற்றவர்கள் தாம் கற்றவையெல் லாம் பிறருக்குச் சொல்ல வேண்டும். ஏனென்றால் கல்வி ஒன்றுதான் பிறருக்குச் சொல்ல, சொல்ல கொடுக்கக் கொடுக்க வளரும். பணம் கொடுக்கக்கொடுக்கக் குறையும். அதனால் தான் ஒருவன் பணத்தை இன்னொருவனுக்குக் கொடுத்தால், 'திருப்பிக் கொடு' என்று கேட்கிறான்.

ஏன் என்றால் அது குறைந்திருக்கிறது. மடியிலே ஒருவர் நூறு ரூபாய் வைத்திருக்கிறார். அவரிடம் பணம் கேட்கிறோம். முப்பது ரூபாய் கொடுக்கிறார். மடியிலே மீதி எழுபது ரூபாய்தான் இருக்கும். ஆகையினாலேதான் "முப்பது ரூபாயைத் திருப்பிக் கொடு...கணக்கில குறையுது" என்று கேட்கிறார். பணம் கொடுக்கக் கொடுக்க குறையும். கல்வி அப்படியல்ல. கொடுக்கக் கொடுக்க வளரும்.

## ஆசிரியர்

ஓர் ஆசிரியர் பையன்களுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அவர்களையெல்லாம் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு, என்று படித்து வெற்றிபெற்றார்கள். பிறகு இந்த ஆசிரியர் என்ன செய்வார்? அவர்களுக்கெல்லாம் வாழ்த்து கூறி ஆசீர்வாதம் செய்து, 'நீங்கள் எல்லாம் மேலே நல்லா படித்து காலேஜிலே கெட்டிக்காரன்னு பேர் வாங்குங்கடா' என்று சொல்லித்தான் அனுப்புவாரே யல்லாமல், அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் திருப்பியா கேட்பார்?

என்னிடமிருந்த கல்வியெல்லாம் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டேன்... எல்லாக் கல்வியையும் நீங்கள் எடுத்துக்கிட்டுப் போயிட்டா அடுத்தவங்களுக்கு நான் எப்படிச் சொல்லிக் கொடுப்பேன்? நான் சொல்லிக் கொடுத்த கல்வியை எல்லாம் திருப்பிக் கொடுங்கடா" என்றா கேட்பார்? கேட்க மாட்டார். ஏன் கல்வியானது கொடுக்கக் கொடுக்க வளரும். பணம்தான் கொடுக்கக் கொடுக்கக் குறையும்.

# ஒரே ஒரு நூல்

இந்தக் காலத்திலே சிறந்த—பேரறிஞர்களாகப் படித்து வர்களாக இருப்பவர்களில், 'நான் ஒரே ஒரு புத்தகம்தான் எழுதினேன்' என்று சொல்லக் கூடியவர்களைப் பார்க்க முடியாது. சிலர் பத்துப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். பலர் ஐம்பது புத்தகங்கள் எழுதுகிறார்கள். சிலர் எண்ணிறந்த நூல்களை எழுதிக் கொண்டேயிருக்கிறார் கள், அது ஒருவகையான புத்திசாலித்தனம்தான்.

ஆனால் திருவள்ளுவர் வாழ்நாள் முழுக்க ஒரே ஒரு நூல்தான் எழுதியிருக்கிறார். அப்படியென்றால் அவர் எவ்வளவு சிந்தித்துச் சிந்தித்து எழுதியிருக்க வேண்டும். அதனால்தான் குறட்பாக்களைப் படித்துவிட்டு நமக்கு அர்த்தம் தெரிந்துவிட்டது என்று இருந்து விடக்கூடாது. அந்தக் காலத்திலேயே பல பெரியவர்கள் குறளுக்கு உரை எழுதியிருக்கிறார்கள். அதனுடைய அர்த்தத்தைச் சிந்தித்துத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

## நூல் வகைகள்

ஏனென்றால், சில நூல்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே வேண்டாம். சில நூல்கள் படித்தவுடனேயே விளங்கும். சில நூல்களைப் படித்துவிட்டு ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பூமியிலே விளைகின்ற பொருட்களிலே சில பொருட்கள் பூமிக்கு மேலேயே விளையும். கத்திரிக் காய், வாழைக்காய், கீரை இவையெல்லாம் பூமிக்கு மேலே தெரியும். சில மண்ணுக்குள்ளேயே உண்டாகி இருக்கும். அவற்றை நாம் தோண்டி எடுக்க வேண்டும். அதுபோல நாம் படிக்கும் நூல்களிலே சில ஒருமுறை படித்தால் போதாது. மீண்டும் மீண்டும் ஆழ்ந்து படித்தால் தான் அதன் பொருள் விளங்கும்.

'அறத்தான் வருவதே இன்பம்' என்று கூறினார். வள்ளுவர் நல்ல நெறியிலே, நல்ல வாழ்க்கையிலே ஒருவன் அடைகின்ற இன்பம் இருக்கிறதே, அதுதான் எப்போதும் நிலைத்து நிற்கிற ஒரு பேரின்பம் போல நமக்குப் பயன் படும். அதை விட்டுவிட்டு, கண்ணாலேயும், காதாலேயும், மூக்கினாலேயும் வருகின்ற மிகச் சிறிய இன்பங்களெல்லாம் இன்பங்களென்றே நினைக்கக் கூடாது.

ஓரிரு இடத்திலே திருவள்ளுவர், 'குழந்தைகளைப் பெற்று அவர்கள் அந்த மழலைச் சொல் பேசுகிறார்களே, அதைக் கேட்கிறபோது வருகிற இன்பம் இருக்கிறதே அந்த இன்பம் எதற்கும் இணையில்லை' என்று சொல்லு கிறார். அதை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார் 'குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்பது அந்தக் குறட்பா.

## மழலைச் சொற்கள்

குழந்தைகள் மழலைச் சொற்களைப் பேசுகிறபோது— அறையும் குறையுமாகச் சொற்களைப் பேசுகிறபோது... பெற்றவர்கள் தம்காதுகளால் அதைக் கேட்கும்போது தரக் கூடிய இன்பம் மிகப் பெரியது. குழந்தைகள் பேசுகிற சொற்கள் விளங்கவில்லையே என்று எவரும் வருத்தப்பட மாட்டார்கள். மழலைச் சொற்களிலே அவ்வளவு இனிமை யுண்டு. அந்த மழலைச் சொற்களின் இனிமையைச் சொல்ல வந்த திருவள்ளுவர், 'குழலினிது யாழினிது என்ப' என்று சொல்லுகிறார்.

அதாவது, குழல் என்பது புல்லாங்குழலைக் குறிக்கும். யாழ் என்பது ஒரு வீணையைக் குறிக்கும். இந்தக் காலத்திலே 'பிடிலையும்' ஓரளவு சேர்த்துக் கொள்ளலாம். குழலும் யாழும் இனிமையான இசையை உண்டாக்கும். செவிகளினால் நாம் கேட்டு மகிழ்கிறோம். இந்த இரண்டு இனிமைகளையும் காதுகளினால் கேட்கும் இன்பம்

இருக்கிறதே, அதை இந்த மழலைச் சொற்களுக்கு உவமையாகச் சொல்லுகிறார் வள்ளுவர்.

தான் பெற்ற பிள்ளைகள் பேசுகிற மழலைச் சொற்களைக் கேட்காதவர்கள்தான், அந்த மழலைச் சொற்களைக் கேட்டு இன்பம் அனுபவிக்காதவர்கள்தான், குழலினால் வரக்கூடிய இன்பத்தையும், யாழினால் வரக்கூடிய இன்பத்தையும் சிறந்தது என்று சொல்லுவார்கள். ஆனால் தம்முடைய மக்களுடைய மழலைச் சொற்களைக் கேட்டு அனுபவிக்கிறவர்கள், குழலும் யாழும் இனிமை என்று சொல்லமாட்டார்கள் என்று சொல்கிறார்.

## நுட்பம் உண்டு

இதில் ஒரு பெரிய நுட்பத்தினை வள்ளுவர் வைக்கிறார். 'குழலும் யாழும் இனிமையான நாதத்தை உண்டாக்கும். உண்மைதான்...ஆனால் இந்தக் குழலும் யாழும் கேட்கிறதுக்குத்தான் இனிமை; ஆனால், பார்ப்பதற்கு இனிமையாக இருக்காது. குழல் வாசிக்கின்றவர் முகத்தையும் யாழ் வாசிக்கின்றவர் முகத்தையும் பார்த்தால் சில நேரத்தில் நமக்கே பரிதாபமாக இருக்கும். சில நேரத்திலே வெறுப்பாகக்கூட இருக்கும். முகம் எப்படி இருந்தாலும் அவரது வாசிப்பிலே நாதம் நன்றாக இருக்கும்.

'குழலினிது, யாழினிது' என்று சொன்னதன் பொருள், அவை கேட்பதற்குத்தான் இனிமையைக் கொடுக்கும். ஆனால் பார்ப்பதற்கு அவை இனிமையாக இருக்காது. ஆனால், குழந்தைகள் பார்ப்பதற்கும் இனிமை, கேட்பதற்கு இனிமை...அதனால், குழலினிது யாழினிது என்ப.' இந்தச் சிறப்பினைச் சிந்திக்கவேண்டும்.

## தொலை தூரம்

இன்னொன்றையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குழலும் யாழும் வாசிக்கிறபோது இனிமையான நாதத்தை உண்டாக்கும். ஆனால் இவற்றைப் பக்கத்தி

லிருந்து கேட்கக் கூடாது. சற்று தூரத்தில் கேட்க வேண்டும். சில நேரத்திலே எங்கேயோ போய்க் கொண்டிருப்போம். யாரோ வாசிக்கும் புல்லாங்குழல் ஓசை நமக்குக் கேட்டுக் கொண்டேயிருக்கும். நம்முடைய காதில் அந்த நாதம் இனிமையாக விழுந்துகொண்டே யிருக்கும். எங்கேயோ வீணை வாசித்துக் கொண்டிருப்பார் கள். அது தொலைதூரத்தில் நம்முடைய காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இதுதான் இனிமையைக் கொடுக்கும்.

நம் புராணங்களில் கூடப் படிப்போம். மரத்தின்மீது உட்கார்ந்து கொண்டு 'கிருஷ்ண பகவான் புல்லாங்குழல் வாசித்தார், எங்கேயோ இருந்த பசுக்கள் எல்லாம் அப்படியே மயங்கியிருந்தன' என்று, எங்கேயோ புல்லாங் குழல் வாசிக்க வேண்டும். அதை நாம் தொலை தூரத்திலே யிருந்து கேட்க வேண்டும். அப்போதுதான் இனிமை.

ஆனால், குழந்தைகள் அப்படியல்ல. மழலைச் சொற்கள் அருகில் கேட்பதற்கும் இனிமை. குழந்தையை முகத்தோடு முகம் அருகில் வைத்துக் கொண்டு பார்ப்ப தற்கும் இனிமை. அதனால்தான் 'குழலினது யாழினது என்ப' என்றார்.

## நாடாளுமன்றத்தில்

நான் நாடாளுமன்ற உறுப்பினராகி முதல் கூட்டத் தொடருக்குப் போய் பதினைந்து நாட்கள் கூட ஆகியிருக்காது...அப்போது 'ஜவஹர்லால்' நேருதான் பிரதமர். 'மௌலங்கர்' சபா நாயகராக இருந்தார். அனந்தசயனம் ஐயங்கார் துணைசபாநாயகராக இருந்தார். பெரிய பெரிய ஆசாமிகளெல்லாம் எம்.பி.க்களாகவும் அமைச்சர்களாகவுமிருந்த நேரம்.

ஒரு நாள் நாடாளுமன்றத்திலே 'ரயில்வே' பட்ஜெட் வந்தது. பட்ஜெட் விவாதத்திலே நான் பேசினேன். நாடாளு மன்றத்திற்கு நான் புதுசா போயிருந்தாலும்கூட பயமோ, தயக்கமோ எதுவுமே என்னிடம் கிடையாது. ஏனென்றால் தமிழ் நாட்டிலே பல ஆண்டுகளாகப் பேசிக் கொண்டே வருவதால், மேடை எனக்கு மிகவும் பழகிப் போன செய்தி.

அனந்தசயனம் அய்யங்கார் சபைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்தார். அய்யங்கார் ரொம்ப வும் கெட்டிக்காரரர். அவர் கவர்னராகக்கூட இருந்திருக் கிறார். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுபவர். 'சமஸ்கிருதத் திலே' பெரிய மேதை. தமிழிலேயும் நன்றாகப் பேசுவார். என்னிடத்திலே வீட்டிலே அடிக்கடி தமிழிலே பேசிக் கொண்டிருப்பார்.

சமஸ்கிருதத்திலேயிருந்து பெரிய செய்திகளை எல்லாம் எனக்கு எடுத்துச் சொல்வார். கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய எல்லா மொழிகளும் தெரிந்த பன்மொழிப் புலவராகவே இருந்தார் அவர். எளிமையாகப் பழகுவார். எல்லார்க்கும் தன்னாலியன்ற உதவியைச் செய்வார்.

## அறிக்கைகள்

'பட்ஜெட்' விவாதம் தொடங்குவதற்கு முன்பே ரயில்வே அமைச்சகத்திலிருந்து உறுப்பினர்களுக்குப் பெரிய பெரிய அறிக்கைகளைக் கொடுத்திருந்தார்கள். அதுதான் வழக்கம். அந்த அறிக்கைகளை அநேகமாக யாரும் படிக்க மாட்டார்கள்! இருந்தாலும் அவைகளை நான் முழுவதும் படித்துப் பார்க்கிற பழக்கம் வைத்திருந்தேன்.

நான் பேசும்போது, ''ரயில்வே தொழிலாளர்களுக்கு என்னாலான வரைக்கும் ஏதோ சிறிய சேவை செய்திருக் கின்றேன். அவர்கள் சங்கடங்களை நான் அறிவேன். குறிப்பாக ''லோகோ ஷெட்டில்'' இரவும் பகலுமாக

வேலை செய்து இன்ஜின்களையெல்லாம் பழுது பார்க்கிறார்கள்.

ஆனால், மத்தியான வேளையிலே அவர்கள் சாப்பிடுவதற்கென்று ஒரு சின்ன இடம்கூட கிடையாது. வசதியாக ஒரு பத்து நிமிஷம் ஓய்வெடுப்பதற்கு ஒரு மின்விசிறி கூடக் கிடையாது. இன்னும் எவ்வளவோ வசதிக் குறைவுகள் இருக்கின்றன. ஆனால், இந்த அறிக்கையில் ரயில்வே தொழிலாளர்களுக்கு ஏதோ 'பிரமாதமா' வசதிகள் செய்திருப்பதாகவும், போதுமான அளவுக்கு அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் நன்மை செய்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறதே'' என்று வருத்தப்பட்டேன்.

## திருமணப் பெண்

இவர்கள் அறிக்கையில் கூறியிருப்பதற்கும் நான் நேரில் பார்ப்பதற்கும் எத்தனைப் பெரிய வித்தியாசம். நான் இறுதியாகச் சொன்னேன்: ''திருமணத்தின் போது பெண் பார்க்கறது என்று ஒரு வழக்கம் உண்டு. அதற்கு முன்னாலேயே பெண்ணின் புகைப்படத்தை அனுப்புங்கன்னு கேட்பாங்க...அதே மாதிரி மாப்பிள்ளை வீட்டாருக்கு ஒரு பெண்ணின் போட்டோவை அனுப்பிச்சாங்க...அந்தப் பெண் போட்டோவில் பார்க்க மிகவும் அழகாயிருந்தாள்...

மாப்பிள்ளை வீட்டார் ஒரு நாள் குறித்துக் கொண்டு பெண்ணைப் பார்க்கப் போனார்கள். அவர்கள் வீட்டுக்குப் போய் நேரில் பெண்ணைப் பார்த்தால், அந்த போட்டோவிலே பார்ப்பதற்கும் அந்தப் பெண்ணுடைய தோற்றத்துக்கும் சம்பந்தமேயில்லே...போட்டோவில் மிகவும் அழகா இருந்த பெண் நேரே பார்க்க வெறுப்பாக 'அசிங்கமா' இருந்தா...அதே மாதிரி இந்த அறிக்கையைப் படித்தால் ரயில்வே தொழிலாளர் நிலைமை மிகவும்அழகா இருக்கு. ஆனால் நேரில் பார்த்தால் நிலைமை மோசமாக இருக்கு' என்று பேசினேன்.

உடனே அனந்தசயனம் அய்யங்கார் என்னைப் பார்த்து (ஆங்கிலத்தில்) 'இந்த உறுப்பினர் திருமணம் ஆகாதவரா' என்று கேட்க, சட்டென்று நான் 'சபா நாயகருக்கு அவ்வளவு ஏன் அக்கறை' என்று திருப்பிக் கேட்டேன். உடனே சபையில் அனைவரும் 'ஓ' என்று சிரித்து விட்டார்கள். ஏன் என்றால் கல்யாண வயதில் அய்யங்காருக்கு அப்போது பெண்கள் இருந்தார்கள்.

## வங்காளப் பேராசிரியர்

ஒரு சமயம் நாடாளுமன்றத்தில், வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் 'ரயில்வே பட்ஜெட்டில்' பேசிக் கொண்டிருந்தார். அவர் ஒரு காலேஜ் புரொபசர், உயரமானவர், வயதானவர், ஆங்கிலம் மிக நன்றாகப் பேசுவார். அவர் பக்கத்தில் கேரளத்திலிருந்து வந்திருந்த ஓர் அம்மையார் அமர்ந் திருந்தார். அவரும் ஆங்கிலத்தில் நன்றாகப் பேசக் கூடியவர்.

புரொபசர் 'அப்பர் பெர்த், லோயர் பெர்த்'தைப் பற்றிப் பேசும் போது ''அப்பர் பெர்த் எல்லாம் நல்ல பலமாக இருக்கணும். உடம்பு கொஞ்சம் கனமா இருக்கிற வர்கள் மேலே படுத்தால் கீழே படுக்கிறவங்களுக்குப் பயமாயிருக்கும்...உதாரணமாக என் பக்கத்தில் இருக்கும் மதிப்பிற்குரிய உறுப்பினர் 'அப்பா பெர்த்லே' ஏறிப் படுத்தால் என்ன ஆவது?'' என்று நகைச்சுவையாகப் பேசி விட்டார். மன்றமே ஒரேயடியாகச் சிரித்து விட்டது. அம்மையாருக்குக் கோபம் வந்து, 'உங்கள் வேலையைப் பாருங்கள்' Mind your Business என்று சத்தம் போட்டார்கள். உடனே புரொபசர், This is my business என்றார். மன்றத்தில் மறுபடியும் பலத்த சிரிப்பு.

# கலப்புத் திருமணமா?

இருபது ஆண்டுகட்கு முன்னால் கல்லூரி இலக்கியக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக நான் ஈரோட்டிற்குப் போயிருந்தேன். இலக்கியக் கூட்டம் மாலை ஐந்து மணிக்கு முடிந்து விட்டது. ரயிலுக்கு நிறைய நேரம் இருந்தது. அதற்குள்ளே தந்தை பெரியாரைப் பார்த்து வணக்கம் சொல்லி விட்டுப் போகலாமே என்று அங்கே இருந்து பேராசிரியரிடம் 'பெரியார் ஊரில் இருக்காரா?' என்று கேட்டேன். ஊரில்தான் இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

## தந்தை பெரியார்

பெரியார் வீட்டிற்குப் போனோம். மாலை ஆறு மணி இருக்கும், பேராசிரியர் உள்ளே போய், "திருக்குறள் முனிசாமி வந்திருக்கார்" என்று சொன்னார். உடனே பெரியார், "வாங்க...வாங்க..." என்று வரவேற்றார். அது பெரியாரிடத்திலே இருந்த உயர்ந்த நல்ல பழக்கங்களில் ஒன்று.

சின்னப் பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களை எழுந்து நின்று வரவேற்று உபசரிக்கிற முறை இருக்கிறதே அது பெரியாரிடத்திலே இருந்ததுபோல வேறு யாரிடத்திலும் நான் பார்த்ததில்லை. அவர் கருத்து, அவர் கொள்கை, அவரது குறிக்கோள் எல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும், அவரிடம் இருந்த 'உபசரிக்கும்' பண்பு உயர்ந்த மனிதத் தன்மையைக் காட்டுவதாக அமைந்திருந்தது.

அடிக்கடி பெரியார் சொல்வார். உன்னை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று நீ ஆசைப்

படுகிறாயோ அதே மாதிரி மற்றவர்களை நீ நடத்
வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று.

நான் வணக்கம் சொல்லிவிட்டு, பெரியார் மு
உட்கார்ந்தேன். ''எங்கே வந்தீர்கள்?'' என்
கேட்டார். ''கல்லூரி இலக்கிய மன்றச் சொற்பொழிவு
காக வந்திருக்கிறேன்'' என்றேன்.

## திருமணப் பத்திரிகை

நாங்கள் பேசிக் கொண்டேயிருந்தபோது கரூரிலிருந்
ஒருவர் ஒரு 'கல்யாணப் பத்திரிகை' கொண்டு வந்
பெரியாரிடம் நீட்டினார். 'சரி...சரி...' என்று கூறி
படிப் பெரியார் அந்தப் பத்திரிகையைக் கையில் வாங்கி
கொண்டார். நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தி
அவ்வளவாக வெளிச்சம் இல்லை. எழுத்து சரியாக
தெரியவில்லை. கல்யாணப் பத்திரிகையை என்னிட
கொடுத்து, 'இதைக் கொஞ்சம் படியுங்க' என்றா
பெரியார்.

நான் உறையிலிருந்த அந்தப் பத்திரிகையை எடுத்து
பார்த்து, முதலில் 'தந்தை பெரியார் தலைமையி
சீர்திருத்தத் திருமணம்'னு படித்தேன். உடனே என்னை
பெரியார் முறைச்சுப் பார்த்து, ''கொஞ்ச
இருங்க''ன்னார். ''என்ன ஐயா...'' என்று கேட்டேன்
''இவங்களுக்கு நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியு
இன்றும் புத்தி வரலியே'' என்று வருத்தப்பட்டு
கொண்டார். ''ஏன் ஐயா, இப்படிச் சொல்கிறீர்கள்?
என்று கேட்டேன்.

## சீர்திருத்தம்

''சீர்திருத்த 'திருமணம்'னு போட்டிருக்காங்களே.
இது முட்டாள்தனம் இல்லியா?'' என்றார். 'இதில்
என்னங்க முட்டாள்தனம் இருக்கு? சீர்திருத்த

போட்டிருப்பதில் என்ன தப்பு? மாப்பிள்ளை ஒரு சாதியென்று போட்டிருக்கு, பெண் வேறு ஜாதின்னு போட்டிருக்கு. ரெண்டு ஜாதிகளுக்குள்ளே திருமணம் செய்றாங்க...அப்போது அது சீர்திருத்த திருமணம் இல்லியா?'' என்று கேட்டேன் நான்.

பெரியார் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, ''உங்களுக்குக்கூட இன்னும் புரியலியே...?'' என்றார். நான், ''என்னங்கன்னு'' கேட்டேன், ''இந்த உலகத்திலே ஒரு ஆணும் பெண்ணும்தானே திருமணம் செய்துக் கிறாங்க?'' என்று கேட்பார். ''ஆமாம்'' என்றேன் சிரித்துக்கொண்டே.

''இது எல்லாருக்கும் தெரிஞ்ச செய்திதானே...அப்படி இருக்கிறபோது சும்மா திருமணம் என்றுதானே போடணும்...?எவனோ தெரியாத்தனமா, முட்டாத்தனமா நாட்டிலே ஜாதிகளை வளர்த்துட்டான். அதுக்காக நாம் ஏன் சீர்திருத்தம்னு போடணும்? இதைச் சாதாரணமாக 'திருமணம்' என்று போடறதுதானே சரி.

ரொம்ப பேர் கலப்புத் திருமணம்னு போடறாங்க. ''சீர்திருத்தக் கலப்புத் திருமணம்னா என்ன அர்த்தம்? ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடக்குது...இதிலே என்ன கலப்புத் திருமணம்? அப்படிப் போடலாமா? கலப்புத் திருமணம்னு எப்ப போடணும்னா 'மாட்டுக்கும் மனுஷனுக்கும்' திருமணம் நடந்தால்தான் அதைக் கலப்புத் திருமணம்னு போடலாம்'' என்றார் பெரியார். நானும் என்னுடன் வந்த கல்லூரிப் பேராசிரியரும் வாய் விட்டுச் சிரித்து விட்டோம். ''என்னய்யா நான் சொல்றது?'' என்று பெரியார் மறுபடியும் கேட்டார். ''ஆமாங்க ஐயா...நீங்க சொல்றதுதான் சரி...இனிமேல் இப்படி யாரும் போடவேண்டிய அவசியமில்லை'' என்றேன் நான்.

## தாடிப் பெரியார்

பெரியார் பேசும்போது, அநேக ஆழ்ந்த, புதுமையான கருத்துக்களை ரொம்ப நகைச்சுவையுடன் கூறுவார். முப்பது, நாற்பது ஆண்டுகட்கு முன்னே ஒரு சமயம் பெரியார் சீர்காழிக்கு வந்திருந்தார். அப்போது ஒருவர் பெரியாரிடம் வந்து, ''நீங்க ஏன் தாடி வளர்த்திருக்கிறீங்க?'' என்று கேட்டார். உடனே பக்கத்திலிருந்த நாங்களெல்லாம், 'பெரியார் என்ன பதில் சொல்லப் போகிறாறோ?' என்று ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தோம். அப்போது நயா பைசா வராத நேரம். ஓரணா, அறையணா புழங்கிக் கொண்டிருந்த காலம்.

பெரியார், உடனே அந்த ஆசாமியைப் பார்த்து, ''நான் தாடி வளர்க்கறதனாலே யாருக்கும் ஒரு 'கஷ்டமும்' இல்லேன்னு நினைக்கிறேன். அப்படி ஒரு வேளை நான் தாடி வளர்க்கிறதனாலே உனக்கு ஒரு இரண்டணா வருமானம் குறைந்து போச்சுண்ணா, இந்தா இரண்டணா வாங்கிட்டுப் போ...''ன்னு சிரிச்சுக்கிட்டே சொல்ல, கேள்வி கேட்ட அந்த ஆசாமியும் சிரித்துக்கொண்டே போய்விட்டார்.

## கொடிகள்

சாதாரணமாக ஆண்களைவிடப் பெண்களே அழகாக இருப்பதாகச் சொல்கிறார்கள். பெண்களைக் 'கொடி' என்று பேசுகிறார்கள்...நான் ஒரு நண்பரிடம் 'பெண்களை ஏன் கொடிஎன்கிறோம்?'' என்று கேட்டேன்...''பெண்கள் ஒல்லியாக மென்மையாக இருக்கிறார்கள்...அதனாலே 'கொடி' என்று சொல்லுகிறோம்'' என்றார் அவர். ''சில பேர் குண்டாக இருக்கிறார்களே, அவர்களையும் கொடி என்றே அழைக்கலாமா?'' என்று கேட்டேன். "ஒன்று இரண்டு கொடி அப்படித்தான் இருக்கும்" என்றார் அவர்.

நான் "பல கொடிகள் அப்படித்தானே இருக்கின்றன?" என்று சொன்னதும், அவர் சிரித்தார். பிறகு நான் சொன்னேன்...'கொடி' என்பது மென்மையைக் குறிப்பதற்கு அல்ல. கொடி தனித்து இருக்காது. சில கொடிகள் தரையிலே படரும். சில கொடிகள் மரத்திலோ, அல்லது ஒரு கொம்பிலோ சுற்றிக்கொண்டு படரும். பெண்கள் ஓர் ஆடவனைச் சுற்றித் தழுவிக் கொண்டு வாழவேண்டும். நடைமுறையில் கொடிகளைத் தாங்கும் 'கொம்பு' என்று சொல்வார்கள். அதாவது அவன் பலமாக, உறுதியாக இருப்பான். உழைத்து நிறைய பணம் சம்பாதிப்பான். பெண் கொடியானது அவனைச் சுற்றிக்கொண்டு வாழ்க்கை நடத்தும் என்று சொல்வார்கள்.

இது பழங்காலத்துப் பேச்சு...இப்போது அப்படியில்லை. அநேக இடங்களில் 'கொடி' சம்பாதிக்கிறது... கொம்பு சும்மா இருக்கிறது. கொம்பிடம் 'என்ன செய்கிறாய்?' என்று கேட்டால், 'கொடியைச் சுத்திக்கிட்டு இருக்கேன்' என்கிறது. இதுவே அதற்கொரு வேலையாய்ப் போய்விட்டது!"

# சிலைகளும் புள்ளிகளும்

முன்பு ஒரு முறை பெருந்தலைவர் காமராஜரும் சி. சுப்பிரமணியமும் கடலூரிலே ஒரு பெரிய கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். இளைஞர் காங்கிரஸ் கூட்டம். குமரி அனந்தன்தான் அந்தக் கூட்டத்தை முன்னின்று நடத்தியவர் என்று எனக்கு ஞாபகம். அந்தப் பெருங் கூட்டத்தில் நானும் பேசினேன்.

சிலை வைக்கும் வழக்கம் எங்கும் உண்டு. ஆனால், அதை ஓரிடத்திலோ இரண்டு இடங்களிலோ வைத்தால் தான் அழகு. ஊர் முழுக்கக் கண்ட கண்ட இடங்களி

லெல்லாம் சிலையை வைக்கிறார்கள். ஊர் முழுவதும் சிலையை வைத்துக் கொண்டிருந்தால் அது ஓர் அடையாளம் என்று ஆகாமல், நகைப்பிற்கிடமாகிவிடும்.

சலவைத் தொழிலாளர்கிட்டே ஒரு வேட்டியைச் சலவைக்குப் போட்டால், அவர் வேட்டியின் ஒரு மூலையில் ஒரு புள்ளி வைப்பார். இது ஒரு அடையாளத்திற்காகத் தான்...இந்த அடையாளப் புள்ளியை வேட்டி முழுக்க யாராவது வைப்பார்களா? 'என்னப்பா வேட்டி முழுக்க புள்ளிவைக்கிறாயே'ன்னு கேட்டால், ''இது மிகவும் விலை உயர்ந்த வேட்டி...அதனாலே பத்திரமா பார்த்துக் கணும்னு வேட்டி முழுவதும் வைத்தேன். சலவை செய்பவர் சொன்னா நமக்குக்கோபம் வருமா? வராதா?'' என்று பேசினேன். இதைக் கேட்டு நமது பெருந்தலைவர் உரக்கச் சிரிச்சிட்டாரு...காமராஜ் சிரிக்கிறார் என்றால் அது சாதாரணமானதா?

## கலைவாணர்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், ''எந்த மனிதர் கள்ளங்கபடமில்லாதவர்களாய், மனத்தால் தூய்மையாய் இருக்கிறாரோ அவர்தான் மனம்விட்டுச் சிரிப்பார்... வஞ்சகனுக்கும் உள்ளத்தை ஒரு மாதிரி குறுகுறு என்று வைத்திருக்கிறவனுக்கும் அதிகமாக மனம் திறந்த சிரிப்பு வராது'' என்று ஒருமுறை கூறினார். எவ்வளவு பெரிய உண்மை.

சொல்கிற கருத்துக்களை எளிமையாகச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதற்குத்தானே படித்த அறிவாளிகளையும் புலவர்களையும் பேசுவதற்கு அழைக் கிறோம், அவர்கள் முப்பது வருஷங்கள் படித்ததை நமக்கு முப்பது நிமிஷத்திலேயே எளிமையாகவும் சுருக்கமாகவும் சொல்ல வேண்டும். ''இது நான் முப்பது ஆண்டுகள் படித்த செய்தி; ஆகையால் நீங்கள் முப்பது நாளாவது [illegible].'' என்று சொல்லக்கூடாது.

## கீரை

உதாரணமாக, காலையில் 'மார்க்கெட்டிற்குப்' போய் கீரை வாங்கி வருகிறோம். நிறைய வாங்கிய கீரையை மனைவியிடம் கொடுக்கிறோம். அந்த அம்மாள் அந்தக் கீரையை அரிந்து எடுத்து, அதை நீரிலே கழுவி வேகவைத்துக் கடைந்து கொஞ்சமா, ஒரு கரண்டியிலே எடுத்துக்கொண்டு வந்து இலையிலே சாப்பிட வைக்கிறாள். நாம் வாங்கி வரும்போது கீரை கிட்டத் தட்ட ஒரு குண்டான் நிறைய இருந்தது. ஆனால், மனைவி வைத்தது ஒரு கிண்ணம் அளவுதான்.

அப்படியில்லாமல் அந்த மனைவி இலையைப் போட்டு,

''காலையில் நீங்கள் வாங்கி வந்த கீரையைக் கொண்டு வந்து வைக்கிறேன்'' அப்படியே பச்சைக்கீரை முழுவதை யும் கொண்டுவந்து வைத்தால் அப்புறம் இவள் எதற்கு? அறிஞர்கள் தாங்கள் படித்த ஆயிரக்கணக்கான நூல்களை எல்லாம் கடைந்தெடுத்து நமக்குக் கொஞ்சமாகவும் அதே நேரம் ஜீரணம் ஆகக் கூடியதாகவும் கொடுக்க வேண்டும்.

## ரிஷிகேசம்

நான் 1952-லிருந்து 57 வரைக்கும் 'லோக் சபா' உறுப்பினராக இருந்தபோது அடிக்கடி 'ரிஷிகேசம்' சிவானந்தர் ஆசிரமத்துக்குப் போய்விடுவேன். 'டேராடூன் எக்ஸ்ப்ரஸில், புறப்பட்டுப் போய் காலையில் ஏழு மணிக்கு 'ஹரித்வாரில்' இறங்கி ரிஷிகேசம் போகணும். இறங்கிய வுடனே அங்கேயிருக்கிற 'டோங்கா' வாலாக்கள் என்னைப் பார்ப்பார்கள். நான் அடிக்கடி வருவதைப் பார்த்துப் பழக்கப்பட்ட அவர்கள், 'என் வண்டியிலே வாங்க'ன்னு கூப்பிடுவார்கள். நம்ம ஊரில் ஒரு பழகிப் போன வண்டிக்காரன் நம்மைக் கூப்பிடுகிற மாதிரி அங்கிருக்கிறவன் 'புராண ஆத்மி, புராண ஆத்மி,

ஆயியே—' என்று கூப்பிடுவான். 'நான் பழைய ஆள்... வேற யார்கிட்டேயும் போகாதீங்க'ன்னு கூப்பிடுவான். ''ஓ...நீ புராண ஆத்மியா...? நானும் புராண ஆத்மி தான்'' என்று அவன் வண்டியில்தான் உட்கார்ந்து போவேன்.

## பட்டம்

ஒரு தடவை சுவாமி சிவானந்தர் எனக்காக பூஜை, யாகம் எல்லாம் செய்து 'திருக்குறள் கேசரி' என்கிற பட்டத்தைக் கொடுத்தார். அவர் என்னிடம் மிகவும் பிரியமாக இருப்பார். 'முனுசாமிஜி' என்றுதான் கூப்பிடுவார். 'இந்த கங்கைத் தண்ணில போய்க் குளிக்காதீங்க...ஜலம் ஐஸ் மாதிரி இருக்கும். உங்களுக்கு வெந்நீர் வைத்துக் கொடுக்கச் சொல்லியிருக்கேன். வெந்நீரிலேயே குளிங்க. கங்கைத் தண்ணி உங்களுக்கு ஒத்துக்காது' என்று சொல்வார். அங்கு தமிழ்நாட்டு மக்கள் நிறைய வருவார்கள். அதற்காக என்னை அங்கே அடிக்கடி பிரசங்கம் பண்ணச் சொல்வார்.

## ஆலயங்களுக்குச் செல்லுதல்

ஒரு தடவை பிரசங்கத்திலே ஒரு கருத்தைச் சொன்னேன். ''பெரிய மகான் ஒருவர் 'ஆலயங்களுக்குப் போய் தெய்வ வழிபாடு நடத்துங்கள்; உங்கள் பாவங்கள், துன்பங்கள், கவலைகள் எல்லாம் போகும். இன்பம் வரும்' என்று சொன்னார். ஒருத்தர் சரிதான்னு சொல்லி ஒரு ரெண்டு, மூணு மாசம் ஆலயத்துக்குப் போய் பார்த்துவிட்டு வந்து, 'ஒண்ணும் தெரியலீங்களே...நீங்க சொன்னீங்களேன்னு நான் இத்தனை மாசமா சுத்தி சுத்திப் பார்த்தேன். ஒண்ணும் ஆகலியே'ன்னு சொன்னார். அதற்கு மகான், 'மூணு நாலு மாசத்திலே உனக்குப் பயன் வந்துடுமா? அதுக்குள்ளேயா நீ செய்த பாவமெல்லாம் தொலைஞ்சிடும்?' என்று கேட்டாராம்.

## துன்பங்கள் மறைய

ஒருத்தர் ரயிலில் வருகிறார். ஸ்டேஷனில் இறங்குகிறார். இறங்கறப்போ ஒரு படிக்கட்டு தடுத்து கீழேக் விழுந்தார். முட்டியிலே அடிபட்டதும் எலும்பு முறிந்ததும் ரத்தம் வந்ததும் ஒண்ணு பின்னாலே ஒண்ணு நடக்காது. எல்லாம் ஒரே நேரத்திலே நடந்துடும். ஒரு நிமிஷத்திலே நடந்ததை ஒரே நிமிஷத்திலே குணப்படுத்த முடியுமா? இந்தக் காயம் பட்டது ஒரு நிமிஷம்...அது ஆறுவதற்காக 'ஆஸ்பத்திரியில் ஒரு வருஷம் இருக்க வேண்டியிருக்கிறது. நாம் பார்த்து வளர்த்த உடம்புக்கு ஒரு வினாடியில் உண்டான துன்பம் நீங்க—குணமாக ஒரு ஆண்டு என்றால், பல பிறவிகளிலே எவ்வளவு பாவத்தைச் செய்த, நம் மனமானது எவ்வளவு நைந்து போய்க் கிடக்கும்? அதற்கு இறை தியானம், ஒழுக்க தியானம், போன்றவற்றில் நீ எத்தனை ஆண்டுகள் இருக்க வேண்டும்?'' என்று நான் ஓர் உதாரணத்தையும் எடுத்துச் சொன்னேன். இந்த உதாரணம் சுவாமிஜிக்கு ரொம்பவும் பிடித்துப்போய், ஒவ்வொரு பிரசங்கத்திலும் இதை மக்களுக்கு எடுத்துச் சொல்லச் சொல்வார்.

## அனுபவ பெருமை

வாழ்க்கையிலே அனுபவம் சொல்லிக் கொடுக்கிற பாடத்தினைப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் மற்ற அமைப்புகளும் சொல்லிக் கொடுக்க முடியாது.

அதனால்தான் பெரியவர்களிடத்திலே நெருங்கிப் பழகி, அவர்கள் அனுபவ வாயிலாகச் சொல்லும் கருத்துக்களை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். வாழ்க்கையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் அனுபவ உண்மைக்கு விலை மதிப்பே கிடையாது.

## பாடுவார்

ஒரு முறை நான் கிராமத்திலே நடந்து சென்று கொண்டிருந்தேன். மாலை நேரம். அப்பொழுது ஒரு வீட்டுத் திண்ணையிலே இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண் திடுமென்று, ''நேரம் ரொம்ப ஆகிவிட்டது. இன்னும் நான் சமையல்கூடச் செய்யவில்லை. எங்க வீட்டுக்காரர் வந்தால் பாடுவார்'' என்று சொன்னாள். குறித்த நேரத்தில் சமையல் ஆக வில்லை என்றால் கணவன் வந்து கோபத்தில் திட்டுவான் என்பதைத்தான் 'அவர் பாடுவார்' என்று அவள் சொல்லு கிறாள். இசை!

பிச்சைக்காரன் வாசற்படியிலே வந்து 'அம்மா... பிச்சை போடு...' என்று கேட்பான். ஆண்களாக இருந்தால் கையிலே இருக்கும் காசைப்போட்டுவிட்டுப் போய்விடுவார் கள். பெண்களோ, அவனிடம் 'ஒரு பாட்டுப் பாடேன்' என்று கேட்பார்கள். இசைஞானம்!

## பாடும் இடம்

ஒரு நாள் காலையில் ஒன்பது மணிக்கு நான் நடந்து கொண்டிருக்கிறேன். ஒரு தண்ணீர் குழாய். அதற்குப் பக்கத்திலே அநேகப் பெண்கள் தண்ணீர் பிடித்துக் கொண் டிருக்கிறார்கள் இரண்டு பெண்மணிகளுக்குள் பயங்கரமான சண்டை வந்துவிட்டது. அதிலே ஒரு பெண் ''சாக்கிரதை யாகப் பேசுடீ, எங்கிட்டே பாட்டு வாங்கிக் கட்டிக்காதே'' என்று சொல்லுகிறாள். அப்போ அவள் கட்டிக்கிற அள வுக்கு இவள் பாடுவாள் என்றா அர்த்தம்? இல்லை, இவள் திட்டப் போகிறாள், அதை இவள் கேட்டுக் கொள்ள வேண்டும். ''நான் திட்டுவேன்'' என்று சொல்லாமல் 'என்னிடத்திலே நீ பாட்டு வாங்கிக் கட்டிக்காதே' என்று சொல்கிறாள். இசை வளர்ச்சி!

ஒருவர் இறந்து போனால்கூட பெண்கள் பாட்டுத்தான் பாடுகிறார்கள். அதை ஒப்பாரி என்று சொல்கிறார்கள். ஒப்பாரியைக் கேட்டு விட்டுத்தான் இறந்துபோன பிணம் கூடப் புறப்பட்டுப் போகிறது என்பார்கள். குழந்தை களைத் தூங்கச் செய்யும் தாலாட்டிலும் பெண்கள் சங்கீதத்தைச் சேர்த்திருக்கிறார்கள்.

இயல்பாகவே பெண்களுக்கு இந்த இசைஞானம் இருக் கிறதுஎன்பதற்கு இதெல்லாம் பழக்கத்திலேதெரிந்துகொள் கிற அடையாளங்கள்தான்; ஓடுகிற தண்ணீரிலேயும் ஆடு கின்ற இலைகளிலேயும் சங்கீதத்தைக் கண்டவன் தமிழன் என்றெல்லாம் பெருமையாகச் சொல்லுவார்கள்.

## படம் திறத்தல்

சாதாரணமாக நாட்டிலே நாம் காணும் இன்னொரு பழக்கத்தைச் சொல்லுகிறேன். ஒரு பெரியவர் நல்ல காரி யத்தைச் செய்திருந்தால், தான தருமங்கள் செய்திருந்தால் கல்வியறிவிலே சிறந்தவராக இருந்திருந்தால் அல்லது தெய் வீகத் துறையிலேயும் இலக்கியத் துறையிலேயும் பொருளா தாரத் துறையிலும் சமூகத் துறையிலும் நல்ல காரியங் களைச் செய்திருந்தால், அவருடைய உருவப் படத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

ஒரு தகப்பனார் தன் பிள்ளைகள்மீது பிரியமாயிருக் கிறார். நான் ஒரு தகப்பனாரிடம் 'நீங்கள் ஏன் உங்க பைய னிடம் பிரியமாயிருக்கிறீர்கள்' என்று கேட்டேன். 'அவன் என் பிள்ளை'ன்னு சொன்னார். 'உங்க பிள்ளைன்னுதான் எனக்குத் தெரியுமே, ஏன் பிரியமா இருக்கிறீங்க?' என்று மறுபடியும் கேட்டேன். உடனே அவருக்குக் கோபம் வந்து என்னை ஒரு முறை முறைத்து விட்டு, ''சரிதான் போங்க'ன்னு சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவருக்கு அந்தக் காரணத்தைச் சொல்லத் தெரியவில்லை.

## புகைப்படம்

நாமெல்லாம் 'போட்டோ' எடுத்துக்கொள்ளுகிறோம். அதை நம் வீட்டிலே கண்ணாடி போட்டு மாட்டி வைத்துக் கொள்கிறோம். அநேகமாக நாம் எல்லோருமே நமது வீட்டுச் சுவர்களிலே படமாகத் தொங்கிக் கொண்டிருக் கிறோம்! சில பேர் மனைவியோடு சேர்ந்து படமெடுத்து சுவரிலே தொங்குவார்கள்.

ஏன் போட்டோ எடுத்துக்கொள்கிறோம் என்றால், நமக் குத் தெரியாது. கேட்டால் ரொம்பப்பேர் 'என் போட்டோ இருக்கட்டும்ங்க' என்று மட்டுமே சொல்வார்கள். சரி நம் 'போட்டோ' இருக்கட்டும், உருவப் படம் திறக்கிறோமே அதற்கு வருவோம். ஏன் படம் திறக்கிறோம்? அந்தப் படத் துக்கு அப்படி என்ன அத்தனை மரியாதை?

யார் தர்மம் செய்து, புண்ணியம் செய்து பெயரும் புகழோடும் இருக்கிறார்களோ, அவர் படத்தைத் திறப் பதற்குப் பதிலாக அவரையே திறக்க வேண்டியதுதானே!... அவரைக் கூப்பிட்டு நாற்காலியில் உட்காரவைத்து, 'இந்த நாட்டுக்கு இத்தனை தர்மம் செய்திருக்கிங்க... எல்லாரும் உங்கள் மேல் பிரியமா இருக்கிறாங்க... உங்களை மத்தியானம் மூணு மணிக்கு நாங்க திறக்கப் போறோம்' என்று சொல்லி ஒரு பெரிய ஜமுக்காளத்தை அவர் மேலே போர்த்தி மூணு மணிக்கு ஒருவரைக் கூப்பிட்டு 'நம்ப ஐயா அவர்களை இந்தத் தலைவர் திறப்பார்' என்று அந்த ஜமுக் காளத்தை எடுக்கச் சொன்னால் என்ன? இது நமக்குச் சிரிப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது அல்லவா?

## உருவம் மற்ற இடத்தில்

உயிரோடு இருப்பவரைவிட அவர் படத்திற்கு என்ன அத்தனை மரியாதை? ஒரு மனிதன் தன்னுடைய உருவத்தை மற்ற இடங்களில் கண்டால், அவன் மகிழ்ச்சி

யடைதல் இயல்பு. சிலருடைய உருவம் 'போட்டோ பேப்பரிலே' வந்துவிடும். உடனே அவரே, 'என் போட்டோ பேப்பர்ல வந்திருக்குதே பார்த்தீங்களா?' என்று வருபவர் களிடமெல்லாம் பத்திரிகையைக் காட்டிக் கொண்டிருப் பார்.

ஆனால் நாம் எடுத்துக் கொள்கிற புகைப்படமும் அல்லது திறந்து வைக்கிற உருவப் படமும் போட்டோவும் பேசாது; வளராது; அதற்கு உயிரில்லை. ஆனால் பேசக் கூடியதும், வளரக்கூடியதும் உயிருள்ளதும் ஆன போட்டோ இருக்கிறதே அதற்குத்தான் பிள்ளை என்று பெயர். அதனால்தான் தகப்பன் தன் பிள்ளையைக் கண்டு மகிழ்ச்சியடைகிறான். அவன்மீது பிரியமாயிருக்கிறான். ஏன்? இவன் உருவத்தினையே முகத்தையே இன்னொரு உயிராக அங்கே பார்க்கிறான்.

சில தாய்மார்கள் பிறந்த குழந்தையைப் பார்த்து, ''இந்தப் பையன் அப்படியே அப்பனை உரிச்சு வச்சிருக்கு'' என்பார்கள். அதற்குத்தான் குறைவாக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது.

## நல்ல காலம்

நல்ல காலம் என்ற சொற்கள்—எல்லோரையும் மகிழ் விக்கக்கூடிய சொற்களாகும். 'நல்ல காலம் வந்துவிட்டது' என்று சொன்னால், அது மனிதனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி யைக் கொடுக்கிறது என்பது அனுபவம் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏன் இந்த மகிழ்ச்சி உண்டாகிறது என்றால் மனித வாழ்க்கையே காலத்தின் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது.

காலம் என்பதுதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை யானது என்பதை திருவள்ளுவர் சொல்கிறபொழுது

'ஞாலம் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின்' என்று சொல்லுகிறார். நல்ல காலத்தை நினைத்து ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டால், இந்த உலகம்கூட நம் வசப்படும் என்று சொல்கிறாரென்றால் இந்தக்காலம் எவ்வளவு இன்றியமையாதது, முக்கியமானது என்பது விளங்கும். "காலம் கருதி இருப்பர் கலங்காது ஞாலம் கருதுபவர்" என்றும் சொல்லுகிறார். நல்ல காலம் வருவதற்காகக் காத்திருப்பவர்கள் என்றுகூட ஒரு குறிப்பைக் காட்டுகிறார்.

## கேள்விகள்

சாதாரணமாக ஒருவரிடம் கேள்வி கேட்கும்போது கூட காலத்தை வைத்துத்தானே, நேரத்தைப் பார்த்துத் தானே கேள்வி கேட்கிறோம். காலையில் ஏழு மணிக்கு ஒருவரைப் பார்த்தால், "காபி சாப்பிட்டீங்களா?" என்று கேட்கிறோம். அந்த நேரத்திலே அதைத்தான் கேட்கணும். மத்தியானம் ஒரு மணிக்கு "சாப்பாடு சாப்பிட்டீங் களா?"ன்னு கேட்கிறோம். அவரையே சாயந்திரம் பார்த் தால், "சிற்றுண்டி சாப்பிட்டீங்களா?"ன்னு கேட் கிறோம். இரவிலே பார்த்தால், "என்ன... ஆகாரம், ஆய்ட்டுதா?"ன்னு கேட்கிறோம். இரவு பன்னிரண்டு மணிக்கு ஒருத்தரை எழுப்பி, "காபி சாப்பிடறீங் களா?"ன்னு யாராவது கேட்பாங்களா? கேட்டால் "ஏண்டா, நேரங்கெட்ட நேரத்திலே கேட்கறே?"ன்னு பளாரென்று கன்னத்தில் அறைவான்.

இருபத்தைந்து முப்பது வயதுப் பையனைப் பார்க் கிறோம். "ஏண்டா...? தம்பி... உனக்குத் திருமணம் ஆகி விட்டதா?"ன்னு கேட்கிறோம். ஏன்...? அது கல்யாணமாக வேண்டிய காலம். எழுபது வயது தாத்தாவைப் பார்த் தால், "உடம்பு எப்படியிருக்கு?" என்று கேட்கிறோம். ஏனென்றால், அவர் பயணத்தில் இருக்கும் நேரம்! அந்தச் சமயத்திலே கேட்க வேண்டிய கேள்வி இது.

இதையே ஒரு இளம் காளையிடம், 'என்னா தம்பி உடம்பு எப்படியிருக்கு?' என்று கேட்டால், அதற்கு அர்த்தமே வேறு இல்லையா?

சில நேரத்தில் நாம் எவ்வளவோ முயற்சி செய்கிறோம்; விழுந்து விழுந்து பாடுபடுகிறோம். நல்ல படியாக எல்லாம் செய்தாலும்கூட நமக்கு அந்தக் காரியம் கைகூடுவதில்லை. இதற்காக வருத்தப்படக்கூடாது. ஓகோ... காலம் நமக்கு ஒத்துழைக்கவில்லை என்று புரிந்து கொண்டு கொஞ்சம் பொறுமையாய் இருக்க வேண்டும்.

## கேள்விகள் கேட்டால்

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். எல்லோரிடத்திலும் எல்லாவிதமான கேள்விகளும் கேட்டுவிடக் கூடாது.

ஒருவரிடம், ''எத்தனை பிள்ளைகள்'' என்று கேட்கலாம், பதில் சொல்லுவார்.

எத்தனை ஆண்டுகள் வாழலாம் என்று இருக்கிறீர்கள் என்று கேட்கப்படாது.

சிலபேர் யதார்த்தமாகக் கேள்விகள் கேட்பார்கள்.

''யார் யாரோ போய்ட்டாங்களே...'நீங்க எப்பப் போகலாம் என்று இருக்கிங்க?'ன்னு யதார்த்தமாகக் கேட்டால் அது ரொம்ப ஆபத்தான கேள்வியாகப் போயிடும். அவர் உடனே, ''ஏன்? நான் இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கைலையா?''ன்னு கேட்பார்.

பல பேருக்கு இறந்து போவதென்றால் ஒரே நடுக்கம். ஏன்? மரணம் திடீர்திடீரென்று வருவதால்தான். எப்போது இறக்கப் போகிறோம் என்று முன்னமேயே தெரிந்து விட்டால் அவ்வளவு வருத்தம் இருக்காது. முதலில் கொஞ்சம் பயம் வரும்; போகப் போகத் தெளிந்துவிடும்,

## கூற்றுவன்

எமன் ஓர் ஊருக்கு வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். வந்து ஒவ்வொருத்தராகப் பார்த்துத் தேதி சொல்லுகிறான் என்று வைத்துக் கொள்வோம். ''உங்களை பிப்ரவரி மாதம் ரெண்டாம் தேதி கொண்டு போவேன்...'' ''அவரை பிப்ரவரி மாசம் பத்தாம் தேதி கொண்டு போவேன்...'' ''இவரை மார்ச் மாசம் மூணாம் தேதி அழைச்சிக்கிட்டுப் போவேன்...'' என்று தேதி சொல்கிறான். அப்படிச் சொல்லிவிட்டுப் போனால் சம்பந்தப் பட்டவர்களுக்கு முதல்லே கொஞ்சம் பயம் வந்து அப்புறம் தெளிந்து போய்விடும். ஒருத்தரையொருத்தர் கலந்து பேசிக் கொள்வார்கள்.

''நீங்க எத்தனாம் தேதி போறீங்க...? அவர் எத்தனாம் தேதி போறார்?''ன்னு கேட்பார்கள். சில பேர் குறிப்பாகக் கேள்வி கேட்பார்கள். ''அந்தப் பலசரக்குக் கடைக்காரர் எத்தனாம் தேதி போறார்? ஏன்னா அவருக்குக் கொஞ்சம் பாக்கிக் கொடுக்கணும். அவரு நமக்கு முன்னால போவாரான்னு தெரிஞ்சுக்கத்தான்?" என்று குறிப்பாகக் கேட்பார்கள்.

காலம் வந்தவுடன் காலன் வருகிறான். அதனால் தான் காலனுக்கு அவ்வளவு மரியாதை. அவன் ஒருத்தன் தான் நாம் சொல்றதைக் கேட்கவே மாட்டான். கெஞ்சிக் கேட்டால்கூட கடன்காரன் கேட்பான், காலன் மட்டும் நாம் சொல்வதைக் கேட்கவே மாட்டான்.

## ரத்தம் குறைந்தது

'எனக்கு வயசாகி விட்டது. நான் சொல்ற வார்த்தைகளை என் பிள்ளைகள் கூடக் கேட்கிறதில்லே...என் பேரன் பேத்திகளும் கூடக் கேட்கிறதில்லே...' என்று வருத்தப் படுகிறார்கள். இப்படிச் சொல்வது ரொம்பத் தப்பு. இதுவரைக்கும் ரத்த பாசத்தாலே நாம் சொல்றதை

அவங்க கேட்டுக்கிட்டிருந்தாங்க. வயசாகி விட்டால் நம்ம உடம்புலே ரத்தம் குறையுது. நாம் சொல்றதை மற்றவங்க கேட்கறதும் குறைகிறது. பிள்ளையோ பேரன் பேத்தியோ இருக்கட்டும்: நம்ம உடம்போட பிறந்ததே நாம் சொல்றதைக் கேட்க மாட்டேன் என்கிறதே!

## உறுப்புக்கள்

கண், காது, மூக்கு, பற்கள் இவையெல்லாம் என்ன? இரவலா வாங்கினோம்? இவையெல்லாம் நம் கூடவே பிறந்தவைதானே. நம் கூடவே பிறந்த கண், காது, நம் சொந்தப் பல் இவையெல்லாம் வயசானா நாம் சொல்றதைக் கேட்கிறதில்லையே. வயசானா கண் பார்வை மங்கி, ''இனிமேல் என்னாலே பார்க்க முடியாது. ஏதாவது கண்ணாடியை வாங்கிப் போட்டுக்கப்பா" என்று சொல்லும். காது என்ன செய்யும்? ''ரொம்ப நாளா உனக்காக என்னென்னமோ கேட்டுக் கேட்டுச் சொன்னேன். இப்ப முடியலே, இனிமே உனக்கு உதவி செய்ய முடியாது...ஏதாவது ஒரு எந்திரத்தை வாங்கிக் காதில வச்சுக்கோ'' என்று சொல்லிவிடும்!

நம் கூடப் பிறந்ததே நமக்குக் கடைசி வரைக்கும் உதவவில்லை என்றால், மற்றவர்களெல்லாம் கடைசி வரைக்கும் நமக்குத் துணையாயிருப்பார்கள் என்று நினைப்பது எவ்வளவு அறியாமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# மகிழ்ச்சி எனும் மருந்து

ஒருமுறை கடலூரிலே ஒரு நிகழ்ச்சியில் பேசினேன். கைத்தறி வார விழா என்று நினைக்கிறேன். அந் நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருந்த சோமசுந்தரம்—நீதிபதியாக இருந் தவர்—தலைமை தாங்கினார். கூட்டம் முடிந்ததும் அவர் என்னிடத்தில், ''என்னைத் தலைமை வகிக்கச் சொல்லிக் கூப்பிட்டார்கள். 'எனக்குக் கொஞ்சம் காய்ச்சலாயிருக் கிறது. நான் வருவதற்கில்லை' என்று மறுத்தேன். வந்தவர் கள் 'திருக்குறளார் பேசுகிறார்' என்றார்கள். நான் உடனே வர ஒப்புக் கொண்டேன். உங்கள் பேச்சை ஒன்னரை மணி நேரம் கேட்டேன். என்னுடைய காய்ச்சல்கூடப் போய்விட்டது'' என்று சொல்லி அவர் சிரித்தார்.

மனித மனமானது மகிழ்ச்சியாகவும் மலர்ச்சியாகவும் இருந்தால் அநேக நோய்கள் மறையும்; சிரிப்பு ஒரு மருந் தாக அமையும் என்பதற்கு ஓர் உதாரணமாகத்தான் இந்த நிகழ்ச்சியைச் சொன்னேன்.

## மகிழ்ச்சி

மனிதன் சில நேரத்திலே தன்னந்தனியாக அமர்ந்து உயர்ந்த கருத்துக்களைச் சிந்திக்கிறபோது, உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டு அவன் சிரிக்கின்றான். அந்த மகிழ்ச்சி அவனது உள்ளத்திலே தானாக வரவேண்டும். 'கொஞ்சம் மகிழ்ச்சியாய் இரு' என்று இன்னொருத்தர் சொல்லி அவனுக்கு மகிழ்ச்சி வரக்கூடாது. அது தானாக மலர வேண்டும்.

காதல் என்றால் அன்பைப் பரிமாறிக் கொள்வது. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் அன்பு பரிமாறப்படுகிற

பொழுது அதைக் காதல் என்கிறோம். அந்தச் காதல் தானாகத்தான் உண்டாக வேண்டும்.

ஒரு வாலிபனைப் பார்த்து அவன் நண்பன், 'ஏனப்பா சும்மாயிருக்கிறாய்...ஏதாவது காதலை ஆரம்பிக்கிறது தானே?' என்று சொல்லிக் கொடுத்தா காதல் வரும்? அவனுக்கே தானாக அந்த எண்ணம் வந்து காதல் ஆரம்பித்து, பிறகு, அதன் பலாபலன்களை அவன் அனுபவிப்பான்! அது வேறு கதை!

## உணவும் மனைவியும்

ஒரு சின்ன அனுபவம் சொல்கிறேன். பலருக்குத் தெரிந்ததுதான். சாதாரணமாக நாம் சாப்பிடுகிற பொழுது நம்முடைய மனைவி எதிரே நின்று கொண்டிருப்பாள். நாம் பிரியத்தோடு எந்தப் பதார்த்தத்தைச் சாப்பிடு கிறோம் என்பதைப் பார்த்து நம் மனைவி அதையே மேலும்மேலும் வைத்துக் கொண்டிருப்பாள்.

'இரண்டு மணி நேரம் சமையலறையிலே நின்று அடுப்புப் பக்கத்திலே இருந்து இவ்வளவு சமைத்து வைத்தோமே, 'இது நன்றாக இருக்கிறது' என்று எதைப் பற்றியாவது ஒரு வார்த்தை சொல்ல மாட்டாரா? சொன்னால் நம்ம மனசுக்கு எவ்வளவு மகிழ்ச்சியா யிருக்கும்' என்று நினைக்கிறாள் அவள். அதற்குத்தான் அவள் அப்படி நிற்கிறாள்.

அது தெரியாதவர்கள் நன்றாகச் சாப்பிட்டு விட்டுப் பேசாமல் எழுந்து போனால் அவள் மனது எப்படியிருக்கும்? அதனால்தான் சில பெண்கள், 'இப்படிச் சொல்லத் தெரியலையே அவருக்கு' என்று வருத்தப்பட்டு, 'ஏங்க... ரசம் எப்படி இருக்கு? சாம்பார் எப்படி இருக்கு?' என்று கேட்பார்கள். அதன் பிறகாவது 'பொறியல் நன்றா யிருந்தது', 'ரசம் நல்லாயிருந்தது'ன்னு சொல்ல வேண்டும். அதுக்குப் பதிலா, 'மோர் நல்லா இருந்தது'

என்று சொன்னால் அந்த அம்மாளுக்கு எப்படி இருக்கும், பாவம்!'' அது அவள் கை வைக்காதது!

ஒரு சின்ன செய்தி என்று சொன்னாலும் அதில் மனிதனுக்கு மகிழ்கிற, சிரிக்கிற வாய்ப்பு எவ்வளவு இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

## அழுதல் சிரித்தல்

நாம் அழுது கொண்டே பிறக்கிறோம். நம்மைச் சுற்றிலுமுள்ள தாய், தகப்பன், மாமன், மாமி, பாட்டன், பாட்டி எல்லாரும் மகிழ்ச்சியால் சிரிக்கிறார்கள். இது சாதாரணமானதுதான். மகான்கள் சொன்னார்கள், ''ஏ மனிதனே...நீ அழுது கொண்டே பிறக்கிறாய். உன்னைச் சுற்றிலுமிருந்தவர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்...அழுது கொண்டு பிறந்த நீ, உலகத்தைவிட்டு மறையும் பொழுது சிரித்துக்கொண்டு மறைய வேண்டும். நீ பிறக்கும் போது சிரித்து மகிழ்ந்தவர்கள் நீ இறக்கும்போது அழ வேண்டும். மனித வாழ்க்கையின் இயற்கை நியதி இது'' என்று.

## மகாத்மா

மகாத்மா காந்தியடிகள் குழந்தையாகப் பிறந்த போது அழுது கொண்டே பிறந்தார். சுற்றிலுமுள்ளவர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள். ஆனால், இறக்கும் போது மகாத்மா காந்தி சிரித்துக் கொண்டுதான் இறந்தார். ஏன்...? 'என் நாட்டுக்கும், என் மக்களுக்கும், என் சமுதாயத்திற்கும் நான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்தேன்...' என்று சிரித்துக் கொண்டே இறந்தார். கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் பிறக்கும் போது அழுது இறக்கும்போது சிரித்துக்கொண்டே இறந்தார். 'என் மக்களுக்கும் என் நாட்டுக்கும் சுதந்திரத்திற்காகவும் பாடு பட்டேன்'...என்று சிரித்துக் கொண்டே இறந்தார்.

## கடன் வாங்கியவன்

ஒரு கூட்டத்திலே நான், 'பிறக்கும்போது அழுது கொண்டே பிறந்தோம்... இறக்கும்போது சிரித்துக் கொண்டே இறக்க வேண்டும்' என்ற இந்தக் கருத்தை நன்றாக விளக்கம் செய்துவிட்டு வந்தேன். ஆறு மாதங்கள் கழித்து மறுபடி அந்த ஊருக்குப் போனேன். அங்கிருந்தவர்கள் எல்லாம் என்னைப் பார்க்க வந்தார்கள். 'ஐயா, ஒரு செய்தி' என்றார்கள். 'என்ன?' என்றேன். ''நீங்கள் சொல்லிவிட்டுப் போனீர்களே, அதே மாதிரி எங்க ஊரிலே ஒருத்தர் சிரித்துக்கொண்டே செத்தார்'' என்று சொன்னார்கள்.

''அப்படியா, நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் சமுதாயத்திற்கும் இவ்வளவு சேவை செய்தவராய் இருந்திருந்தால் என் போன்றவர்களுக்கு அவர் பெயர் தெரிந்திருக்க வேண்டுமே, யார் அந்த மகான்...எதற்காகச் சிரித்துக் கொண்டே செத்தார்?'' என்று ஆவலுடன் கேட்டேன். அவர்கள், ''அவர் சிரிச்சுக்கிட்டு செத்தநுக்கு வேற காரணம்...பத்து பேரிடம் வாங்கிய கடனைத் திருப்பித் தராமலே இறந்து போனாரு. அவர்களை ஏமாற்றிவிட்டேன் என்ற மகிழ்ச்சியில் சிரித்துக்கொண்டே செத்தான்'' என்றார்கள்.

இதைக் கேட்டு நான் சிரித்தேன்!

# சிரித்து மகிழ வேண்டும்

மனிதப் பிறவியே சிரித்து மகிழ்வதற்குத்தான். சில பேருக்கு சிரிக்கவே தெரியாது. முகத்தை நன்றாக வைத்திருக்கக்கூடத் தெரியாது. அதனால்தான் சிலரைப் பார்த்து, ''ஏனப்பா, உன் முகத்தைக் கொஞ்சம் நல்லா வைத்திருக்கக் கூடாதா...?'' என்று கேட்கிறோம். முகத்தை வாழைப்பூ மாதிரி தொங்கப் போட்டுக்கொண்டு இருக்கக் கூடாது. சூரியகாந்தி மாதிரி மலர்ச்சியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

சிரிக்கத் தெரியாதவன்கூட, சிரித்தே அறியாதவன் கூட, கடுகடுன்னு முகத்தை வைத்திருக்கிறவன்கூட, மனைவியென்று வீட்டிற்கு ஒருத்தி வந்து விட்டால், வாரத்திற்கு ஒரு தடவையாவது சிரிப்பான்! அவனை அறியாமலேயே முகம் மலர்ச்சி அடைந்துவிடும்.

## கோபம் பொல்லாதது

மனிதனைக் கெடுப்பது கோபம்தானே? கடுமையான கோபம் எத்தனைக் குடும்பத்தை, எத்தனை பேரைப் பாழாக்கியிருக்கிறது? கோபம் பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை என்று சொல்கிறார்கள். அந்தக் கோபத்தை எவன் ஒருவன் தணிக்கிறானோ, அவன் வாழ்க்கை முன்னேறும். அந்தக் கோபத்தைத் தணிப்பதற்குரிய சாதனங்களே சிரிப்பும் மகிழ்ச்சியும்.

கோபத்தைத் தணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ''கோபம் வந்துட்டா கோபுர வாசல்லே தலை நுழையாது. குண்டுச்சட்டியில் கை நுழையாது'' என்று நம்ம கிராமங் களிலே சொல்வார்கள். கோபுர வாசல் எத்தனை பெரிது! அதிலே நுழைந்து போகாமல், ஓரத்தில் போய் தலையை

முட்டிக்கொள்வார்களாம். குண்டுச்சட்டி எத்தனை பெரிது! அதிலே கை நுழையாமல் சட்டியின் அடிபாகத்தில் கையை விட்டு அங்கேயுள்ள கரியை முகத்தில் பூசிக் கொள்வார்களாம். கோபம் மனிதனை அந்த அளவுக்கு முட்டாள் ஆக்கிவிடுகிறது.

மனிதனை மிருகமாக்குவது கோபம்தான்...சில பேர் பேசுகிறபோது சொல்வார்களே, 'எனக்குக் கோபம் வந்துட்டா நான் மனிதன் இல்லை' என்று... அதனால், 'நான் மாடு, மிருகம்' என்று அவனே ஒத்துக்கொள்வதாகத் தானே அர்த்தம்...?

மனிதனுக்குக் குணம் இல்லை என்றால், அவன் மிருகம் தானே? அதனாலே, ஒரு மனிதனை அறிமுகப்படுத்துகிற போது, அவன் படிப்பு, அவன் அறிவு, அவன் பட்டம்— இதையெல்லாம் சொல்லி அறிமுகப்படுத்துவதைவிட, அவன் குணத்தைச் சொல்லி அறிமுகப்படுத்துகிற பழக்கம் ஏற்படவேண்டும் என்று நினைக்கிறேன்.

## அறிமுகம்

"இவர் நல்லவர்...பண்புள்ளவர்...ஒழுக்கம் உள்ளவர், அன்பு உள்ளவர், விசுவாசம் உள்ளவர், பிறருக்கு உதவுவார்" என்று அவன் பண்பைச் சொல்லி அறிமுகப் படுத்துகிற பழக்கம் இந்த நாட்டில் வரவேண்டும். ஏனென்றால் படித்தவனாக இருப்பார், குணம் இருக்காது. அறிவாளியாக இருப்பார், ஒழுக்கமிருக்காது. பணக்காரனாக இருப்பார், நல்ல எண்ணம் இருக்காது. ஆகையாலே மனிதனை அறிமுகப்படுத்துகிற பொழுது, அவன் குணத்தைச் சொல்ல வேண்டும்.

அவன் எடையைச் சொல்லி அறிமுகப்படுத்தக் கூடாது. 'இவர் முந்நூறு 'பவுண்டு' எடை. இவரிடம் நீங்கள் தாராளமா சிநேகம் பண்ணலாம்' என்று யாராவது

சொல்வார்களா? 'இவர் நிதானமா நடந்து போவார். ஓட மாட்டார்' என்றா அறிமுகப்படுத்துவார்கள். மூந்நூறு பவுண்டு ஆச்சே...எப்படி ஓடுவான்! எடையைச் சொல்லி அறிமுகம் செய்ய வேண்டியவை மிருகங்கள். 'இந்த ஆடு நாற்பது கிலோ' என்று சொன்னால் வாங்குவான்!

## தாழ்ந்த பிறவிகள்

கோழியின் பண்பைச் சொல்லி யாராவது அறிமுகப் படுத்துவார்களா? 'இது பண்புள்ள கோழி. பக்கத்து வீட்டுக்குப் போகாது. போனாலும் வராது. காரணம் பக்கத்து வீட்லே ஒரு 'பண்பாளன்' இருக்கிறான்!' என்று யாராவது சொல்வார்களா?

நல்ல எண்ணங்கள், நல்ல குணம், நல்ல மனம் இவற்றைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழ வேண்டும். பலரோடு கலந்து பேசி, சிரித்து மகிழவில்லையென்றால் அது என்ன மனித வாழ்க்கை? சிலர் வெட்கமில்லாமல் சொல்வார்கள். ''எனக்கு இந்த ஊர்ல யாரையுமே தெரியாது...என்னையும் யாருக்கும் தெரியாது... 'போலீஸ் ஸ்டேஷனுக்கு' மட்டும்தான் தெரியும்'' என்றால் இது மனித வாழ்க்கையா?

இன்னும் சில பேர், 'எனக்கு அக்கம்பக்கத்திலே குடியிருக்கிறவர்கள் யார் என்றுகூடத் தெரியாது. நான் உண்டு, என் வேலையுண்டு என்று இருப்பேன்' என்பார்கள். இவர்களையெல்லாம் 'பஞ்சாயத்து' 'முனிசிபாலிட்டி' 'கார்ப்பரேஷன்' எல்லைக்குள் குடியிருக்கவே விடக் கூடாது!

## இதுதான் வாழ்க்கை

சமுதாயத்துக்கு, மண்ணுக்கு, மொழிக்கு, மக்களுக்கு நம்மாலானதைச் செய்யவேண்டும். கலகலவென்று பிறரிடத்திலே பேசிப் பழக வேண்டும். சிரித்து மகிழ

வேண்டும். அதற்காகத்தானே நிறைய மன்றங்கள் வைக்கிறோம். கழகங்கள் வைக்கிறோம், சங்கங்கள் வைக்கிறோம்...ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழத்தானே இவையெல்லாம். அழுவதற்கு மன்றம், சங்கம் எல்லாம் தேவையில்லையே! அழுவதற்கு ஒரு ஆள் போதும். ஒருவன் தனியாக அழுதுகொண்டே போகும்போது எவனும், ''நீ எப்படி மன்றம் வைக்காமல் அழுதுகொண்டு போகலாம்?'' என்று கேட்க மாட்டான்.

## வேறுபாடு

சிரிப்பதற்கும் அழுவதற்கும் என்ன வித்தியாசம்? சிரிப்பதற்கு நேரம் உண்டு, அளவு உண்டு. அழுவதற்கு நேரம், அளவு கிடையாது. ஒரு நாள் முழுவதும் ஒருத்தன் அழலாம். ஒரு பெண் ஒரு நாளெல்லாம் அழலாம். தொடர்ந்து அழுதுகொண்டே இருக்கலாம். அளவு கிடையாது. ஆனால், சிரிப்பதற்கு அளவு உண்டு.

கொஞ்ச நேரம் சிரித்துவிட்டு நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நாள் முழுதும் ஒருத்தன் சிரித்துக் கொண்டே இருக்கக் கூடாது, அப்படியிருந்தால் அவன் மேல் எல்லாரும் சந்தேகப்படுவார்கள். நாள் முழுக்க ஒருவன் அழுதுகொண்டே இருந்தால் சந்தேகப்பட மாட்டார்கள். தனியாக அழலாம்; தனியாகச் சிரித்தால் சந்தேகப்படுவார்கள். எனவேதான் சிரிப்பதற்குப் பல பேர் வேண்டும்.

## குறட்பா

'நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும் பாற்பட்டன்று இருள்' என்பார் திருவள்ளுவர். அதாவது பலரோடும் பேசி, சிரித்து, மனம்விட்டுப் பழகி வாழ முடியாதவர்களுக்கு வாழ மறந்தவர்களுக்கு இந்த உலகம்

இருட்டாகப் போய்விடும். பகல்கூட அவர்களுக்கு வெளிச்சமில்லாமல் இருட்டாய்த்தான் தெரியும்...

எண்ணிறந்த மகான்களும் கவிஞர்களும் எழுதிய நூல்களையெல்லாம் படிக்கிறோம். அத்தனையும், எதற்கு? நாம் நல்லபடியாக, இன்பமாக, மகிழ்ச்சியாக, களிப்பாக, ஆனந்தமாக, கவலையில்லாமல் வாழ வேண்டும் என்பதற்காகத்தானே...!

## செவிகளின் சிறப்பு

நமக்கு இருக்கக்கூடிய உறுப்புக்களிலே காதுகள்தான் மிக முக்கியமானவை. மற்ற அவயவங்களும் முக்கியமானவை தான் என்றாலும் காதுகளுக்கென்று ஒரு தனிப்பெருமை இருப்பதால்தான் அநேக செய்திகளை ஒருவரிடம் சொல்லி விட்டுக் கடைசியில் 'எதற்கும் இதை உங்கள் காதில் போட்டு வைக்கிறேன்' என்று சொல்கிறார்கள்.

காதுக்குத் தனிச் சிறப்பு இருப்பதால்தான் ஆசிரியர்கள் கூட மாணவர்களைக் காதைப் பிடித்துத் திருகுகிறார்கள்!

மனிதர்களுக்கு இருக்கின்ற காதுகளுக்கும் மிருகங்களுக்கு இருக்கின்ற காதுகளுக்கும் வேறுபாடுகள் இருக்கின்றன.

## சுவைத்து உண்ணுதல்

நாவினால் சுவைத்து நாம் சாப்பிடுவதுபோல் மிருகங்களும் சாப்பிடுகின்றன. உண்ணுவதைப் பொறுத்த வரையில் நமக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. ஆனால், கேட்கிற அறிவு நமக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மைப்போலவே மிருகங்களுக்கும் இரண்டு காதுகள் இருந்தாலும் அவற்றிற்குக் கேட்கிற அறிவு கிடையாது. அதனால்தான் பொதுக்

கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நாம் ஆடு, மாடு களை அழைப்பதில்லை!

## மக்கள் யார்

மனிதனாகப் பிறந்தவர்களையெல்லாம் மனிதர்க ளாகக் கருதிவிட முடியாது. மனிதப் பிறவி எடுத்தவர்கள் பலர் மிருகங்களைப் போலவே வாழ்ந்து வருகிறார்கள். ஒரு சமயம் எனக்கு மிகவும் வேண்டிய நண்பரின் கடையில் நான் உட்கார்ந்திருந்தபோது 'காபி சாப்பிடுங்கள்' என்று சொன்னார். 'சரி' என்று தலையை ஆட்டினேன். உடனே காபி வாங்கிக் கொண்டு வருவதற்கு அவருடைய வேலை யாள் அங்கே காணப்படவில்லை.

எதிரில் உட்கார்ந்திருந்த அவரது கணக்கப் பிள்ளை யைப் பார்த்து, 'அந்த எருமையைக் கூப்பிடுங்கள்' என்றார். உடனே கணக்கப் பிள்ளை பின்பக்கம் பார்த்துக் கைதட்டிக் கூப்பிட்டார். 'என்ன? எருமையை இப்படிக் கூப்பிடு கிறாரே' என்று நினைத்தேன். ஓர் ஆள் வந்து நின்றான். பிறகு அந்த எருமைதான் எனக்கு காபி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தது! பிறகு நான் செல்வதற்கு அந்த எருமை தான் வண்டி கொண்டு வந்தது. நான் உட்கார்ந்தவுடன் என்னைப் பார்த்து, 'ஐயா அடிக்கடி வரவேண்டும்' என்று அது சொன்னவுடன் நான் புறப்பட்டேன். அவனுடைய தாயார் எருமையையா பெற்றாள்? மனிதக் குழந்தையைப் பெற்றாள். அவன் எருமையாக மாறி விட்டான்!

## பெயர்க் காரணம்

ஒருவனைப் பற்றி அவனுடைய தாய் தகப்பனார் வைத்த பெயரைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. தாய் தந்தையர் பிரியத்திலே பெயர் வைக்கிறார்கள். பலர் தெய்வத்தின் பெயர்களையே வைப்பார்கள். ஒருவனுக்கு ஊரார் இருப்பவர்கள் என்ன பெயர் வைக்கிறார்கள் என்று

தெரிந்துதான் அவனை அளந்து பார்த்தல் வேண்டும். 'அதோ போகிறானே...அவன் ஒரு நரி...' என்று பலர் பேசுவதைக் கேட்கிறோம். அவனுடைய தாயார் நரிக் குட்டியையா பெற்றாள். மனிதக் குழந்தை பெற்றாள். அவன் நரியாக மாறிவிட்டான்...குணத்தினால்!

## நாடும் காடும்

பெரியவர்கள் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் உள்ளனவாக இருக்கின்றன என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 'மனிதன் காட்டிலே வாழ்வது சுலபம். நாட்டிலே வாழ்வது கடினம்' என்று ஒரு பெரியவர் சொன்னார். அதனைக் கேட்ட ஒருவர், அந்தப் பெரியவரைப் பார்த்து 'காட்டிலே சிங்கம், புலி, கரடி, காண்டாமிருகம் முதலிய கொடிய மிருகங்கள் இருக்கின்றனவே அங்கே வாழ்வது எப்படிச் சுலபம் என்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெரியவர், 'அங்கே கொடிய மிருகங்களிருந்தாலும் ஒவ்வொன்றையும் பார்த்து, இது நரி... இது கரடி...இது காண்டாமிருகம்...என்று அடையாளம் தெரிந்து கொண்டு நாம் எப்படியாவது தப்பித்து ஓடிவிடலாம். ஆனால், தினம் நாம் பார்க்கும் மனிதர்களிலே யார் நரி, யார் புலி, யார் கரடி என்று தெரியாமல் நாமே சில நேரத்திலே கரடிகளையும், நரிகளையும் வீட்டிற்கு அழைத்துப்போய் பொல்லாத வேதனைக்கு ஆட்பட்டு விட நேர்கிறது' என்கிறார்.

மிருகங்களுக்கு சிரிக்கத் தெரியாது. மனிதன் ஒருவனுக்குத்தான் சிரித்து மகிழத் தெரியும். இப்படிப் பட்ட அருமையான வாய்ப்பினைப் பெற்றிருந்தும் சிரித்து மகிழத் தெரியாதவர்களை நாம் காணுகிறபோது நமக்கு வியப்பாகவும் வருத்தமாகவும் இருக்கிறது.

## குழந்தைகள்

ஒரு நாள் நண்பருடன் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தேன். வீட்டிற்கு உள்ளேயிருந்து 'கலகல' என்று சத்தம் தொடர்ந்து வந்தது. சிறு பிள்ளைகள் எல்லோரும் கும்மாளம் போட்டுக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்த சத்தம் வெளியே உட்கார்ந்திருந்த எங்கள் காதுகளில் விழுந்துகொண்டிருந்தது. குழந்தைகள் அப்படி விளையாடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும் சத்தம் போட்டுக்கொண்டுமிருந்த நிகழ்ச்சி எனக்குப் பெரிய மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தச் சிரிப்பொலியைக் கேட்டுக் கொண்டிருந்த என் பக்கத்திலே உட்கார்ந்திருந்த நண்பருக்குப் பெருங்கோபம் வந்து வேகமாக உள்ளே போனார். உரத்த குரலில் குழந்தைகளைப் பார்த்து, 'உங்களுக்கு என்ன கேடு வந்தது? ஏண்டா இப்படி ஆட்டம் போடுகிறீர்கள்?' என்று பலமான அடி கொடுக்கவே, அவர்கள் நாலு திசையிலும் ஓடி விட்டார்கள். சத்தம் போட்டுக்கொண்டே வெளியில் வந்தார் அவர். 'என்ன சார்...பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே என்று மரியாதை இல்லாமல்...இதுகளுக்குப் பயமே இல்லை. இங்கே எதுக்கு இப்படிச் சிரிக்கணும்'' என்று சிரிப்பதையே பெரும் குற்றமாகச் சொன்னார்.

சிரித்து மகிழ வேண்டும் என்று கருதுகின்ற மக்கள் சமுதாயத்தில், அதை வெறுத்துப் பேசுகின்ற குணத்தையும் வளர்த்துக் கொண்ட கொடுமைகளையும் நாம் பார்க்கிறோம்.

## பத்து தடவை

நடைமுறையிலே "ஒரு தடவைக்கு பத்துத் தடவை சொன்னேனே? அப்படிச் சொல்லியும் சரியாக நீ செய்ய வில்லையே?" என்று பேசுவதை நாம் பார்த்து வருகிறோம். ஒரு தடவை சொல்ல வேண்டிய புத்திமதியைப் பத்துத் தடவை சொல்வது நல்லதென்று தெரிகிறது. பத்துத் தடவை சொல்லித்தான் ஆக வேண்டும் என்பதற்குச் சட்டமாக எதுவும் இல்லை என்றாலும் பழங்காலத்தி லிருந்து 'ஒரு தடவைக்குப் பத்து தடவை சொன்னேன்' என்று பேசுகின்ற பழக்கம் சிந்தனைக்கு உரியதாகும்.

இந்த முறையை முதல் முதலாக உண்டாக்கியவர் திருவள்ளுவர் என்றே சொல்ல வேண்டும். திருவள்ளுவர் ஒவ்வொரு அறமாகிய பண்பாட்டினையும் பத்து தடவை சொல்லி விளங்க வைக்கின்றார்.

திருக்குறளில் 133 அதிகாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அதிகாரமும் பத்து குறட்பாக்களைக் கொண் டிருக்கிறது. அதாவது, திருவள்ளுவர் தாம் எடுத்துக் கொண்ட கருத்தினைப் பத்து தடவை விளக்கம் செய்கின்றார்.

ஒரு கருத்தினைப் பத்துத் தடவை தெளிவாக விளக்கி விட்டால், படிப்பவர் உள்ளத்தில் நன்றாக ஆசிரியர் சொல்லுகின்ற இந்த விளக்கங்கள் பதிந்துவிடும் என்பது குறள் ஆசிரியரின் கருத்தாக இருந்திருக்கலாம்.

இன்றைய தினம் நடைமுறையில் காணுகின்ற— பேசப்படுகின்ற சில முறைகளைக் காணுகின்றபொழுது, குறட்பாக்களின் கருத்துக்கள் எப்படியோ மக்களின் பழக்க வழக்கங்களில் ஊடுருவிச் சென்றிருக்கின்றன என்பது புரிகிறது.

## நற்குலத்தோர்

கற்றவர்கள், அறிவாளிகள், பெருந் தன்மையான குணம் படைத்தவர்கள், சான்றோர்கள் என்றபடியெல்லாம் பேசப்படுகின்ற மக்களை நல்ல குலத்தில் பிறந்தவர்கள் என்று சொல்வது வழக்கம். மேலோர்கள், நற்குலத்தோர் என்று சொல்லுகின்ற சொற்களெல்லாம் ஒழுக்கமுள்ளவர்களையும் தர்ம சிந்தனை படைத்த பெரியோர்களையும்—இவர்கள் போன்ற மக்களையும்தான் குறிப்பதாகும்.

## மண்ணின் தன்மை

ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்ற மண்ணின் தன்மையைத் தெரிந்து கொள்வதற்கு அங்குள்ள மண்ணை எடுத்து மண் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு அனுப்பி அந்த மண்ணின் பண்பினைச் சொல்லுங்கள் என்று கேட்கத் தேவையில்லை. அந்த மண்ணில் முளைத்திருந்த ஒரு செடியின் வேர்—முளை இவற்றை எடுத்து அந்த ஆராய்ச்சியில் தேர்ந்த கெட்டிக்காரர்களைக் கேட்டால் அந்த மண்ணின் தன்மையைச் சொல்லிவிடுவார்கள்.

'நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்' என்பதாக ஒரு குறட்பா சொல்கிறது. அதாவது ஒரு நிலத்தின் பூமியின் மண்ணின் குணத்தைத் தெரிந்து கொள்வதற்கு அந்தச் செடியின் வேர்களைப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம் என்ற குறிப்பு இங்கே சொல்லப்படுகிறது. வேர்களைப் பார்க்க வேண்டுமென்றால் வேகமாகச் செடிகளைப் பிடுங்க வேண்டும். பிடுங்கி எடுத்தல் என்பது நடைமுறையில் சொல்லப்படுகின்ற பழக்கமாக இன்றுகூட இருந்து வருகிறது. எப்படி ஒரு முளை அல்லது வேர் மண்ணின் குணத்தைக் காட்டுகின்றதோ அது போலவே ஒருவன் பேசுகின்ற சொற்களைக் கொண்டே அவன் எப்படிப்பட்ட குலத்தில் பிறந்தவன் என்பதைச் சொல்லி விடலாம்.

## வாயைப் பிடுங்குதல்

சிலர் பேசிக் கொண்டிருக்கும்போது சிறிது கோபம் வந்து விட்டால் மற்றவர்களைப் பார்த்து, 'என்னுடைய வாயைப் பிடுங்காதே' என்று சொல்வார்கள். ஏனென்றால் இதுவரை, அவன் பேசியதைவிட இன்னும் மோசமான வார்த்தைகளை அவன் பேசுவான் என்பது குறிப்பு. இதற்கு உதாரணம் சொன்ன திருவள்ளுவர், வேரினைப் பிடுங்குதல் என்று சொல்லப்படுகின்ற பழக்கச் சொல் லினைக் கூறியிருப்பதை நாம் சிந்திக்கின்றபோது இன்று நடைமுறையில் கேட்கின்ற சொற்களும் மிகப் பழமையான காலத்திலிருந்தே எப்படியோ சமுதாயத்தில் வழங்கி வந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மை புலனாகிறது.

இதைக் கீழ்க்கண்ட குறளால், குறளாசிரியர் விளக்கு கிறார்.

**நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.** **959**

**''உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்புதாம் ஒப்பு''** **993**

இந்தக் குறட்பா, உறுப்புகளை ஒப்பிட்டுப் பார்த்து 'இவன் மனிதன்தான்' என்று சொல்லக்கூடாது. மனித னுக்கு இருக்கவேண்டிய குணங்கள் தன்மைகள் இருந்தால் தான் அவனை மனிதன் என்று சொல்ல வேண்டும் என்று கூறுகிறது.

ஆசிரியர் சொல்லுகின்ற இந்த அளவுகோலைக் கொண்டு அளந்து பார்த்தால் எத்தனை பேர் மிஞ்சுவார் கள் என்று எல்லோருக்கும் தெரியும். உலக மக்களுக் கெல்லாம் சன்மார்க்கத்தை நல்வழியினைச் சொல்ல வந்த மகான்கள், 'மனிதன் காட்டிலே வாழ்வது சுலபம்- நாட்டிலே வாழ்வது கடினம்' என்று சொன்னார்கள்.

அதனால்தான் நாட்டிலே இருக்கக்கூடிய நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காக அறநெறிகள், புத்திமதிகள் சொல்லப்பட்டன.

'காட்டிலே வாழ்வது சுலபம்' என்று பெரியவர்கள் சொல்வதை எல்லோரும் அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியாது. காட்டிலே கொடுமையான மிருகங் களெல்லாம் இருக்கின்றன. அப்படியிருக்க மனிதன் காட்டிலே வாழ்வது சுலபம் என்று பெரியவர்கள் சொல் வதை எப்படிக் கேட்டுக் கொண்டிருக்க முடியும்? இதுபோன்ற கருத்து சிந்தனைக்கு உரியதுதான்.

காட்டிலே கொடுமையான மிருகங்கள் இருந்தாலும் அவைகளை அடையாளம் கண்டு கொள்ள ஆண்டவன் வித்தியாசமான முகங்களைக் கொடுத்துவிட்டார். முகங் களைப் பார்த்தவுடனேயே, இது நரி, இது காண்டா மிருகம், இது கரடி என்றெல்லாம் அடையாளம் கண்டு கொண்டு தப்பித்து ஓடி விடலாம். ஆதலால்தான்—அதாவது தப்பித்துக்கொள்ளும் வழி இருப்பதால்தான்—காட்டிலே வாழ்வது சுலபமென்று சொல்லிவைத்தார்கள்.

ஆனால் நாட்டிலே மக்களிடையே வாழ்வதுதான் மிகமிகக் கடினம். ஏனென்றால், மக்களாகப் பிறந்த அனைவருக்குமே முகத் தோற்றம் ஒரே மாதிரி படைக்கப் பட்டுவிட்டபடியால்— இவர்களிலே எது நரி, எது கரடி, எது புலி என்று கண்டுகொள்ள முடியாமல் நாமே சில நேரங்களில் கரடித் தோளில் கையைப் போட்டுக் கொண்டு வீட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். அந்த 'மனிதக் கரடி' ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டுப் போகிறது. ஆதலால்தான் மனிதன் என்று அளந்து பார்க் கின்ற கருவி குணம்தான் என்பது விளக்கமாய்ச் சொல்லப் பட்டது.

## குணம் என்னும் குன்று

''குணம் என்னும் குன்று ஏறி நின்றார்'' என்று அறவோர்களாகிய அந்தணர்களைச் சிறப்பித்துக் கூறினார் ஆசிரியர்.

இறைவனுக்கு இலக்கணம் சொல்லவந்த ஆசிரியர் திருவள்ளுவனார் 'எண் குணத்தான்' என்றுதான் குணத்தின் மேல் வைத்து விளக்கம் எடுத்துக் காட்டினார். சில மதத்தினர் பண்புகளைக் குறிக்கும் சொற்களைத் தங்கள் பெயர்களாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விசுவாசம், ஆனந்த்ராஜ், பாக்யம், அடைக்கலம் மற்றும் இவைபோன்ற பெயர்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட நண்பர்களை ஒருவிதத்தில் நாம் பாராட்டலாம்.

## பண்பில்லாத அறிவு

சிறந்த அறிவாளியாக ஒருவன் இருந்தாலும்கூட, அவனிடம் நல்ல குணங்கள் இல்லாமற்போனால் அவன் யாருக்கும் பயனில்லாதவனாகப் போவான். ''அறிவினால் ஆகுவது உண்டோ?'' என்று திருவள்ளுவர் கேட்டு வைத்தார். பிறருக்குப் பயன்பட்டு இயன்றவரை உதவி செய்து அன்பு, கருணை என்கிற குணங்களே இல்லாமல் இருப்பவனுக்குப் பெரிய அறிவு இருந்துதான் என்ன பயன்? ஆதலால்தான் மற்றவர்களுக்குக் கடுகளவேனும் பயன் படாமல் இருக்கின்ற அறிவாளியைப் பார்த்து 'உனக்கு அறிவு இருந்து என்ன பயன்?' என்று திருவள்ளுவர் கேட்டார்.

## காரணம்

நிறைந்த கல்விமான்களும் அறிவாளிகளும் ஆற்றல் மிக்கவர்களும் இல்லாத காரணத்தினால்தான் ஒரு சமுதாயம்—ஒரு நாடு முன்னேற்றமடையாமல் போகிறது என்று கூறுவதைவிட, பண்பாடும் ஒழுக்கமும் மனிதத் தன்மையும் இல்லாதவர்கள் நிறைந்திருப்பதால்தான் ஒரு நாடு முன்னேற்றமடையாமல் இருக்கிறது என்று கூறுவது தான் உண்மையான காரணமாகும்.

சில பேர் நல்ல கல்விமான்களாக இருப்பார்கள். அறிவாளிகளாக இருப்பார்கள். ஆனால் மனிதப் பண்பாடு இல்லாதவர்களாக இருப்பார்கள். இப்படியெல்லாம் இருப்பவர்களைவிட கொஞ்சம் படித்து, கொஞ்சமாக அறிவுபெற்று நிறைந்த ஒழுக்கமும், பண்பும் நிறைந்தவர்களால்தான் ஒரு சமுதாயம் நல்லபடியாக வளரமுடியும்.

அன்பும் பண்பும் உற்றார் உறவின் முறைகளும் இந்த மனிதப் பிறவிகளுக்குத்தான் உண்டு. ஆதலால்தான் மானிடப் பிறவியை உயர்வாகப் பேசுகிறோம்.

உற்றார் உறவினர்களுடன் கலந்து மகிழ்ந்து வாழ்வது தான் மனிதப் பிறவிக்கு உரிய குணமாகும்.

'இவர் என்னுடைய அண்ணன்' 'அவர் என்னுடைய மாமன்' என்று உறவின் முறைகளைப் பேசி, உற்றார் உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதுதான் மனிதப் பிறவியின் தனிச் சிறப்பாகும்.

நாம் யாரும் தாழ்ந்த பிறவிகளுக்கு உறவின் முறைகளைச் சொல்லிப் பேசியதைக் கேட்டதுமில்லை; கண்டதுமில்லை.

'அதோ போகிறதே ஒரு 'சேவல் கோழி', அது இந்தக் கோழியினுடைய பெரியப்பா' என்று பேசுவதை நாம் கேட்டிருக்கிறோமா? ஏன்? அன்பு, பாசம், பற்று, உறவின் முறை என்பவை எல்லாம் மனிதப் பிறவிக்குத்தான் உண்டு. விலங்கினங்கள் தனித் தனியாக வாழ்கின்றன. ஏனெனில், அவைகளுக்கு அறிவு இல்லாத காரணத்தால் உறவின் முறை கிடையாது.

அதனால்தான்—

"ஏ, மனிதனே, நீ அப்படி வாழக்கூடாது. நீ சுற்றுத் தாருடன் கலந்து பேசிப் பழகி வாழ வேண்டும்", என்று பெரியவர்கள் சொல்லிச் சென்றார்கள்.

முற்றும்

